1118
09.01.08

வெளியீடு : 8-10-2007

Issued : 8-10-2007

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2 9
சென்னை-600 008

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, மே 14, 2007—தொகுதி 36—எண் 3**

**Monday the 14th May, 2007 —Volume 36—No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**...tive Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

227571

14-5-2007

## உள்ளடக்கம்

பக்கங்கள்


**1. வினாக்கள்-விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 551-592

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 12) 593-626

**2. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்—** 626-709

திரு. ஓ. பன்னீர்செல்வம் 627-635,637-645, 647,649, 650-654, 676, 704, 705

திரு. வை. சிவபுண்ணியம் 648,651-652, 674-680

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 655-663,689

திரு. ஜி.கே. மணி 664-669

திரு. சி. கோவிந்தசாமி 669-674

திரு. வீர. இளவரசன் 680-689

திரு. கு. செல்வம் 691-694

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 634-637,655-656, 672-673,685-688, 691, 695-706

**3. உரிமைப் பிரச்சினை—**

தமிழ் முரசு பத்திரிகைமீது— 709-713

திரு. சி. ஞானசேகரன்

பக்கங்கள்

**4. தகவல் கோரல்—**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் 714

(ஆ) சிமென்ட் கிடைப்பதில் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் 731-736

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 731-733

திரு. ஜி.கே. மணி 733-734

திரு. தி. இராமசாமி 734

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் 734-736

(இ) நதிகள் இணைப்பு மற்றும் உறுப்பினர்களுக்கு வாகனப் படி 736-741

திரு. சி. ஞானசேகரன் 741

* மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 736-741

**5. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

ஒகேனக்கல் அருவியின் மேல் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது

திரு. சி. ஞானசேகரன் 715,717-730

திரு. ஜி.கே. மணி 715,717-718

திரு. வை. சிவபுண்ணியம் 718-719, 724

மாண்புமிகு திரு. துரைமுருகன் 720-721

721-726, 729-730

**6. அறிவிப்புகள்—**

(அ) சட்டமன்றத்தில் கலைஞரின் பொன்விழா நிகழ்ச்சியினையொட்டி உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு 716-717

(ஆ) திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2007 (ஆஇ) 766



பக்கங்கள்

**6. அறிவிப்புகள்**—தொடர்ச்சி

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் 773,774

(ஈ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு 774-778

(அ) மதிப்பீட்டுக் குழு 774-775

(ஆ) பொதுக் கணக்குக் குழு 7755-776

(இ) பொது நிறுவனங்கள் குழு 776-777

(ஈ) அவை உரிமைக் குழு 777-778

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 741-747

மாண்புமிகு திரு. துரைமுருகன் 742, 744-747

திரு. என். நன்மாறன் 742

திரு. ஜி.கே. மணி 743

திரு. வை. சிவபுண்ணியம் 743

திரு. டி. சுதர்சனம் 744

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 747-749

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 747, 748

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 749-751

* மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 749-750

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 751-752 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 751, 752 |
| (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 753-754 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 753, 754 |
| (ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 754-756 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 755, 756 |
| (எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 756-758 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 757, 758 |
| (ஏ) தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு, 2007 | 758-760 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 758-759,760 |
| ...பள்ளி, அண்ணா பல்கலைக்கழக ... முன்வடிவு, 2007 | 760-763 |
| மாண்பு... டாக்டர் க. பொன்முடி | 760,762,763 |
| திரு. ... ல்முருகன் | 761 |
| ...ருமதி ...ஜி. லதா | 761 |
| ...தி. இராமசாமி | 762 |
| (ஓ) கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 764-765 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 764,765 |


227671

**7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| (ஓ) திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 766-767 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 766-767 |
| (ஔ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 768-769 |
| மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் | 768-769 |
| (அஅ) தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 770-773 |
| மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் | 770-772 |
| செல்வி கே. பாலபாரதி | 770 |
| திரு. விடியல் எஸ். சேகர் | 770 |
| திரு. தி. வேல்முருகன் | 770 |
| திரு. தி. இராமசாமி | 771 |
| **8. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்** | 778-794 |
| **9. அரசினர் தீர்மானம்—** | |
| பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 794-79 |
| **10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 795-79 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
29
சென்னை-600 008
எழும்பூர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 31, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மே 14, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்*
*கிறையென்று வைக்கப் படும்."*

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவார்.

## 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**201—**

**மின் பகிர்மானம்**

***20840—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் புதியதாக மின் பகிர்மான வட்டம் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதைய நிதிநிலை பற்றாக்குறையின் காரணமாக திருப்பூரில் புதியதாக மின் பகிர்மான வட்டம் அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை. நிதி நிலைமை சீரடைந்தவுடன் இதன்மீது பின்னர் தகுந்த கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள், கடந்த ஆண்டே, பெரும் நம்பிக்கையளிக்கின்ற வகையில், திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, தனி மின் பகிர்மான வட்டம் ஒன்று உருவாக்கப்படும் என்றும், அதற்கான இடங்களை ஆய்வு செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்கள். இப்பொழுது ஓராண்டு கழித்து அதற்கான வாய்ப்பில்லை என்று சொல்வதை அரசு மறுபரிசீலனை செய்யவேண்டும். வளர்ந்து வருகின்ற திருப்பூரிலே மின் வினியோகமும் தற்சமயம் அதிகரித்து வருகின்றது. தற்போது புதிதாக 8 துணை மின் நிலையங்கள் அமைக்கின்ற பணி தொடங்கப்பட்டிருக்கின்ற நிலையிலே, திருப்பூர், பல்லடம் மற்றும் அவினாசி ஆகிய பகுதிகளை இணைத்து, அங்கே ஒரு மின் பகிர்மான வட்டத்தைத் தனியாக உருவாக்குவது அவசியத் தேவையாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, அரசு இதற்குரிய நடவடிக்கையை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, மின் பகிர்மான வட்டங்கள், பெரம்பலூர், ஆரணி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருப்பூர், தென்காசி மற்றும் திருவள்ளூர் ஆகிய ஏழு பகுதிகளில் அமைக்கவேண்டுமென்ற கருத்துரு அரசாங்கத்திலிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்பட்டது. பெரம்பலூர் தனி மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால் 1-4-2007 அன்று தனியாக மின் பகிர்மான வட்டம் அங்கு தொடங்கப்பட்டது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னதைப்போல, நான் கடந்த ஆண்டு இந்த அவையில், திருப்பூரில் இருக்கக்கூடிய மின் பயனீட்டாளர்களின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டும், அங்கே தனியாக ஒரு மின் பகிர்மான வட்டத்தை



அமைப்பதற்கு சாத்தியம் இருக்கின்ற காரணத்தினாலும் அதை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்கெனவே மின்சார வாரியத்திற்கு எடுத்துச் சொல்லியிருந்தேன். நிதிநிலை பற்றாக்குறை காரணமாக அவர்கள் கடந்த ஆண்டு முடியாது என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், நிச்சயமாக 2007-2008 ஆம் நிதியாண்டில் மின் பகிர்மான வட்டம் ஒன்றை திருப்பூரிலே அமைப்பதற்கு அரசாங்கமே ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007-2008 ஆம் ஆண்டிலேயே திருப்பூரில் மின் பகிர்மான வட்டம் அமைக்கும் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததற்கு நன்றி. மேலும், மாவட்டத் தலைநகரங்களைவிட மின் பயனீட்டாளர்களுடைய எண்ணிக்கை திருப்பூரில் அதிகரித்து வருவதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் நன்குணர்ந்திருக்கின்ற காரணத்தினால், இப்போது அதை ஏற்றுக்கொண்டு அறிவித்திருக்கின்றார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதற்கான ஓர் இடம்கூட இப்போதிருக்கின்ற power house அருகிலே நமது அரசாங்கத்தினுடைய பிரிவாக இருக்கின்ற டான்சிக்குச் சொந்தமான நிலம் பல்லாண்டுகளாக சும்மா கிடக்கின்றது. ஆகவே அந்தத் துறையோடு பேசி, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதற்கு தற்போதே தொடங்கினால், மின் பகிர்மான வட்டம் அமைப்பதற்கு அது பொருத்தமாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல, அந்த இடமாக இருந்தாலும் சரி, வேறு எந்த இடமாக இருந்தாலும் சரி, 2007-2008-லேயே தனி மின் பகிர்மான வட்டம் அங்கே அமைப்பதற்கு இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், இந்த அவையில், மின் பகிர்மான வட்டம், Sub-station, Transformer என்று பல வசதிகளைச் செய்து கொடுத்தாலும்கூட, கோடைக் காலம் வருகின்றபோது ஆங்காங்கே மின்வெட்டு என்று நாங்கள் சொல்கிறோம். அமைச்சர் அவர்கள் அதை மின் தடை என்று சொல்வார்கள். வேலூர் மாவட்டத்தில் எடுத்துக்கொண்டால் ஒருநாளைக்கு 6 முறை மின்வெட்டு ஏற்படுகிறது. இப்படிப் பல மாவட்டங்களிலே அவ்வப்போது கோடைக் காலம் வந்தால் மட்டும்— உபரியாக நாம் மின்சாரத்தை வைத்திருக்கின்றபோது இப்படி ஆங்காங்கே—மின் தடை ஏற்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையைத் தவிர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார், தமிழகத்திலே நமக்குத் தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதற்கு அவர் என்ன வழிவகை காணப்போகிறார் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பலமுறை இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். தமிழ்நாட்டிலே, ஏறக்குறைய 10 ஆயிரம் புதிய டிரான்ஸ்பார்மர்கள் பொருத்தினால்தான் மின்தடை இல்லாமல் நூற்றுக்கு நூறு மின்சாரம் எல்லாப் பகுதிகளுக்கும் கிடைக்கும். இப்போது முதலிலே 4 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் வாங்கி அனைத்து மாவட்டங்களிலும் நாங்கள் நிறுவியிருக்கின்றோம். மேலும் 3 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் இந்த மாதம் வந்திருக்கின்றன. அவற்றை எல்லா மாவட்டங்களுக்கும் பிரித்துக் கொடுக்கிறோம். மேலும் 7 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் டிசம்பர் மாதத்திற்குள்ளாக வந்துவிட்டால் அடுத்த கோடைக் காலத்திலே, எந்த இடத்திலேயும் மின்சாரத் தடையே இல்லாத வகையில் இந்த அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கான வகையிலே, கூடுதலாக துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து வருகிறார்கள். எனது மன்னார்குடி தொகுதியிலே, மன்னார்குடி நகரத்திற்கு மின்சாரம் வழங்குகிற மூவாநல்லூர் துணை மின் நிலையம் 110 கிலோ வாட் திறன் உள்ளது. இது போதுமானதாக இல்லை என்று அதை 230 கிலோ வாட்டாக மாற்றவேண்டுமென்ற கருத்துரு வைக்கப்பட்டு அதற்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதேபோல, புதிதாகத் துணை மின் நிலையங்கள் தொடங்கவேண்டுமென்று மின் உற்பத்தி செய்யப்படுகின்ற திருமக்கோட்டையிலேயே துணை மின் நிலையம் ஏற்படுத்துவதற்காக நிலம் வழங்கப்பட்டுவிட்டது. அதை மின்சார வாரியம் ஏற்றுக்கொள்ளாத நிலை இருக்கிறது. அதேபோல, களப்பால் பகுதியிலே ஒரு துணை மின் நிலையம், கோட்டூரிலே ஒரு துணை மின் நிலையம் இவற்றிற்கு எல்லாம் கருத்துரு அனுப்பப்பட்டு, முன்மொழிவுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இங்கே வந்திருக்கின்றன. அதற்கெல்லாம் இந்த ஆண்டே அனுமதி அளித்து அவற்றை நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 300 துணை மின் நிலையங்கள் அமைப்பதென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் முடிவெடுத்து, கடந்த ஆண்டு 60 துணை மின் நிலையங்களை அமைத்தோம். இந்த ஆண்டும் அமைக்க இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்குமானால் அந்தத் துணை மின் நிலையங்கள் எல்லாம் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலே, வேலூர் மின் மாவட்டம், திருப்பத்தூர் மின் மாவட்டம் என்று இரண்டு மின் மாவட்டங்கள் செயல்படுகின்றன. அதிலே, திருப்பத்தூர் மின் மாவட்ட மத்திய அலுவலகம், 10-க்கும் மேற்பட்டவை வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. மின்சார

வாரியத்திற்கு நீண்டகாலமாகச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்ற அறிவுறுத்தலின்பேரிலே இரண்டேகால் கோடி ரூபாயில் இடம் வாங்கப்பட்டிருக்கிறது. மாதம் ஒன்றுக்கு பல இலட்சம் ரூபாய் மின்சார வாரியம் தனியார் கட்டடங்களுக்கு வாடகையாகச் செலுத்துவதால் நமக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. எனவே, சொந்த இடத்திலே கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்கு மின் பகிர்மானக் கட்டடங்கள் கட்ட இடமே இப்போதுதான் வாங்கப்பட்டிருக்கிறது. அப்படி இடம் இருக்கின்ற இடத்திலே, புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு உரிய பிளான்கள் எல்லாம் போடப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டு, அதற்குப் பிறகு நிதியும் ஒதுக்கப்பட்டு கட்டடம் கட்டப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரணிக்கு மின் பகிர்மான வட்டம் அளிப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கெனவே நான் S.E. Office வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அங்கே நிறைய நிர்வாகச் சிக்கல்கள் இருப்பதால் S.E. Office ஒன்றை அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் S.E. Office என்று ஆங்கிலத்திலே சொன்னார். நான் அதைத்தான் தமிழிலே மின் பகிர்மான வட்டம் என்று சொன்னேன். ஆரணி அதிலே இடம்பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். சரி, கேளுங்கள் சார்.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூரில் மின் பகிர்மான வட்டம், காலம், காலமாக இயங்கிக் கொண்டு வருகிறது. அது தற்போது வேறு ஊருக்கு மாற்றப்படுவதாக ஒரு செய்தி பரவி, அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளும், பொது மக்களும் அது அங்கேயே தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கே மேட்டூர் அனல் மின் நிலையம் இருக்கிறது. நீர் மின் உற்பத்தி நிலையம் இருக்கிறது. பல்வேறு உற்பத்தி நிலையங்கள் இருக்கின்ற காரணத்தால், அது மின் உற்பத்திக் கேந்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆக, அங்கேயே தொடர்ந்து இயங்குவது சாலப் பொருத்தமாக இருக்கும். தேவைப்பட்டால், வேறு இடத்தில் ஒரு புதிய பகிர்மான வட்டத்தைத் தொடங்குவது பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தினாலே, மேட்டூரிலே தொடர்ந்து மின் பகிர்மான வட்டம் இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, மேட்டூரிலே இருக்கக்கூடிய மின் பகிர்மான வட்டத்தை நாமக்கல்லுக்கு மாற்ற வேண்டும் என்ற ஒரு கருத்துரு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டது. எப்படி மாண்புமிகு உறுப்பினர் அவருடைய உணர்வுகளை இங்கே எடுத்துச் சொன்னாரோ, அதையே அரசாங்கம் உணர்ந்து பார்த்து, ஏற்கெனவே கிட்டத்தட்ட 2,000 மெகா வாட் அளவுக்கு அனல் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அந்த இடத்தில் பல ஆயிரக்கணக்கான மின் பயனீட்டாளர்களும் இருக்கின்ற காரணத்தினால், அங்கே இருக்கின்ற அலுவலகத்தை மாற்ற வேண்டாம் என்றும், நாமக்கல்லிலே புதிதாக ஒரு மின் பகிர்மான வட்டத்தை அமைக்கலாம் என்றும் அரசு முடிவு எடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 202, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**202—**

## நெல் ஆராய்ச்சி மையம்

*9652—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மே 14

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், திருவண்ணாமலை மாவட்டத்தில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் சாகுபடியில் நவீன விஞ்ஞான முறைகளைக் கையாளவும், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையவும், திருவண்ணாமலை மாவட்ட தட்பவெட்ப சூழ்நிலைக்கு உகந்த மண் வளத்தினை நிலைப்படுத்தும் ஊட்டச்சத்து நிருவாகம் பற்றிய தொழில்நுட்பங்களின்மூலமாக சிறந்த சாகுபடி முறைகள், பயிற்சி மற்றும் வயல்வெளி செயல் விளக்கங்கள்மூலம் உழவர்களுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நெல் சாகுபடியில் உயர் விளைச்சல் நெல் இரகங்களைக் கூர்ந்தாய்வு செய்து, உரிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், நெல் பயிர்களைத் தாக்கும் நோய்கள் மற்றும் பூச்சிகள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளை அறிவுறுத்தவும், திருவண்ணாமலை மாவட்ட வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தினுடைய தலைசிறந்த வல்லுநர்களில் ஒருசிலர் இந்த மாவட்டத்தில் பணியாற்ற ஒரு வாய்ப்பு அளித்து, அவர்களைக்கொண்டு நெல் ஆராய்ச்சி மையம் இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலே நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியைக் கேட்டார்கள். அதற்குத்தான் தற்போது இல்லை என்று பதில் சொன்னேன். இருந்தும் அவருடைய துணைக் கேள்வியில் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைப்பதன்மூலம்



2007 மே 14]

பயன்பெறக்கூடிய விவசாயிகளுடைய நன்மைகளைக் குறித்து இங்கே எடுத்துச்சொல்லி, மீண்டும் அதை வலியுறுத்தினார். வட மாவட்டங்களுக்கேற்ற நெல் ஆராய்ச்சிகள் தற்போது ஆடுதுறை மற்றும் திரூர் நெல் ஆராய்ச்சி நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு, திருவண்ணாமலை உட்பட அப்பகுதி மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான இரகங்களும், தொழில்நுட்பங்களும் பரிந்துரைக்கப்படுகின்றன.

அதுமட்டுமின்றி, திருவண்ணாமலை விவசாயிகள் தேவைக்கு விரிஞ்சிபுரம் மற்றும் மேலாத்தூர் போன்ற இடங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையங்களில், புதிய நெல் இரக விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே திருவண்ணாமலை மாவட்டத்தில் புதிய ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்கான வாய்ப்பு தற்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

முற்பகல் 9-45

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் மொத்த வேளாண்மை நிலப்பரப்பு 3 இலட்சத்து 4 ஆயிரத்து 929 எக்டேர். சாகுபடி செய்யும் மொத்த நிலப்பரப்பு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 386 எக்டேர். இதில் நெல் சாகுபடி பரப்பு மட்டும் 1,42,744 எக்டேர். திருவண்ணாமலை மாவட்டம் விவசாயத்தையே பிரதானத் தொழிலாகக் கொண்ட மாவட்டம். திருவண்ணாமலை மாவட்டத்தில் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலமாக நெல் ஆராய்ச்சி மையம் அமைக்கப் போதுமான வளமான நிலங்கள், உள் கட்டமைப்பு வசதிகள், பாசன வசதிகள் கொண்ட மேல் செங்கம் மத்திய மாநில விதைப் பண்ணையிடம் 10 ஆயிரம் ஏக்கர் வீணாக உள்ளது. இந்த இடத்தைப் பயன்படுத்தியோ அல்லது திருவண்ணாமலை மாவட்டத்திற்குப் புகழ் சேர்க்கும்வகையில் இருக்கின்ற சாத்தனூர் அணைக்கு அருகிலே இருக்கிற வாழவச்சனூர் விதைப் பண்ணை மையத்தினுடைய தரத்தினை மேம்படுத்தி, அதன்மூலமாகவோ அல்லது மாவட்டத்திலேயே தொகுதி முழுவதும் விவசாயத்தையே உயிர் மூச்சாக நினைத்துக்கொண்டிருக்கும் கலசப்பாக்கம் தொகுதியிலேயோ இந்த நெல் ஆராய்ச்சி மையம் அமைத்து, எனது தொகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றித் தருமா என்பதையும், மாண்புமிகு அமைச்சர்

அவர்கள் கூறியதுபோல, ஆடுதுறையினுடைய சூழ்நிலை, தட்பவெட்ப நிலை வேறு, திருவண்ணாமலை மாவட்டத்தினுடைய மண் வளம், தட்பவெட்ப நிலை வேறு என்பதை அரசுக்கு உணர்த்தி, இதன் அடிப்படையிலே இந்த மாவட்டத்தில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடுதுறை, அதனுடைய தட்பவெட்ப நிலை வேறு, திருவண்ணாமலை மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை வேறு என்று எனக்கு உணர்த்துவதாக அவர் சொன்னார். அவர், வேளாண்மை பட்டதாரி என்று நான் கருதுகின்றேன். எனக்கு ஒன்றும் உணர்த்தத் தேவையில்லை. எனக்கும் அது தெரியும். இருந்தாலும், ஆடுதுறை ஆராய்ச்சி நிலையம் வட மாவட்டங்களுக்குத் தேவையான நெல் விதைகளை வெளியிட்டு இது திருவண்ணாமலை மாவட்டத்திற்கும் பயன்படக்கூடிய வகையிலேதான் தற்போது இயங்கி வருகிறது. ஆகவே, அவர் சொன்னதைப்போல, தமிழ்நாட்டில் ஒவ்வொரு பகுதியும் 100-க்கு 70 சதவீதத்திற்குமேல் வேளாண்மைப் பகுதியாகத்தான் இருக்கின்றன. அதற்கெல்லாம், அந்தந்த மாவட்டத்திற்கு என்று ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்க இயலாது. தற்போது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்மூலம் நெல் ஆராய்ச்சி நிலையம், திரூர், குப்பம், திருவள்ளூர் மாவட்டம், காவிரி டெல்டா பகுதி 2, தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி மையம், ஆடுதுறை, தஞ்சாவூர் மாவட்டம், நொய்யல் பாசனப் பகுதி நெல் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை, வைகை பாசனப் பகுதி, மதுரை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை, தாமிரபரணி பாசனப் பகுதி நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம், திருநெல்வேலி மாவட்டம், வீரிய ஒட்டு நெல் ஆய்வு மையம், கூடலூர், நீலகிரி மாவட்டம் ஆகிய பகுதிகளிலே ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. தற்போது இந்தப் பகுதிகளிலேயே ஆராய்ச்சி செய்வதன்மூலம் அங்கிருந்து நல்ல உற்பத்தி கிடைக்கக்கூடிய விதை நெல்களைக் கண்டறிந்து விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதிலே வீரிய ஒட்டு நெல் கோ.ஆர்.எச். 1, கோ.ஆர்.எச். 2, இது ஏற்கெனவே ஒட்டுரக விதை நெல் கண்டுபிடிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு, 2006-2007 ஆம் ஆண்டில் கோ.ஆர்.எச். 3 ரகம் கண்டுபிடிக்கப்பட்டு, உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட இருக்கின்றது. ஆகவே, இந்த நிலையில் மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையை ஏற்க வாய்ப்பில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**203—**

## வாகன ஆய்வாளர் அலுவலகம்

***12194—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரத்தில் புதிதாக வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடை அளிக்க தங்களது அனுமதியைக் கேட்டு, திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தற்போது ஒட்டன்சத்திரத்தில் புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் அமைக்கின்ற பணிக்காக அரசு பரிசீலனை செய்தது. அப்படிப் பரிசீலனை செய்தபோது, ஒட்டன்சத்திரம் தாலுகாவிலுள்ள ஒட்டன்சத்திரம், சத்திரப்பட்டி, கள்ளிமந்தயம், கே. வீரனூர், நெரியம்பூர் மற்றும் எடயக்கோட்டை ஆகிய ஊர்கள் அடங்கும் பகுதிகளிலே 1,295 போக்குவரத்து வாகனங்களும், 29,843 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. மேலும், ஒட்டன்சத்திரம் பகுதியில் 24 ஆயிரம் ஓட்டுநர் உரிமங்களும், 800 நடத்துனர் உரிமங்களும் உள்ளன. அதுமட்டுமல்ல, 21 ஆயிரம் போக்குவரத்து வாகனங்கள் ஓட்ட அனுமதி பெற்றவர்களும், 28 ஆயிரம் போக்குவரத்து அல்லாத வாகனங்கள் ஓட்ட அனுமதி பெற்றவர்களும் அப்பகுதியில் உள்ளனர். இங்கே ஒரு அலுவலகம் அமைக்கப்படுகின்றபோது ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடியே 51 இலட்சத்து 48 ஆயிரம் வருமானம் வரும் என்ற ஒரு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அரசு தொடர்ந்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு, ஏழுக்கு மேற்பட்ட இடங்களிலே புதிய அலுவலகங்கள் திறக்கின்ற காரணத்தினால், இதைவிடக் கூடுதலாக

[2007 மே 14

தேவையான இடத்திலே, புதிய அலுவலகம் திறக்க முன்னுரிமை தந்து, அந்த இடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. நிச்சயமாக வரும் ஆண்டில், இந்த இடத்திலே புதிய அலுவலகம் திறக்க இந்த அரசு அனுமதிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் வளர்ந்து வரக்கூடிய ஒரு வட்டத் தலைநகரமாகும். தமிழ்நாட்டிலே மிகப்பெரிய காய்கறி மார்க்கெட்டும், அதேபோல, தயிர், வெண்ணெய் மார்க்கெட்டும் ஒட்டன்சத்திரத்தில்தான் உள்ளது. தேசிய நெடுஞ்சாலை எண் 209-ம் மாநில நெடுஞ்சாலை 37-ம் அந்த நகரின் வழியாகச் செல்வதால், தினந்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் அந்த நகரின் வழியாகச் செல்கின்றன. போக்குவரத்து வாகனங்கள் நிறைந்த பகுதியாக ஒட்டன்சத்திரம் திகழ்கிறது.

இன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலுரையிலே ஒட்டன்சத்திரத்திற்கு விரைவிலே அமைத்துத் தருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லி இருக்கின்றார்கள். ஒட்டன்சத்திரத்தைப் பொறுத்தவரையிலே, அங்கே புதிய வாகனங்கள் யார் வாங்கினாலும், அதேபோல பதிவு செய்வதாக இருந்தாலும், புதிய எண்கள் பெறுவதாக இருந்தாலும், தகுதிச் சான்றிதழ் பெறுவதாக இருந்தாலும், ஓட்டுநர் உரிமம் பெறுவதாக இருந்தாலும், விபத்து ஏற்பட்டால் விபத்து ஆய்வு போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கும், பழனிக்கு, ஒட்டன்சத்திரத்தில் இருந்து சுமார் 30 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது.

வளர்ந்துவரக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவும், அதேபோல் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்பவும்--வாகன உரிமம் பெறுகின்றவர்களின் தேவை அதிகரித்துள்ள காரணத்தினால், இப்படிப் பல்வேறு பணிகளை விரைந்து செய்யக்கூடிய வகையிலே--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நலன் கருதி, இந்த ஆண்டிலே அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2007 மே 14]

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நிதி சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி— மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளைக் கேட்டுத்தான், அங்கு அதிகாரிகளை ஆய்வுக்கு அனுப்பித்தான் இவ்வளவு விவரங்களையும் நாங்கள் பெற்று இருக்கிறோம்—மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப இந்தத் துறை முயற்சி எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** ஈரோடில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இப்போது புதிதாக வேலை நடந்துகொண்டு இருக்கிறது. அந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கிட்டத்தட்ட ஈரோடு தாலுகாவை உள்ளடக்கிய முழுமையான பகுதிக்கும், அதுமட்டுமல்லாமல், வளர்ந்து வருகிற நகரமாக இருக்கிற ஈரோட்டிற்கு, அங்கே traffic track என்று போக்குவரத்துத் தளம் பதிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படுமா என்பதைத் தங்கள்மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நடத்துநர் பயிற்சித் தளம், ஓட்டுநர் பயிற்சித் தளம் அமைக்கின்ற பணி இந்த ஆண்டு, அரசின் சார்பாக இரண்டு இடங்களிலே புதிதாக அமைக்கப்பட இருக்கின்றன. ஈரோட்டிலே, இடம் அங்கு இருக்குமானால் உடனடியாக அங்கும் செய்யப்படும். ஏனென்றால், மத்திய அரசு தேவையான நிதி உதவி தருவதாக ஒப்புதல் தந்திருக்கிறது. இடம் கிடைக்கின்றபோது நிச்சயமாக அந்தந்த மாவட்டங்களிலே ஓட்டுநர் பயிற்சி நிலையம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு நகரிலே தற்போது வாகன ஆய்வாளர் அலுவலகம் இருக்கிறது. அந்த அலுவலகத்திலே தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களைப் பதிவு செய்து கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஏராளமான தொழிற்சாலைகளும், மக்கள் வாழ்கிற நெரிசலான பகுதியாகவும் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அங்கே வட்டாரப்

போக்குவரத்து அலுவலகம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத்
தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த ஆண்டு வட்டாரப் போக்குவரத்துக் கழக
அலுவலகங்கள் சேலத்திலே வடக்கு, தெற்கு என்றும், திருப்பூரிலே
இரண்டு இடங்களிலும் விரிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு
சென்னையிலே அந்த அலுவலகம் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த
ஆண்டும் சென்னையிலே இரண்டு இடங்களில் தரம்
உயர்த்தப்பட்டிருக்கின்றன. தேவைக்கேற்ப செங்கல்பட்டினுடைய மக்கள்
பெருக்கத்தின் அடிப்படையில், அங்கு பதிவு செய்கின்ற வாகனங்களின்
எண்ணிக்கையின் அடிப்படையில், அந்த அலுவலகம் தரம்
உயர்த்தப்படுவதற்கான முயற்சியை தேவைப்படுமானால் இந்த அரசு
எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாமக்கல்லில் அமைந்து இருக்கின்ற வட்டாரப்
போக்குவரத்து அலுவலகத்திலிருந்து, பரமத்தி வேலூர் 25 கி.மீ.க்கு
அப்பால் உள்ளது. பரமத்தி வேலூர் பகுதியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட,
இரு உருளை வாகனங்களும், 2,000-க்கும் மேற்பட்ட 3 மற்றும் 4 உருளை
வாகனங்களும் உள்ளன. ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட
வாகன ஓட்டுநர்கள், தங்களுடைய வாகன ஓட்டுநர் உரிமத்தைப் பெறவும்,
அவற்றைப் புதுப்பிக்கவும் நாமக்கல்லுக்குச் செல்ல வேண்டி இருக்கிறது.
எனவே, அதைத் தவிர்க்கும் பொருட்டு, பரமத்தி வேலூரிலே வட்டாரப்
போக்குவரத்து பகுதி அலுவலகம் அமைக்க, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாமக்கல், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளில்
அதிகமான வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்ற
காரணத்தால்தான் ஒவ்வோராண்டும் அந்தப் பகுதிகளிலே புதிய, புதிய



அலுவலகங்கள் திறந்து கொண்டேயிருக்கிறோம். இந்த ஆண்டு
சங்ககிரியினுடைய அலுவலகம், யூனிட் அலுவலகம், வட்டாரப்
போக்குவரத்து அலுவலகமாக உயர்த்தப்பட்டு இருக்கிறது.
வருங்காலத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
கருத்தை இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. குத்தாலம் க. அன்பழகன்.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை, குத்தாலம், சீர்காழி,
பூம்புகார் ஆகிய தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில்
மயிலாடுதுறையில் 1991 ஆம் ஆண்டு பகுதி வாகன ஆய்வாளர்
அலுவலகம் அமைக்கப்பட்டது. அதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு
தயார் நிலையில் உள்ளது. அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர
அரசு முன்வருமா? அதேபோல தமிழ்நாட்டில் 47 வட்டாரப்
போக்குவரத்து அலுவலகங்களும், 43 பகுதி வாகன ஆய்வாளர்
அலுவலகங்களும் செயல்பட்டு அரசுக்கு வருமானத்தை அதிகமாகப்
பெற்றுத் தரும் துறையாகவும், வாகனங்களைப் பதிவு செய்யும்
அலுவலகங்களாகவும் இயங்கி வருகின்றன. அவற்றின் பணிகளை மேலும்
விரைவுபடுத்த, அந்த வாகன ஆய்வாளர்களுக்கு வாகனங்களை
வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்து தருமா? அவற்றை
வழங்கிடுவதற்கான பரிசீலனை அரசினிடத்தில் உள்ளதா என்பதைத்
தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒவ்வோராண்டும் இரண்டு, இரண்டு அலுவலகங்களுக்குப்
புதிய கட்டடங்கள் கட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு 2
புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும், 4 பகுதி நேர
அலுவலகங்களுக்கும் புதிய கட்டடங்கள் கட்டுகின்ற பணியை இந்த
அரசு எடுத்திருக்கிறது. அங்கு இடம் இருக்குமானால் அடுத்த ஆண்டு
புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும்.
மேலும், உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபொழுது—இந்தத் துறை
1950-52-லே ஏற்பட்டது ஆகும். அப்போது ஏற்படுத்தப்பட்ட அந்த
அதிகாரிகளினுடைய எண்ணிக்கை என்பது அப்படியே இருந்து
கொண்டிருக்கிறது. வாகனங்கள், அப்போது இருந்ததைவிட 3 பங்கு
அதிகமாக இருக்கின்றன. அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சரிடம்

சொல்லி இதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று கேட்டு, இப்போது traffic constable என்ற அளவிலே 50 புதிய பதவிகளை நமக்குத் தந்திருக்கிறார்கள். அவர்களை நியமிக்க இருக்கிறோம். அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். தொடர்ந்து வாகனங்கள் தேவை என்றாலும் இந்த அரசு அவர்களுக்கு வாங்கித் தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி வால்பாறையிலே வாகன அலுவலகம் இல்லை. நான் வாகன அலுவலகம் கேட்கவில்லை. அங்கேயிருந்து 70 கிலோ மீட்டருக்கு பொள்ளாச்சிக்கு வந்துதான் வாகன லைசென்ஸ் கட்டணம், மறு பதிவு எல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, வாரத்திற்கு 2 நாட்களாவது வால்பாறையிலே தங்கி அந்த வாகன வரியை வசூல் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல வசதி இதுவரை நாம் எங்கும் தனியாக எடுத்துச் சென்று செய்வது இல்லை. குறிப்பாக ஓட்டுநர் உரிமம் பெறுகின்றவர்கள் அங்கு ஒரு கல்லூரியோ அல்லது தொழிற்சாலையோ இருந்து, ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அங்கே இருப்பார்களேயானால் அவர்கள் விரும்பினால், துறையினுடைய அதிகாரிகள் நேரடியாகச் சென்று அவர்களுக்கு இந்த ஓட்டுநர் உரிமத்தை மட்டும் வழங்கிக் கொண்டிருக்கிறோம். எனினும் நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கருத்தில் கொள்ளலாம். மேலும் அதிகாரிகளோடு ஆய்வு செய்துதான் அந்தப் பணியைச் செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிட்டத்தட்ட 1 கோடிக்கும் மேற்பட்ட வாகனங்கள் இருந்து வருவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த 1 கோடி வாகனங்களும் வெளியிடுகின்ற புகையினால் மிகப்பெரிய நோய்கள்



ஏற்படுவதாகவும், டை-ஆக்சைடு என்கின்ற ஒரு வாயு கிட்டத்தட்ட 75-க்கும் மேற்பட்ட வேதியல் உட்கூறுகளை மனித உடம்பில் மாற்றுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் சொல்கிறார்கள். இதை கருத்தில்கொண்டு கடந்த கால அரசுகளில் வாகனங்கள் புகை சோதனை மையம் என்பதை, அதை compulsory ஆக, கட்டாயமாக எல்லா வாகனங்களுக்கும் செய்து, அதற்கான ஒரு slip அந்த வாகனத்திலே ஒட்ட வேண்டுமென்ற விதி இருந்தது. ஆனால் தற்போது அந்த வாகனங்களில் அதுபோன்று ஒட்ட வேண்டுமென்று கட்டாயமாக்கப்படுவது இல்லை. யாரையும் அதுபோன்ற சோதனைகளுக்கு உட்படுத்துவது இல்லை. உதாரணத்திற்கு, அரசுப் பேருந்துகளேகூட இப்போது சென்னை போன்ற மாநகரங்களிலே கரும் புகையைக் கக்கிக் கொண்டு செல்வதைப் பார்க்கிறோம். நாங்கள்கூட சட்டமன்றத்திற்கு மிதி வண்டியிலே வருகின்றபொழுது எங்கள் முகத்தையும், எங்கள் சட்டைகளையும் கருப்பாக ஆக்குகின்ற அளவுக்குப் புகையைக் கக்கிக் கொண்டு சென்றன. ஆக நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் புகையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? பழைய முறை இருந்ததைத் திரும்பவும் கொண்டுவந்து அல்லது அதைக் கட்டாயப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுதான் இப்பொழுது வாங்கப்படுகின்ற புதிய பேருந்துகள் எல்லாம் BS III என்று சென்னை மாநகரத்திற்கு மட்டும் pollution free போக்குவரத்திற்காக, அந்த வண்டிகளாக வாங்கிக் கொண்டிருக்கிறோம். தொடர்ந்து புதிய பேருந்துகளை வாங்குவதும், அதனைத் கருத்தில்கொண்டுதான். அதிகமான அளவிற்குப் புகை கக்குகிற வாகனங்களை உடனடியாகத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு இந்தப் பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற கிட்டத்தட்ட 94 இலட்சம் வாகனங்களில், சென்னையில் மட்டுமே 30 இலட்சத்திற்குப் மேற்பட்ட வாகனங்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. இதைக் குறைக்க வேண்டுமென்று இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை

எடுத்துக்கொண்டு வருகிறது. தொடர்ந்து வாகனச் சோதனை மையத்தையும் கட்டாயப்படுத்தி இங்கு அதிகமான அளவிற்குப் புகையை விடுகின்ற அந்த வாகனங்களைத் தடை செய்வதற்குரிய முயற்சியையும் இந்த அரசு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**204—**

### மகப்பேறு மருத்துவமனை

***1392—திரு. து. அமரமூர்த்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், மேலப்பழுவூரில் மகப்பேறு மருத்துவமனை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தாலுகா, திருமானூர் வட்டாரத்தில் திருமானூரில் மேம்படுத்தப்பட்ட 24 மணி நேர அரசு ஆரம்ப சுகாதார நிலையமும், கீழ்பழுவூர், குருவாடி, வெங்கனூர் ஆகிய இடங்களில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருவதால், மேலப்பழுவூரில் மகப்பேறு மருத்துவமனை ஒன்று அமைக்கும் முகாந்திரம் தற்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரசவ வேதனை என்பது நரக வேதனைக்குச் சமம் என்பார்கள். நாமெல்லாம் அடிக்கடி ஓடும் பஸ்சிலே குழந்தை பிறந்தது, ஓடும் இரயிலிலே குழந்தை பிறந்தது என்று செய்தித் தாள்களிலே பார்க்கிறோம். ஆகவே, பெண்களின் நன்மை கருதி, கிராமப்புறத்திலே இதுபோன்ற மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே மகப்பேறு மருத்துவமனைகளை up-grade செய்கிற பணியை இந்த ஆண்டுகூட 220 இடங்களுக்கு ஒரு P.H.C.-க்கு 3 நர்சுகள் வீதம் வழங்கியிருக்கிறோம். இந்த ஊரைப் பொறுத்த அளவிற்கு கீழ்பழுவூருக்கும், மேலப்பழுவூருக்கும் வித்தியாசம் வெறும் நான்கு கிலோமீட்டர்தான். மேலும், அங்கேயே பார்த்தோம் என்று சொன்னால், மாதத்திற்கு ஒரு டெலிவரிதான் நடந்திருக்கிறது, அந்தக் கணக்குப்படி. ஆகவே, அந்த இடத்திற்குத் தற்சமயம் வேண்டியதில்லை. தேவையிருக்கும் இடங்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய, தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாடம், திட்டக்குடி மருத்துவமனைகள் up-grade செய்து கொடுக்கப்படுமா என்பதை உங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்றுசொல்லி 385 P.H.C.-க்களை up-grade செய்வதாக அரசினுடைய திட்டம். அதிலே 106 ஏற்கெனவே up-grade செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு 75-ஐ up-grade செய்து கொடுத்திருக்கிறோம். வருமாண்டில் நிச்சயமாக நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவசியம் இது செய்து கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்திலே கிராமப்புற மக்களுக்கு மருத்துவ வசதி எட்டாக் கனியாக இருந்தது. தற்போது வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் பல்வேறு கிராமங்களிலே இருக்கிற மக்கள் நல்ல மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கான நிதி ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, வருமுன்

காப்போம் திட்டத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து எல்லா கிராமப்புற மக்களும் மருத்துவ வசதி பெற அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருமுன் காப்போம் திட்டத்திற்கு நிரம்ப நிதி உதவி வழங்கியிருக்கிறோம். அதிலேகூடப் பார்த்தோம் என்று சொன்னால்--(குறுக்கீடு) இல்லை, எல்லாம் சரியாக வழங்கியிருக்கிறோம். குறைபாடு எதுவும் இருந்தால் தனிப்பட்ட முறையிலே சொல்வார்கள் என்று சொன்னால், அதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இரண்டாவதாக--வருமுன் காப்போம் திட்டத்தில் கிராமங்களில் ரெஃபரலுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுக்கிறோம். முன்பு பார்த்தோம் என்று சொன்னால், கிராமங்களில் மருத்துவமனைகளிலே வருமுன் காப்போம் திட்டத்தில் நோயாளிகளை ஆய்வு செய்து விட்டுவிடுவது வழக்கமாக இருந்தது. ஆனால், இப்போது ரெஃபரலுக்கு ரொம்ப முக்கியத்துவம் கொடுத்து, வாராவாரம் G.H.-லே அதற்குத் தனியாக ஒரு O.P.-யைப் போட்டு இந்தப் பணிகளையெல்லாம் சரியான முறையிலே செய்துகொண்டிருக்கிறோம். குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்கள் எதுவும் இருக்கும் என்று சொன்னால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் பொது மருத்துவமனையில் ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ 200 பிரசவங்கள் நடக்கின்றன. இதில் 20-லிருந்து 25 விழுக்காடு அறுவை சிகிச்சை - சிசேரியன் ஆக இருக்கின்றது. ஆனால், இங்கே ஒரு நிரந்தரமான மயக்க மருந்து டாக்டர், அதாவது அனெஸ்தட்டிஸ்ட் இல்லை. இங்கே இருக்கும் அனெஸ்தட்டிஸ்ட்டைத்தான் காஞ்சிபுரம் மருத்துவமனைக்கும் அழைக்கின்றார்கள். இதனால் இங்கே சிசேரியன் கேசஸ் எடுத்துக்கொள்ளப்படாமல், போன மாசம் மட்டும் 24 பிரசவ கேஸ்கள் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு ரெஃபர் செய்துள்ளார்கள். இந்த நிலைமை கடந்த 6 மாதங்களாக இருக்கிறது. நானும் D.M.S. அவர்களை அணுகி இதற்கான கோரிக்கையை வைத்துள்ளேன். மதுராந்தகம்



மருத்துவமனைக்கு என்று ஒரு அனெஸ்தட்டிஸ்ட்டை இந்த அரசு நியமிக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உடனடியாக அங்கே Anaesthesia டாக்டர் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுவார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் படுக்கை வசதியுடன் தரம் உயர்த்தப்படுகின்றபோது ஒன்றியத்திற்கு ஒரு பிளாக் ஒன்று என்றுதான் கொள்கை ரீதியாக இருக்கின்றது. ஆகவே, இரண்டு மூன்று பேரூராட்சிகள் அடங்கியிருக்கின்ற ஓர் ஒன்றியத்தின் பிளாக்குகளில் விதிகளைத் தளர்த்தி தேவைப்படுகின்றபோது மக்கள் அதிகமாக இருக்கின்ற இடத்தில் அதை இரண்டாக உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசாங்கத்தினுடைய குறியீடு ஒரு பிளாக்கிற்கு ஒன்று தான். பிளாக்குக்கு ஒன்று என்று சொல்லி 350 இடங்களுக்கு நாம் அந்தப் பணிகளை நிறைவு செய்திருக்கிறது எதிர்காலத்திலே விரிவாக்குவதைப் பற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஸ்ரீபெரும்புதூர் மருத்துவமனைக்கு 65 இலட்சம் ஒதுக்கீடு செய்து இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய பணிகள் தொடங்கப்படவில்லை அங்கே சவக்கிடங்கு இருக்கின்றது. அது சரியான நிலையில் இல்லை

என்பதை அமைச்சர் அவர்கள்கூடப் பார்வையிட்டார்கள். அதனுடைய பணி உடனடியாகத் தொடங்கப்படவிருக்கிறதா? . அது எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Health System Project-லே அந்தப் பணிகளை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். இந்த ஆண்டு அந்தக் குறிப்பிட்ட பணிகளையெல்லாம் தொடங்க வேண்டும் என்று அரசிலே உத்தரவிட்டு, இந்த ஓராண்டுக்குள்ளாக அந்தப் பணிகளை முடிக்கவேண்டும் என்று நாங்கள் ஆணையிட்டு இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கவனத்தில் ஏற்றுக்கொண்டு, இன்றே அதிகாரிகளை அழைத்து, அதற்கு வேண்டிய அவசரமான பணிகளை நடத்தச் சொல்லி நாங்கள் உத்தரவிடுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசு. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**205—**

## பூங்கா

***15920—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காருவள்ளி சின்னத் திருப்பதி கோயில் வளாகத்தில் பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காருவள்ளி சின்னத் திருப்பதி கோயில் வளாகத்தில், சுற்றுச்சூழல் மிகுந்த பூங்கா அமைக்க உகந்த இடமாக, இத்திருக்கோயிலின் வடகிழக்குப் பகுதியில் சுமார் 50 சென்ட் நிலத்தில் பூங்கா அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.



**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், மரக்கொட்டை கிராமத்தில் சின்னத் திருப்பதி என்ற பிரசித்தமான அந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமாக சுமார் 30 ஏக்கர் நிலம் உள்ளது. அதிலே, 5 ஏக்கர் பரப்பளவிலே கோயில் கட்டடங்கள் உள்ளன. தேர்த்திருவிழா நாட்களின்போது சராசரியாக நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சம் பக்தர்கள் வந்து செல்கின்றனர். ஆண்டு ஒன்றுக்கு 500 முதல் 1,000 திருமணங்கள் வரை நடைபெறுகின்றன. பெங்களூர், ஆந்திரா மற்றும் தமிழகத்தின் முக்கியமான பகுதிகளிலிருந்து பக்தர்கள் இரயிலிலே வந்து செல்கிறார்கள். பக்தர்கள் வருகை அதிகமாக இருப்பதால், ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25 இலட்சம் ரூபாய் இத்திருக்கோயிலுக்கென்று வருவாய் வந்துகொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு மட்டும் 22 இலட்சம் ரூபாய் வருவாய் வந்திருக்கிறது. எனவே, இந்தச் சிறப்புமிக்க திருக்கோயிலிலே, பக்தர்கள் வந்து மனமகிழ்ச்சியோடு செல்வதற்கு, மன ஆரோக்கியத்தோடு இருப்பதற்கு இங்கு சிறப்பான பூங்கா அமைப்பதற்கு கோரிக்கையினை வைத்ததன் அடிப்படையிலே, அமைச்சர் அவர்கள் இங்கு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்வதோடு, அங்கு வெளி மாநிலத்திலிருந்து பக்தர்கள் வருவதால் அங்கே இரவு நேரத்திலே அவர்கள் தங்கிச் செல்வதற்கு அறைகள், பக்தர்கள் தங்க அறைகள் கட்டித்தரப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திருக்கோயில் தூய்மையாகப் பராமரிக்கப்படவேண்டும் என்றும், அதேநேரத்தில் அங்கு வரக்கூடிய பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் தங்குமிடம் போன்றவற்றை தேவையான அளவுக்குச் செய்து தரவேண்டும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய அறிவுரையின்படி வசதிக்கேற்ப அங்கே அந்த அடிப்படைத் தேவைகள் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு மதிப்பீட்டில், எப்போது செய்து கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தபடி நிதி வசதியைப் பொறுத்து, அங்கு இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அந்தப் பணியை விரைவுப்படுத்துகிற காரியத்தில் ஈடுபட்டால் அவர்கள் விரும்புகின்ற நேரத்தில் செய்து தரலாம்.

(முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**206—**

**சரிகை ஆலை**

***8707 —திரு. ஆர். சிவானந்தம்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதியில் சரிகை ஆலையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரணி தொகுதியில் சரிகை ஆலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், ஆரணி, செய்யார், பெரணமல்லூர், போளூர், திருவண்ணாமலை ஆகிய தொகுதிகளில் சுமார் 5,000 தனியார் நெசவாளர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம், சூரத்திலிருந்துதான் சரிகை கொள்முதல் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. காஞ்சிபுரம் சரிகை ஆலையில் உற்பத்தி ஆகின்ற சரிகை



கூட்டுறவுச் சங்கங்களுக்குக்கூடப் போதவில்லை. எனவே, நெசவாளர்களின் வாழ்வைக் கருத்தில்கொண்டு, ஒரு சரிகை ஆலையை ஆரணி பகுதியில் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு அடிப்படையில் இருக்கிற நெசவாளர்களுக்குத் தேவையான சரிகை 18,000 மார்க்குகள், நம்முடைய மாநிலத்திற்குத் தேவைப்படுகிறது. அதிலே 7,000 மார்க்குகள் காஞ்சிபுரம் சரிகை ஆலையிலும், திருபுவனம் சரிகை ஆலையில் 1,000 மார்க்குகளும் இப்பொழுது நாமே உற்பத்தி செய்து கொடுக்கிறோம். மற்ற நேரங்களில் 10,000 மார்க்குகளை வெளியே வாங்குகிற நிலை. ஆரணி பகுதிக்குத் தேவையானது 400 மார்க்குகள் மட்டும்தான். ஆனால், இப்போது அவர்கள் காஞ்சிபுரம் பகுதியில் அதை வாங்குகிற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்திலே, தனியார் நெசவாளர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற சூழ்நிலையில் உங்களுடைய ஆரணி பகுதியில் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி பகுதியில் 200-க்கும் மேற்பட்ட பட்டு முறுக்காலைகளும், 5,000-த்திற்கும் மேற்பட்ட தறிகளும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைத்தறிகளும் உள்ளன. உண்மையிலேயே இவர்கள் உற்பத்தி செய்கின்ற சேலைகளுக்கு சரிகை போதவில்லை. அதுமட்டுமல்லாமல், தனியார் உற்பத்தி செய்கின்ற சேலைகளை அரசு கொள்முதல் செய்கின்ற வாய்ப்பு இல்லை. எனவே, ஆரணி பகுதியில் பட்டுக்கு என்று ஒரு ஜவுளிப் பூங்காவை அமைத்து, நெசவாளர்களின் வாழ்வைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக பட்டுக்கு அவருடைய பகுதியிலே ஒரு பட்டு ஜவுளிப் பூங்கா அமைத்துக் கொடுக்கிற நிலையை அரசு அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கும்.

[2007 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**207—**

**தரம் உயர்த்துதல்**

***23137—திரு. சு.ப. வேலுமணி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, 60-வது வட்டம், கோவில்மேடு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்குள்ளே நுழைந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று மேசையைத் தட்டி முதலமைச்சரை வரவேற்றனர்.)

பேரூர் தொகுதி, 60-வது வட்டம், கோவில்மேடு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவது குறித்த கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூர் தொகுதி, 60-வது வட்டம், கோவில்மேடு நடுநிலைப் பள்ளியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படிக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது, போதுமான நிதியை ஒதுக்கி, வேண்டிய அளவு கட்டட வசதி செய்யப்பட்டுள்ளது. 1-9-2004-ல் upgrade செய்வதற்கு விதியின்படி கட்டப்பட வேண்டிய கட்டணம் ஒரு இலட்சம் ரூபாய் கட்டப்பட்டுள்ளது. ஆகவே, 60-வது வட்டம் கோவில்மேடு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர இந்த அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்மேடு நடுநிலைப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே, சுமார் 823 மாணவர்கள் இப்போது கல்வி பயிலுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கடந்த 1-9-2004 அன்று பொது மக்களுடைய பங்களிப்புத் தொகை செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்கு அருகிலே 2½ கிலோ மீட்டர் தூரத்திலே மாநகராட்சி கமலநாதன் மேல்நிலைப் பள்ளி, வெங்கட்டாபுரத்திலும், அதேபோல மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, பாப்பநாயக்கன்புதூர் 3 கிலோ மீட்டர் தூரத்திலும் இருக்கிறது. ஒரு பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு சுற்றளவிலே 5 கிலோ மீட்டர் அளவிற்கு ஒரு பள்ளிக்கும் மற்றொரு பள்ளிக்கும் இடைப்பட்ட தூரம் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. இந்தப் பள்ளியைப் பொறுத்தமட்டிலே உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டிருக்கும் என்று சொன்னால், அது குறித்து அரசு வருங்காலத்தில் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் குறிப்பிட்டதுபோல, வெங்கட்டாபுரம் உயர்நிலைப் பள்ளிக்கும், கோவில்மேடு நடுநிலைப் பள்ளிக்கும் இடைப்பட்ட தூரம் கிட்டத்தட்ட 3½ கிலோ மீட்டருக்கு மேல் உள்ளது. இருந்தாலும், அங்கு இருக்கின்ற மாணவ, மாணவியர் போகின்ற தூரத்தைக் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதிக்கு சுற்றிப் போக வேண்டும் என்றால், கிட்டத்தட்ட 5 கிலோ மீட்டர் தூரம் வரும். ஆகவே, அதை upgrade செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே பேரூர் தொகுதிக்குட்பட்ட மதுக்கரை ஒன்றியம் குமுட்டிபதி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த ஒரு இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது. அதையும் தரம் உயர்த்தித்தர இந்த அரசு முன்வருமா என்று கேட்டுக்கொண்டு, பிச்சனூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித்தர வேண்டும் என்றும், குனியமுத்தூர், சுண்டக்காமுத்தூர், குறிச்சி, மதுக்கரை, ஓத்தக்கால் மண்டபம் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கட்டட வசதி செய்து தர இந்த அரசு முன்வருமா என்றும், சுகுணாபுரம், குனியமுத்தூர், இடையர்பாளையம் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய இந்த அரசு முன்வருமா என்றும் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2007 மே 14

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல அவருடைய தொகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கும், அவர் குறிப்பிட்டிருப்பதைப்போல பல்வேறு கட்டடப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், அதைப் பொறுத்தமட்டிலும் மற்ற ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்கும் இந்தமுறை மாண்புமிகு முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். எனவே தேவைப்படக்கூடிய இடங்களில் அத்தகைய பணிகளைச் செய்வதற்கு அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளிலே உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை இந்த அவையிலே வைத்திருக்கின்றார்கள். அதனாலே நீங்கள் ஏற்கெனவே அறிவித்ததைவிட, சென்ற ஆண்டைவிட 150 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும தரம் உயர்த்த இந்த ஆண்டே அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. டி. சுதர்சனம் அவர்கள் வைத்திருக்கக்கூடிய இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தனிப்பட்ட கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவரிடத்திலே ஆலோசித்து அரசு உரிய முடிவை நிச்சயமாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.



2007 மே 14]

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் மாவட்டக் கல்வி அலுவலகம் கரூரில் அமைந்துள்ளது. குளித்தலை தொகுதியிலுள்ள பள்ளியிலே பணிபுரியும் ஆசிரியர்களும், பொது மக்களும் கல்வி அலுவல் சம்பந்தமாக கரூருக்குச் செல்ல சுமார் 80 கிலோ மீட்டர் பயணம் செய்ய வேண்டியிருக்கின்றது. ஆகவே, குளித்தலையை மையமாக வைத்து, குளித்தலையிலே ஒரு மாவட்டக் கல்வி அலுவலகம் அமைத்தால் அந்தப் பகுதியிலுள்ள ஆசிரியர்களுக்கும், பொது மக்களுக்கும் உதவியாக இருக்கும். மேலும், பக்கத்தில் உள்ள குளித்தலையிலுள்ள கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே, குளித்தலையை மையமாக வைத்து மாவட்டக் கல்வி அலுவலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் போன்ற மிகச் சிறிய வருவாய் மாவட்டங்களிலே அமைந்திருக்கக்கூடிய பள்ளிகளின் எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, திருவாரூராக இருந்தாலும், கரூராக இருந்தாலும், நாமக்கல் போன்ற மாவட்டங்களாக இருந்தாலும், அவற்றிலே ஓரேயொரு கல்வி மாவட்டம்தான் அமைப்பதற்கு இப்போதைக்குச் சாத்தியக்கூறு இருக்கிறது. இருந்தாலும், வருங்காலங்களிலே ஏற்படக்கூடிய தேவையைக் கருத்திலே கொண்டு, குளித்தலையிலே அப்படி ஒரு கல்வி மாவட்டத்தைத் தனியாக உருவாக்குவதற்கு வாய்ப்புகள், சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு ரூபாய் ஒரு இலட்சம் வைப்பு நிதியும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு மக்களுடைய பங்களிப்பாக 2 இலட்சம் ரூபாய் வைப்பு நிதியும் வைத்தால் தரம் உயர்த்தித் தரப்படும், பரிசீலிக்கப்படும் என்று இருப்பதை, இந்த ஆண்டு நம்முடைய மாண்புமிகு முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள்

[2007 மே 14

இந்த அவையில் 50 ஆண்டு காலம் பணியாற்றி, பொன் விழா கண்டதை நினைவில் வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) யார் எல்லாம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்துவதற்கு முறைப்படி பணம் கொடுத்து விண்ணப்பித்து இருக்கின்றார்களோ அத்தனை பேர்களுக்கும் சிறப்பு அனுமதியாகப் பொன்விழா நினைவை மனதிலே வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பலமுறை இந்த அவையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல பொது மக்களுடைய பங்களிப்புத் தொகையைச் செலுத்துவதால் மாத்திரமே ஒரு பள்ளியைத் தரம் உயர்த்திவிட இயலாது. அது அந்தப் பகுதி மக்களுடைய ஆர்வத்தைக் காட்டுகிறது என்ற வகையிலேதான் அரசு அதை நிர்ணயித்திருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள் எந்த அளவிற்கு அந்தப் பள்ளி வர வேண்டும் என்பதிலே ஓர் ஆர்வத்தைக் காட்டுகிறார்கள் என்பதை நிர்ணயிக்கக்கூடிய வகையிலும் அது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு சில விதிமுறைகள் இருக்கின்றன. விண்ணப்பம் கொடுத்திருக்கக்கூடிய, அத்தனை பள்ளிகளையுமே தரம் உயர்த்துவது என்பது அரசினுடைய நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும் இயலாத காரியம். ஆனால், வரக்கூடிய காலங்களிலே Universalisation of Secondary Education என்கின்ற திட்டம் மத்திய அரசினுடைய தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம், நம்முடைய தமிழகத்திலே வரக்கூடிய கல்வியாண்டிலிருந்தோ தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு நிலை உருவாகிறபோது, நிச்சயமாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பத்தக்க அளவிற்கு, பல பள்ளிகளை இன்னும் அதிகமான பள்ளிகளை தரம் உயர்த்தக்கூடிய நிலை அரசுக்கு நிச்சயமாக இருக்கிறது.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.



2007 மே 14]

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில், வத்தலக்குண்டு ஒன்றியம், தெப்பத்துப்பட்டி ஊராட்சி மன்றத்தில் ரெங்கப்பநாயக்கன்பட்டியில் உள்ள அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 20 கிலோ மீட்டர் தூரம் சென்று, வத்தலக்குண்டில்தான் பத்தாம் வகுப்பு தேர்வு எழுத வேண்டியுள்ளது. மாணவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது அந்தப் பள்ளியிலே தேர்வு எழுதுவதிலேதான் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னார்கள். எனவே அங்கே தேர்வு மையம் அமைக்க வேண்டுமா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படித் தேர்வு மையம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், வரக்கூடிய டிசம்பர் மாதத்திலே எந்தெந்த இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்படும் என்று அரசினுடைய சார்பிலே முடிவெடுக்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக்கூடிய கோரிக்கையையும் நிச்சயமாக அரசு ஆராய்ந்து நல்ல முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முகையூர் தொகுதி விளந்தை உயர்நிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தக் கோரி, அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபாய் 2 இலட்சம் பணம் செலுத்தி, கடந்த ஆண்டிலே தரம் உயர்த்தவில்லை. எனவே, நடப்பாண்டில் தரம் உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

[2007 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**208—**

## கோழி வளர்ப்பு

***7583—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை பகுதியில் கோழி வளர்ப்பு, கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உடுமலைப்பேட்டை பகுதியில் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது திட்டம் எழ வாய்ப்பில்லை என்று கூறினார்கள். எங்களது உடுமலை தொகுதியைப் பொறுத்தவரை கோழி வளர்ப்பு, கோழிக் குஞ்சு பொரிப்புக்குத் தேவையான சீதோஷ்ண நிலை உள்ளது. நாமக்கல் பகுதியைப் போன்று அதிக வெப்பநிலை உள்ள இடத்திலே எப்படி முட்டைக் கோழிகள் அதிகமாக வளர்க்கிறார்களோ, அதுபோல எங்களது பகுதி கோழிக் குஞ்சுகள் வளர்ப்பதற்கு உகந்த இடமாக உள்ளது. உடுமலைப்பேட்டை பகுதியில் தாய்க் கோழி வளர்க்கவும், கறிக்கோழி வளர்க்கவும், கோழிக் குஞ்சு வளர்க்கவும் உகந்த இடமாக உள்ளது. கோழி வளர்ப்புத் தொழிலில் இப்பகுதியில் அதிக விவசாயிகள் ஈடுபட்டு நல்ல வளர்ச்சியடைந்துள்ளார்கள். அதன்மூலமாக கிராமப்புறங்களில் பொருளாதாரம் சிறந்த முன்னேற்றம்



2007 மே 14]

அடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதைக் கருத்தில்கொண்டு இந்தப் பகுதியிலே தனியார்கள்மூலமாக Suguna Hatcheries, Venkateswara Hatcheries, Shanthi Hatcheries போன்ற பெரிய முதலாளிகளும் இங்கு இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளார்கள். அதேபோல சிறிய தொழிலை நடத்தக்கூடிய ஐம்பதுக்கும் மேற்பட்ட கோழிப் பண்ணை வளர்ப்பாளர்கள் இந்தப் பகுதியிலே, பல்லடம், உடுமலைப்பேட்டை போன்ற பகுதிகளிலே செய்து வருகிறார்கள். ஆகவே அரசு இதைக் கருத்திலே எடுத்துக்கொண்டு, நமது கோழி உற்பத்தியாளர்களின் நலன் கருதி எங்கள் பகுதியில் அரசாங்கமே கோழி வளர்ப்பு மற்றும் குஞ்சு பொரிப்பகம், Hatcheries, அமைப்பதற்கு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அங்கு ஏற்கெனவே தனியார் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம் மூன்று செயல்பட்டு வருகின்றன. தற்சமயம் துறையில் பல்வேறு தரப்பட்ட பண்ணைகளும் இப்பொழுதுதான் மேம்படுத்தி சிறப்பாகச் செயல்பட வைக்கப்பட்டுள்ளன. ஓசூரிலே இப்பொழுதுதான் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம் அரசின்மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதனால் படிப்படியாக நமது துறை வளர்ச்சிக்கேற்ப, நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டில் உடுமலைப்பேட்டை பகுதிக்காக தங்களுடைய கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஏற்கெனவே அந்தப் பகுதியிலே பறவைக் காய்ச்சல் நோய்மூலமாக உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி அங்கே நஷ்டமடைந்துள்ளார்கள். இதற்கு முன்பு கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் இருந்தது. போதிய நிலம் கொடுப்பதற்கும் அங்கே தனியார்கள் முன்வந்துள்ளார்கள். ஆகவே கோழி உற்பத்தியாளர்களின் நலன் கருதி உடனடியாக கோழி நோய்த் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே

இருக்கக்கூடிய கோழி உற்பத்தியாளர்கள் ஒவ்வொன்றுக்கும் நாமக்கல் செல்ல வேண்டியுள்ளது. அதையெல்லாம் கருத்திலே எடுத்து, அந்தப் பகுதியிலேயே—ஏற்கெனவே 5 கோடியிலே அமைப்பதற்கு திட்டம் ஒன்று அரசிடம் நிலுவையிலே இருந்தது. அதற்கும் முன்னுரிமை அளிக்கக்கூடிய வகையிலே. . .

(முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு, சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி. சண்முகவேலு :** ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்கு அரசு உடனடியாக முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக அல்ல. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை இந்த அரசு ஆய்வு செய்து, வரும் நிதியாண்டில் உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**209—**

## சிறப்புத் திட்டம்

***7589—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சித்தேரி ஊராட்சியில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அம்மக்களுக்காக சிறப்புத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30-3-2007 ஆம் நாளிட்ட அரசாணை எண் 40-ல் சித்தேரி மலைப் பகுதியிலுள்ள பழங்குடியினருக்கு மைய அரசின் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் சிறப்பு நிதி உதவியாக ரூ.12.68 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தேரி ஊராட்சிப் பகுதி மலைவாழ் மக்கள் வாழ்கிற சுமார் 50 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் இருக்கிறது. அதுமாத்திரமல்லாமல், 1970-1972-லேதான் நமது முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியிலே இருந்தபோது, அங்கே முதன் முதலாக மின்சார வசதி செய்து தரப்பட்டது. ஆனால், இடைப்பட்ட காலத்தில், இதுநாள் வரையில் அந்தப் பகுதியில் இருக்கிற சின்னச் சின்ன கிராமங்களுக்கு மின் வசதி இல்லாமல், சாலை வசதி இல்லாமல், இன்னும் சொல்லப் போனால், போக்குவரத்து வசதி இல்லாமல், தொட்டில் கட்டிப் போகின்ற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. எனவே, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும்வகையிலும், அந்த மக்கள் மேம்பாடு அடையத்தக்க வகையிலும், உள்ளாட்சித் துறை, மின் வாரியம், ஆதி திராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, இப்படிப் பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர் மட்ட அதிகாரிகளை வைத்து அந்த மக்களுடைய மேம்பாட்டிற்காக ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா? இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறதே, இந்த 12 இலட்சம் ரூபாயில் எந்தெந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ரூ.12.68 இலட்சம் செலவில் அந்த மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, காய்கறிக் கடை அமைக்க தலா 25 ஆயிரம் ரூபாயும், பல்சரக்குக் கடை அமைக்க தலா ரூ.50 ஆயிரம் ரூபாயும், கறவை மாடுகள் வாங்க தலா 15 ஆயிரம் ரூபாயும், ஆடு அலகுகள் வாங்க தலா 9 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த மக்களின், தேவைக்கேற்ப அடிப்படை வசதி செய்து தரப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்காக 100 சதவீத மானிய அடிப்படையில் வீடுகள் கட்டவும், ஆடுகள் வாங்குவதற்காகவும் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படுகிற நிதி முறையாகச் செலவழிக்கப்படாமல் கடந்த காலங்களில் குறிப்பிட்ட சிலர் மாத்திரமே பயன்படுகிற நிலையும் இருந்தது. குறிப்பாக, ஆடுகள் வாங்குவதற்கும், வீடுகள் கட்டுவதற்கும், அங்கே இருக்கிற அதிகாரிகளோ அல்லது ஊராட்சி மன்ற, உள்ளாட்சி மன்ற அமைப்புகளோ பயனாளிகளைத் தேர்ந்தெடுக்காமல், யாரோ ஒரு சிலர் தேர்ந்தெடுத்து, அவர்கள் தலைமையிலே வந்து அங்கே இருந்து பயனாளிகள் பட்டியலைக் கொடுத்து பெற்றுச் செல்கிற காரணத்தால், அவர்களுக்கு மாத்திரம்தான் அந்தப் பயன் என்கிற நிலை வருகிறது. குறிப்பாக, மலைவாழ் மக்கள் மேம்பாடு அடைய வேண்டுமானால், வீடு கட்ட வேண்டுமானால், ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து 10, 15 அல்லது 50 வீடுகள் அங்கு கட்டிக் கொடுத்தால் பயனுள்ளதாக இருக்கும். அதைவிட்டுவிட்டு ஊருக்கு ஒன்றிரண்டு என்று அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள் கட்டுவதால் எந்தப் பயனும் இல்லை. எனவே தொகுப்பு வீடுகளைக் கட்டுகிற நிலையில் 100 சதவீத மானியம் என்கிற காரணத்தால் முறையாகக் கட்டித் தரவும், ஆடுகள் வாங்குவதற்குப் பதிலாக வனத் துறையிலே இருக்கிற அந்த மலைவாழ் மக்கள் வேலைவாய்ப்புப் பெறுகிற வகையில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடங்கி மகளிர் சுய உதவிக் குழுமூலமாக கறவை மாடுகள் வாங்குவதற்குக் கடன் தந்தால், பயனுள்ளதாக இருக்கும். எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எதிர்காலத்திலே எடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை இந்த அரசு பரிசீலிக்கும். மேலும், மலைப் பகுதியில் வாழும் மக்களுக்கு 36,500/- ரூபாயும், சமவெளியில் வாழும் மக்களுக்கு 34,000/- ரூபாயும், வீடு கட்ட அரசு செலவு செய்து வருகிறது. அவர்கள் சொன்ன அந்த சில





குறைபாடுகள் இருக்குமேயானால், நிச்சயமாக அவர்களுடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மக்களுக்குக் குடியிருப்புகள் இல்லாவிடில் புதிய குடியிருப்புகள் கட்டி வழங்கப்பட்டு வருகின்றன. ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டு 20 ஆண்டுகளுக்கு மேலுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளில் பலர் குடியிருந்து வருகிறார்கள். இந்தக் குடியிருப்புகளில் பல இடிந்து விழுகிற நிலையிலே இருக்கின்றன. அவற்றை இடித்துவிட்டு, புதிய குடியிருப்புகளாக அவர்களுக்குக் கட்டித் தர இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? அதற்கான நிதி இந்த ஆண்டிலே ஒதுக்கப்படுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டித் தருகின்ற பணியினை ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின்மூலமாகச் செய்து வருகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருவண்ணாமலை மாவட்டம், ஜமுனாமுத்தூர் மலை, மாநிலத்திலே மூன்றாவது இடத்திலே இருக்கக்கூடிய மலைவாசஸ்தலம். ஆகவே, அங்கேயிருக்கின்ற மலைவாழ் மக்களுக்கு, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மத்திய அரசாங்கத்தினுடைய நேரடியான உதவி கிடைப்பதற்கு அரசு பரிந்துரை செய்து, அதற்கு அனுமதியைப் பெற்றுத் தருமா என அறிய விரும்புகிறேன்.

[2007 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்திலே மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய அரசுடன் கலந்தாலோசித்துத்தான், இந்தத் திட்டத்தினைப் பிற மாவட்டங்களில் செயல்படுத்த இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, பர்கூர் ஊராட்சியில், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தினை அம்மக்களுக்காகச் செயல்படுத்த வேண்டும். பர்கூர் பகுதியிலே, மலைவாழ் மக்களின் தொழிலாக மாடு மேய்க்கும் தொழில்தான் அதிகமாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் மாடு வாங்குவதற்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்கி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களுக்காக ஆடு, மாடுகள் வாங்குவதற்குக் கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது. அப்பகுதி மக்களுக்குத் தேவை ஏற்படின், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசை அணுகினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களின் துயரம், மலைபோல் உயரம். கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் 16 மலைவாழ் குடியிருப்புகள் உள்ளன. குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளுக்காகச் சிறப்பு நிதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் ஏற்கெனவே கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையில், அந்த மலைவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வதற்கு அரசு சிறப்பு நிதி ஒதுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2007 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்களின் குடிநீர் வசதிக்கான திட்டம், நாமக்கல், திருவண்ணாமலை, தருமபுரி, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**210—**

### சொந்தக் கட்டடம்

***19216—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் வட்டம், நிழலி கிராமக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் வட்டம், நிழலி கிராமத்தில் உள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பால் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, கருணைகூர்ந்து, பால் மனம் படைத்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பால் விலையை ஒன்றரை ரூபாய் வரை உயர்த்திக் கொடுத்து, விவசாயிகள்

[2007 மே 14

வயிற்றிலே பாலை வார்த்தார்கள். அப்படிப்பட்ட பால் வளத் துறையை மேம்படுத்துவதற்கு, -- நிழலியிலே இருக்கிற மகளிர் கூட்டுறவுச் சங்கங்களிலே சுமார் 600 லிட்டர் தினமும் கொள்முதல் செய்யப்படுகிறது; 100 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். குண்டடம் வறண்ட பகுதி. அங்கே தீவனம் எல்லாம் வாங்கி வைப்பதற்கு ஒரு அறை வேண்டும். அங்கே பால் சொசைட்டிக்குக் கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. எனவே, இதுபோன்ற திட்டங்களுக்கு அரசு முன்னுரிமை அளிக்க வேண்டும். இதுபோல, எள்ளப்பாளையத்திலே, சுள்ளிப் பொறுக்கிப்பாளையம் என்ற ஊரிலே, முத்துக்காளி வலசு என்கிற ஊரிலே, சென்னிமலையிலே இருக்கிற ஈங்கூரிலே மகளிர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்தெல்லாம், கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அரசு இதுபோன்ற—500 லிட்டருக்கு மேல் கொள்முதல் செய்கிற பெரிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளித்து, பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கட்டடம் கட்டிக் கொடுத்தால், உதவியாக இருக்கும். வறண்ட பகுதி என்பதாலே, தீவனங்கள் அங்கே வைப்பதற்கு அறை தேவைப்படுகின்ற காரணத்தினாலே, கருணையோடு பரிசீலித்து, ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், நிழலி கிராமத்திலுள்ள, நிழலி மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த அளவில், தற்போதைக்கு நிதியாதாரம் இல்லாத காரணத்தால், கட்டடம் கட்டுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடங்கள் கட்டித் தருவதற்குச் சிலர் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட செயற்குறிப்புகளைப் பொறுத்தவரையில், வழிகாட்டு நெறிமுறைகளில் அதுபோன்ற வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அணுகி, இதைப்பற்றிப் பரிசீலனை செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அங்கு கட்டடம் கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2007 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

முற்பகல் 10-35

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஈரோடு பால் கூட்டுறவு ஒன்றியத்திலே, விழுப்புரம் பால் கூட்டுறவு ஒன்றியத்திலே மற்ற சொசைட்டிகளைக் காட்டிலும் ஒரு ரூபாயிலிருந்து 50 பைசா வரை பாலுக்கு குறைத்துக் கொடுக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ஈரோடு கூட்டுறவு ஒன்றியம், விழுப்புரம் கூட்டுறவு ஒன்றியம் எல்லாம் நஷ்டத்திலே இயங்குகின்றன. அதற்கு மத்திய அரசினுடைய நிதி உதவியைப் பெற்று ஒன்றியம் கடன் பெற்றிருக்கிறது. அதற்காக வட்டி கட்ட வேண்டும். தமிழகம் முழுவதும் இருக்கிற மற்ற பால் உற்பத்தியாளர்களின் கொள்முதல் விலையைக் காட்டிலும் ஈரோட்டிலே இருக்கிற விவசாயிகளிடத்திலே கொள்முதல் செய்கிறபோது 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய் வரை குறைத்துக் கொடுக்கிறார்கள். விழுப்புரத்திலே இதுபோன்ற நிலை இருக்கிறது. இதை நான் கடந்த முறையே பேசுகிறபோது அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்தேன். இப்பொழுது நல்ல இலாபத்திலே இயங்குகிறது. அதிகமான இலாபத்தில் இயங்கிக் கொண்டு வருகிறது ஈரோடு ஒன்றியம். அந்தப் பால் விலையை இப்போது 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய்வரை கூட்டிக் கொடுக்க முடியுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஈரோடு கூட்டுறவு ஒன்றியத்திலே பல ஆண்டுகளாக இயங்கி வந்த N.D.D.B. என்கின்ற தேசிய பால் வள வாரியத்தின் தென் பிராந்திய அலுவலகம் அங்கே செயல்பட்டு வந்தது. தமிழகத்தினுடைய பால் தொழில் வளர்ச்சிக்கு பால் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்காக தேசிய பால் வள வாரியம் என்ற நிறுவனம் பெங்களூரைத் தலைமையிடமாகக் கொண்டு தென் பிராந்திய அளவிலே ஈரோட்டிலே செயல்பட்டு வந்தது. அதையும் கடந்த ஆட்சியினுடைய அவலத்தாலே மூடிவிட்டார்கள். அதை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொண்டு, ஈரோட்டிலும், விழுப்புரத்திலும் 50 பைசாவிலிருந்து ஒரு ரூபாய்வரை குறைத்துக் கொடுக்கிற பாலுக்கு கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மே 14

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பூராவும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் ஓரேமாதிரியான விலையில்தான் பால் கொள்முதல் செய்தல் வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அங்கே நிலைமை இருந்தால், அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக்காலத்திலே, அதிகப்படியாக குளிர்பானங்கள் விற்பனை ஆகின்றன என்று செய்தித்தாள்களிலே பார்க்கின்றோம். இப்பொழுது குக்கிராமங்களிலும் பன்னாட்டு நிறுவனங்கள் தயாரிக்கும் Coco-Cola, Fanta, Pepsi முதலியவையெல்லாம் எளிதாகக் கிடைக்கின்ற காலத்திலே, ஆவின் பால் flavoured milk, Elaichi (Cardomom) இந்தச் சுவையுள்ள பாலை இப்பொழுது சென்னை மாநகரிலே அனைவரும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அதுபோல குக்கிராமங்களிலும் இந்த ஆவின் பாலும், பீருக்குப் பதில் மோராக ஆவின் மோரைக் கொண்டுவர இந்த அரசாங்கம் முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவின் பொருட்கள், மோர் போன்ற பொருட்கள் எவ்வளவு தேவையிருக்கின்றன என்று ஆர்டர் கொடுக்கிறார்கள். அதற்கேற்பதான் செய்யப்படுகிறது. உடனடியாக தொடர்ந்து அதைப்போன்று எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்று அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



2007 மே 14]

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல் 12) ©

1—

### முந்திரி தொழிற்சாலை

**வினா எண் 11907—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மானாமதுரையில் முந்திரி சம்பந்தமான தொழிற்சாலை ஒன்று SIPCOT வளாகத்தில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் எந்தவித தனியாரிடமிருந்து விண்ணப்பங்களோ அல்லது முந்திரி தொழிற்சாலை அமைக்க அரசு திட்டமோ இல்லை. சிப்காட் நிறுவனம், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரையில், சுமார் 192 ஏக்கர் நிலப்பரப்பில் தொழில் வளாகத்தை உருவாக்கி செயல்படுத்தி வருகின்றன. இங்கு ஏற்கெனவே சுமார் 44 தொழிற்சாலைகளுக்கு 174 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன்து. தொழில் முனைவோரிடமிருந்து இந்தத் தொழில் வளாகத்தில் தொழில் தொடங்க விண்ணப்பம் வந்தால் போதிய அளவு நிலங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

2—

### சர்க்கரை ஆலை

**வினா எண் 15729—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வால்பாறை தொகுதி, அங்களகுறிச்சி, பிலிசின்னம்பாளையப் ஆகிய இடங்களில் சர்க்கரை ஆலை தொடங்க அரசு ஆவன செய்யுமா

(ஆ) ஆம் எனில், எப்போது?

© இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந் அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள அங்களகுறிச்சி மற்றும் பில்சின்னம்பாளையம் ஆகிய இடங்களில் புதியதாக கூட்டுறவு / பொதுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், இத்தொகுதியில் தனியார் துறை மூலமும் சர்க்கரை ஆலை அமைக்க விண்ணப்பம் ஏதும் வரப்பெறவில்லை.

**3—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 16018— திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள மின் அலுவலகத்திற்கு சந்தைப்பேட்டை அருகில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலம் எதுவும் இல்லை. எனவே, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள மின்சார அலுவலகத்திற்கு சொந்தமான கட்டடம் கட்டும் உத்தேசம் இப்போது எதுவும் இல்லை.

**4—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 16753— திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, முத்துநாயக்கன்பட்டி இளநிலைப் பொறியாளர் அலுவலகத்திற்கு சொந்தமான கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான நிலம் எதுவும் இல்லை. எனவே, முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள மின்சார அலுவலகத்திற்கு சொந்தமான கட்டடம் கட்டும் உத்தேசம் இப்போது எதுவும் இல்லை.

**5—**

## சுத்திகரிப்புத் திட்டம்

**வினா எண் 1724— திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, காட்டுப்புதூர், பாலாம்பாக்கம், ரெட்டிபாளையம், குப்பம் கலைசமுத்திரம் போன்ற கிராமங்களில் கிணற்று நீர் மற்றும் ஆழ்குழாய் கிணற்று நீரை சுத்தப்படுத்த நிலையான சுத்திகரிப்பு திட்டம் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1) போளூர் தொகுதி, காட்டுப்புதூர், பாலாம்பாக்கம், ரெட்டிபாளையம் ஆகிய கிராமங்கள் வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஒன்றியத்தைச் சார்ந்தது.

(2) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் ஒன்றியத்தைச் சேர்ந்த கலசமுத்திரம் கிராமத்தில் தற்போது வழங்கப்படும் குடிநீரை பரிசோதனை செய்ததில் குடிநீர் குடிப்பதற்கு உகந்ததாக உள்ளது. மேலும், குப்பம் கிராமத்தில் தற்போது வழங்கப்படும் குடிநீரை பரிசோதனை செய்தபோது குடிநீரில் கடின தன்மை அதிகம் உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் மாற்று நீர் ஆதாரம் அமைக்க வேறு இடம்கிடைக்கும் என்பதாலும் நீரை சுத்தம் செய்யும் திட்டம், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவைகளுக்கு அதிகமான

செலவாகும் மற்றும் சிக்கனமற்றதும் ஆகும். ஆகையால் தற்போது சுத்திகரிப்பு திட்டம் எதுவும் செயல்படுத்தும் சாத்தியக்கூறு இல்லை. இக்கிராமம், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர்கள் வீதம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு முழுமையான குடிநீர் வசதி பெறும் பிரிவின்கீழ் வருவதால் மாற்று நீர் ஆதாரம் ஏற்படுத்த தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

6—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 4815—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தின்னப்பட்டி ஊராட்சியில், தின்னப்பட்டி டேங் வீதியில் கருப்பட்டிபாளையம் கிராமத்தில் பிரதான சாலையிலுள்ள ஜே.ஜே. நகர், கருப்பட்டிபாளையம் கிராமம், ஜே.ஜே நகர், பெரியகோட்டை ஊராட்சி, இந்து நகர் மற்றும் ராஜீவ் நகர் ஆகிய பகுதிகளில் புதிய தெரு விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதிக்குட்பட்ட தின்னப்பட்டி ஊராட்சியில், தின்னப்பட்டி டேங் வீதி, கருப்பட்டிபாளையம் ஜே.ஜே. நகர், பெரியகோட்டை ஊராட்சி, இந்து நகர் மற்றும் ராஜீவ் நகர் ஆகிய பகுதிகளில் வரும் நிதியாண்டில் ஊராட்சி நிதி அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து தெரு விளக்குகள் கூடுதலாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7—

## குடிநீர் வசதி

**வினா எண் 4819—திரு. [illegible] என். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) காங்கேயம் தொகுதி, தண்ணீர் பந்தலிலுள்ள கண்டியர் பகுதியில் குழாய் மூலம் தண்ணீர் பிடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதி, தண்ணீர் பந்தல் அருகில் கண்டியர் குடியிருப்பு ஏதுமில்லை. குமாரவலசு ஊராட்சியில் தண்ணீர் பந்தல் கடலாங்காட்டுப்புதூர் அரிஜன காலனி என்ற குடியிருப்பு உள்ளது. அக்குடியிருப்புக்கு மேல்நிலைத் தொட்டி மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

8—

## நிழற்குடை

**வினா எண் 6447—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், குட்டம் ஊராட்சி, ஆதித்தனார் நகரில் பயணிகள் நிழற்குடை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், குட்டம் ஊராட்சியின் ஆதித்தனார் நகரில் பயணிகள் நிழற்குடை அமைக்க சுமார் ரூ.50,000/- செலவாகும். நடப்பு நிதியாண்டிற்குரிய நிதி ஒதுக்கீடுகள் வரப்பெற்றதும் மேற்படி பணியினை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் மேற்கொள்ளப்படும்.

[2007 மே 14

9—

## நிழற்குடை

**வினா எண் 9404—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, வேப்பிலான்குளம் ஊராட்சி, மருதப்புரத்தில் பயணிகள் நிழற்குடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், வேப்பிலான்குளம் ஊராட்சியைச் சேர்ந்த மருதப்புரத்தில் பயணிகள் நிழற்குடை ஒன்று மக்கள் பயன்பாட்டில் உள்ளது. நடப்பு நிதியாண்டில் ஒன்றியக் குழு அனுமதி பெற்று ரூ.50,000/- மதிப்பீட்டில் கூடுதலாக ஒரு பயணிகள் நிழற்குடை அமைக்க வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்மூலமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 9674—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, தாமரங்கோட்டை வடக்கு ஊராட்சியில் அம்மன் கோயில் அருகே புதிய தண்ணீர்த் தொட்டி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தாமரங்கோட்டை வடக்கு ஊராட்சியில் அம்மன் கோயில் பகுதியில் 540 மக்கள் வசிக்கிறார்கள்.



2007 மே 14]

இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சிவன் கோயில் அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது அப்பகுதி மக்களுக்குப் போதுமானதாக இல்லை. எனவே, இப்பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11—

## தெரு விளக்கு

**வினா எண் 9734—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் தொகுதி, சுந்தாபுரம் ஊராட்சி, பாரதி நகர் கிராமத்திற்கு தெரு விளக்கு அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் தொகுதி, சுந்தாபுரம் ஊராட்சி, பாரதி நகர் கிராமத்திற்கு தெரு விளக்கு அமைக்க சட்டமன்ற உறுப்பினர் நிதியிலோ அல்லது ஊராட்சி நிதியிலோ இதற்கான நிதி பெற்று தெரு விளக்கு அமைத்துத் தரப்படும்.

12—

## பாசன வசதி

**வினா எண் 9673—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை பகுதியிலுள்ள தென்னை விவசாயிகளுக்கு மானிய விலையில் சொட்டு நீர்ப் பாசன வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தேசிய தோட்டக்கலை மிஷன் திட்டத்தின்(2005-2006 மற்றும் 2006-2007)-ன்கீழ் பட்டுக்கோட்டை கோட்டத்தில் 225 ஹெக்டேர் தென்னை பரப்பில் மானிய விலையில் சொட்டு நீர்ப் பாசன வசதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 5 ஹெக்டேர் வரை 50 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனக் கருவி அமைத்துத் தரப்படும். இத்திட்டம் குறித்து தென்னை ஆர்வக் குழு விவசாயிகளுக்கு கூட்டங்கள் நடத்தவும் செய்தித்தாள் மற்றும் வானொலி மூலமாகவும் விரிவான விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை பட்டுக்கோட்டை பகுதியில் உள்ள 28 விவசாயிகளை தேர்வு செய்து 43.14 ஹெக்டேர் தென்னை நிலப்பரப்பில் சொட்டு நீர்ப் பாசனக் கருவி அமைக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வேளாண்மை இணை இயக்குநர், தஞ்சாவூர் அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் பட்டுக்கோட்டையை அணுக கோரலாம்.

**13—**

## தென்னை மரங்கள் பாதுகாப்பு

**வினா எண் 20947—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னை மரங்கள் நோயால் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தென்னை மரங்களை நோயில் இருந்து தடுக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல்,

—



1) தென்னந்தோப்புகளை சுத்தமாகவும், சரியான முறையில் பராமரிப்பு செய்யவும்,

2) பரிந்துரைக்கப்பட்ட உரம் அளவினை இடுவதன் மூலம் தென்னை மரங்களின் நோய் எதிர்ப்புத் தன்மையை அதிகரிக்கவும்,

3) இயற்கை உரங்களான மண்புழு உரம், தென்னை நார் கழிவு உரம் போன்றவற்றை இடுவதன் மூலமும், தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஆ) 2006-2007-ல் தென்னை வளர்ச்சி வாரிய நிதியுதவியுடன் நோயுற்ற மரங்களை வெட்டி எடுக்க ரூ.235.586 இலட்சம் செலவழிக்கப்பட்டு மரம் ஒன்றுக்கு ரூ.250/- மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கோவை மாவட்டத்திற்கு மட்டும் ரூ.26.250 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இத்தொகை பொள்ளாச்சி மற்றும் உடுமலை கோட்டங்களில் உள்ள தோப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2007-2008 ஆம் ஆண்டிலும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**14—**

## பயிர்ப் பாதுகாப்பு

**வினா எண் 21960—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பருத்தியில் தண்டுக்கூன் வண்டுகளைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை**—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பருத்தி பயிர்ப் பாதுகாப்பு குறித்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் பற்றி வயல்வெளிப் பள்ளிகள் மூலமாகவும், செயல் விளக்கங்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு ஏற்கெனவே எடுத்துரைக்கப்பட்டு வருகிறது. இது தவிர, முன்பருவ பயிற்சி முகாம்கள் மற்றும் கிராமக் கூட்டங்களிலும் விவசாயிகளுக்கு தண்டுக்கூன் வண்டு உள்ளிட்ட பூச்சித் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. மத்திய, மாநில அரசுகளின்

[2007 மே 14

நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வயல்வெளிப் பள்ளிகள் நடத்துவதற்கு 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.68.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளிடம் பருத்தி பயிர்ப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் அனைத்து வழிமுறைகளையும் துறை பின்பற்றி வருகிறது.

**15—**

**குளம் தூர்வாருதல்**

**வினா எண் 10938—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்காபுரம் ஊராட்சி, நம்பியாறு அணை திட்டத்தின்கீழ் பயன்பெறும் புத்துக்குறிச்சி குளத்தை தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், புத்துக்குறிச்சி குளத்தை தூர்வாருதல் தொடர்பாக உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு எதிர்வரும் நிதியாண்டில் (2007-2008) குளங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்ற தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**16—**

**தனிக் கால்வாய்**

**வினா எண் 10950—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கொடுமுடியாறு அணைக்கட்டு வடமலையான் கால்வாயிலிருந்து வைத்தியலிங்கபுரம், வெங்கட்ராயபுரம் குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வர தனிக் கால்வாய் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



2007 மே 14]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

வெங்கட்ராயபுரம் குளத்திற்கு தண்ணீர் கொண்டு வர தனிக் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 2007-2008 ஆம் நிதியாண்டில் குளங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு என்ற தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு பெற்று முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளரால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

**17—**

**குடியிருப்பு**

**வினா எண் 14520—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தேன்கனிக்கோட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான குடியிருப்பு கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்யப்படவில்லை. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்புதான் குடியிருப்பு கட்டுவது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும்.

**18—**

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 14908—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மே 14

(அ) வால்பாறையில் நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை**—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் உள்ள நீதிமன்றத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்திய பின்புதான் கட்டடம் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**19—**

## பட்டா

**வினா எண் 5900—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 6-வது வட்டத்தில் மார்கெட்பாரம் பகுதியில் வசித்து வருகின்ற 126 குடும்பங்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை**—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

ஆம்.

**20—**

## அரசுக்கு வருமானம்

**வினா எண் 15008—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை வட்டாட்சியர் அலுவலகம்மூலம் 2001 ஆம் ஆண்டு முதல் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு?



2007 மே 14]

**விடை**—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

2001-2002 முதல் 2005-2006 ஆம் ஆண்டு முடிய வால்பாறை வட்டாட்சியர் அலுவலகத்தில் நில வரி, குத்தகைத் தொகை, ஏலத் தொகை, எப். லைன் கட்டணம், சொத்து மதிப்புச் சான்றுக் கட்டணம், புலப்படக் கட்டணம் மற்றும் நில உட்பிரிவுக் கட்டணம் முதலானவை மூலம் ரூ.79,96,637 வசூல் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வால்பாறை வட்டாட்சியர் அலுவலகம்மூலம் 2001 ஆம் ஆண்டு முதல் அரசுக்கு கிடைத்த வருமானம்

| வரிசை எண் | ஆண்டு | வசூலிக்கப்பட்ட தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 2001-2002 | 22,86,143 |
| 2 | 2002-2003 | 20,09,169 |
| 3 | 2003-2004 | 11,07,353 |
| 4 | 2004-2005 | 12,10,425 |
| 5 | 2005-2006 | 13,83,547 (31-03-2006 வரை) |
| | மொத்தம் | 79,96,637 |

**21—**

## பொதுமக்கள் தங்கும் அறை

**வினா எண் 20133—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை வட்ட அலுவலகத்தில் பொது மக்கள் தங்கும் ஓய்வு அறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:**

இந்நேர்வில் இனி வருங்காலங்களில் வட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்குள் ஏற்கெனவே உள்ள இடத்தினை பொதுமக்கள் அமரவும் பயன்படுத்தவும் ஏற்ற வகையில் மாற்றியமைப்பது பற்றி பரிசீலிக்கப்படும்.

**22—**

## அரிசி கடத்துவோருக்குத் தண்டனை

**வினா எண் 7274—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரிசி கடத்தும் சமூக விரோதிகளை கடுமையாகத் தண்டிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

வால்பாறை தொகுதி மட்டுமல்லாது, தமிழகத்தின் எந்தப் பகுதியில் அரிசி கடத்தினாலும், அரிசி கடத்துபவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. கடந்த ஆண்டில் (2006) கோவை மாவட்டத்தில் மட்டும் 5,263.86 குவிண்டால் பொது விநியோகத் திட்ட அரிசி சட்ட விரோதமாக கடத்தப்படும்போது குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மதிப்பு ரூ. 63,16,632/- ஆகும். இந்த மாவட்டத்தில் மட்டும் 194 நபர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு (2006-ல்) தமிழ்நாடு முழுவதும் 57,172.72 குவிண்டால் ரேஷன் அரிசி குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. 1,349 நபர்கள்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 2006-ல் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையினர் எடுத்த தீவிர நடவடிக்கையின் காரணமாக 63 நபர்கள்



1980 ஆம் ஆண்டு கள்ளச்சந்தை விற்பனை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கல் பராமரிப்பு சட்டத்தின்கீழும், 5 நபர்கள் குண்டர் சட்டத்தின்கீழும் (T.N.Act 14/1982) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். நடப்பு ஆண்டில் (2007) இதுவரை 25 நபர்கள்மீது கள்ளச்சந்தை விற்பனை தடுப்பு சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

**23—**

## விற்பனைப் பத்திரம்

**வினா எண் 11848—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, முல்லை நகரில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் திட்டத்தின்கீழ் வரும் பயனாளிகளுக்கு விற்பனைப் பத்திரங்களை ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தாம்பரம் முல்லை நகர் திட்டப் பகுதிக்கு தோராய விலை நிர்ணயம் செய்யப்பட்டு, தற்காலிக விலை அடிப்படையில் குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியில் முன்னாள் நில உரிமையாளர்கள் அதிக இழப்பீட்டுத் தொகை கேட்டு தொடர்ந்துள்ள நிலமெடுப்பு அசல் வழக்குகள் (LAOP) நிலுவையில் உள்ளன. எனவே, மனைகளுக்கு இறுதி விலை நிர்ணயம் செய்ய இயலவில்லை. வழக்குகள் முடிந்து, இறுதி விலை நிர்ணயம் செய்யப்பட்டவுடன், செலுத்த வேண்டிய வித்தியாசத் தொகை ஒதுக்கீடுதாரர்களுக்குத் தெரிவிக்கப்படும் தொகை பெறப்பட்டவுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளுக்கு கிரையப் பத்திரம் வழங்கப்படும்.

[2007 மே 14

**24—**

## விற்பனைப் பத்திரம்

**வினா எண் 15303—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் வீட்டு வசதி வாரிய வீடுகளில் குடியிருப்பவர்கள் தவணைத் தொகையைக் கட்டிய பின்பும் பத்திரம் இன்னும் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் :**

(அ) கோயம்புத்தூர் மாநகரில் உள்ள கீழ்க்கண்ட திட்டங்களின் ஒதுக்கீடுதாரர்களுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய நிலத்தின் வித்தியாசத் தொகையினை செலுத்தும் நபர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. உப்பிலிப்பாளையம் பகுதி 1, 2 மற்றும் 3

2. சிங்காநல்லூர் 467 வீடுகள்

3. செல்வபுரம் வடக்கு பேரூர் ரோடு, தெற்கு பேரூர் ரோடு

4. சிங்காநல்லூர் 104 மற்றும் 108 வீடுகளுக்கு இடத்தின் இறுதி விலை நிர்ணயம் செய்யாமல் உள்ளதால் விற்பனைப் பத்திரம் வழங்கப்படாமல் உள்ளது.

5. கணபதி பிளாக் 1 முதல் 4, பிளாக் 6, 11 மற்றும் உப்பிலிப்பாளையம் 109 வீடுகள் வ.உ.சி. பகுதி மற்றும் சௌரிபாளையம் ஆகிய பகுதிகளில் நில உரிமையாளர்கள் அதிக இழப்பீட்டுத் தொகை கோரி நீதிமன்றங்களில் தொடர்ந்துள்ள வழக்குகள் நிலுவையில் உள்ளதால் இடத்தின் இறுதி விலை நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. வழக்குகளை முடிவிற்குக் கொண்டு வர நில உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நிகழ்வில் முடிவெடுக்கப்பட்டவுடன் விற்பனைப் பத்திரம் வழங்கப்படும்.



2007 மே 14]

(ஆ) கணபதி பிளாக் 1 முதல் 4, பிளாக் 6, பிளாக் 11 மற்றும் வ.உ.சி. சௌரிபாளையம் மற்றும் உப்பிலிப்பாளையம் பகுதி வழக்குகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது; மற்றும் சிங்காநல்லூர் 104 மற்றும் 118 வீடுகள் திட்டத்தில் இடத்தின் இறுதி விலை நிர்ணயம் செய்திட வாரியத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**25—**

## தரம் உயர்த்துதல்

**வினா எண் 14768—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகரில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமசந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், சேத்துப்பட்டு வட்டாரத்தில் வந்தவாசி வட்ட மருத்துவமனையும், போளூர் மருத்துவமனையும் சிறப்புப் பிரிவுகள் மற்றும் சகல வசதிகளுடன் இயங்கி வருவதால், சேத்துப்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்போது நிருவாக ரீதியாக சாத்தியம் எழவில்லை.

**26—**

## மறு பதிவு

**வினா எண் 10171—திரு. வை. காவேரி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மறு பதிவு செய்ய கூடுதல் காலம் கொடுக்கப்படுமா?

[2007 மே 14

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுதாரர்கள் கீழ்க்காணும் இரு சூழ்நிலைகளில் மறு பதிவு செய்யப்படுகிறார்கள்:

1. வேலைவாய்ப்பு அலுவலகங்களால் பரிந்துரை செய்யப்பட்டு பணியமர்த்தம் செய்யப்பட்டு பணிக் காலியிடமின்மையால் பணியிலிருந்து விடுவிக்கப்படும் நேர்வுகளில் விடுவிக்கப்படும் நாளிலிருந்து 90 நாட்களுக்குள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மீள பழைய பதிவு மூப்புடன் மறு பதிவு செய்ய இந்த 90 நாள் காலவரம்பு 1998 ஆம் ஆண்டு பதிவு புதுப்பித்தலுக்கு வழங்கப்படுகின்ற சலுகை போல 18 மாதங்களாக நீட்டிக்கப்பட்டு அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால் இந்த 18 மாத கால அவகாச சலுகை ஒரு மனுதாரர் புதுப்பித்தலுக்கோ அல்லது மறு பதிவு செய்வதற்கோ ஏதேனும் ஒன்றிற்கு மட்டுமே அனுபவிக்க இயலும்.

2. குடிபெயர்ந்து வருவதால் பதிவுதாரர்கள் ஒரு மாவட்டம் விட்டு பிறிதொரு மாவட்டத்திற்கு பதிவு மாற்றம் செய்யப்படுகையில் புதிய மாவட்டத்தினைச் சார்ந்த குடும்ப அட்டை மற்றும் வருவாய்த் துறை அலுவலரால் வழங்கப்படும் குடிப்பெயர்ச்சி சான்றிதழ் ஆகிய இரண்டின் அடிப்படையில் மறு பதிவு செய்யலாம். அடுத்த புதுப்பித்தல் தேதிக்குள் மாற்றப்பட்ட அலுவலகத்தை பதிவுதாரர் தொடர்புகொள்ளும் நேர்வில் இவ்வினத்திற்கு மறு பதிவு செய்ய கால நீட்டிப்பு என்பது பொருந்தாத ஒன்றாகும்.

**27—**

## கிளை அலுவலகம்

**வினா எண் 18026—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் கிளையை ஆழியார் நகரில் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 14]

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தொழில்நுட்பக் கல்வி பயின்றோருக்கு வேலைவாய்ப்பு உதவி தொடர்பான பணிகளை மேற்கொள்ள தனியாக ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகமும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வேலைவாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அவர்களுக்கு விரைவாக வேலைவாய்ப்பு உதவி வழங்கிட, பயிற்றுவித்தல் மற்றும் வழிகாட்டல் நிலையம் ஒன்றும் உள்ளது. வேலைவாய்ப்புப் பணிகள் குறித்து அனைத்து வகையான சேவைகளும் ஆழியார் நகர மக்கள் உட்பட கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைவருக்கும் கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஆழியார் நகரில் தனியாகக் கிளை வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பதற்கான தேவை எழவில்லை.

(ஆ) எழவில்லை.

**28—**

## சிமெண்ட் கூரை

**வினா எண் 7916—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜலகாம்பாறை முருகன் கோயிலுக்கு சிமெண்ட் கூரை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஜலகாம்பாறை அருள்மிகு முருகன் திருக்கோயில் பரம்பரை அறங்காவலர் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில், வனத் துறைக்குச் சொந்தமான

[2007 மே 14

இடத்தில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலுக்கு சிமெண்ட் கூரை அமைத்திட வனத் துறை அனுமதி பெறப்பட வேண்டும். வனத் துறையின் அனுமதி கேட்டு பாரம்பரை அறங்காவலரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்த பின்தான் கூரை அமைத்திட நடவடிக்கை எடுக்க இயலும். எனவே, தற்போதைய நிலையில் சிமெண்ட் கூரை அமைத்திட நடவடிக்கை எதுவும் இல்லை.

**29—**

## திருக்கோயில் திருப்பணி

**வினா எண் 11478—திருமதி ஜி. லதா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரதராமி பகுதியிலுள்ள ஈஸ்வரன் கோயிலைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பரதராமி அருள்மிகு ஈஸ்வரன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள, நிலை 3 செயல் அலுவலர் நிர்வாகத்தின்கீழ் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.16,498/- ஆகும்.

இத்திருக்கோயிலின் திருப்பணிகளை மேற்கொள்ள ரூ.3.91 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு, துறை நிதியுதவி ரூ.1 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை ரூ.2.91 இலட்சத்தை பொதுமக்கள் நன்கொடையாக பெறப்பட வேண்டிய நிலையில் திருப்பணிக் குழுவினரால் ரூ.15,000/- மட்டும் வசூல் செய்யப்பட்டும் திருப்பணிக் குழுவின் பதவிக்காலம் முடிவுற்றும் தற்போது திருப்பணிக் குழு செயல்படவில்லை. பொதுமக்களின் பங்களிப்பு போதிய அளவில் கிடைக்கப் பெறாமல் உள்ளதால் திருப்பணிகள் நடைபெறாமல் உள்ளன. புதிய திருப்பணிக் குழு



2007 மே 14]

அமைத்து பொது மக்களிடம் நன்கொடை பெற்று திருப்பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**30—**

## திருப்பணி

**வினா எண் 14202—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், வெம்மணி ஊராட்சி, பெரிய மூலிப்பட்டியில் அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் திருக்கோயில் பெரிய மூலிப்பட்டி கிராமத்தில் உள்ள குளத்தின் கரையில் சுமார் 200 ஆண்டுகளுக்கு மேலாக திறந்த வெளியில் புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கோயில். இத்திருக்கோயிலுக்கு ஆண்டு வருமானம் ரூ.1,000/- ஆகும். மேலும் அருள்மிகு அய்யனார் கல் விக்கிரகம் பாதி அளவு மண்ணில் புதைந்த நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு கட்டடங்கள் ஏதுமில்லாத நிலையில் திருப்பணி செய்திட தற்போதைய நிலையில் திட்டம் ஏதும் இல்லை.

**31—**

## துறை ஆளுகையின்கீழ் திருக்கோயில்

**வினா எண் 16749—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மே 14

ஓமலூர் தொகுதி, நல்லகவுண்டம்பட்டி ஊராட்சியில் பெரிய பச்சையாய் கோவில் மற்றும் அருள்மிகு சோலீஸ்வரர் கோவில்களை அரசு நிர்வாகத்தின்கீழ் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, நல்லகவுண்டம்பட்டி ஊராட்சியில் பெரிய பச்சையாய் கோயில் மற்றும் அருள்மிகு சோலீஸ்வரர் திருக்கோயில்களை, இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர, கிராம நிர்வாக அலுவலரின் சான்று, திருக்கோயில் அமைந்துள்ள இடம் பற்றிய விவரம் திருக்கோயில்களில் நடைமுறை நிர்வாகியிடம் இருந்து வரவு செலவுக் கணக்குகள் மற்றும் தேவையான ஆவணங்கள் பெற இந்து சமய அறநிலையத் துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆவணங்கள் முழுமையாகப் பெறப்பட்டவுடன் மேற்படி திருக்கோயில் துறையின் ஆளுகையின்கீழ் கொண்டு வரப்படும்.

**32—**

## சிறப்பு நுழைவுக் கட்டணம்

**வினா எண் 17368—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள கோயில்களில் சிறப்பு நுழைவுக் கட்டணத்தை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டிலுள்ள, பக்தர்கள் அதிகம் வருகை தரும் பிரசித்தி பெற்ற திருக்கோயில்களில் சிறப்பு நுழைவுக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பெருமளவிலான பக்தர்கள் வருகை தரும்



2007 மே 14]

திருக்கோயில்களுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மட்டுமின்றி, அண்டை மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் வருகை புரிகின்றனர். மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்யும் சுற்றுலா பேருந்துகளில் சுற்றுலாக் குழுவினரும் திருக்கோயில்களுக்கு தரிசனம் செய்வதற்கு வருகை புரிகின்றனர். இதுபோன்று வெளியூர்களிலிருந்து சுற்றுலா மூலமும் வருகை தரும் பக்தர்களுக்கு கால அவகாசம் அதிகமின்றி ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் தரிசனம் செய்து செல்ல வேண்டுமென்ற நிர்பந்தம் இருக்கும். அவ்வாறான சூழ்நிலையில் வருகை தரும் பக்தர்கள் சாதாரண வரிசையில் நின்று தரிசனம் செய்து செல்வது மிகவும் சிரமம் என்பதைக் கருத்தில் கொண்டும் அவ்வாறான பக்தர்கள் சிறப்பு நுழைவுக் கட்டணம் செலுத்தி தனி வழியில் சென்று குறித்த காலத்திற்குள் தரிசனம் செய்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு அமலில் உள்ளது. இச்சிறப்பு நுழைவு அனுமதிக் கட்டண முறை திருக்கோயில் வருமானத்தைப் பெருக்க மட்டுமல்லாது மேற்கண்டவாறான பக்தர்கள் நலனைக் கருத்தில் கொண்டும் செயல்படுத்தப்பட்ட ஒன்றாகும். எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் சிறப்பு நுழைவுக் கட்டணத்தை இரத்து செய்யவேண்டிய அவசியம் இல்லை.

**33—**

## பக்திப் பாடல்கள் ஒலிபரப்பு

**வினா எண் 17372—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து கிராமக் கோயில்களிலும் காலை, மாலையில் பக்திப் பாடல்களும், தமிழ் இசையையும் ஒலிபரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் திருக்கோயில்களில் தினசரி பூசைக் காலங்களிலும் திருவிழாக்கள் மற்றும் விசேஷ காலங்களிலும், பக்திப்

பாடல்களும், தமிழிசையும், ஒலிபரப்பப்படுவது வழக்கத்தில் உள்ளது. காலை, மாலையில் நாள்தோறும் ஒலிபரப்ப வேண்டிய அவசியம் ஏதுமில்லை. நிதி வசதியுள்ள திருக்கோயில்களில் பக்திப் பாடல்கள் ஒலிபரப்பத் தடை ஏதுமில்லை.

**34—**

### திருக்கோயில் திருப்பணி

**வினா எண் 20983—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, 17-வது வார்டு, அருள்மிகு பெருமாள் கோயிலைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சி, 17-வது வார்டு, அருள்மிகு பெருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின்கீழ் உள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் திரு. ஏ.எஸ். வேலாயுதம் என்பவரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் அரசு நிதியுதவியின்கீழ் ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் சுமார் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**35—**

### தொழிற்கூடங்கள்

**வினா எண் 11517—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கென தொழிற்கூடங்கள், வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள திட்டத்தின் பின்பற்றத்தக்க வழிமுறைகளின்படி செயல்படும் தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அரசு வீடு கட்டும் திட்டம் மற்றும் தொகுப்புக் கூடம் கட்டும் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. உடுமலைப்பேட்டை வட்டத்தில் 1. பேரறிஞர் அண்ணா 2. மலையாண்டிப்பட்டிணம் காந்திஜி 3. பூளவாடி ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி 4. மடத்துக்குளம் ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் 5. பெரிய வாளவாடி ஆகிய 5 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் பூளவாடி ஸ்ரீராமலிங்க சௌடேஸ்வரியம்மன் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 5 உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன. தறிக்கூடம் கட்டும் திட்டத்தின்கீழ் இப்பகுதி நெசவாளர்களிடமிருந்து ஏதும் பிரேரணைகள் வரப் பெறவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**36—**

### கணிப்பொறி வசதி

**வினா எண் 7955—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, வாய்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இருக்கைகள் மற்றும் கணிப்பொறி வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, வாய்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு இருக்கைகள் மற்றும் கணிப்பொறி வசதி செய்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

## கூடுதல் விற்பனை வரி

**வினா எண் 17684—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தேக்கு, ஈட்டி போன்ற மரங்களை வெட்டுவதற்கு கூடுதல் விற்பனை வரி விதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேக்கு, ஈட்டி போன்ற மரங்கள் வெட்டப்பட்டதும், அவை டிம்பர் என்ற பெயர் பெற்று மதிப்புக் கூட்டு வரியில் உயர் விகிதமான 12.5 விழுக்காடு வரி விதிப்பிற்குள்ளாகும். பொது விற்பனை வரி முறையில் இருந்த கூடுதல் விற்பனை வரி, மதிப்புக்கூட்டு வரியில் நீக்கப்பட்டுள்ளது.

**38—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 11113—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமகிரிப்பேட்டையில் இருந்து அரியாக்கவுண்டம்பட்டி வழியாக கள்ளக்குறிச்சி வந்து சேரும் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

நாமகிரிப்பேட்டையில் இருந்து அரியாக்கவுண்டம்பட்டி வழியாக கள்ளக்குறிச்சி வந்து சேரும் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யக் கோரும் சாலையானது நாமக்கல் நெடுஞ்சாலை கோட்ட



பராமரிப்பில் உள்ள மாவட்ட இதர சாலையான நாமகிரிபேட்டை அரியாக்கவுண்டம்பட்டி சாலை கி.மீ. 0/0 - 4/0 வரையுள்ள சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/0-2/5 வரை மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. கி.மீ. 2/5 - 4/0 வரையிலான சாலையை மேம்பாடு செய்ய ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், 2006-2007-ல் ரூ.14.60 இலட்சம் மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**39—**

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 6836—திரு. வை. காவேரி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொசவப்பட்டி, மாட்டையாம்பட்டி, தாதாபுரம் ஆகிய பகுதி பள்ளிகளில் சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொசவப்பட்டி, மாட்டையாம்பட்டி, தாதாபுரம் ஆகிய பகுதி பள்ளிகளில் சத்துணவுக்கூடங்கள் 2006-2007 ஆம் ஆண்டு மத்திய அரசு அளித்த நிதி உதவியில் சமையலறையுடன் கூடிய இருப்பறை கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இப்பணி நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**40—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 6943—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மே 14

(அ) சிங்காநல்லூர் தொகுதி, மாநகராட்சிக்குட்பட்ட பீளமேடு, வினோபாஜி நகரில் அமைந்துள்ள சத்துணவுக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரஅரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை சமூக நல இயக்குநர் அவர்களால் கோவை மாவட்டம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட எண் 1-க்கு குழந்தைகள் மையம் கட்டட ரூ.70,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. சர்வே எண் க.ச. எண் 359/13 விளாங்குறிச்சி என்ற கிராமத்தில் அமைந்துள்ள வினோபாஜி நகரில் குழந்தைகள் மையம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது. வினோபாஜி நகரில் உள்ள பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாமையால் அந்த இடத்தில் குழந்தைகள் மையம் கட்ட இயலவில்லை. இவ்விவரம் சென்னை சமூக நல இயக்குநர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதன் பேரில் கட்டடம் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.70,000/- தொகையினை திருப்பூர் (நகர்ப்புறம்) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணித் திட்டத்தின்கீழ் மண்ணரை என்ற கிராமத்தில் மையம் கட்ட அனுமதி பெறப்பட்டது. எனவே, தற்போது வினோபாஜி நகரில் குழந்தைகள் மையம் கட்ட அரசு நிலம் ஏதும் இல்லாததால் புதியதாக கட்டடம் கட்ட இயலாதுள்ளது. தற்போது வினோபாஜி நகரில் உள்ள குழந்தைகள் மையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**41—**

## மதிய உணவு

**வினா எண் 6961—திரு. வை. காவேரி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், பாலப்பட்டியில் உள்ள E.G.S. பள்ளிக்கு மதிய உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுமா?



2007 மே 14]

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், பாலப்பட்டி E.G.S. பள்ளியில் பயிலும் 7 மாணவர்களுக்கும், 9 மாணவிகளுக்கும் அருகிலுள்ள க. பள்ளிப்பட்டி சத்துணவு மையத்திலிருந்து மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

**42—**

## அங்கன்வாடி பணியாளர்கள்

**வினா எண் 8028—திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் அங்கன்வாடிகளில் சுமார் 26 ஆண்டுகளாகப் பணிபுரியும் பணியாளர்களை அரசு ஊழியர்களாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 136, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம், நாள் 19-9-2006-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் பணிபுரியும் அமைப்பாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் (பொது) மற்றும் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ.1300-20-1500-25-2000 என்ற வரையறுக்கப்படாத ஊதிய விகிதம் (Non Standard Time Scale) நிர்ணயிக்கப்பட்டு இதுவரை ரூ.2,158/- மட்டுமே மொத்த ஊதியமாகப் பெற்று வந்தவர்களுக்கு 1-9-1996 முதல் ரூ.260/- கூடுதலாக வழங்கப்பட்டு மொத்தம் ரூ.2,418/- ஊதியம் வழங்கப்படுகிறது. அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ஒட்டுமொத்த ஊதியமாக ரூ.1,320/- வழங்கப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படும்போது அங்கன்வாடி பணியாளர்களுக்கும் அதே அகவிலைப்படி உயர்வும் அங்கன்வாடி உதவியாளர்கள் ஒட்டுமொத்த ஊதிய உயர்வு ரூ.20/-ம் பெறுகிறார்கள். அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது முறையே

ரூ.50,000/- மற்றும் ரூ.20,000/- பெறுகிறார்கள். மேலும் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது நிரந்தர அரசு ஊழியர்களைப் போலவே சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ் அரசின் பங்குத் தொகையாக ரூ.10,000/- பெறுகின்றனர். மேலும் நிரந்தர அரசு ஊழியர்களைப் போலவே பணியில் இருக்கும்போது காலமாகிவிட்டால் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) குடும்ப நல நிதி வழங்கப்படுகிறது. ஆகவே நிரந்தர அரசு ஊழியர்களைப் போன்று ஊதிய உயர்வும் பிற சலுகைகளும் அவ்வப்போது வழங்கப்பட்டு வருகின்றன.

**43—**

**பால்வாடி மையம்**

**வினா எண் 11456—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, சாத்தம்பட்டி ஊராட்சி, கல்லுப்பட்டியில் புதிய பால்வாடி பள்ளிக் கட்டடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) குளத்தூர் தொகுதி, சாத்தம்பட்டி ஊராட்சி, அன்னவாசல் ஒன்றியம், கல்லுப்பட்டி கிராமத்தில் முன்பருவ குழந்தைகள் 15 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களுக்கும், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு திம்மியம்பட்டி மையம் மூலமாக இணை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இக்கிராமத்தின் மக்கள் தொகை 215 ஆக மட்டுமே உள்ளது. எனவே, அரசு விதிகளின்படி புதிய மையம் இங்கு அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) எழவில்லை.

**44—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 11564—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, பாப்பம்பாடி ஊராட்சி, சூரன்வுளவு பகுதியில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், பாப்பம்பாடி ஊராட்சி, சூரன்வளவில் தற்போது அரசு ஆரம்பப் பள்ளி இல்லை. எனவே, சூரன்வளவில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள கொண்டைகாரனூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் உள்ள சத்துணவு மையத்தில் பயன்பெற்று வருகிறார்கள். பாப்பம்பாடி ஊராட்சியில் உள்ள சூரன்வளவில் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டவுடன் சத்துணவு மையம் தொடங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**45—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 18565—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் கிராமம், பாசக்குட்டை கிராமத்தில் சத்துணவு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாசக்குட்டை என்ற கிராமம், கோனூர் ஊராட்சியில் இல்லை. நங்கவள்ளி பேரூராட்சியில் பாசக்குட்டை என்ற கிராமம் உள்ளது. அதில் பள்ளிக்கூடம் ஏதும் இயங்கவில்லை. இந்நிலையில் சத்துணவு மையம் ஏதும் தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

46—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 11788—திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வட்டம், அம்பராம்பாளையத்தில் இயங்கி வரும் கால்நடை வெக்கை நோய் மருத்துவ முகாமை முழுநேர கால்நடை மருத்துவமனையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அம்பராம்பாளையத்தில் இயங்கி வரும் கால்நடை வெக்கை நோய் தடுப்புச் சாவடியை கால்நடை மருத்துவமனையாக மாற்ற தற்போது அரசு தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

47—

## கால்நடை உதவி மருத்துவர்

**வினா எண் 23025—திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், அன்னவாசலில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவரை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து 250 நபர்கள் கொண்ட தெரிவுப் பட்டியல் பெறப்பட்டுள்ளது.



அப்பட்டியலிலுள்ள நபர்களைக் கொண்டு காலியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

48—

## அடிப்படை வசதி

**வினா எண் 16433—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் மாணவர், மாணவிகள் தங்கும் விடுதிகளுக்குக் குடிநீர், தடுப்புச் சுவர் வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் / மாணவியர் விடுதிகளுக்கும் குடிநீர், கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித் தர இவ்வாண்டு கூடுதலாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் பகுதி பகுதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

49—

## புதிய கட்டடம்

**வினா எண் 12656—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதியில் உள்ள திருக்கழுக்குன்றம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால்வளத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்காக 1972-ல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டடத்தைப் பழுதுபார்க்க பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்

துறை ஆணையர் அவர்களால் ரூ.80,000/- சங்கப் பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு சங்கக் கட்டடத்தைப் பழுதுபார்க்க இயலவில்லை. மேற்படி சங்கத்தில் நிதி வசதி வரப்பெற்றவுடன் கட்டடத்தின் பழுதுகள் சரிபார்க்கப்படும். எனவே, புதிய கட்டடம் கட்டும் அவசியம் எழவில்லை.

**50—**

## ஆவின் பால் பண்ணை

**வினா எண் 18382—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பச்சாபாளையம் ஆவின் பால் பண்ணையை விரிவுபடுத்தவும், நவீனப்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** (அ) மற்றும் (ஆ) தற்போது நாள் ஒன்றிற்கு 2.00 இலட்சம் லிட்டர் பாலினை கையாளும் திறனுடன் உள்ள கோயம்புத்தூர் ஆவின் பால் பண்ணையை நாள் ஒன்றிற்கு 3.5 இலட்சம் லிட்டர் கையாளும் திறனுடன் விரிவுபடுத்தி நவீனப்படுத்தவும் வரைவுத் திட்டம் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பெற்று (குறுக்கீடுகள்) என்ன? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், உட்காருங்கள், முதலிலே



உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள் sir. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நம்முடைய சட்டமன்றத்தினுடைய விதிகளைப் பார்த்தால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் சபாநாயகர்மீது கொடுத்தால், கேள்வி நேரம் முடிந்தவுடனேயே அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் விதிகள் இருக்கின்றன. அதன்படிதான் சபாநாயகர் அதை எடுத்துக்கொள்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் விதி, விதி அதுதான் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதிப்படிதான் செய்யமுடியும் உட்காருங்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) விதியை மீ முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது தெரியும். முதலிலே நீங்கள் கொடுத்தபடிதான் எடுக்க முடியும். உட்காருங்கள்.

பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மான முன்மொழியப்பெற்று விவாதம் உடனே எடுத்துக்கொள்ளப்பட விருப்பதால், அத்தீர்மானத்தின்மீது பேரவை முடிவெடுக்கும்வரை சபையின் அலுவல்களை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் தலைவர இருக்கையிலிருந்து இறங்கி தனது அறைக்குச் சென்றார்.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது பேரவைமு உள்ள அலுவல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன்மொழியப்பெ விவாதம் உடனே எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது. மாண்பும உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், தீர்மானத்தை முன்மொழியலா

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலை அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 68-ன் அடியிற்கண்ட தீர்மானத்தை அவையில் கொண்டு வருவதற்கு அனு கோருகிறேன்:

"மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களை பேரவை தலைவர் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று இப் பேர தீர்மானிக்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

*முற்பகல் 10-40*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம் அல்லது திரு. ஜெயக்குமார் யாராவது ஒருவர். (குறுக்கீடு) திருவாளர் ஜெயக்குமார், ஒருவர் முன்மொழிந்திருக்கிறார். இப்போது விவாதத்தை தொடங்கிவைக்கிறேன். (குறுக்கீடு) ஜெயக்குமார் பேசுகிறாரா? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நானும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (குறுக்கீடு) நானும் முன்மொழிகிறேன். நானும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன்மொழிதல் என்பது ஒருவர்தான் செய்ய வேண்டும். இப்போது விவாதம் தொடங்குகிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் பதவி என்பது கண்ணியமிக்க பதவி. பேரவையிலுள்ள அனைத்துத் தரப்பினராலும் மிகவும் மதிக்கப்படவேண்டிய பதவி. அப்பேரவைத் தலைவர் நீதியுடனும், நியாயத்துடனும் விருப்பு வெறுப்பு இன்றியும், ஒரு சார்பற்றவராகச் செயல்பட வேண்டும். அவர்தம் கடமைகளை அந்த வழியில் நின்றுதான் ஆற்ற வேண்டும் என்பது காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஒரு நியதி. ஆனால், அவற்றுக்கெல்லாம் மேலாக, மாறாக, சட்டப் பேரவைத் தலைவர் இப்போது செயல்படுகின்ற நிலைமை வேறுவிதமாக இருக்கின்றது. அதற்குப் பல்வேறு உதாரணங்கள். கடந்த ஓராண்டுகாலமாக இந்தச் சட்டப் பேரவையில் சர்வாதிகாரப்போக்கு நிகழ்த்தப்பட்டு, அதன்படியேதான் இந்தச் சட்டப் பேரவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதனை நான் இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அத்துணை மேலான மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறிப்பாக, பேரவையில் ஓர் உறுப்பினர் விதி எண் 116-ன்படி பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால், பேரவைத் தலைவர் அதற்கு உடனடியாக அனுமதி தர வேண்டும். உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஏன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போதுகூட ஒரு சட்டமன்ற உறுப்பினர் Point of order எழுப்ப உரிமையுள்ளது. ஆனால் சட்டமன்ற விதிகளை



மதிக்க வேண்டிய பேரவைத் தலைவரோ இந்த விதிகளைக் காலில்போட்டு மிதிக்கின்ற கடந்த கால கசப்பான அனுபவங்கள் இப்போது இந்தச் சட்டமன்றத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்ன, என்ன, எதற்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி, அமைதி no point of order, please. நான் (குறுக்கீடுகள்) இந்த விவாதத்திலே Please sit down. (குறுக்கீடுகள்) நான் அமைதிப்படுத்துகிறேன். (குறுக்கீடுகள்) It is my duty (குறுக்கீடுகள்) நான் அமைதிப்படுத்துகிறேன். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், நீங்கள் செய்கிறேன், நீங்கள் உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) எந்தக் குறுக்கீடும் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் Subject-ஐ ஒட்டிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எதற்கு கைதட்டுகிறார்கள் என்று எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இப்போது இருக்கிற சட்டமன்றப் பேரவைத் தலைவரைப் பற்றிதான் பேசிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கடந்த காலத்திலே என்று சொன்ன காரணத்தினாலே கைதட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலம் என்றால் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்றம், 13-வது சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்தினுடைய கடந்தகாலம். இந்தச் சட்டமன்றத்தினுடைய கடந்த காலம். இந்தச் சட்டமன்றத்தினுடைய கடந்தகாலம்தான், கடந்த காலம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: அமைதி. அமைதி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் கடந்த காலம் என்று குறிப்பிட்டவுடனே அவருடைய ஆட்சிக் காலத்தில் எங்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டது நினைவுக்கு வந்தது. அதனால்தான் கை தட்டினோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி.

*முற்பகல் 10-45*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆளுங்கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமையாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இந்திய நாடாளுமன்றத்தின் விதிகளை யொட்டியே சட்டமன்றப் பேரவையின் விதிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் விவாதங்கள் நடைபெறும்போது, உறுப்பினர்கள் உணர்ச்சிவசப்பட்டு, சபையின் மையப் பகுதிக்கு வந்து, தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற வகையில், கருத்துகளை வலியுறுத்தி, இரு சபைகளின் தலைவர்கள் முன்பு கூடுகின்றபோதும்கூட, அவையிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் யாரும் வெளியேற்றப்படுவதில்லை. விவாதத்தின்டோது பிரச்சினைகள் அதிகமானால், நாடாளுமன்றத்தின் சபைகள் மட்டுமே அங்கு ஒத்திவைக்கப்படுகின்றன. விதி எண் 122-ன்படி, இங்கே சட்டப் பேரவை ஒத்திவைக்கப்படுவதற்கு மாறாக, விதிமுறைகளுக்கு முரணாக, முரண்பாடாக, ஒட்டுமொத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் அவைத் தலைவர் வெளியேற்றுவது, சர்வாதிகாரச் செயலாகும். (மேசையைத் தட்டும் ஒலி) நடைமுறைகளுக்கு முரணாகப் பேரவைத் தலைவர் நடந்து கொள்கின்றார் என்று நான் குற்றம் சாட்டுகின்றேன். பேசாமல், அமைதியாக அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்களைக்கூட எதிர்க்கட்சிகள் என்று சொல்லி, ஒட்டுமொத்தமாக வெளியேற்றுகின்ற போக்கும்— கடந்த காலம் என்று சொன்னால், நீங்கள் கை தட்டுகிறீர்கள். கடந்த ஓராண்டுகாலமாக—காணப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்கள், தங்களுடைய நடவடிக்கைகளை முறையற்றுச் செய்துகொண்டிருக்கின்றார் என்பதனை நான் குறிப்பிட்டு, அப்பேரவைத் தலைவர், உறுப்பினர்களின் பெயரைக் குறிப்பிடாமல் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களை வெளியேற்றுவது, பேரவை விதி 121-ஐ மீறிய செயலாகும் என்பதனை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு பேரவையில், பெருமை வாய்ந்த இந்தச் சட்டப் பேரவையில், உறுப்பினர்களை "மாண்புமிகு உறுப்பினர்" என்று அழைப்புதான் மரபு. இதற்கு முன்னால் இருந்த சட்டப் பேரவைத் தலைவர்கள் அனைவரும், உறுப்பினர்களை, ஆளுங்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவர்களை "மாண்புமிகு உறுப்பினர்கள்" என்று விளித்துக் கூறுவதுதான் கண்ணியமிக்க நடைமுறையாக இதுவரை காப்பாற்றி வரப்பெற்றிருக்கின்றது. ஆனால்



பேரவைத் தலைவர் அவர்கள், உறுப்பினர்களை ஒருமையில் பேசுகின்ற போக்கையே, கடந்த ஓராண்டு காலமாகத் தொடர்ந்து இன்றுவரை அவர் கடைப்பிடித்து வருகின்றார் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். உறுப்பினர்களை ஒருமையில் பெயர் சொல்லி மிரட்டுவது, "நீ" என்பது, "வா" என்பது, "உட்கார்" என்பது, "நான் வைத்ததுதான் சட்டம்" என்பது, கைவிரல் நீட்டி,.. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி. (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்ன, சொல்லுங்கள். எழுந்து நின்று சொல்லுங்கள். அப்பாவு அண்ணாச்சி, என்னவென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. அப்பாவு, ஒன்றும் பேச வேண்டாம். திரு. ஓ. பன்னீர்செல்வம், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) அமைதி, அமைதி. (குறுக்கீடு) திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, not necessary, அப்படிப் பேசக்கூடாது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உறுப்பினர்களை எச்சரிப்பது, உறுப்பினர்கள் பேச வாய்ப்புக் கேட்டால், விதிமுறைகளுக்கு முரணாக மறுப்பது, கேள்வி நேரத்தின்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களுக்கும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களுக்கும் துணைக் கேள்விகள் கேட்க அனுமதி மறுப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) கவன ஈர்ப்பு அறிவிப்புகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள், தனித் தீர்மானங்கள் போன்றவற்றில் பாரபட்சம் காட்டுவது, தகவல் கோரல் கோரிக்கைகளை மறுப்பது போன்ற பாதகமான செயல்களில் பேரவைத் தலைவர், நடப்புப் பேரவைத் தலைவர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றார் என்பதனை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் தனது அதிகாரங்களை, இந்த அவையிலிருந்தே அவர் பெறுகிறார். அதுவும், இந்த அவை சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தானே தவிர, பேரவைத் தலைவர் அவைக்கு எஜமானர் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இப்பேரவையினுடைய வேலையாள் என்பதனை, பணியாள் என்பதனை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

53-161—3c

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை, அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு நான் உத்தரவிடுகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஏன்? எதற்காக?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவர் யாருக்கும் எஜமானர் அல்ல. He is not a servant of the House.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அப்படியானால் அவர் என்ன?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** I will pass expunction order.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி. என்ன, என்னவென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேரவைத் தலைவர். அவையை நடத்துவதற்குண்டான தலைவரே தவிர, He is not a servant of the House. I will expunge it. (குறுக்கீடு) Yes, continue.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Servant என்று சொன்னது (குறுக்கீடு) Servant என்று சொன்னது. (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அவர், பேரவைத் தலைவர் இந்த அவையின் வேலையாள் என்று சொன்னதை, தாங்கள் நீக்கச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். இந்த அவையில் எப்படிப்பட்ட வார்த்தைகள், எந்தக் கட்சிகளால் பயன்படுத்தப்பட்டன என்பது எதிர்காலத்திற்குப் பயன்படும் என்பதற்காக. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் ஆளுங்கட்சிக்கு மட்டும் சொந்தமானது அல்ல. சட்டமன்றம் நேரடியாகக் கொள்கைகளை வகுப்பது இல்லை. ஆனால், அரசின் கொள்கைகளை, அலசி ஆராய்கின்ற, குறையிருந்தால் அவற்றைச் சுட்டிக்காண்பிக்கின்ற, வலிமையான அதிகாரம்



சட்டமன்றத்திற்கு உண்டு என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திய அரசமைப்புச் சட்டம் 164, உட்பிரிவு 2-வது விதியில் அமைச்சரவை, மாநிலச் சட்டமன்றத்திற்குக் கட்டுப்பட்டு பதில் சொல்ல வேண்டிய பொறுப்புடையதாகும் என்று கூறப்பட்டுள்ளது. பேரவைத் தலைவர், சட்டமன்றக் கூட்டத்தில் எழும் எந்தப் பிரச்சினைமீதும் முதலில் வாக்களிக்க முடியாது. வாக்குகள் இரண்டு சம கூறாகப் பிரிந்தால் மட்டுமே அவர் வாக்களிக்கின்ற உரிமையைப் பெறுகின்றார் என அரசமைப்புச் சட்டப் பிரிவு 189, உட்பிரிவு (1) கூறுகின்றது. எனவே, பேரவைத் தலைவர் நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டும் என்று நான் இங்கு அவைக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் உண்மையான, சட்டபூர்வமான மக்கள் பிரதிநிதிகள். அவர்கள் பல்வேறு மக்கள் பிரச்சினைகளைப்பற்றி பேரவையில் எழுப்புவதற்காகத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம், நம்பிக்கையில்லாத் தீர்மானம், வெட்டுத் தீர்மானம், தனித் தீர்மானம் என பல்வேறு வழிமுறைகள் பேரவை விதிகளில் வகுக்கப்பட்டுள்ளன. ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது, நிகழ்ச்சி நிரலில் இல்லாத முக்கியப் பிரச்சினைகளை உடனடியாகப் பேரவையில் எழுப்ப வகைசெய்யும் வழிமுறையாகும்.

நமது பேரவையில், ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு, நடப்பு ஓர் ஆண்டுகாலத்தில் இதுவரை சட்டப் பேரவைத் தலைவர் அனுமதி அளித்ததில்லை. பேரவை விதி 56-ஐ எதற்காக வைத்துக்கொண்டிருக்கின்றோம். முல்லைப் பெரியாறு, பாலாறு, காவிரி, சிக்-குன்-குனியா போன்ற மக்கள் பிரச்சினைகள்பற்றிக் கொடுத்தால்கூட, அவற்றை ஒத்திவைப்புத் தீர்மானமாக பேரவைத் தலைவர் எடுப்பது இல்லை. சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக— அது என்ன சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்று எனக்குத் தெரியவில்லை, சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக—அதைக் கொண்டுசென்று, எடுக்கின்ற ஒரு சூழ்நிலையை இங்கே உருவாக்கியிருக்கின்றார். இதுவரை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில், கவன ஈர்ப்புத் தீர்மானம்,

adjournment motion இவை இரண்டும்தான் எங்களுக்குத் தெரியும். 1971-லிருந்து, இந்த சபைக்கு வந்ததிலிருந்து நான் பார்த்திருக்கின்றேன். மாண்புமிகு திரு. ஓ.பி. அவர்கள் மறக்கக்கூடாது. சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பதே சென்றமுறை நாங்கள் இந்தச் சட்டசபைக்கு வந்தபிறகுதான் எங்களுக்கே தெரியும். அதை அறிமுகம் செய்து, அரங்கேற்றியது சென்றமுறை தாங்கள் ஆட்சியில் இருந்தபோதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான்—அவர்கள் சொன்னதைப்போல மறுபடியும்—நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திப்பு சுல்தான், ஹைதர் அலி காலத்திலிருந்து, அப்பொழுது நடந்தது, இப்பொழுது நடந்தது என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஹைதர் அலி காலத்திலே சட்டமன்றம் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் சட்டமன்றம் என்றைக்குத் தோன்றியதோ அந்த நாளிலிருந்து, சட்டமன்றத்திற்கென்று ஒரு மரபு உண்டு. (குறுக்கீடுகள்) (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன் (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இந்த முறை சட்டமன்றம் - 13 ஆவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த இந்தச் சட்டமன்றத்திலும், 12 ஆவது முறை தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், 11 ஆவது முறை தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், அந்த மன்றங்களிலே என்ன மரபுகள் கடைப்பிடிக்கப்பட்டனவோ, அவைதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். இன்னும்



சொல்லப்போனால், இந்தியாவிலேயுள்ள சட்டமன்றங்கள், பாராளுமன்றம் உட்பட காமென்வெல்த் பாராளுமன்றத்தை அடிப்படையாக வைத்து, அந்த மரபைத்தான் தொடர்ந்து பின்பற்றி வருகின்றன. எனவே, இந்த மரபுதான் சட்டமன்றத்தைக் காப்பாற்றுகிறது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல 13 ஆவது சட்டமன்றத்தில் என்ன விவாதம் நடந்து கொண்டிருக்கின்றதோ, அதைப்பற்றி ஏதாவது கருத்தைச் சொன்னால் நன்றாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், தனி உறுப்பினர் அலுவலுக்கென எந்த வியாழக்கிழமைகளிலும் விதிகளின்படி நாம் ஒதுக்குவதில்லை. தினசரி அரசின் அலுவல்கள்தான் இப்பேரவையில் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படுகின்றன, எடுக்கப்படுகின்றன. மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொல்வது, பேரவைத் தலைவர் அவர்களுடைய பொறுப்புகள் அல்ல. அலுவல் ஆய்வுக் குழு எதைத் தீர்மானிக்கிறதோ அதைத்தான் பேரவைத் தலைவர் இங்கே நடைமுறையிலே செயல்படுத்துகிறார். அலுவல் ஆய்வுக் குழு என்பது எதிர்க்கட்சியைச் சார்ந்த தலைவர்களும் கலந்துகொண்டு ஒன்றாக இருந்து தீர்மானிக்கிறது. அந்த நடைமுறையைத்தான் இந்த அவை பின்பற்றுகிறது. நடைமுறை என்பது பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்படவில்லை. நடைபெறுகிறபோது உள்ள நிகழ்வுகள் பேரவைத் தலைவரால் தீர்மானிக்கப்படுகின்றன.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது, அலுவல் ஆய்வுக் குழுவில் வியாழக்கிழமைகளில் தனி உறுப்பினர் அலுவலுக்கு எனக் கொண்டுவந்து, நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைக் கேட்டுக்கொள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தேவையில்லை.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது, அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்யப்பட்டதை நாங்கள் ஏற்று பேரவைத் தலைவர் இயங்குகிறார் என்ற ஒரு குறிப்பைச் சொன்னார்கள். அப்படிப்பட்ட முடிவுகள் பலமுறை இங்கே மாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த முடிவும் இந்த அவையும் ஒப்புக்கொண்டுதான் மாற்றப்படுகிறது. இந்த அவை ஒப்புக்கொள்ளாமல் மாற்றப்படுவது கிடையாது. அதாவது, by mutual consent என்ற முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான். அவைத் தலைவர் தானாக, தன் விருப்பத்திற்கு, நடைபெற வேண்டிய அவை நிகழ்ச்சி நிரலை மாற்றுவதில்லை. நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபோது அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குச் சில மாற்றங்கள் செய்வது தானாக அமைந்துவிடும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசுகின்றபோது, அவையின் முடிவுகளை அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்ததை, பேரவைத் தலைவர் அவர்கள், அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் முடிவு செய்கிறபோது, எதிர்க்கட்சியாக இருக்கிற நாங்கள் இருவர் பேச வேண்டும் என்று முடிவு செய்ததை மாற்றி ஒருவர்தான் பேச வேண்டும் என்று உத்தரவு வழங்குவதற்கு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இருவர் பேசுவதாக ஒப்புக்கொண்டபோது என்ன விதிமுறைகளின்படி, பேச



ஒப்புக்கொண்டார்களோ, அதை மீறி, முறை தவறாக வேண்டுமென்றே நேரத்தை எடுத்துக்கொண்ட காரணத்தினால் சபையை ஒழுங்காக நடத்துவதற்காக பேரவைத் தலைவர், இனி ஒருவர்தான் பேச வேண்டுமென்று ஆணையிட அவருக்கு உரிமை கிடைக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து தீர்மானத்தைப்பற்றி மட்டும் பேசலாம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விதிமுறைகளை மீறிப் பேசியதாகச் சொல்கிறார்கள். சொல்கிறபோது, அப்படியென்றால் உங்களுக்கு வெண்சாமரத்தை வீசிக் கொண்டிருக்க வேண்டுமா என்பதுதான் எங்களுடைய கேள்வி. நாங்கள் ஏதும் கேள்வியே கேட்கக்கூடாதா? (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-00

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டம், Article 14 - அனைவரும் சட்டத்தின்முன் சமம் என்று இந்திய அரசமைப்புச் சட்டம் கூறுகிறது. ஆனால், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ஆளுங்கட்சிக்குச் சார்பாகவும், எதிர்க்கட்சிகளுக்கு மாறாகவும், அவர் இரண்டு நிலைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார். சபையில் இருக்கின்ற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களையும் சமமாக எடுத்து அவருடைய கடமையை ஆற்றவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், ஆளுங்கட்சிக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையைத்தான் சட்டப் பேரவைத் தலைவர் தொடர்ந்து எடுத்துக்கொண்டிருக்கின்றார். அதிலும் குறிப்பாக, இதுவரை கடந்த ஓராண்டு காலத்தில் நாங்கள் பெற்ற அனுபவத்திலிருந்து, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதற்கான முடிவைச் சொல்வதற்கு சட்டப் பேரவைத் தலைவருக்கு முழு அதிகாரம் இருக்கின்றது. சட்டத்தின்மூலமாக, சட்டப் பேரவை விதிகளின்மூலமாக அதை நியாயப்படுத்துவதற்கு, அவர் தன்னுடைய கடமையைச் செய்வதற்கு, யாரும் குறுக்கீடாக நிற்க முடியாது. அவருக்கு முழு உரிமையும் இருக்கின்றது. ஆனால் நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் தொடர்ந்து ஆளுங்கட்சியிலிருந்து, குறிப்பாக, இந்தச் சபையை நடத்துகின்ற அமைச்சர்களிடமிருந்து என்ன செய்கை வருகின்றதோ, அதையே முடிவாக, தீர்ப்பாகச் சொல்கின்ற நிலையைத்தான் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) நான்

தொலைக்காட்சியில் பார்த்திருக்கின்றேன், வாய் பேசாதவர்களுக்காக ஓர் அம்மணி செய்கைமூலமாகப் பயிற்சி எடுத்துக்கொண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தன் இரண்டு கைகளாலும் அந்தப் பள்ளியில், அந்தப் பாடப் பிரிவில் செய்கைமூலம் பொருளை உணர்த்துகின்ற விதத்தில் அவர் குறிப்பால் செய்கைகள்மூலமாகச் சொல்கின்ற ஒரு காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இங்கே நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் அந்தச் செய்கைகளையெல்லாம் எதையுமே அவர் காண்பிப்பது இல்லை. நம்மை நேராகப் பார்த்துக்கொண்டிருப்பார். ஆனால், கண் அசைவில் சட்டப் பேரவைத் தலைவருக்கு என்ன உணர்த்தவேண்டுமோ அதை. . . (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேறு எதைச் சொன்னாலும் நான் ஏற்றுக்கொள்கிறேன். கடந்த காலத்திலே மாண்புமிகு காளிமுத்து அவர்கள், சபாநாயகராக இருந்தபோது, அவர்தான் முதலமைச்சருடைய கண்களையே பார்த்துக்கொண்டிருப்பாரே தவிர, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது இருக்கிற சபாநாயகர் யாருடைய கண்களையும் பார்ப்பது இல்லை. நாங்களும் கண்களை அசைப்பதும் இல்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கண்களை அசைப்பார் என்று சொல்லவில்லை. கண்ணின் உள்ளே இருக்கிற கருமணியைத்தான் அவர் அசைத்துக்கொண்டிருந்தார். நான் தொடர்ந்து அவரைக் கண்காணித்துக் கொண்டிருந்தேன். அந்த வேலையை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருப்பவர்கள் அவர்களுடைய கண் அசைவு எப்படி இருக்கவேண்டுமென்றால், சுற்றிச் சுற்றிப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டும். கலங்கரை விளக்கம் போல—Light House போல. கையை



உயர்த்தி அவருடைய கவனத்தை ஈர்ப்பார்கள். அது பாராளுமன்ற நடைமுறையில்-catching the eye of the Speaker என்று சொல்வார்கள். அதற்காகத்தான் அவர் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும். ஆனால், முன்பு இருந்த சபாநாயகர் Light House மாதிரி சுற்றி சுற்றிப் பார்ப்பது கிடையாது. Focus Light மாதிரி அங்கேயேதான் பார்த்துக் கொண்டிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய முக பாவம் எப்படி இருக்கிறதோ, அதற்கேற்றமாதிரிதான் அவருடைய செயல்பாடு இருந்ததே தவிர, இப்பொழுது இருக்கிற பேரவைத் தலைவர் அப்படி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சட்டப் பேரவைத் தலைவர் சட்ட விதிகளை மதிப்பதும் இல்லை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி நடப்பதும் இல்லை என்று பல்வேறு உதாரணங்களைச் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய முழுப் பொறுப்பும் சட்டப் பேரவைத் தலைவருக்கு இருக்கின்றது. அவர் அவையில், இந்தச் சபையில் கலந்துகொண்டுகூட பதில் சொல்லலாம், அவருக்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆனால், அமைச்சர்கள் அதற்குரிய பதிலை இங்கே சொல்லிக்கொண்டிருப்பதுதான் வினோதமாகத் தெரிகின்றது. ஆகவே, சபையில் அவர் இந்த ஆசனத்தில்தான் உட்கார முடியாதே தவிர, நான் சொன்னதற்குப் பின்னால், அவர் சபையில் கலந்துகொண்டு சொல்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று சட்ட விதிகளில் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், சட்டப் பேரவைத் தலைவர், அமைச்சர்கள் சொன்ன சொல்படிதான் கேட்டுக்கொண்டிருக்கின்றார் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இவர்களே இப்போது உறுதிப்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதனை நான் இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-05*

பேரவை விதி *235*-ன்படி, அலுவல் ஆய்வுக் குழு அலுவலுக்காக முன்மொழிந்துள்ள கால ஒதுக்கீட்டை இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது என்கின்ற ஒரு தீர்மானம் அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர் ஒருவரால் முன்மொழியப்பெற்று, அது பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதுவே பேரவையின் ஆணையாகச் செயலுக்கு வரும். பேரவை

விதி 237-ன்படி பேரவை அனுமதித்தால் அன்றி அவ்வாணையில் மாற்றம் எதையும் செய்யக் கூடாது. ஆனால், அந்த நடைமுறை, நடப்புச் சட்டமன்றப் பேரவையில், அதாவது 13-வது சட்டமன்றப் பேரவையில் பின்பற்றப்படுவது இல்லை. அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்படுவது ஒன்று. ஆனால், இங்கு நடைமுறைப் படுத்தப்படுவது வேறாக உள்ளது. இதற்கு முழுப் பொறுப்பையும் பேரவைத் தலைவர்தான் ஏற்றாக வேண்டும். அரசு என்பது, சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கின்ற ஓர் அமைப்பு. எனவே, எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அடங்கியதுதான் சட்டமன்றம். அவர்களுடைய கருத்தை உதாசீனப்படுத்தக் கூடாது. எதிர்க் கட்சி உறுப்பினர்கள், அமைச்சர்களுக்கு, வெண்சாமரம் வீசுவதற்காக சட்டமன்றத்திற்கு வருவது இல்லை. குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற பொறுப்புள்ள எதிர்க்கட்சியாகச் செயல்படுவதற்குத்தான் எதிர்க்கட்சி உறுப்பினர்களாகிய நாங்கள் இங்கு வருகின்றோம், நீங்கள் அதை எதிர்பார்க்கவும் கூடாது.

பேரவையில் நான் ஏற்கெனவே ஒரு குற்றச்சாட்டை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். பேரவைத் தலைவருடைய அரசியல் நேர்முக உதவியாளராக இருக்கின்ற வெங்கடேசன் தன்னுடைய letter pad-ல், அதாவது மாண்புமிகு அமைச்சர்களோ, சட்டப் பேரவைத் தலைவரோ, சட்டப் பேரவைத் துணைத் தலைவரோ தனக்கு உதவியாளர்களை நியமித்துக்கொள்வதே அமைச்சருடைய அல்லது சட்டப் பேரவைத் தலைவருடைய அல்லது பேரவையினுடைய துணைத் தலைவருடைய உத்தரவுகளை அவர் மற்றவர்களுக்குத் தொடர்ந்து பணிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கின்ற ஓர் உதவியாளர் அவருடைய கைப்படவே டாஸ்மாக்கினுடைய இரண்டு கடைகளை, அதில் bar நடத்துவதற்கு. . .

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேசி அதற்குப் பதிலெல்லாம் சொல்லியாகிவிட்டது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டால், அதையொட்டிப் பேசுவதை விட்டுவிட்டு, ஏற்கெனவே பேசியதையே சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அரைத்த மாவையே அரைக்க வேண்டாம். சரக்கு இருந்தால் அவிழ்த்துவிடுங்கள். இல்லையென்றால் சலாம் போட்டு ஓடி விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடிப்பதற்குள் மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் எழுந்து குறுக்கீடு செய்வது. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இன்றைய சபாநாயகரை, அவைத் தலைவரை அழுக்குப்படுத்த வேண்டும், களங்கப்படுத்த வேண்டும் என்பதற்காக ஏற்கெனவே விவாதித்து விடப்பட்ட ஒன்றை, யாரோ ஒருவர், யாரைப் பற்றியோ எழுதி, சபாநாயகருக்கே சம்பந்தம் இல்லாமல் யாரோ கையெழுத்திட்டு, அதுவும் கொடுக்கப்படாத, அனுமதிக்கப்படாத ஒரு கடைக்காக அதை ஒரு ஊழல் என்பதைப்போல தாங்கள் இங்கே சொன்னால், கடந்த கால சபாநாயகர் செய்த ஊழலை இதே அவையிலே உங்களையெல்லாம் உட்கார வைத்துக்கொண்டு பக்கம் பக்கமாக விரித்து, கையெழுத்தோடு காட்ட நான் தயாராக இருக்கிறேன். எனவே, அந்த வம்புக்கு எல்லாம் போக வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்பது, வெங்கடேசன், அரசியல் நேர்முக உதவியாளர். அவர் தன் கைப்பட அரசாங்கத்தினுடைய letter pad-ல் கடிதம் எழுதியிருக்கிறார். அது குற்றமா, இல்லையா? (குறுக்கீடு) பதில் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வதைப்போல, அவர் கடிதம் எழுதினார், எப்போது அது குற்றம் என்றால், கடிதம் எழுதியவருக்கு அந்தக் கடை ஒதுக்கீடு செய்திருந்தால் அது குற்றம். ஒரு பரிந்துரை செய்கிறார், ஆனால் அரசாங்கம் அதை அமல்படுத்தவில்லை, அதிலிருந்து இந்த அரசாங்கமும் நேர்மையாக நடக்கிறது. அந்தச் செய்தி சபாநாயகருக்கும் தெரியாது, அவருடைய அனுமதி இல்லாமல் ஓர் உதவியாளர் செய்த குற்றத்தை இந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அன்றையதினமே நான் உங்களிடத்திலே இங்கே விவாதத்தின்போது எடுத்துச்சொல்லியிருக்கிறேன்.

(முற்பகல் 11-10)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களே வெங்கடேசன் என்ற நேர்முக உதவியாளர் கடிதம் எழுதினார், அந்தக் கடை ஒதுக்கப்படவில்லை—கடிதம் எழுதிய குற்றத்திற்காக ஏற்கெனவே அப்படி—என்று சொல்லியிருக்கின்றார். ஆக, கடிதம் எழுதியதே குற்றம் என்பதை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள், அவராகவே முன்வந்து இங்கே சொல்லியிருக்கின்றார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி ஒன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடு) இல்லை, அப்படி ஒன்றும் சொல்லவில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் குறிப்பை எடுத்துப் பாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் close-ஆக watch பண்ணிக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை. நான் அவைக் குறிப்பில் பார்க்கின்றேன். கடிதம் கொடுத்தது தவறு என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் சொல்லவேயில்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** குறிப்பை எடுத்துப் பாருங்கள். அதில் இருக்கிறது. குறிப்பை எடுத்துப் பாருங்கள். குறிப்பிலே பாருங்கள். உங்கள் குறிப்பை எடுத்து வாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. நீங்கள் தொடர்ச்சியாகப் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆக, கடிதம் கொடுத்ததே குற்றம். அதாவது, சட்டப் பேரவைத் தலைவர் என்ற அவருக்கு மிகவும் வேண்டியவர் என்று வெங்கடேசன், தன் கைப்படவே எழுதி, கடிதம் கொடுத்தது குற்றமா இல்லையா? அந்த வெங்கடேசன்மீது இதுவரை நீங்கள் நடவடிக்கை எடுக்காததைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவரும் அமைச்சராக இருந்தவர். அமைச்சர்களோ, சபைத் தலைவர் அவர்களோ, அவர்களுடைய



உதவியாளர்கள் கடிதம் கொடுப்பது என்பது ஏதோ இன்று நேற்றாக நடப்பதல்ல. எந்தக் காலத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்ச்சிகள்தான். ஆனால் அதிலே ஏதாவது தவறு நடந்திருந்தால்—அதுகூட கடிதம் கொடுக்கும்போது, விதிமுறைகளுக்குட்பட்டிருந்தால் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர்களே கையெழுத்து போட்டுக் கொடுக்கின்ற கடிதங்கள்கூட எந்தக் காலத்திலும் உண்டு. நியாயப்படி பார்த்தால் எந்தக் காலத்திலும் கடிதமே கொடுக்கக் கூடாது. இந்த முறையை நீங்களும் சரி, நாங்களும் சரி, எல்லோரும் பின்பற்றுகின்ற முறைதான். அதிலே ஏதாவது தவறு நடந்திருக்குமானால்,—உள்நோக்கம் இருந்திருக்குமானால் சுட்டிக்காட்டலாமே தவிர, எழுதியதே தவறு என்று சொல்வது, ஏதோ எப்போதும் இல்லாத மரபை, ஏதோ நாங்கள்தான் புதிதாகச் செய்தமாதிரி சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கடை, டெண்டர் மூலமாக, ஒப்பந்தப்புள்ளி மூலமாக. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, (குறுக்கீடு) அவர் கடிதத்தில் சிபாரிசு செய்த மாதிரி அவருக்கு அந்த அனுகூலம் கிடைத்ததா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இல்லை, Bar-க்கு ஒப்பந்தப்புள்ளி மூலமாகக் கொடுக்கவேண்டும். வெங்கடேசன் லெட்டர் எழுதிக் கொடுப்பதற்கு, இவருக்கு யார் அதிகாரம் கொடுத்தது? அப்படிச் சட்டத்தில் அதிகாரம் இருக்கிறதா என்பதைத்தான் நான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏதாவது நடந்திருந்தால் நீங்கள் சொல்லுங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அதிகாரம் இருந்திருந்தால் அது அமல்படுத்தப்பட்டிருக்கவேண்டும். அதில் அதிகாரம் இல்லை என்பதால்தான் அமல்படுத்தப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சியில் இருக்கின்ற உறுப்பினர்கள், தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு சட்டபூர்வமாக அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதற்கு ஜனநாயக முறைப்படி நீங்கள் இந்த அவையில் பதில் சொல்லவேண்டும். மாறாக, நமது மாண்புமிகு

உறுப்பினர் கலைராஜன் அவர்கள் இங்கே முதல் நாள் பேசியபோது, சபையில் சில பிரச்சினைகள் அந்த நேரத்தில் எழுந்தன. ஆனால், அன்றைய இரவே அவருடைய தாய்-தந்தையர் இருக்கின்ற சொந்த கிராமத்திலே, வீட்டை அடித்து நொறுக்கி வன்முறை வெறியாட்டம் நடந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள். நீங்கள் முன்னாள் முதல்வராக மிகப் பெரிய பொறுப்பில் இருந்திருக்கிறீர்கள். எனவே, இந்தத் தீர்மானத்தை ஒட்டித்தான் நீங்கள் பேசவேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** என்னைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, அதற்கும் Speaker-க்கும் என்ன சம்பந்தம்? அதற்கும், Speaker மீதான No Confidence Motion-க்கும் என்ன சம்பந்தம்? ஓரத்தநாட்டில் நடந்த பிரச்சினைக்கும் இதற்கும் எந்தவகையில் சம்பந்தம் இருக்கிறது?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முழுமையாக, ஒரு பிரச்சினையை, ஒரு Subject-ஐ எடுத்தேன் என்றால், அதைச் சொல்லி முடிக்க விடுங்கள். அதற்கு முன்னாலே நீங்களும் ஒரு கருத்தைச் சொன்னால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தத் தீர்மானத்தை ஒட்டித்தான் பேசவேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீர்மானத்தை ஒட்டித்தான் பேசுகின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அரசாங்கத்தில் ஒரு சம்பவம் நடக்கிறது என்றால், ஓரிரு நாட்களிலேயே எந்த அரசாங்கத்திலும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று அதையும் நான் சொன்னேன். அ.தி.மு.க. ஆட்சி நடந்துகொண்டிருந்தபோது, அப்போதைய கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர், அவர்களுடைய ஆட்சியிலேயே கொலை செய்யப்பட்டார். ஆனால் அந்த கொலைக் குற்றவாளியை அவர்கள் கண்டுபிடித்தார்களா? இதுவரையிலும் கண்டுபிடிக்க முடியவில்லை. (குறுக்கீடு) அவ்வாறு சில



நேரங்களில் குற்றவாளிகள் தப்பித்துவிடுகின்றார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், தவறு செய்தவர்கள், குற்றவாளிகள் யாராக இருந்தாலும் நிச்சயமாக தலைவர் அவர்கள், முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள். அந்தக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க காவல் துறைக்கு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள்.

*(முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. இல்லை. தீர்மானத்தை ஒட்டிப் பேசுங்கள். (குறுக்கீடு) செங்கோட்டையன் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இந்த அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பேசுகிறாரா? சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பேசுகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் சுதர்சனம் அவர்கள், அவர் சில point-களை எனக்கு எடுத்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். நான் அதை இப்போது பேசவில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, ஓர் உறுப்பினருக்கு பாதுகாப்புத் தர வேண்டிய பொறுப்பு, கடமை யாருக்கு இருக்கிறது? சபைத் தலைவருக்கு இருக்கிறது. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். நீங்கள் சொல்லவிடாமல் குறுக்கீடுகள் செய்தீர்களென்றால் எப்படி? ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பாதுகாப்புத் தர வேண்டிய பொறுப்பும், கடமையும் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவருக்கு உண்டு. நடந்த அந்தப் பிரச்சினை கிராமத்திலே நடந்தது. அதற்குப் பின்னால் . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அவர்களுடைய ஆட்சியில் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம், தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ஆர். ரமேஷ் இவர்களெல்லாம் அடித்து நொறுக்கப்பட்டு, கை கால்கள் ஊனமாக்கப்பட்டதே, அதற்கு என்ன சொல்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், தனக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சபாநாயகருக்கு ஏதேனும் கடிதம் கொடுத்திருக்கிறாரா? எப்போதுமே அதுதான் முறை. நீங்கள் சொல்வது, சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், சபாநாயகர்மீது குறை சொல்லவேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால், ஓர் உறுப்பினர் எனக்கு இதுபோன்று நிகழ்ச்சி நடந்திருக்கிறது, எனக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டிருக்கிறாரா? நீங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவது என்பது வேறு. ஆனால், எனக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சபாநாயகரிடம் கொடுத்து, அவர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், நீங்கள் அதோடு ஒப்பிட்டுப் பேசுவது சரியாக இருக்கும். எதுவுமே கொடுக்காமல், போலீஸ் ஸ்டேஷனில் complaint கொடுத்தால், போலீஸ் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள். அதை சபாநாயகருடைய knowledge-க்கு, அவருடைய பார்வைக்குக் கொண்டுவந்திருக்கிறீர்களா? கவன ஈர்ப்புத் தீர்மானம் என்பது வேறு. அதை அவரிடம் கொடுக்க வேண்டும். அதுதான் முறை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே சட்டமன்ற உறுப்பினர் இந்தச் சட்டமன்றத்திலே தன்னுடைய வீடு தாக்கப்பட்டதற்கு, தந்தையார் தாக்கப்பட்டதற்கு இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று இங்கே வலியுறுத்தியிருக்கிறாரே அதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிரிலே உட்கார்ந்திருக்கின்ற திரு. பீட்டர் அல்போன்ஸ் இங்கே பேசிவிட்டு சட்டமன்ற உறுப்பினர் ஹாஸ்டலுக்குப் போனவுடன் குண்டர்கள் வந்து செம சாத்து சாத்திவிட்டுப் போனார்களே, அதை இங்கே பேசினாரே அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.



**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்தகால ஆட்சியின்போது இதே அவையில் பேரவைத் தலைவர் இடத்தில் என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது, மணல் குவாரிகளில் தனியார்கள் கொள்ளை அடிக்கிறார்கள், அதை அரசுடைமை ஆக்கவேண்டுமென்று நான் இந்தச் சட்டமன்றத்தில் விவாதித்து அதை முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதை அரசுடைமை ஆக்கினார்கள். அப்படி ஆக்கிய காரணத்தால் அந்த மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் என்னைப் பலமுறை லாரியை விட்டு ஏற்றி கொலை செய்வதற்கு முயற்சித்தார்கள். நான் தங்கியிருந்த வீடுகளிலே வெடிகுண்டு வீசினார்கள். உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று நான் ஆயுதம் ஏந்திய காவலர்கள் வேண்டுமென்று முதலமைச்சரிடம் மனுக் கொடுத்தபோதும் எனக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை. பேரவைத் தலைவரிடத்தில் கொடுத்தபோதும் பாதுகாப்பு அளிக்கவில்லை. பேரவைச் செயலாளரிடத்திலும் மனு கொடுத்தேன், நடவடிக்கை எடுக்கவில்லை. இதுதான் கடந்தகால ஆட்சியில் எதிர்க்கட்சி உறுப்பினருக்குக் கொடுத்த பாதுகாப்பு. ஆனால், அதற்கு நேர்மாறாக, தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கலைராஜன் வீடு தாக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டியது; அதில் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் நான் கைது செய்வேன் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இதுதான் கடந்தகால அரசுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் உள்ள வேறுபாடு என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பன்னீர்செல்வம் (குறுக்கீடுகள்) திரு. வை. சிவபுண்ணியம், உங்கள் turn-ல் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) திரு. பன்னீர்செல்வம், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜனநாயக ரீதியிலே கருத்துச் சுதந்திரம் சட்டமன்றத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உண்டு. அதில் பேசிய ஓரே காரணத்திற்காக அவருடைய வீடு அடித்து நொறுக்கப்படுகிறது. அந்தப் பிரச்சினையில் சட்டப் பேரவைத் தலைவர் என்ன பாதுகாப்பு தந்தார்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே உறுதி அளித்தார். அதற்குப் பின்னாலும் அந்தப் பிரச்சினையில் சட்டபூர்வமான நடவடிக்கையை சட்டப் பேரவைத் தலைவரும் எடுக்கவில்லை, அரசும் எடுக்கவில்லை என்பதை நான் இங்கே குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடுகள்)

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இருக்கையைவிட்டு எழுந்து நின்றனர்)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓரேயொரு point. (குறுக்கீடுகள்) நான் எழுந்தால் எல்லோருமே எழுந்து விடுகிறீர்களே. (குறுக்கீடுகள்) ஒரே ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Please sit down. நீங்கள் உட்காருங்கள். இதே பன்னீர்செல்வம் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னார், மாண்புமிகு முதல்வர் பேசினாலும்கூட ஒரு Member குறுக்கிடலாம், அதற்கு விதிகளில் இடம் இருக்கிறது என்று சொல்கிறபோது நான் சிவபுண்ணியத்தை அழைத்ததில் தவறே கிடையாது. திரு. சிவபுண்ணியம் சொல்லி முடியுங்கள்.

*முற்பகல் 11-20*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளிக்காதது குறித்துப் பேசுகிறார். இந்த அவையிலேதான் ஆதிச்சபுரத்திலே பிரகாஷ் என்ற மாணவன் பசியால் இறந்து போனான் என்றும், பாளையங்கோட்டை சண்முகம் தற்கொலை செய்து கொண்டான் என்ற கடிதத்தை என்னிடத்திலே அளித்து மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரிடம் கொடுத்தேன் என்ற காரணத்திற்காகவே, இந்தச் சபையிலே பேசினேன் என்ற காரணத்திற்காகவே, நடுஇரவு 1 மணிக்கு அ.தி.மு.க. அரசு காவல் துறையை அனுப்பி, என்னுடைய வீட்டிலே சுவர் ஏறி குதித்து, என்னை மிரட்டி நிர்ப்பந்தப்படுத்தி, கடிதம் எங்கே என்று கேட்க வைத்தது அ.தி.மு.க. அரசு அப்படி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் செய்தது அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் நடைபெற்றதே தவிர, இப்பொழுது எல்லா பாதுகாப்போடும் உறுப்பினர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் பன்னீர்செல்வம், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம், (குறுக்கீடுகள்) எல்லோரும் தயவுசெய்து உட்காருங்கள். Please sit down. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, திரு. பன்னீர்செல்வம், தொடர்ந்து உங்களுடைய தீர்மானத்தின் மீது கருத்தைச் சொல்லலாம். மற்றவர்கள்



எல்லாம் அமைதியாக உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) மற்றவர்கள் யார் பேச்சும், nothing should go into the record.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் பிறகு கூப்பிடுகிறேன், உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, ஒவ்வொரு கட்சிக்கும் ஓர் உறுப்பினரைக் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். (குறுக்கீடு) அப்புறம் பேசலாம். (குறுக்கீடு) இல்லை, நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் தொடர்ந்து பேசி முடிக்கப் போகிறார். (குறுக்கீடு) சார், அவர் முடிக்கப் போகிறார். முடிக்கட்டும். அப்புறம் ஒவ்வொரு கட்சிக்கும் ஒருவர் பேசும்போது பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தமிழகம் இன்றைக்கு. . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) Sir, I have not called them. அவர்களை நான் கூப்பிடவில்லை. Please sit down. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** சிவபுண்ணியம் ஏன் பேசுகிறார் என்று நீங்கள் ஏன் கேட்கிறீர்கள்? நீங்கள் ஏன் சார் கேட்கிறீர்கள்? நீங்கள் உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் பன்னீர்செல்வம், தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர்களை முதலிலே உட்காரச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அவர் தொடர்ந்து பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நானும் இந்த அவையிலே பார்த்துக்

கொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சியில் உள்ள நண்பர்கள், தோழமைக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களோ அல்லது உறுப்பினர்களோ பேசும்பொழுது அமைதியாக இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய சிவபுண்ணியம் எழுந்தால் மாத்திரம் . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி.

**மாண்புமிகு கலைஞர் மு. .கருணாநிதி:** எதிர்க்கட்சியினர் சீறிவிழுகிறார்கள். பாய்ந்து பேசாதே என்று சொல்கிறார்கள். இதை சிவபுண்ணியமாவது—அவர்களுக்கு சிவம் பிடிக்கவில்லையா, புண்ணியம் பிடிக்கவில்லையா என்று எனக்குப் புரியவில்லை— இதற்காகவாவது நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் சிவன்பாவம் என்று தன்னுடைய பெயரை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிவபுண்ணியம் எழுந்தால் மட்டும் ஏன் அனைவரும் எழுந்து நின்று பேசுவதற்கு முற்படுகிறார்கள் என்று சிவபுண்ணியத்திற்கு ஆதரவு நிலையாக இங்கே பேசினார். சிவபுண்ணியம் எவ்வளவு பெரிய சுயநலக்காரர் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரிகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது personal accusation. இதை ஏற்றுக்கொள்ள முடியாது. இல்லை, இல்லை சுயநலம் என்ற வார்த்தை எல்லாம் personal-ஆகச் சொல்லக் கூடாது. அந்தமாதிரி எல்லாம் சொல்லக்கூடாது. Personal attack. *(குறுக்கீடு)* மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அவையில் இதுபோன்ற வார்த்தைகளை நாம் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்குவது என்கிற ஒரு முறையை அடிக்கடி பயன்படுத்தக் கூடாது. ஏனென்றால் அவர், சிவபுண்ணியம் சுயநலக்காரர் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு சிவபுண்ணியம் சொல்கின்ற பதிலையும் அனுமதித்து இரண்டையும் அவைக்குறிப்பிலே ஏற்றுவதுதான் நல்லது. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** காரணம். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, காரணத்தைச் சொல்லி முடியுங்கள். நான் அவருக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) சிவபுண்ணியம், நீங்கள் உட்காருங்கள், உங்களைப் பற்றிச் சொல்லி முடித்தவுடனே உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவபுண்ணியம் மார்க்சிய தத்துவத்தின்படி கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்ற, இங்கு சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படுகின்ற ஓர் உறுப்பினர். அவருக்கு மட்டும் சிவமும் வேண்டும், அதனால் வரக்கூடிய புண்ணியமும் வேண்டும். சிவபுண்ணியம் என்ற பெயரை அவர் வைத்துக்கொள்ளலாம். அதற்காகத்தான் நான் அவரைச் சுயநலக்காரர் என்று சொன்னேனேயொழிய, வேறு எந்த உள்நோக்கமும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சுயநலக்காரர் என்ற வார்த்தையைப் போட்டுவிட்டார். அதற்குக் காரணம் சொல்ல முடியாமல், அவர் தப்பிப்பதற்காக, சிவத்தையும், புண்ணியத்தையுமே, திரும்ப என்னை வேண்டிக்கொண்டு, அவர் தப்பித்துக்கொண்டார் என்பதுபோலத்தான் இப்போது அவருடைய பேச்சு அமைந்திருக்கிறது. சுயநலத்தோடு எந்தவொரு விஷயத்தையும் நான் இங்கே பேசவில்லை. மக்களுடைய பிரச்சினையை இங்கே பேசுவேன். மக்களுக்கு எதிராகச் செயல்பட்ட விஷயத்தைப் பதிவு செய்வேன். ஆகவே, மக்களுக்காக விஷயங்களைப் பேசுகிறபோதுதான் தற்கொலை செய்துகொண்டார் பாளையங்கோட்டை சண்முகம். கடிதம் எழுதினார்; அதை உங்களுடைய முதலமைச்சராக இருந்தவருக்கு நான் நேரடியாகக் கொடுத்தேன். அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டபோது, இந்தச் சபையில் பதிவு செய்ததற்காக, காவல் துறையை ஏவிவிட்டு என் வீட்டில் சுவர் ஏறிக் குதிக்கச் சொன்னது உங்கள் அரசாங்கம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

[2007 மே 14

**திரு. வை. சிவபுண்ணியம்:** அதேபோல, திருத்துறைப்பூண்டி பழனிசாமி . . .

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Personal accusation பண்ணுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Personal attack அவர் பண்ணினால், நீங்கள் அதற்குப் பதில் சொல்வதற்கு opportunity இருக்கிறது. உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** அ.தி.மு.க. ஆட்சியிலே கள்ளச்சாராயம் ஆறாக ஓடுகிறது என்று சொன்ன காரணத்திற்காகவே பழனிசாமி வீட்டிலே சாராயத்தைக் கொண்டுபோய் வைத்து பிடிப்பதற்காக முயற்சி எடுத்தது அ.தி.மு.க. அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதையெல்லாம் உறுப்பினர்களைக் களங்கப்படுத்த, அசிங்கப்படுத்துவதற்காக அ.தி.மு.க. அரசு, உங்களுடைய தலைவர் செய்தாரே என்றுதான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இந்த அவையினுடைய நேரம் எவ்வளவு முக்கியம் என்பது உங்களுக்குத் தெரியும். தீர்மானத்தையொட்டிப் பேசுங்கள். 13 Bill-களை ஆய்வு செய்ய வேண்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி என்ன?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதற்காகத்தான் சொன்னேன். Point of Order-ல் விதி 116-ன்கீழ் யார் பேசினாலும் அனுமதி கொடுப்பேன் என்று நீங்கள்கூடச் சொன்னீர்கள். நான் பேசுகின்ற பேச்சின் தொடர்ச்சியில் ஏதாவது பிரச்சினைகள் இருந்தால், அதைப்பற்றி சிவபுண்ணியம் பேசலாம். அவர், நான் பேசியதிலிருந்து சம்பந்தமில்லாமல், வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தால். . .



2007 மே 14]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தீர்மானத்தை யொட்டிப் பேசியிருந்தால் இவ்வளவு குறுக்கீடுகள் வருவதற்கு chance-ஏ இல்லை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எப்படி இல்லை என்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தீர்மானத்தையொட்டியே பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தீர்மானத்தையொட்டித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தீர்மானத்தையொட்டியே பேசிக் கொண்டிருக்கின்றேன். தீர்மானத்தையொட்டிப் பேசுகின்ற பேச்சில் ஏதாவது பிரச்சினையிருந்தால் அவர் விதி 116-ன்கீழ் பிரச்சினை கொண்டு வரலாம். Point of Order கொண்டு வரலாம். அவர் கேட்டுக்கொண்டு, நீங்களும் அதற்கு அனுமதி கொடுத்து, வேறு பொருளைப் பேசிக்கொண்டு, நீங்களும் அனுமதி கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்காகத்தான் நாங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள்தான் சொன்னீர்கள். முதல்வர் பேசினால்கூட குறுக்கிடலாம் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) விதிகளும் எனக்கு அனுமதிக்கிறது. நீங்கள் தீர்மானத்தையொட்டிப் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிலைதான் கடந்த ஓராண்டு காலமாக நீடித்துக்கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தோம் என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள், இந்திய அரசமைப்புச் சட்டம் 173 உட்பிரிவு (சி)-ன்படி சட்டப் பேரவை விதி 68-ன்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏற்கெனவே சட்டப் பேரவைத் தலைவரிடம் கொடுத்தார். அதை, நீங்கள், 14 நாட்கள் கழித்து முதல் வேலைநாளில்தான் நிகழ்ச்சி நிரலில் சேர்த்து எடுக்க வேண்டும். எங்களுக்கு நிகழ்ச்சி நிரலில், முதல் நாள் கொடுத்த நிகழ்ச்சி நிரலிலும் இல்லை. அடுத்த நாள், மறுநாள் கொடுத்த நிகழ்ச்சி நிரலிலும் இல்லை.

சபையில் வந்து உட்காருவதற்கு இரண்டு நிமிடங்களுக்கு முன்பாக, அது நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு, எங்களுக்குக் கொடுக்கப்படுகிறது. எனவே, இந்திய அரசமைப்புச் சட்டப்படி சட்டப் பேரவைத் தலைவர் நடக்கவில்லை என்பதற்கு இதுதான் மிகச் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்துகொண்டிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, ஒட்டுமொத்தமாக, கடந்த ஓராண்டு காலம் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியும், சபாநாயகர்/சட்டப் பேரவைத் தலைவர் நடந்துகொள்ளவில்லை. சட்டப் பேரவை விதிகளின்படியும் நடந்துகொள்ளவில்லை; மரபுகளின்படியும் சட்டப் பேரவைத் தலைவர் நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி, பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் கொடுத்த தீர்மானத்தை வலியுறுத்திப் பேசி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு கட்சிகளிலிருந்து பேசுகிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது, இந்த அவையில் ஒரு கட்சிக்கு ஒருவர்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். உதாரணத்திற்காகச் சொல்கிறேன். *3-8-2006* அன்று தம்பிதுரை அவர்கள், பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தார். அந்தக் கட்சியின் சார்பாக ஒருவர்தான் பேச அனுமதிக்கப்பட்டார். பிறகு, திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. ஜி.கே. மணி, திரு. சி. கோவிந்தசாமி, திரு. சிவபுண்ணியம், திரு. ஆஸ்கார் நிக்லி ஆகிய மற்ற கட்சித் தலைவர்களைப் பேச அனுமதித்தார்கள்.

அதைப் போலவே, *1975* ஆம் ஆண்டு மார்ச் *25* ஆம் தேதி ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவைத் தலைவர்மீது கொண்டு வரப்பட்டது. அன்றையதினம், கே.டி.கே. தங்கமணி மட்டும்தான், அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் பேசினார். அதைத் தொடர்ந்து மற்ற கட்சித் தலைவர்கள் திரு. எச்.வி. ஹண்டே, திருமதி அனந்தநாயகி, திரு. வெங்கடசாமி, திரு. சுந்தரபாரதி, திரு. பொன்னப்ப நாடார் ஆகியோர் பேசினார்களே தவிர, இதுவரையிலே ஒரே கட்சியிலே இரண்டு பேர் பேசுவதற்கு அனுமதித்து பழக்கமில்லை. ஆகவே, அடுத்த கட்சித் தலைவருக்குத்தான் நீங்கள் வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.



*முற்பகல் 11-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், காங்கிரஸ் கட்சியின் சார்பாக. (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன் எதற்காக இப்படி நிற்கிறீர்கள்? என்ன உங்களுக்குப் பிரச்சினை? (குறுக்கீடு) அவர் சொன்னது, முன் மாதிரியைத்தான் இந்த அவை கடைப்பிடிக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, Mr. Sengottaiyan இது நன்றாக இல்லை. இல்லை, ஏதோ பேப்பரில் news வரவேண்டும் என்பதற்காக அதிகம் நீங்கள் எழுந்திருக்காதீர்கள். Box news-க்காக நாம் அரசியல் பண்ணக்கூடாது. (குறுக்கீடு) சரி, சொல்லி முடித்துவிடுங்கள். நான் பீட்டர் அல்போன்ஸை அப்புறம் அழைக்கிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், கருத்துகள் சொல்கிறபோது ஒரு மரபாக இருந்திருக்கிறது என்று மட்டும்தான் சொல்லி இருக்கிறாரே தவிர, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்மொழிந்ததற்குப் பிறகு அந்தக் கட்சி தவிர, மற்ற கட்சிகள் பேசுவதற்கு விதியிலே இடம் இருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுவான வழக்கங்களை, customary rights-ஐத்தான் நாம் கடைப்பிடிக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். *1975*-லேயும், *2006*-லேயும் இந்தமாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது என்ன நடைமுறைகள் கடைப்பிடிக்கப் பட்டனவோ, அவற்றைத்தான் நாமும், இப்போதும் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் (குறுக்கீடு) அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானத்தை இந்த அவையில்

கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்பட்டு, அது நம்பிக்கையில்லாத் தீர்மானமாக இருந்தாலும், வேறு எந்தத் தீர்மானமாக இருந்தாலும், அந்தத் தீர்மானத்தினுடைய வாசகம், இந்த அவை தீர்மானிக்கிறது என்றுதான் முடியும். நம்பிக்கையில்லை என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கொண்டு வந்த தீர்மானம், அதற்குப் பின்னர் இந்த அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இந்த அவை தீர்மானிக்கிறது என்று முடிந்து, பதவியில் இருந்து நீக்கப்படவேண்டும் என்பதுதான் அதன் கருத்து. இந்த அவை தீர்மானிக்கிறது என்று ஒரு கருத்து இந்த அவையில் சொல்லப்பட்டுவிட்டால், இந்த அவையிலே உள்ள எல்லோருக்கும் உரிமை உண்டு அதைப்பற்றி முடிவு எடுக்க, கருத்து தெரிவிக்க. அதிலே தனித்தன்மை உள்ள கருத்துடையவர்கள், தனித்தனிக் கட்சித் தலைவர்கள். இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்த கட்சியைச் சார்ந்த அனைவரும் சேர்ந்து வாக்களித்து, இந்தத் தீர்மானத்திற்கு ஒரு நாளைக் குறிப்பிட வைத்து, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து இருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு, மாண்புமிகு துணைத் தலைவர் பேசிய அந்தப் பேச்சு அவர்களுடைய சார்பாக பேசப்பட்ட பேச்சு. ஆகவே, அந்தக் கருத்து, அவர்களைப் பொறுத்தவரையில் பேசப்பட்ட கருத்து. அந்தக் கட்சியைப் பொறுத்தவரையில் முடிவான கருத்து. பிற கட்சிகளுடைய கருத்தைக் கூற, இந்தத் தீர்மானத்தைப்பற்றி அவர்களுடைய கருத்தைத் தெரிவிக்க, அவர்களுக்கு உரிமையும் இருக்கிறது, கடமையும் இருக்கிறது. அந்த முறையிலேதான், இந்த அவை இதற்கு முன்னர் எந்தக் காலத்திலும் நடைபெற்று இருக்கிறது. அந்த முறைப்படி மற்ற கட்சியைச் சார்ந்த தலைவர்களை அழைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், I will not allow you, No. பீட்டர் அல்போன்ஸ் (குறுக்கீடு) No, முடியாது. எதற்குமே limitations இருக்கிறது. தினம் 100 தடவை எழுந்திருந்தால், (குறுக்கீடு) இன்றைக்கு முடியாது. திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) Sir, your statement will not go on record. (குறுக்கீடு) என்னங்க, நான் சொல்வதுதான் கரெக்ட். (குறுக்கீடு) எத்தனை தடவை கேட்பீர்கள்? திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள், (குறுக்கீடு) இல்லை, வேண்டியதில்லை. நூறு முறை எழுந்திருந்தால், நூறு முறை நான் கேட்க வேண்டும் என்கிற அவசியம் எனக்கில்லை.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது



நம்பிக்கையில்லை, அவர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானத்தின்மீது, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கருத்துகளைப் பதிவு செய்ய வாய்ப்புத் தந்த தங்களுக்கு, என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் குறித்து, நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். ஏனென்று சொன்னால், நம்முடைய பிரதான எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே பேசுகின்றபோது, சபாநாயகருடைய மரபுகள், அவர்களுடைய பொறுப்பினுடைய மகத்துவம், அவர்களை மதிக்க வேண்டிய அவசியம், அவர்கள் பணி செய்ய வேண்டிய இடத்திலே எதிர்க்கட்சிகளுக்குக் காட்ட வேண்டிய அந்தப் பரிவு இவற்றைப்பற்றி எல்லாம் அவர்கள் இந்த அவையிலே நினைவுகூர்ந்தார்கள்.

முற்பகல் 11-35

எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. குறைந்தபட்சம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இப்போதாவது அந்தச் சிந்தனை வந்திருக்கிறதே என்பதிலே நான் உள்ளபடியே மகிழச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால் கடந்த காலங்களிலே நம்முடைய பேரவையினுடைய பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் பேசுகின்றபோது இந்தச் சட்டமன்றத்தைப்பற்றி மட்டுமே பேசுங்கள் என்று சொன்னார். அப்படிப் பேச முடியாது. ஏனென்று சொன்னால், இந்தச் சட்டமன்றம் ஒரு சாகாத வரலாற்றைத் தன்னடக்கி உள்ளது. சட்டமன்றம் கலைக்கப்பட்டால்கூட சபாநாயகர் பதவியிலே இருப்பார். ஏன் பதவியிலே இருக்கிறார் என்று சொன்னால், சட்டமன்றத்திற்குச் சாவு கிடையாது. சட்டமன்றம் ஜனநாயகப்படி வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய, எப்போதும் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டிய இயக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இந்தச் சட்டமன்றத்தினுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் இந்தச் சட்டப் பேரவைத் தலைவருடைய ஒவ்வொரு ஆணையும், உத்தரவும் இந்த அவையினுடைய நீண்ட நடவடிக்கையினுடைய ஒரு பகுதியாகி, எதிர்கால முன்னுதாரணத்திற்கு அடிக்கடி மேற்கோள் காட்டப்பட வேண்டிய மிகப் பெரிய வரலாற்றுத் தொகுப்பு.

நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே உரையாற்றுகின்றபோது, முன்னர் சட்டமன்றப் பேரவைத் தலைவர்களாக இருந்த மிகப்பெரிய மனிதர்களைப் பற்றியெல்லாம் அப்போது இந்த அவையிலே நினைவுகூர்ந்தார்கள். கிருஷ்ணாராவ்

அவர்களைப்பற்றி பேசினார்கள். அப்படிப்பட்ட சட்டமன்றத் தலைவர்களைப் பார்த்திருக்கிறது நம்முடைய ஜனநாயகம். இந்த நேரத்திலே சபாநாயகரைப்பற்றி பேச வேண்டிய அவசியம் ஏற்பட்ட காரணத்தினால் ஒரே ஒரு வரலாற்று நிகழ்வை இந்த இடத்திலே, நேரத்திலே நினைவுகூர்வது அவசியம் என்று எண்ணுகிறேன்.

சுதந்திரப் போராட்ட காலத்திலே இந்தியப் பாராளுமன்றத்தின் முதல் சபாநாயகராக தியாகி மௌலாங்கர் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். தியாகி மௌலாங்கர் அப்போது பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு ஆத்மார்த்தமான நண்பர். எந்த நேரமும் இணை பிரியாதவர்கள். நான் நினைத்துப் பார்ப்பேன். எப்படி அவர்கள் இருந்திருப்பார்கள் என்று. நம்முடைய முதலமைச்சரும், நம்முடைய அண்ணன் ஆற்காட்டார் அவர்களும் எப்படி ஒருசேர இருக்கிறார்களோ அதைப்போல சுதந்திரப் போராட்ட வரலாறு முழுவதும் அவர்கள் ஒன்றாக இருந்தவர்கள். சுதந்திரப் போராட்டம் முடிந்தது. தேர்தல் வந்தது. நாடாளுமன்றம் அமைந்தது. பண்டித நேரு அவர்கள் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள். மௌலாங்கர் சபாநாயகராக அமர்ந்தார். ஒருநாள் ஒரு சிறிய அவசரத்தின் காரணமாக பிரதமர் நேரு அவர்கள் மௌலாங்கருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். "Moulankar, will you come and meet me in my room?" என்னுடைய அறையில் வந்து என்னைச் சந்திக்கிறீர்களா? என்று ஒரு துண்டு அறிக்கையை அனுப்பி விட்டார். உடனே அப்போது சபாநாயகராக இருந்த மௌலாங்கர் என்ன பதில் எழுதினார் தெரியுமா? "The Speaker never goes to the office of the Prime Minister" சபாநாயகர், பிரதமருடைய அறைக்குப் போவதில்லை என்கின்ற கடிதத்தையும் அனுப்பிவிட்டார். அந்தக் கடிதத்தை பிரதமர் நேரு பார்த்த உடனே துடித்துப் போனார். சபாநாயகர் ஆசனத்திற்குத் தான் செய்த மிகப்பெரிய அவமரியாதை என்று எண்ணி பிரதமர் நேரு அவருடைய அலுவலகத்திற்கு ஓடுகின்றபோது, மௌலாங்கர் ஒரு கடிதம், 'என் தலைவர் ஜவஹர்லால் கூப்பிட்டு நான் போக முடியாத பதவி எனக்குத் தேவையில்லை. எனவே, இராஜினாமா செய்கிறேன்' என்று எழுதியிருந்தார். அப்படிப்பட்டவர்கள் சபாநாயகராக இருந்த ஆசனங்கள் இந்த அவையிலேயே கொச்சைப்படுத்தப்பட்டதற்கு நாங்கள் எல்லாம் சாட்சிகள். காலில் சாஷ்டாங்கமாக விழுந்து, இந்த அவையிலே முதலமைச்சருடைய காலிலே விழுந்த காட்சிகளை எல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டு இருந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



இதை எதற்கு நான் சொல்கிறேன் என்று சொன்னால், அருமைக்குரிய நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசினார்களே அந்தக் காட்சிக்காக நான் சொல்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம் வேண்டுமென்று சொன்னார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானமே எடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன், 10-வது சட்டமன்றத்திலே, 11-வது சட்டமன்றத்திலே, 12-வது சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இருந்தவர்களில் அநேகர், 13-வது சட்டமன்றத்திலே உறுப்பினர்களாக இங்கேயிருக்கிறோம். எத்தனை ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்பதற்கு எங்கேயும் போய் சாட்சியம் தேட வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய நூலகத்திலே இருக்கின்ற இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளே சாட்சி. எவ்வாறு இந்தச் சட்டமன்றம் நடத்தப்பட்டது? ஒரு நாள் நம்முடைய அருமைக்குரிய, என்னுடைய பெருமைக்குரிய நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொறடா அவர்கள் எத்தனைமுறை எழுந்து நின்றார். அத்தனை முறையும் அவருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. நான் ஒருமுறை எழுந்து நின்றேன். அதே சட்டமன்றத்திலே அன்று இருந்த சபாநாயகர் கேட்டார், பீட்டர் எந்த விதியின்கீழ் நிற்கின்றீர்கள் என்று கேட்டார். நான் சொன்னேன், என் தலைவிதியின்கீழ் நிற்கிறேன் என்று. (மேசையைத் தட்டும் ஒலி)

கூண்டோடு வெளியே அனுப்புவது மிகப் பெரிய ஜனநாயகப் பாவம் என்று சொல்கிறீர்களே, அந்த ஜனநாயகப் பாவத்திற்கு எத்தனைமுறை முன்னுரை எழுதி, முகவுரை எழுதி, விளக்க உரை எழுதிய வரலாறு யாருடைய வரலாறு என்று சொல்ல முடியுமா?

இந்த நாட்டிலே ஜனநாயகத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற வகையிலே எங்களுடைய குரல்வளை நெறிக்கப்பட்ட நேரத்திலே இங்கே அவையிலே இருக்கின்ற பலர், இங்கே இருக்கின்ற அருமைக்குரிய சகோதரர் ஞானசேகரன் அவர்கள், அருமை நண்பர் திரு. கே.ஆர். இராமசாமி அவர்கள், அண்ணன் சுதர்சனம் அவர்கள் நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இருக்கிறபொழுது உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தோம். இரவு நேரத்திலே, மாலை 6 மணிக்கு மேலே இந்த அவையினுடைய கதவுகளையெல்லாம் அடைத்துவைத்து, உள்ளேயிருக்கின்ற ஏர்கண்டிஷன் கருவிகளைக்கூட நிறுத்திவிட்டார்கள். அதுமட்டுமல்ல, எங்களில் சில தாய்மார்கள் இருந்தார்கள். அவர்கள் இயற்கை உபாதைகளைத் தீர்ப்பதற்கு முடியாமல் கழிவறைகளிலேகூட தண்ணீரை நிறுத்தி வைத்தார்கள். இங்கேயிருந்து கவர்னருக்குப்

பேசினோம். இங்கேயிருந்து ஜனாதிபதி மாளிகைக்குப் பேசினோம். பாராளுமன்ற சபாநாயகராக அன்றையதினம் இருந்த திரு. சிவராஜ் பாட்டீலுக்குப் பேசினோம். அதற்குப் பிறகு இரவு 11 மணிக்கு எங்களுக்கு இங்கே வெளிச்சம் போட அனுமதி கொடுத்தார்கள். இதெல்லாம் கடந்தகாலச் சரித்திரம்.

*முற்பகல் 11-40*

என்னருமை நண்பர்களுக்கு நான் ஒன்றைச் சொல்வேன். History repeats itself. (Interruptions) First time (Interruptions) and now second time. இதிலே கூச்சல் இடுவதற்கோ, குழப்பம் விளைவிப்பதற்கோ ஒன்றும் இல்லை.

இங்கேயிருக்கின்ற அருமைக்குரிய நம்முடைய கலைராஜன் இல்லம்மீது நடந்த தாக்குதலைப்பற்றிச் சொன்னார்கள். அந்தத் தாக்குதலை நாங்களும் கண்டிக்கிறோம். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினர் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், அவருடைய வீடு தாக்கப்படுகின்றபோது, அவருடைய பெற்றோர்கள் தாக்கப்படுகின்றபோது, அதற்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது; சபாநாயகருக்கு இருக்கிறது என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. அதைக் கொடுக்க வேண்டுமென்பதன் காரணமாகத்தான் அன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'அவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுப்பேன்' என்று சொன்னார்கள்.

நமது அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள் சொன்னதுபோல, நான் இதே சட்டமன்றத்திலே பேசிவிட்டு, ஊருக்குப் போய்விட்டு அதிகாலை 6-00 மணிக்கு சட்டமன்ற விடுதிக்குத் திரும்புகிறேன்; விடுதிக்குத் திரும்புகிற என்னை, பொழுது விடிந்தும் விடியாத நேரத்திலே, சட்டமன்ற உறுப்பினர் விடுதியினுடைய தலைவாயிலிலேயே என்னை மறித்து 5 பேர் உருட்டுக் கட்டையால் அடித்தார்களே, நான் புகார் கொடுத்தேன். சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இதே சட்டமன்றத்திலே வந்து நான் புகார் செய்தேனே, இதுவரை அது யார் என்று நடவடிக்கை எடுத்திருப்பீர்களா? 10 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

இன்று இதிலேயெல்லாம் எனக்கு என்ன மகிழ்ச்சியாக இருக்கிறது என்று சொன்னால், இப்படிப்பட்ட கஷ்டங்களை நீங்கள் இன்றாவது உணரக்கூடிய வாய்ப்பை இறைவன் உங்களுக்குத் தந்திருக்கிறானே



என்பதைக் கருதித்தான் நான் அதிகமாக இதைப்பற்றி பேசுகிறேன். ஏன் என்றால், இந்த வாய்ப்பு மீண்டும் வரும். (மேசையைத் தட்டும் ஒலி) இது அடுத்த முறையும் வரும். அப்படி வருகின்றபோது, இந்த அவையிலே எப்படி, நாமே ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இத்தனை நாட்கள், ஏறக்குறைய இரண்டு மாத காலத்தை சட்டமன்ற நடவடிக்கைகளிலே கழித்திருக்கிறோம். நான் கேட்கிறேன். இதைவிட, அதிகமாக சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது என்றாவது உண்டா (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர்கள் அவை நடவடிக்கைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டும். முதலமைச்சரைப் பார்த்து, முதலமைச்சர் அறையிலே சந்தித்து அல்லது சபாநாயகர் அறையிலே வைத்தே இந்தப் பிரச்சினையை நான் கிளப்புகிறேன், அதற்குப் பதில் தாருங்கள் என்று சொன்னவுடனே, 'கிளப்புங்கள் நான் பதில் சொல்கிறேன்' என்று சொல்கிற முதலமைச்சரையும், சட்டமன்ற நடவடிக்கையையும் நான் விவரம் தெரிந்த பிறகு இன்றுதான் பார்க்கிறேன் என்பதிலே (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு மாற்றுக் கருத்து இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் யோசித்து யோசித்துப் பார்த்தேன். இது இரண்டாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம். இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறபோதே அவர்களுக்குத் தெரியும், இந்தத் தீர்மானம் வெற்றி பெறாது என்று. பின்பு எதற்காகக் கொண்டுவந்தார்கள் என்பதற்கு நான் இரவு முழுவதும் யோசித்துப் பார்த்தேன். எனக்கு ஒரேயொரு காரணம்தான் புலப்பட்டது. கடந்த இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்காக நிகழ்ந்த பொன் விழாவிலே நம்முடைய. . (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** துணைத் தலைவர் அவர்களே, . . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Please, அமைதி.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நம்முடைய முதலமைச்சருக்கு நடந்த பொன்விழாவிலே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, சட்டமன்றம் இருந்து வாழ்த்தியது, நாடாளுமன்றம் வந்து வாழ்த்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இவர்களுக்கு வாழ்த்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதை எப்படி வாழ்த்த வேண்டுமென்று நினைத்தார்கள் என்று சொன்னால்—நம்முடைய அருமைக்குரிய சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவருக்கும், நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்கும்

மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் மீது மாறாத அன்பு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இப்படியொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்படுவதன்மூலம் முதலமைச்சர் அவர்கள்மீது இன்னும் நம்பிக்கை இருக்கிறது என்கிற செய்தியைச் சொல்வதற்காக (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அப்படி ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் இதை அந்த வகையிலேதான் எடுத்துக்கொள்கிறேன். அவையிலே வந்து பகிரங்கமாக வாழ்த்த முடியாதவர்கள் . . . (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே Point of order என்பதே இல்லை. இருந்தாலும் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். எங்களுக்குள்ளே சிண்டு முடிவதற்கு அவர் தயாராகிவிட்டார். உங்களோடு சிண்டு முடிந்துகொண்டால் பரவாயில்லை. எங்களோடு சிண்டு முடிவதற்காக அவர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்தை நாங்கள் மறுக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, right.

முற்பகல் 11-45

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஒரு கருத்தை இங்கே மறுத்து பதிவு செய்வது அவசியம் என்று நான் எண்ணுகிறேன். நம்முடைய பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் பேசுகின்றபோது சபாநாயகர் எல்லோரையும் ஒருமையிலே அழைத்து நீ, உட்கார், என்று சொன்னதாகச் சொன்னார். இந்த அவையிலே ஏறக்குறைய 234 உறுப்பினர்கள் இருக்கிறோம். அவர், என்றும், யாரையும் பார்த்து, நீ என்று ஒருமையில் அழைத்ததோ-(கூச்சல்-குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி, அமைதி.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இந்த அவையிலே இல்லை, அப்படி இருந்திருக்குமேயானால். . (கூச்சல்-குழப்பம்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அப்படி இருந்திருக்குமேயானால், இது அன்றைய தினமே கொண்டுவரப்பட்டிருக்கவேண்டும். அவர் என்று சொன்னாரோ, 'நீ உட்கார்' என்று. அவர் என்றாவது ஒருநாள் அப்படிச் சொல்லியிருப்பார் என்று சொன்னால், இந்தப் பிரதான எதிர்க்கட்சி அவர்களைப் பார்த்து அமைதியாக இருந்திருப்பார்கள் என்று யாரும் எதிர்பார்த்து இருக்க முடியாது. சட்டமன்றம் 40, 45 நாட்கள் நடக்கின்ற வரை ஒவ்வொரு நாளும் விவாதங்களிலே பங்குபெற்று, ஒவ்வொரு நாளும் கவன ஈர்ப்புத் தீர்மானங்களிலே பங்குபெற்று, ஒவ்வொரு நாளும் துணைக் கேள்விகளிலே பங்குபெற்று, ஒவ்வொரு நாளும் விவாதம் முடிகின்ற வரை அமைதியாக இருந்துவிட்டு, அவர்கள் பேசி முடித்தவுடனே விவகாரங்களைக் கிளப்பி வெளிநடப்புச் செய்வதுவரை இந்தச் சபை ஒவ்வொரு நாளும் சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறது. எனவேதான், சட்டப்பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லை என்று சொல்கின்ற அவர்களுடைய வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்க வாதம் அல்ல, அது ஜனநாயகத்தைக் கேலிக்கூத்து ஆக்குகின்ற முயற்சி, இந்தச் சட்டசபை நடவடிக்கைகளை கொச்சைப்படுத்துகிற முயற்சி; இன்னும் ஒருபடி அதிகமாகச் சொல்லப்போனால், பேரவைத் தலைவரையே மறைமுகமாக மிரட்டுவதற்கான தீர்மானம்தான் இந்தத் தீர்மானம் என்று நான் நினைக்கிறேன். எனவே, இந்தத் தீர்மானத்திலே காங்கிரஸ் கட்சிக்கு உடன்பாடு இல்லை. காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் முழுக்க முழுக்க இந்தப் பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், அவர்கள் பதவியிலே தொடரவேண்டும் என்று சொல்லி அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம் பேசுகிறீர்களா? திரு. பன்னீர்செல்வம். (கூச்சல்-குழப்பம்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறபோது ஒவ்வொரு கட்சிக்கும் ஒருவர் பேசினார் என்று சொன்னார்கள். அன்றைய நிலை வேறு. தனித்தன்மையோடு ஆட்சியில் இருந்த நிலை வேறு. இப்போது அவர்கள் ஆதரித்துக்கொண்டிருக்கிற ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரணத்தினாலேதான் இவர்கள் பேச வேண்டுமா? வாழ்த்திப் பேசுவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சி கொறடா அவர்கள், எங்களுடைய கட்சிக் கொறடா பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகின்றபோது, நீங்கள் ஆதரிக்கின்றீர்கள்; எப்படிப் பேச முடியும் என்ற வினாவை அவர் எழுப்புகிறார். அவர் கடந்த 5 ஆண்டு காலம் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக இல்லை. அதற்கு முன்னாலே இருந்தார். சட்டமன்றத்திலே 1991-1996 ஆம் ஆண்டுகளிலே நடைபெற்ற அந்த நிகழ்ச்சிகள் அவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும், அவர் இன்றைக்கு காலத்தின் கட்டாயத்தின் காரணமாக, பல்வேறு சூழ்நிலையின் காரணமாக, அவர் இப்படிப் பேசிக்கொண்டிருக்கிறார். ஆனால், நாங்கள் ஆதரிப்பது என்பது வேறு. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கருத்துச் சொல்வதற்கு உரிமையுண்டு என்று நம்முடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்த நிலையில், எங்கள் கட்சி சார்பாக நண்பர் பீட்டர் அல்போன்ஸ் சபாநாயகர்மீது நம்பிக்கை தெரிவித்து இங்கே உரையாற்றினார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க-வினுடைய துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களாலும், முன்னாள் அமைச்சரான திரு. ஜெயக்குமார் அவர்களாலும் கொண்டுவரப்பட்டு, கொறடா திரு. செங்கோட்டையன் அவர்களாலே வழிமொழியப் பட்டிருக்கிற பேரவைத் தலைவர்மீது நம்பிக்கை இல்லையென்ற தீர்மானத்தின்மீது பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்று ரீதியாக, சட்ட ரீதியாக, விதி மரபுகளின் ரீதியாகப் பார்த்தோம் என்று சொன்னால் வானளாவிய அதிகாரம் படைத்த பதவி இந்தப் பேரவைத் தலைவர் பதவி. இந்தப் பேரவையை நடத்துவதற்கு முழு அதிகாரம் உள்ளவர் பேரவைத் தலைவர் அவர்கள். அதனால் அப்படி இருக்கிற பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அ.தி.மு.க. சார்பிலே கொண்டுவந்திருக்கிறார்கள். ஒருவகையிலே, நான் எண்ணிப்பார்க்கிறேன். அ.தி.மு.க. உறுப்பினர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தப் பேரவையிலே, இந்தத் தீர்மானத்தை கொண்டுவந்திருப்பதாக கருதி எடுத்துக்கொள்ளலாமா என்று எண்ணிப் பார்க்கிறவேளையில்,



கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே இருந்த நிலையை எண்ணிப் பார்க்கிறபோது, இது முற்றிலும் வேறுபட்ட நிலை, மாறுபட்ட நிலை என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல. கடந்த ஆண்டு ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த ஆண்டு ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். எண்ணிப் பார்த்தால், இனி ஆண்டிக்கு ஒருமுறை, இரண்டுமுறை தொடர்ந்து கொண்டுவருவது வாடிக்கையாகிவிடுமோ என்ற எண்ணமும் நமக்கு வந்து கொண்டிருக்கிறது.

*முற்பகல் 11-50*

நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், இந்த 11 மாத காலங்களில் நடைபெற்ற நடைமுறைகளை நாம் பேச வேண்டும் என்று சொன்னார். அப்படிப் பேசவே முடியாது. கடந்த காலங்களிலே என்ன நடந்தது என்பதை நாம் ஒப்பிட்டுத்தான் பேச வேண்டும். நீங்கள் இருவரும் இங்கே இதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அமைச்சர் பெருமக்களாகப் பணியாற்றியவர்கள். நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். கடந்த காலங்களில் பேரவையிலே விவாதிப்பதற்கு ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எதிர்க்கட்சி வரிசையிலே நாங்கள் எல்லாம் கொடுப்போம். அப்படிக் கொடுக்கிற பிரச்சினை எடுத்துக் கொள்ளப்பட்டதா என்று சொன்னால், அறவே இல்லை. அதுகுறித்து விதி 110-ல் முழுமையாக முதலமைச்சர் அவர்களே வாசிப்பார்கள். ' மற்ற அமைச்சர்களுக்குக்கூட வாய்ப்புக் கிடையாது. மற்ற அமைச்சரின் துறைகளையெல்லாம் சேர்த்து எடுத்துக்கொண்டு, விதி 110-லே வாசிப்பார்கள். அப்போது பத்திரிகை நண்பர்கள், எங்களைப் போன்றவர்கள் எல்லாம் சொல்வது, 'இது விதி 110 அரசாங்கம்' என்று சொல்வார்கள். இதுதான் நியதி, கடந்த காலங்களிலே. அப்படியெல்லாம் இருந்த அந்த நிலையிலே பணியாற்றிவிட்டு, இப்பொழுது பேசுவதற்கு வாய்ப்பு இல்லை, ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சொல்வது எந்த வகையிலே நியாயம் என்பதை நீங்கள் அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பேரவைத் தலைவரைப் பற்றிச் சொன்னீர்கள். இந்த அவையிலே, பேரவைத் தலைவரைப் பார்த்து, நீங்கள் 'பேரவைத் தலைவர் ஒழிக, பேரவைத் தலைவர் சர்வாதிகாரி' என்று நின்று கொண்டு முழக்கமிடுகிறீர்கள், கூச்சலிடுகிறீர்கள். பேரவைத் தலைவர் அவர்களும்

தீர்மானத்தைக் கொண்டு வந்ததாக நான் கருதுகிறேன். கொண்டு வந்ததற்குக் காரணம் உண்டு. நம்முடைய எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்களும், துணைத் தலைவர் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். நாங்கள் 14 நாட்களுக்கு முன்பே இதை எழுதிக் கொடுத்துவிட்டோம் என்று சொன்னார்கள். கொடுத்தது உண்மை. எதற்காகக் கொடுத்தீர்கள்? 50 ஆண்டு பொன்விழா காணக்கூடிய முதலமைச்சர் அவர்கள் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொன்விழா மிகச் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு முழுவதும் பாராட்ட வேண்டும். இந்தியத் துணைக் கண்டம் பாராட்டுகிறது. அதிலே அ.தி.மு.க.-வினுடைய பாராட்டையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நீங்கள் வருவதற்கு மனம் இல்லை. உங்கள் கட்சியினுடைய நிலைப்பாடு, ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே, பொன்விழா சிறப்பாக நடைபெறும். நடைபெற்ற பிறகு அதற்கு ஏதாவது களங்கம் கற்பிக்க முடியுமா? அல்லது திசை திருப்ப முடியுமா? பத்திரிகையிலே வேறு விதமான செய்திகள் வருமா என்ற நோக்கத்தோடுதான் 14 நாட்களுக்கு முன்பே இந்தத் தீர்மானத்தைக் கொடுத்தீர்கள். விழா மிகச் சிறப்பாக நடந்தது. விழா நிறைவுற்ற பிறகு பத்திரிகையிலே செய்தி வர வேண்டும் என்ற நோக்கத்திற்காகக் கொடுக்கப்பட்ட தீர்மானமேயொழிய, இது பேரவைத் தலைவர்மீது கொடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) இது நம்பிக்கையில்லாத் தீர்மானம் அல்ல என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அ.தி.மு.க. நண்பர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட தீர்மானங்கள் தேவையில்லாத தீர்மானங்கள். உண்மை இருக்குமானால், நியாயம் இருக்குமானால், தீர்மானம் கொண்டு வருவதிலே பொருள் இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானம் தோல்வியுறும் என்று நினைத்துக்கொண்டுங்கூட கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட முன்னுதாரணத்தையும் மாமன்றத்திலே நீங்கள் முன்னுதாரணங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டாம், எடுத்து வர வேண்டாம் என்பதை எடுத்துச் சொல்லி, இந்தப் பேரவைத் தலைவர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள், அனைவரையும் அரவணைத்துப் பணியாற்றுகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எழுந்து நின்று சத்தம் போடுகிற உங்களுக்குப் பேசுவதற்கு அதிக வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அந்த வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொண்டு, இதைக் கொண்டு வருகிறீர்கள் என்ற ஆதங்கம் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்மானத்தின்மீது பேச



வாய்ப்பளித்த வகையில் பேரவைத் தலைவர் அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுகிறார்கள். அவர்கள் பணி தொடர்ந்து நீடிக்க வேண்டும். இந்தப் பேரவையிலே அ.தி.மு.க.-வினுடைய தீர்மானம் தோல்வியுறுவது உறுதி. தோல்விக்கு எதிராகப் பாட்டாளி மக்கள் கட்சி எதிர்கொள்ளும்; பேரவைத் தலைவருக்கு ஆதரவாக நிற்போம் என்ற வாக்குறுதியைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தை எதிர்த்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துகளைச் சொல்லி, அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம், திரு. ஜெயக்குமார் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கிற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்மீது நம்பிக்கையில்லை, அவரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்கிற இந்தத் தீர்மானத்தின்மீது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒன்றிரண்டு கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறோம்.

இங்கே தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றிய நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பல்வேறு விவரங்களை எடுத்துச் சொன்னார்கள். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் மறுக்கப்படுகின்றன; ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மறுக்கப்படுகின்றன; Zero Hour-லே பிரச்சினையைக் கிளப்புவதற்குக்கூட வாய்ப்பில்லை என்றெல்லாம் இங்கே பேரவைத் தலைவர் அவர்களின்மீது குற்றச்சாட்டுக்களை எடுத்துச் சொன்னார்கள். நான் அவரிடத்திலே கேட்க விரும்புவது, கடந்த 5 ஆண்டு காலங்களிலே அ.இ.அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, இந்த அவையிலே எவ்வளவு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன; எவ்வளவு கவன ஈர்ப்புகள் அனுமதிக்கப்பட்டன; Zero Hour எப்படியெல்லாம் பயன்படுத்தப்பட்டது; பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டதா, இல்லையா என்ற விவரங்களையும் பட்டியலிட்டு, அப்படியெல்லாம் நிறைய வாய்ப்பை, கடந்த ஆட்சிக் காலத்திலே பேரவைத் தலைவர் வழங்கினார்; ஆகவே இன்றைய பேரவைத் தலைவர் அந்த வாய்ப்பை வழங்கவில்லை என்று நீங்கள் சேர்த்துக் குறிப்பிட்டிருப்பீர்களேயானால், உண்மையிலேயே உங்களுடைய வாதத்திலே ஓர் அர்த்தம் இருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் கடந்த காலங்களில் அந்த வாய்ப்புகளையெல்லாம் வழங்காத நீங்கள், இப்போது அந்த

வாய்ப்புகளெல்லாம் வேண்டுமென்று கேட்பதுகூட, தார்மீகரீதியாக அந்த உரிமை உங்களுக்கு இருக்கிறதா என்பதைத் தயவுசெய்து நீங்களே பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

கடந்த ஆட்சிக் காலத்திலே நடந்த பல்வேறு செய்திகளைப் பற்றியெல்லாம் இங்கே நம்முடைய உறுப்பினர்கள் சொன்னார்கள். ஆகவே திரும்பவும் நான் அதற்குள்ளே சென்று நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. பேரவைத் தலைவர் அவர்களின்மீது கொண்டு வந்திருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது அ.இ.அ.தி.மு.க.வினாலே அரசியல் உள்நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட ஒரு தீர்மானமாகவே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. எனவே இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்கவில்லை. பேரவைத் தலைவர் அவர்களின்மீது முழுமையான நம்பிக்கையை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிக்க விரும்புகிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய 'சட்டமன்றத்தில் பொன்விழா' நிகழ்ச்சியையொட்டி மக்களவைத் தலைவர் அவர்கள் இதே அவையிலே வந்து உரையாற்றுகிறபோது, ஒரு சட்டமன்றம், நாடாளுமன்றம் எப்படி ஜனநாயக நெறிமுறைகளுக்கு உட்பட்டுச் செயலாற்ற வேண்டும் என்பதையும், மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய உறுப்பினர்கள் எப்படி ஒரு சபையிலே செயலாற்ற வேண்டும் என்பதையும் எடுத்துச்சொல்லி, அதற்கெல்லாம் ஒரு முன்னுதாரணமாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைச் சொல்லி, அவரை இங்கே வாழ்த்தி, பாராட்டுத் தெரிவித்தார்கள். ஆகவே இந்த நேரத்திலே அவர் குறிப்பிட்டதைத்தான் நானும் நினைவுபடுத்த விரும்புகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சட்டப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்படக்கூடிய சட்டப் பேரவை உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே சட்டமன்ற ஜனநாயக நெறிமுறைகளுக்கும், விதிமுறைகளுக்கும் உட்பட்டு, இந்தச் சபையிலே நடந்துகொள்ள வேண்டும்; எவ்வளவு ஆழமான, அழுத்தமான மாறுபட்ட கருத்துகளாக இருந்தாலுங்கூட, தங்களுடைய வாதப் பிரதிவாதங்களாலே அவற்றை வலுவாக எடுத்து வைத்து வாதிட வேண்டுமேயொழிய, அவற்றுக்கு மாறாகச் சட்டப் பேரவையிலே



கூச்சலிடுவது, கலகம் செய்வது, செருப்புகளைக் காட்டுவது போன்ற சட்டமன்ற நெறிமுறைகளுக்குப் புறம்பான காரியங்களில் ஈடுபடுவது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு செயலாக நாம் பார்க்க முடியாது. ஆகவே, அப்படிப்பட்ட போக்குகளைக் கைவிட்டு, இந்தச் சபையினுடைய நேரத்தை முறையாகவும், முழுமையாகவும் மக்களின் தேவைகளை எடுத்துச் சொல்கிற ஒரு மன்றமாக இந்தச் சபையை நடத்துவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தன்னுடைய இந்தப் பதவியைப் பயன்படுத்தி வருகிறார்கள். அது மேலும் பலப்பட வேண்டும் என்பதைத்தான் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புவது, சட்டமன்றத்திலே தங்களுடைய எதிர்ப்புகளை வெளிப்படுத்துவதற்கு வெளிநடப்பு செய்வது போன்ற, ஜனநாயகத்தில், சட்டமன்ற விதிகளில் அல்லது மரபுகளில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதிலே தவறில்லை. ஆனால் சட்டமன்ற மரபுகளுக்கு மாறாக, சட்டமன்ற நெறிமுறைகளுக்கு மாறாக, சட்டமன்றத்தைத் தவறாகப் பயன்படுத்த முயற்சிப்பது எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. ஆகவே அதுபோன்ற போக்குகள் எதிர்காலத்திலே கைவிடப்பட வேண்டும். அதுதான் ஒட்டுமொத்த இந்தச் சட்டமன்றத்தின்மீது மக்கள் மத்தியிலே ஒரு நற்பெயரை ஏற்படுத்தும். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எதிர்காலத்திலே நிகழ்வதற்கு நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுடைய செயல்பாடுகளை வெளிப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று காலையிலேகூட ஒரு பத்திரிகைச் செய்தியைப் பார்த்தேன்; நேற்றைய தொலைக்காட்சியிலும் வந்தது; எல்லோரும் அதைக் கவனித்திருப்பீர்கள். உத்திரப்பிரதேச மாநிலத்திலே ஒரு தேர்தல் ஏழு கட்டமாக நடைபெற்று முடிந்து, அங்கே பகுஜன் சமாஜ் கட்சியினுடைய தலைவர் மாயாவதி அவர்கள் முதலமைச்சராக நேற்றைக்குப் பதவியேற்றிருக்கிறார்கள். அந்தத் தேர்தல் களத்திலே கடுமையாக, எதிரும் புதிருமாக நின்று, தேர்தல் இயக்கங்களில் ஈடுபட்ட காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அதேபோல ஏற்கெனவே முதலமைச்சராக இருந்து, தற்போது பதவியிழந்து எதிர்க்கட்சியாக மாறியிருக்கிற முலாயம்சிங் யாதவ் போன்றவர்கள் எல்லாம் அந்தப் பதவியேற்பு விழாவிற்கு வந்து கலந்துகொண்ட காட்சியைப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் பார்த்தோம். நாட்டின் பல்வேறு மாநிலங்களிலே,

கேரளாவிலே கடந்தமுறை உம்மன்சாண்டி அவர்கள் முதலமைச்சரானபோது, அச்சுதானந்தன் அவர்கள் அங்கே சென்று வாழ்த்துகளைத் தெரிவிக்கிறார். அதேபோல ஒவ்வொரு மாநிலத்திலும் நடக்கிறது. டெல்லியிலேகூட நம்முடைய பெருமதிப்பிற்குரிய பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் பதவியேற்கிறபோது, எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற எல்.கே. அத்வானி அவர்கள் உட்பட எல்லோரும் வந்து வாழ்த்தினார்கள். ஆனால், அப்படிப்பட்ட ஒரு மரபு இன்றைக்குத் தமிழகத்திலே பின்பற்றப்படாமல் இருப்பது, உண்மையிலேயே தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து வேறுபட்டு நிற்கிறது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும். குறைந்தபட்ச அரசியல் நாகரிகத்தை நாம் பின்பற்ற வேண்டும். எதிர்காலத்திலே, மற்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கு மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக விளங்குகிற தமிழகம், இதுபோன்ற நடவடிக்கைகளில் அந்த அரசியல் நாகரிகத்தை இங்கேயும் பின்பற்றுவது என்பது ஒட்டுமொத்தத் தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கிற ஒரு நிகழ்வாக அமையும் என்ற முறையிலே நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அதைச் சம்பந்தப்பட்டவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று பணிவோடு இந்த நேரத்திலே கேட்டு, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறையிலே, ஒவ்வொரு பாணியிலே பிரச்சினைகளைச் சொல்லக்கூடியவர்கள். ஆகவே சில பேர் ... *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில், அ.தி.மு.க.வினுடைய தலைவர் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராகப் பதவியேற்றிருந்த அந்த நேரத்தில்—போவதில்லை என்ற மரபு பின்னால்தான் வந்தது—அந்த நிகழ்ச்சிக்கு நானும், திரு. ஸ்டாலின் அவர்களும், இருவரும் சேர்ந்து, அந்தப் பதவியேற்பை நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்று காட்டும் முறையில் நாங்கள் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. கோவிந்தசாமி:** நன்றி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1967-க்கு முன்புவரையில் தமிழகத்திலே அந்த மரபு பாதுகாக்கப்பட்டு வந்தது. அதுவும், சொல்லப்போனால்,



1972-க்குப் பிறகு தமிழகத்திலே அ.இ.அ.தி.மு.க. உருவான பிறகு, இப்போது அந்த மரபு கடைப்பிடிக்கப்படாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன். அந்த வகையிலே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருவேளை உறுப்பினர் அவர்கள் சொல்கிற காலகட்டம் தவறாக இருக்கலாம். எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுகூட பெருமளவிற்குச் சட்டமன்ற மரபுகள் தொடர்ந்து காப்பாற்றப்பட்டன. அதற்குப் பின்னர்தான் தமிழ்நாட்டுக்கு ஒரு சாபக்கேடு ஏற்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. கோவிந்தசாமி:** அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப் போல, அந்த காலகட்டத்தை மாற்றிக்கொள்ளலாம். ஆகவே இப்போது அந்த நிலைமை தொடர்ந்துகொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் கவனப்படுத்த விரும்புகிறேன். நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொருவரும் ஒரு பிரச்சினையை எடுத்துச் சொல்கிறபோது, அவரவர்களுக்கு இருக்கிற பாணி, நடைமுறை, பழக்க வழக்கங்களிலே சிலர் அதை நயமாகச் சொல்வார்கள்; சிலர் நெளிவு சுளிவாகச் சொல்வார்கள்; சிலர் கொஞ்சம் rough-ஆகக்கூடச் சொல்லலாம். ஆனால், அதில் சொல்லப்படுகிற வார்த்தை தவறானதா என்று பார்த்தால், அப்படியில்லை என்பதைத்தான் நான் பார்க்க விரும்புகிறேன். சில நேரத்தில் வேகமாக, கோபமாக அவர் இங்கே நடைபெறுகிற நிகழ்ச்சிகளைப் பார்த்து, ஆத்திரத்தோடு, கோபத்தோடுகூடப் பேசலாம். ஆனால், நான் அறிந்தவரை, இந்தச் சபை மரபுகளுக்கு முரணான வார்த்தைகளை இந்தச் சபையிலே அவர் பயன்படுத்தியிருக்கிறார் என்று நாங்கள் இந்தச் சபையில் இடம் பெற்றிருக்கிற நேரத்திலே பார்க்கவில்லை. ஆகவே, அ.இ.தி.மு.க. சார்பில் இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமும், அவர் பதவி விலக வேண்டுமென்று முன் வைத்திருக்கக்கூடிய காரணங்களும், உண்மையிலேயே அவருக்கு எந்த வகையிலும் பொருத்தமற்ற காரணங்களைத்தான் சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முழுக்க

அரசியல் காரணங்களால் மட்டுமே இது முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி அந்தத் தீர்மானத்தை நிராகரிக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களின்மீது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களும் முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதை இங்கே தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூப்பிடுகிறேன். அவர்பேசி முடித்தவுடன் கூப்பிட்டுவிடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** சட்டப் பேரவைத் தலைவர்மீது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, முடித்தபிறகு நான் கூப்பிடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பல்வேறு கருத்துகளை இங்கே பேசினார்கள். குறிப்பாக, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கூப்பிடுகிறேன். பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த அவையிலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்குச் சில மரபுகள் இருக்கின்றன. ஆனால் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்போலவே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் வாராவாரம் கொண்டுவருகின்ற அந்த நடைமுறையைப் பின்பற்றுவது அ.தி.மு.க.வின் சார்பிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, சென்றமுறை கொண்டுவரப்பட்டபோது இங்கே பல்வேறு கருத்துகள் பேசப்பட்டன. இப்போது கொண்டுவர வேண்டிய அவசியம் ஏன் என்பதுபற்றி எனக்கு முன்பு பேசிய தலைவர்கள் இங்கு குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பாக, இந்த அவையினுடைய சிறப்பு என்ற



முறையிலே இப்போது நடைபெறுகிற இந்த பதின்மூன்றாவது சட்டமன்றம் என்ற முறையிலே பார்க்கிறபோது, சிறப்பிற்குரிய பல்வேறு நிகழ்ச்சிகள் இங்கே நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, 50 ஆண்டுகாலம் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுவதற்கான அந்த வாய்ப்பினைப் பெற்றிருக்கிற சட்டமன்றம் இது. அதற்குத் தலைமையேற்று அந்த விழாவை நடத்துவதற்குரிய வாய்ப்பினைப் பெற்றிருக்கிற நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு, அந்தச் சிறப்பு வந்துவிட்டது என்ற காரணத்தினாலோ, என்னவோ, அதைப் பொறுத்துக்கொள்ள இயலாத காரணத்தினாலே, அதற்குத் திட்டமிடப்பட்டு, விழா நடைபெறுவதற்குரிய அறிவிப்புகளும், குழுவும் அறிவிக்கப்பட்டதற்குப் பின்னாலேதான், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அ.தி.மு.க. சார்பிலே இங்கே அளித்தார்கள். இது மறுக்கமுடியாத ஒன்று. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே பேசுகிறபோது,—நல்லவேளையாக இன்றையதினம் அவருடைய தலைமைக்குக் கட்டுப்பட்டு, விருப்பத்திற்கேற்ப, ஒன்றுவிடாமல், வரி பிசகாமல் அநேகமாகப் படித்துவிட்டார்; சொல்லிவிட்டார் என்றுதான் நான் கருதுகிறேன். அவர் அதிலே சொல்கிறபோது, எல்லோரையும் ஒரு குத்து குத்த வேண்டும் என்பதற்காக அதைக் குறிப்பிட்டே சொன்னார். அவர் சொல்கிறபோது, என்னைப்பற்றியும் இங்கே குறிப்பிட்டுப் பேசினார். மாண்புமிகு முதல்வர் அவர்களே குறிப்பிட்டுச் சொன்னார்கள். நான் எழுந்து பேச ஆரம்பித்தால், அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும், 60 பேர்களும் எழுந்து பேசுகிறார்கள். அதுகூட ஒருவகையிலே சிறப்புக்குரியதுதான். நான் சொல்வது என்பது, 60 பேர்களும் பேசுவது என்பது இங்கே பதிவிலே இல்லை. ஆனால், அவர்களுடைய செயல்பாடுகளும், பேசுகிற அந்த வார்த்தைகளும், இருக்கின்றனவே, அவற்றை, அவைக் குறிப்பிலே ஏற்ற முடியாது; இந்த நாட்டில் யார் ஒருவரும் காது கொடுத்துக் கேட்கமுடியாத வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். (குறுக்கீடுகள்) அதுதான் அரசியல் நாகரிகமாக இருக்கிறது. அதுவும் துணைத் தலைவருக்கும் தெரிந்தே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதால், எங்களுக்கொன்றும் பிரச்சினையில்லை. ஆனால், என்னைப் பொறுத்தவரையிலும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்ற முறையில் நான் சொல்வது, 60 பேர்களும் எழுந்து கூச்சல் போடுவதால், 6 போராக இருக்கிற எங்களை நீங்கள் மிரட்டி விடமுடியாது என்பதையும் நான் இந்தச் சபையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-10

நான் பேசுகிற விஷயத்திலே உங்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்குமானால், யார் வேண்டுமானாலும் எழுந்து பேசலாம். நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். யார் வேண்டுமானாலும் பேசலாம்; அதில் குற்றம் காணலாம்; குறை காணலாம்; தடுத்துப் பேசலாம். அதற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஆனால், ஒட்டுமொத்தமாகக் கூச்சல் போட்டு, அதுவும் இந்த அவையிலே பதிவு பெறாத செய்திகளை நீங்கள் பேசிக்கொண்டிருப்பது என்பது, அது இந்த நாட்டிலே யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை நான் பதிவு செய்வதற்காகச் சொல்கிறேன்.

"விருப்பு வெறுப்பில்லாமல் செயல்பட வேண்டும்; சர்வாதிகாரப் போக்குடன் செயல்படுகிறார்; ஆளுங்கட்சிக்குச் சாதகமாக அவைத் தலைவர் செயல்படுகிறார்" என்று இங்கே பல்வேறு குறிப்புகளைச் சொன்னார்கள். இதில் யாரைப்பற்றிச் சொல்கிறீர்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விஷயங்களிலே எல்லாம் யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறீர்கள்? சரி, சென்றமுறை சொல்ல முடியவில்லை என்பதற்காக, இப்போது வந்து நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களா, என்ன என்பதே புரியவில்லை. இதையெல்லாம் சென்றமுறை அனுபவித்தவர்கள்; நானும் இந்த அவையில் இருந்திருக்கிறேன் என்ற காரணத்தினாலே சொல்கிறேன். சர்வாதிகாரப் போக்கோடு செயல்படுகிறார் என்ற அந்தச் சொல்லுக்குப் பொருத்தமாக இருந்தவர், சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த அந்தப் பேரவைத் தலைவர்தானேதவிர, இப்போது இருக்கிறவர் அல்ல. (குறுக்கீடு) இப்போது இருக்கிற நம்முடைய சபாநாயகர் அவர்கள், என்னைப் பொறுத்தவரையில் சொல்வதென்றால், ரொம்ப வெகுளித்தனமானவர்; வெளிப்படையானவர். இந்தமாதிரியான சூதுவாதுகளுக்கெல்லாம் சம்பந்தமில்லாதவர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இருங்கள். Mr. Panneerselvam.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் எங்களுடைய கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், சர்வாதிகாரமாக நடந்தார் என்று பொத்தாம் பொதுவாகச் சொன்னார். எந்த உதாரணத்தை அவர் இங்கே சொல்ல விழைகிறார் என்பதைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால், அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடுகள்)



**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்ன செய்தார் என்று கேட்கிறார். இந்தச் சபையிலே நடந்த, (குறுக்கீடு) சொல்கிறேன். இந்தச் சபையிலே உறுப்பினராகச் செயல்பட்ட மாண்புமிகு உறுப்பினர், திரு. பரிதி இளம்வழுதி அவர்கள்மீது, ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, அந்தப் பிரச்சினையைப்பற்றி இங்கே பேசி, இந்த அவையிலேயே அவர்மீது வழக்குப் பதிவு செய்வதற்கான முயற்சிகளை எடுத்து, இந்த அவையினுடைய கதவுகளையெல்லாம் சாத்திவிட்டு, அவரை இந்த அவையிலேயே கைது செய்வதற்குரிய உத்தரவைப் போட்டவர்தான் கடந்தகால சபாநாயகர். அதைவிட ஒரு சர்வாதிகாரத் தன்மைக்கு உங்களுக்குச் சாட்சி வேண்டுமா? (மேசையைத் தட்டும் ஒலி) (மணியடிக்கப்பெற்றது) அப்படியென்ன குற்றத்தை திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இழைத்தார்கள்? அது இங்கே நடந்ததா, இல்லையா? (குறுக்கீடு) அதில் ஒரு சர்வாதிகாரப் போக்கோடு, அவர் வாயாலே சொன்னாரா இல்லையா? அவர் விருப்பப்பட்டாரா, இல்லையா என்பதைவிட, கட்டளையையேற்றுச் செயல்படுத்தி, சர்வாதிகாரமாக இந்த அவையிலே நடந்துகொண்டார் என்பதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், திரு. ஆர். சாமி, ஏதோ சொல்கிறார்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கேயிருக்கின்ற அமைச்சர் அவர்களை, கடந்த ஆட்சியிலே கைது செய்ததாக இங்கே ஆயிரம் கோடி அண்ணன் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள் பேசினார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை அவரும் இங்கே கண்ணாறப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரும் எழுந்து முன்மொழிந்தார். இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சிகள், காங்கிரஸ் கட்சியிலிருந்து, பாட்டாளி மக்கள் கட்சியிலிருந்து, கம்யூனிஸ்ட் கட்சி முதற்கொண்டு முன்மொழிந்தது. அவர் அமர்ந்திருந்த இருக்கை அந்தப் பகுதி. அங்கிருந்து ஓடிவந்து, இங்கேயிருந்த திரு. குமாரதாஸ் என்பவரை, செருப்பைக் காட்டி, 'உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்' என்று சொன்னது சட்டசபையிலே இருந்த அனைவருக்கும் தெரியும். ஆகையால்தான், அவர்மீது வழக்குப் பதிவு செய்து, அவர் கைது செய்யப்பட்டார் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சாமி அவர்கள் தவறான தகவலை இங்கே பதிவு செய்து கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி. . .

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Sir, தீர்மானத்தையொட்டிப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தன்னுடைய நோக்கத்திற்கு, அன்று நடந்த சம்பவத்தை மாற்றிச் சொல்லுகிறார். அன்றைக்கு இருந்த மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்கள், எங்களுடைய தலைவரைப்பற்றி ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டுப் பேசியதால் அவருக்கும் எனக்கும் வாக்குவாதம் வந்தது. அவரும் கையைக் காட்டிப் பேசினார்; நானும் கையை நீட்டிப் பேசினேன். ஆனால், தீர்ப்பு என்பது என் ஒருவன்மீது மட்டும்தான் வந்தது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் மரியாதைக்குரிய அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களைக் குறிப்பிட்டு, ஒரு உதாரணத்திற்காகச் சொன்னேன். பரிதி அவர்கள் அமர்ந்திருந்த இடம் என்பது அந்த இடம், அந்தக் கடைசி. குமாரதாஸ் என்பவர் இங்கே, நான் உட்கார்ந்திருக்கிற இடத்திற்குப் பக்கத்திலே இருந்தவர். இவருக்கும், அவருக்கும் எந்தத் தொடர்பும் இருக்க முடியாது. ஆனால், ஒருவரையொருவர் பார்த்துப் பேசிக்கொண்டார்கள் என்பது உண்மைதான். ஆனால், ஒருவர்மீது மட்டும்தான் அதில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்போது குறிப்பாக, இன்னொரு (குறுக்கீடுகள்) பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கொஞ்சம் பேசுவதற்கு இடையூறு இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) உங்களைப்பற்றியே பேசக்கூடாதென்றால் நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானமே கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொடர்ந்து பேசுங்கள்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எப்படியிருக்கிறது என்று சொன்னால் நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்வதற்காகச் சொல்லுகிறேன். அவர் நடுநிலையாகவும், யதார்த்தமாகவும், சரியாகவும்தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட வாய்ப்பை எதிர்க்கட்சிகளுக்குத் தொடர்ந்து அளித்துக்கொண்டே இருக்கிறார் என்பதுதான் உண்மை. ஆனால், ஓர் உள்நோக்கத்தைக் கற்பித்து, இங்கே கொண்டுவருவதற்குரிய முயற்சியை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். சென்ற ஆட்சிக் காலத்தில் நடந்ததை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். எனக்கே அந்தச் சம்பவம் நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற திரு. பழனிசாமி அவர்களுக்கு நடைபெற்றது. இங்கே ஆட்சி அதிகாரத்திலே இருக்கிறபொழுது செயல்பாடுகளைக் குறிப்பிட்டுச், சுட்டிக்காட்டி, குறைகளை, தவறுகளைச் சொன்னோம் என்ற காரணத்தினாலே அப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டோம். அப்படித்தான் இங்கே நடந்தது.

நான், தற்கொலை செய்துகொண்ட ஒரு விவசாயியினுடைய கடிதத்தை வைத்திருந்தது குற்றமா? அந்தக் கடிதத்தை முதலமைச்சருக்கு அனுப்பியது ஒரு குற்றமா? அதன்மீது நடவடிக்கை எடுத்து, காவல் துறையை ஏவி, நள்ளிரவிலே வந்து அவர்கள் கைது செய்ய வந்தார்கள் என்றுதான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். இல்லையென்று மறுக்க முடியுமா? இதையெல்லாம் சபாநாயகரிடத்திலே நான் வைத்துப் பேசுகிறபொழுது பேச அனுமதி மறுத்தார்கள் என்பதுதான் உண்மை. ஆகவேதான் நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். இந்த அவையினுடைய கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சியை நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் சிறப்பாகவே எடுத்திருக்கிறார் என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு கருத்துகளை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். சிவபுண்ணியம் என்பதற்கு விளக்கம் எல்லாம் சொல்லிவிட்டார்கள். சிவபுண்ணியம் என்பதற்கு விளக்கத்தைச் சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்களே அதன்மீது வருத்தமாகவே செய்திகளைச் சொன்னார்கள். பெயரையே 'பாவம்' என்று மாற்றி வைக்க வேண்டுமா? பேசுகின்ற காரணத்தினாலே மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்களும் நல்ல

பெயரைத்தான் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். "பன்னீர்செல்வம்" என்று பெயரை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அது வேண்டுமா; அது மணக்க வேண்டும். அதை நல்லதுக்குத் தெளிக்க வேண்டும். ஆனால், அது வேறுவிதமாக வாடை அடிப்பதற்கான வாய்ப்பை நீங்கள் ஏன் ஏற்படுத்துகிறீர்கள் என்பதுதான் எனக்கு வருத்தமான செய்தி. நான் அப்படி உங்களை எதிர்பார்க்கவில்லை. ஆனால், உங்கள் வாயிலாக அந்தச் செய்தி வருகிறபொழுது நான் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறேன். ஆகவே, அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையிலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது ஓர் உள்நோக்கத்தின் அடிப்படையிலே, நாட்டிலே நடைபெறுகிற நல்ல காரியங்களைத் திசைதிருப்புவதற்குரிய ஒரு முயற்சியாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே, இது ஒரு தேவையில்லாத நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அழுத்தமான கருத்து. ஆகவே, இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. செல்வம், ஒரு நிமிஷம் உட்காருங்கள், அவர் ம.தி.மு.க. சார்பில் பேச வேண்டும். *(குறுக்கீடு)* You raised Point of order on so many occasions. திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பேரவைத் தலைவர் அவர்கள்மீது கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டிலும், இந்தத் தீர்மானம் வெற்றிபெற வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதன்மூலம் இந்தச் சட்டமன்றத்தில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டுமென்று நாங்கள் நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி இல்லையென்றாலுங்கூட, இந்தத் தீர்மானத்தின்மீதான விவாதத்தின்மூலம் நல்ல பல கருத்துகள், ஜனநாயக உணர்வுகள், ஒரு நல்ல சபாநாயகர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற விளக்கங்களெல்லாம் இங்கே விவாதிக்கப்பட்டு, அதன்மூலம் எதிர்காலத்திலாவது ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வு ஏற்படுமே, அதுவே எங்களுடைய இந்த நம்பிக்கையில்லாத்



தீர்மானத்திற்குக் கிடைக்கின்ற வெற்றி என்று நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால், 1978 ஜனவரியில் இங்கே ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் இந்த மன்றத்திலே கொண்டுவரப்பட்டு, அன்றைய தினம் நம்முடைய அவை முன்னவர், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவது சிலபல கருத்துகளை வலியுறுத்துகிற, எடுத்துக்காட்டுகிற வாய்ப்பாக அது பயன்படுகிறது. இது அவசியமா என்று இங்கே கேட்கப்பட்டது. சொல்லப்பட்ட காரணங்களை ஆளுங்கட்சி மறுக்கலாம். ஆனால் அதைக் கொண்டுவரலாமா என்று கேட்பது தவறு என்று குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, தவறுகளை விளக்குவதற்காக ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோமே தவிர, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்தது பாவம் என்று யாரும் கருத முடியாது" என்று அன்றைய தினம் நம்முடைய அவை முன்னவர், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இந்தச் சபையிலே இந்தச் செய்தியைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-20*

மாண்புமிகு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களும், அதேபோல மற்றவர்கள் எல்லாம் கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியில் நடந்தவற்றையெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அது இங்கே விவாதிக்கப்பட்டது 1978-ல் நடந்த அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தில்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சியில் இப்படியெல்லாம் நடக்கவில்லையா என்று அப்போது உறுப்பினர்கள் அவரைப் பார்த்துக் கேட்டபோது, அவர் இங்கே பதில் சொல்லியிருக்கிறார். 'உங்களது ஆட்சியில் நடைபெறவில்லையா என்று கேட்பது இந்த ஆட்சியில் நடைபெறும் தவறுகளுக்குச் சமாதானமாக ஆகிவிடாது என்று குறிப்பிட விரும்புகிறேன். நான் எடுத்துவைத்த குற்றச்சாட்டுகளை மறுப்பதற்குப் பதில், முன்பு இவற்றையெல்லாம் நீங்களே செய்யவில்லையா என்று கேட்பது நீங்களே தொடர்ந்து ஆட்சியில் இருந்திருக்கலாம்; அவர்கள் எதற்காக வரவேண்டுமென்ற கேள்வி நடுநிலையாளர்கள் உள்ளத்திலே எழும். ஏற்கெனவே இருந்த ஆட்சி தவறு செய்திருந்தால், அதே தவறைச் செய்ய இந்த ஆட்சி தேவையா என்ற எண்ணம் நாட்டு மக்களிடம்

ஏற்படக்கூடும்' என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

அதேபோல இந்த 'அவையிலே சபாநாயகரைப் பொறுத்தமட்டிலும் அவர் ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய பிறகு மீண்டும் இதே பதவிக்குப் போட்டியிட்டால், அவரை எதிர்த்து யாரும் போட்டியிடக்கூடாது, போட்டியிடுவதில்லை என்ற மரபு, ஒரு நியதி, ஒரு காலத்தில் இருந்தது. அதைத்தான் சபாநாயகரைப்பற்றி அழகாகச் சொல்வார்கள்: "How can the Speaker be removed? The Speaker can be removed by resignation which he sends to Deputy Speaker or when he retires or retires from the world" என்று அழகாகச் சொல்வார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஒரு காலத்தில் இருந்தது. பிறகு படிப்படியாக அந்த நிலைமை மாறி இதுபோன்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் அடிக்கடி கொண்டுவரப்படக்கூடிய அவசியம், ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதுபோய் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கக்கூடிய ஒரு நிலைமைக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்ட நம்முடைய சபாநாயகரைப் போன்றவர்களால்தான் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

அதேபோல நல்லமுறையிலே, நடுநிலை வகித்து சரியான முறையிலே அவையை நடத்திச் செல்ல வேண்டிய ஒருவர், தொடர்ந்து பல தவறுகளைச் செய்து வந்திருக்கக்கூடிய ஒரு நிலையில், அந்தக் காரணத்தினால்தான் இந்தமாதிரி நம்பிக்கையில்லாத் தீர்மானம் இங்கே கொண்டுவரப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்துதான் எங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரு நிலைமை இப்போது சபையிலே இருக்கிறது. நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டிய சபாநாயகர், கட்சி சார்பில்லாதவராக இருந்து எதிர்க்கட்சிகளுக்கு நியாயமான உரிமைகளைக் கொடுக்க மறுத்த காரணத்தினால், அவர் இந்தப் பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர் என்ற அடிப்படையில்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

'Cabinet Government' என்ற ஒரு நூலில் Ivar Jennings என்பவர் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். "The Opposition is at once an alternative to the Government and a focus for the discontent of the people. Its function is almost as important as that of the Government. If there be no opposition, there is no democracy" என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்கள்



எதிர்க்கட்சியைப்பற்றி. எதிர்க்கட்சிகள் என்பது, அரசாங்கத்திற்கு உடனடியான மாற்று என்பது மட்டுமல்ல; மக்களுடைய அதிருப்தியை ஒன்று சேர்த்துத் தெரிவிக்கும் மையமாகும். மக்களுக்கு அரசாங்கத்தின் பணி எவ்வளவு முக்கியமோ, அதேபோன்றுதான் எதிர்க்கட்சிகளும், எதிர்க்கட்சிகளின் பணிகளும். எதிர்க்கட்சிகள் இல்லாவிட்டால் இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லை என்றும் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

*பிற்பகல் 12-25*

என்னென்ன காரணங்களால் சபாநாயகர் அவர்கள் நடுநிலை தவறியிருக்கிறார்கள் என்பதையும், அதேபோல, எந்தவகையிலே இந்தச் சபாநாயகர் பதவிக்கு அவர் தகுதியில்லை என்பதையும் இங்கே குறிப்பிட்டுச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"**

என்றார் வள்ளுவப் பெருமகனார். அப்படி நடந்துகொள்ள வேண்டிய சபாநாயகர் அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களை, குறிப்பாக எங்களைப் போன்றவர்களைப் பார்க்கின்றபோது, வேண்டா வெறுப்பாக, அலட்சியமாக, அவமரியாதைப்படுத்துகின்றவிதமாகப் பார்ப்பதும், பேசுவதும், நடந்துகொள்வதும் ஒரு சபாநாயகருக்குப் பண்பாக அமைய முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, 1957-ல் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே நுழைந்தபோது, அப்போது சபாநாயகராக இருந்த டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்களைப் பார்த்து, "நாங்கள் எதிர்க்கட்சியிலே இருக்கிறோம்; சின்னஞ்சிறிய கட்சியாக இருக்கிறோம். தாங்கள் மருத்துவத் துறையிலே வல்லவர். இளைத்தவர்களுக்கு நீங்கள்தான் தக்க மருந்தைத் தர வேண்டும்" என்றார். அந்த அண்ணாவின் வழியைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்கின்ற நம்முடைய சபாநாயகர் அவர்கள், சட்டமன்றத்திலே எண்ணிக்கையிலே இளைத்தவர்களாக இருக்கும் எங்களைப் போன்றவர்களை மதிக்காவிட்டாலுங்கூட, அலட்சியப்படுத்தாமல் இருந்திருக்கக்கூடாதா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆறு சட்டமன்ற உறுப்பினர்களை நாங்கள் பெற்றிருக்கிறோம். சட்டமன்ற நடவடிக்கைகளில் எங்களுக்கு உரிய வாய்ப்புத் தரப்பட்டதா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

நாங்கள் ஆளுங்கட்சியோடு, எண்ணிக்கையில் அதிக உறுப்பினர்களைப் பெற்றுள்ள மற்ற கட்சிகளோடு போட்டி போட்டுக் கருத்துச் சொல்ல எங்களுக்குச் சம வாய்ப்பைக் கொடுக்கவில்லை என்றாலுங்கூட, அந்தப் பெருந்தன்மை சபாநாயகருக்கு இல்லாவிட்டாலுங்கூட, எங்கள் உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப எங்களுக்கு ஏன் நேரம் ஒதுக்கித் தரப்படவில்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க விரும்புகிறேன். எங்களை அலட்சியப்படுத்தினார் என்றுதான் குறிப்பிட்டேன்.

கேள்வி நேரத்தின்போது, எங்கள் இயக்கத்தின்மீதும், எங்கள் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள்மீதும் மற்ற கட்சியினரெல்லாம், குற்றச்சாட்டுக்களைக் கூறிப் பேசுகின்றபோது, அவற்றை மறுத்துப் பேசுவது மிகவும் அவசியம் என்று நாங்கள் கருதுகின்ற நேரத்தில், நாங்கள் வாய்ப்புக் கேட்டால், பல நேரங்களில், பல சந்தர்ப்பங்களில் எங்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில், நானும் அறிவிப்புக் கொடுத்திருந்தேன். அந்தத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றாலுங்கூட– என்னுடைய தீர்மானத்தையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காலையில் பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்து நான் கேட்டேன். "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது; அதன்மீது நீங்களும் பேசலாம்" என்ற ஓர் உறுதியைக் காலையில் எனக்குத் தந்தார்கள். எனவே, அந்த அடிப்படையில் பேசிக்கொண்டிருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிடங்களை நீங்கள் எனக்கு ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுவரை 10 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. வீர. இளவரசன்:** குறிப்பாக, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, சில கவன ஈர்ப்பு அறிவிப்புகளை இங்கே நான் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்தேன். 24-4-2007 அன்று கொடுத்திருந்த ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பில், எங்கள் தொகுதியில் ரிங் ரோடில் ஏற்பட்ட விபத்தில் 4 பேர் இறந்தும், 45 பேர் படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலை குறித்தும் விவாதிப்பதற்காக அனுமதி கேட்டிருந்தேன். அதேபோல, 27-4-2007 அன்று தீர்மானமொன்று கொடுத்திருந்தேன். 7-5-2007 அன்று மூன்று கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருந்தேன். அதேபோல், மிக முக்கியமானதொரு தீர்மானம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவிகித இடஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்யாமல், ஒதுக்கீடு செய்யாமல் அறிவிப்பு செய்தித்தாளில் வந்துள்ள நிலை குறித்து விவாதிக்க ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்திருந்தேன். ஆனால், எந்தத் தீர்மானமும் இதுவரையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதேபோல, 23-4-2007 அன்று, திருவாரூர், முத்துப்பேட்டையில் பெரியார் சிலை உடைப்பு குறித்தும், மத்திய அரசு, ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஆயுதங்களையும், தளவாடச் சாமான்களையும் சிங்கள அரசுக்கு அனுப்பப்போவதாக வந்த செய்தி குறித்தும் விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு, இங்கே பேசப்பட்டது. தீர்மானங்களைக் கொடுக்காத மற்ற கட்சிக்காரர்களுக்கெல்லாம் இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்தப் பெரியார் சிலையைத் திறந்து வைத்ததே எங்கள் பொதுச் செயலாளர் அண்ணன் வைகோ அவர்கள். அப்படிப்பட்ட எங்கள் கட்சிக்கே, நான் கேட்டும் அந்த வாய்ப்பை அவர்கள் கொடுக்கவில்லை என்று நான் இங்கே குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

அதேபோல, எங்கள் அமைப்புச் செயலாளர் சீமா பஷீர் மீது இந்த அரசு ** என்று நான் பேசியபோது, அது நீதிமன்றத்தில் இருக்கிறது என்று சொல்லி, என்னுடைய பேச்சிற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

பிற்பகல் 12-30

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட வழக்கில் அல்லது குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டு, நடவடிக்கையிலே இருக்கிறபோது, இந்த அவையில் அது ** என்று பதிவு செய்வதை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் பாராளுமன்ற நடைமுறைப்படி உங்களுடைய Call Attention Motion எடுத்துக்கொள்ளவில்லையென்றால்கூட, யாராவது எழுப்பும்போது I will associate என்று சொல்லி, அவர்களுடன் இணைந்து உங்கள் கருத்தைச் சொல்லியிருக்கலாம். Don't waste the time, please.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு, மற்றவர்கள் எழுப்பிய பிரச்சினைகளில் பேசுவதற்கு 18 முறை வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக, பிரதானமாக இருக்கின்ற எதிர்க்கட்சியைத் தவிர மற்ற கட்சிகளுக்கு, சந்தர்ப்பங்களைப் பொறுத்துத்தான் இடம் கிடைக்குமே தவிர, அவர்கள் தனி உரிமை கொண்டாடுவதற்கு நியாயம் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Associate பண்ணியிருக்கலாம். திரு. வீர. இளவரசன், சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது நீதிமன்றத்தில் இருக்கிறதென்று சொல்லி, பல தடவை நம்முடைய அவை முன்னவர் அவர்கள் அதைப் பேச அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, அதன்படி பேரவைத் தலைவரும் நடந்துகொண்டார். இன்றைக்கும் அப்படித்தான் நிலைமைகள் இருந்து வருகின்றன.

நான் சொல்ல விரும்புவதெல்லாம், நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறதென்று சொன்னால்—இதேபோன்று, முன்பு ஒருமுறை இந்த அவையிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—ஒரு வழக்கு குறித்து, 1978 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் என்று நான் கருதுகிறேன்—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—முன்னாள் பிரதமர் மாண்புமிகு இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு கருப்புக் கொடி காட்டிய பிரச்சினையில் வழக்குப் போடப்பட்டது குறித்து இங்கே விவாதித்தபோது, அது நீதிமன்றத்தில் இருக்கிறதென்று உறுப்பினர்களால் குறுக்கீடு செய்யப்பட்டபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள், "வழக்குப் போடப்பட்டிருக்கிறது, ஆனால், அது எப்.ஐ.ஆர். என்ற நிலையில்தான் இருக்கிறது. அது எப்.ஐ.ஆர். என்ற நிலையில் இருக்கின்றபோது, குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கு முன்பு அதுபற்றி விவாதிக்கலாம் என்று சட்டத்தில் இருக்கிறது" என்கின்ற ஒரு தகவலை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே



தெரிவித்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, நாங்கள், கைது செய்த சில நாட்களில், அந்த இரண்டொரு நாட்களில்தான் அதைப் பேசினோம். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, பல மானியக் கோரிக்கைகளில் எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது. குறிப்பாக, கூட்டுறவுத் துறை மானியம், தமிழ் வளர்ச்சி மானியம், உயர் கல்வி மானியம், தொழில் துறை மானியம், இப்படி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் அடிப்படையிலே பேச வேண்டுமே தவிர, தங்களுடைய கட்சிக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது என்று சொன்னால், வாய்ப்பு மறுக்கப்படுவதற்குக் காரணம் சட்டமன்ற நடைமுறை. சிறிய கட்சிகளுக்கு உறுப்பினர் எண்ணிக்கையில் குறைவாக உள்ளவர்களுக்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலேயும் இந்த அவையில் நேரம் ஒதுக்குவதற்கு முடியாது. அலுவல் ஆய்வுக் குழுவிலேயே அதைப்பற்றி பலமுறை பேசப்பட்டிருக்கிறது. கிடைக்கிற நேர வாய்ப்பை முழு அளவிலே பயன்படுத்த, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு இடமளிக்கப்பட்டிருக்கிறது. அதை ஆதாரத்தோடு என்னால் சொல்ல முடியும்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதையும் விளக்கிச் சொல்கிறேன். இப்படி, பல மானியக் கோரிக்கைகளில் எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எண்ணிக்கையில் எங்களைப்போன்றிருக்கின்ற மற்ற கட்சிகளுக்கு, நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், ஆறு உறுப்பினர்கள் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறோம். அதைப்போல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் ஆறு உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். ஆனால், எந்த மானியக் கோரிக்கையை எடுத்தாலும், தினசரி அவர்களுக்குப் பேசுகின்ற வாய்ப்பையும், குறுக்கிட்டுப் பேசுகின்ற வாய்ப்பையும், கவன ஈர்ப்புகளின்போது பேசுகின்ற

வாய்ப்பையும், வழங்குகின்ற சபாநாயகர் அவர்கள், எங்களுக்கு ஏன் அந்த வாய்ப்பை வழங்கவில்லை என்று நான் கேட்க விரும்புகின்றேன்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புகளிலே எந்தெந்தக் கட்சிகள் முன்கூட்டியே கவன ஈர்ப்பு அறிவிப்புகளைக் கொடுத்திருக்கின்றனவோ, அந்தக் கட்சியைச் சார்ந்த ஒருவர் கட்டாயம் அழைக்கப்படுவார். ஆகவே, கவன ஈர்ப்புகளிலே தங்களுடைய பெயரை முன்கூட்டியே பதிவு செய்யாமல் இருந்துவிட்டு, தலைவர் எங்களை அழைக்கவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்வது நியாயம் அல்ல.

*பிற்பகல் 12-35*

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நான் சொன்னேன். பெரியார் சிலை உடைப்பிற்கு, திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் நடந்த அந்தப் பெரியார் சிலை உடைப்பு சம்பந்தமான தீர்மானம் குறித்து இங்கே விவாதிக்கப்பட்டபோது, இங்கே பெயர் கொடுக்காதவர்கள், நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமானால், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு மூத்த உறுப்பினர் அண்ணன் திரு. சுதர்சனம் அவர்களும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களும் அன்றைக்குப் பேச வாய்ப்புக் கேட்டார்கள். ஆனால், சபாநாயகர் அவர்கள் பேச பெயர் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால், பொதுப் பிரச்சினையாகப் பேசலாம் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்குப் பிறகு அவர்களுக்கு அந்த வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. நானும் எழுந்து கேட்டேன். எனக்கு அந்த வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நிறைய நேரம் பேசலாம் என்று முடிவு செய்துவிட்டீர்கள்.

**திரு. வீர. இளவரசன்:** அதேபோல, 8-5-2007 அன்று, தொழில் துறை மானியத்தில், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் பேசும்போது 15 நிமிடங்கள் இங்கே கொடுக்கப்பட்டன. அந்தக் குறிப்பிட்ட நேரம் முடிவடைந்தவுடன், மணியடிக்கப்பெற்றது.



நேரத்தை நீட்டித்துக் கொடுக்க சபாநாயகர் மறுத்துவிட்டார். ஆனால் ாங்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். அடுத்து காங்கிரஸ் கட்சி றுப்பினருக்கும் அதே 15 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. குறிப்பிட்ட றுப்பினர் பேசிக்கொண்டிருந்தபோது 22 ஆவது நிமிடத்தில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து குறுக்கிட்டார்கள். ஆனால், அது என்னுடைய வேலை, உட்காருங்கள் என்று ஆணவத்தோடு, பாநாயகர் அன்றைக்குச் சொன்னார் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் ான் நினைவுகூர விரும்புகிறேன். . (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் ழக உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 22 நிமிடங்கள் கொடுக்கப்பட்டன என்று சொன்னார். இந்த அவையினுடைய, இந்த முழு பட்ஜெட் கூட்டத் தொடரை எடுத்துக்கொள்ளுங்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் ழகத்தினுடைய ஒவ்வொரு உறுப்பினரும் மூன்று மானியக் கோரிக்கை, நான்கு மானியக் கோரிக்கைகளில் பேசியிருக்கிறார்கள். ஆனால், 34 உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் கட்சியிலே, ஒரு கோரிக்கையின்மீது கூட ஒருவருக்குமேல் எங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடுகள்) தினசரி, மானியக் கோரிக்கைகள் நடக்கின்றபோதும் 34 உறுப்பினர்கள் இருக்கின்ற எங்களுக்கும் ஒருவருக்குத்தான் பேச வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. 6 பேர் இருக்கின்ற, 4 பேர் இருக்கின்ற கட்சிக்கும் ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் இதை ஆட்சேபித்தோம். அலுவல் ஆய்வுக் குழுவிலே, இதுகுறித்து ஆட்சேபித்தோம். 34 உறுப்பினர்கள் இருக்கின்ற எங்களுக்கும் ஒருவருக்குத்தான் வாய்ப்புக் கொடுக்கின்றீர்கள். நான்கு பேர், ஆறு பேர்—not even recognised parties—அவர்களுக்கும் கொடுக்கின்றீர்கள் என்று ஆட்சேபித்தோம். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், நம்முடைய அவை முன்னவர் அவர்களும், எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பேச வாய்ப்புக் கொடுக்கலாம் என்று சொன்னதை நாங்கள் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டோம். எங்கள் பெருந்தன்மையையே குற்றச்சாட்டாகச் சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியாக இந்த அவையில் சென்ற முறை நாங்கள் இருந்தோம். ஆனால், எங்களுக்குத் தரப்பட்ட வாய்ப்பு, அதாவது, ஒருவர்தான் பேசலாம். வேண்டுமானால், சட்டமன்ற நூலகத்திற்குச் சென்று எடுத்துப் பார்க்கலாம். திரு. சந்தானம் என்பவர் தனி நபராக இருந்தார். ஆனால், மணிக்கணக்கிலே அவர் பேசியிருக்கிறார். நாங்கள் பேசினால், அது குறித்துக் குறிப்பிட்டால், மணிக்கணக்கிலே எல்லா நேரத்திலும், அது ஒத்திவைப்புத் தீர்மானமாக இருந்தாலும், கவன ஈர்ப்புகளாக இருந்தாலும், குறுக்கீடுகளாக இருந்தாலும், அவர் பேசி, மிச்ச நேரம் இருந்தால்தான், பிரதான எதிர்க்கட்சிக்குப் பேச வாய்ப்பு வழங்கப்பட்டது. நான் சொல்வதற்கு ஆதாரம் வேண்டுமானால், நீங்கள் நூலகத்திற்குப் போய்ப் பார்க்கலாம். அதையும் இந்த அவை கண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன்

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1952 ஆம் ஆண்டு அப்போது பேரவைத் தலைவராக இந்த அவையிலேயிருந்த மாண்புமிகு திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், அப்போது முதலமைச்சராக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள், உறுப்பினர் திரு. வடிவேல் என்பவருடைய பேச்சிலே குறுக்கிட்டபோது, அன்றைய சபாநாயகர் அவர்கள் முதலமைச்சர் என்று அப்போது பார்க்கவில்லை. Hon'ble Chief Minister please sit down - order, order என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை அப்போது இருந்தது என்பதையும், அதேபோல 1957 ஆம் ஆண்டு சபாநாயகராக இருந்த டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்களைப்பற்றி, அறிஞர் அண்ணா அவர்கள் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார். எதிர்க்கட்சியிலே இருந்த நாங்கள் யாரும் வருத்தப்படத்தக்க விதத்திலே எந்த ஒரு நடவடிக்கையிலும் சபாநாயகர் ஈடுபடவில்லையென்று சொல்லியிருக்கிறாரே அந்தத் தகுதியை நம்முடைய சபாநாயகர் ஏன் பெறுவதற்கு முயற்சிக்கவிலலையென்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. செல்வம் (குறுக்கீடுகள்) இல்லை முடியாது. You have crossed 20 minutes. திரு. செல்வம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதிகபட்ச ஜனநாயகத்தை நாங்கள் கடைப்பிடிக்கிறோம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செல்வம்.



**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதி 68-இன்கீழ், நம்முடைய பேரவைத் தலைவர் வர்கள்மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம் என்பதற்கு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) திரு. செல்வம், பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விவாதங்களில் நம்பிக்கையில்லாத் தீர்மானமோ, வேறு எந்தத் தீர்மானமோ அவையில் கொண்டுவரப்பட்டு, அவையில் விவாதிக்கப்படுகிறபோது, எந்த ஒரு உறுப்பினர் பேசுகிற நேரத்தையும், கட்டுப்படுத்துகிற முழு அதிகாரம், யார் அந்தப் பீடத்திலே அமர்ந்திருக்கிறாரோ அவர்களுக்கு உண்டு. நேரம் கேட்கலாம். கேட்டு, அனுமதிக்கப்படக்கூடிய நிலை இருந்தால்தான் அந்தத் தலைவர் அனுமதிப்பாரே தவிர, தங்கள் தங்களுக்குத் தோன்றுகிற கருத்துகளையெல்லாம் பேசுவதற்கு, தாங்கள் நினைத்தவாறு நேரத்தைத் தொடர்வதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கேட்கவும் முடியாது, அதன் காரணமாகத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற அந்தக் கருத்து அதனாலேயே வலுப்பெற்றுவிடாது.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமிகு செல்வம். (குறுக்கீடுகள்) இல்லை, நான் allow பண்ண மாட்டேன். (குறுக்கீடுகள்) நான் கொடுக்கிறேன்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே விதி 68-ன்கீழ் நம்முடைய சிறப்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மீது கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எதிர்க்கிறது. நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் மாண்புள்ளவர், பண்புள்ளவர் என்பதை கடந்த ஓராண்டு காலமாக நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால ஆட்சியிலே நாங்களெல்லாம் பேரவையில் இல்லாவிட்டாலும், தொலைக்காட்சியிலே கடந்த கால பேரவைத் தலைவர் எப்படி நடந்துகொண்டார் என்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப்போனால், பேரவைத் தலைவர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்துத்தான்

அந்தச் சைகை வந்த பிறகுதான் செயல்படுவார் என்பதை எல்லாம் கண்டிருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப்போனால், நாம் தொலைக்காட்சியிலே பார்க்கும்பொழுது, அவர் இருக்கையிலேகூட சரியாக உட்காராமல், நுனியிலே உட்கார்ந்த காட்சிகளையெல்லாம் இந்த அவை கண்டிருக்கிறது. ஆக, கம்பீரமாக உட்கார்ந்து, இந்த அவையை நடத்தும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள்மீது இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அடிக்கடி கொண்டுவருவதை நம்முடைய எதிர்க்கட்சிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கண்டிப்பாக இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியடையும் என்று அவர்களுக்குத் தெரியும். இங்கு மட்டுமல்ல, எங்கு சென்றாலும், குறிப்பாக உத்தரப்பிரதேசம் சென்றாலும் தோல்வியடைவார்கள் என்று அவர்களுக்குத் தெரியும். ஆக, தோல்வியடைவார்கள் என்று தெரிந்தே இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் (குறுக்கீடுகள்) கொண்டுவரும் நம்முடைய எதிர்க்கட்சிகள் (குறுக்கீடுகள்) இதை இனிவரும் காலங்களில் தவிர்ப்பது நல்லது என்று இந்த அவையிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். தீர்மானத்தை ஒட்டிப் பேசுங்கள் செல்வம். (குறுக்கீடுகள்)

**திரு. கு. செல்வம்:** நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள். . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன் சொல்கிறார், உ.பி.-யில் ஜெயித்துவிட்டார்கள் என்று சொல்கிறார், கேட்போம்.

**திரு. கு. செல்வம்:** நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள். . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலேதான் பேச வேண்டும், வேறு இடத்திற்குச் செல்லக்கூடாது என்றெல்லாம் இதுவரையிலே கட்டளையிட்டீர்கள். இப்பொழுது உத்தரப்பிரதேசத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறாரே, அதைப்பற்றி ஏன் கட்டளையிடவில்லை? (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செல்வம், இந்தத் தீர்மானத்தை ஒட்டிப் பேசுங்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சம்பந்தம் சம்பந்தம் இல்லாமல் இந்தப் பேரவையில் பேசும்போது ஒரு வரலாற்று நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்டும்போது, நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதைப் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால், "கூரை ஏறி கோழி பிடிக்காதவர்கள், வானம் ஏறி வைகுண்டம் போன" கதையைத்தான் நான் சொல்ல வந்தேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டம் படித்தவர், சட்டம் படித்து இன்று ஒருவேளை அவர் சட்டமன்ற உறுப்பினராக ஆகாமல் இருந்திருந்தால், பேரவைத் தலைவராக ஆகாமல் இருந்திருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியாகிற தகுதி உள்ள நம்முடைய பேரவைத் தலைவர், நீதிமன்றத்திலே எப்படி ஒரு நீதிமானாக நடந்துகொள்வார்களோ, அப்படி நடுநிலையாக, கண்ணியத்தோடு இந்தப் பேரவையை நடத்துகின்ற நம்முடைய பேரவைத் தலைவர்மீது இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் விரல் காட்டிப் பேசுகிறார், அவருடைய பேசும் தொனி சரியில்லை என்று சொன்னர்கள். அவர் சரியாகப் பேசுகிறார், நெல்லைத் தமிழ் பேசுகிறார், நல்ல தமிழ் பேசுகிறார். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், சென்னையில் வசிப்பவர்கள் தமிழை ஒரு மாதிரியாகப் பேசுவார்கள்; கோவையில் வசிப்பவர்கள் தமிழை ஒரு மாதிரியாகப் பேசுவார்கள்; நெல்லை தமிழ், அவர் நல்ல தமிழ் பேசுகிறார். கள்ளம் கபடம் இல்லாமல் பேசுகிறார். மனதில் எந்த வஞ்சனையும் இல்லாமல் பேசுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12-45*

எங்களுக்கே சில நேரங்களில், சில சங்கடங்கள் ஏற்படும், பேச ஆரம்பிக்கும்போதே மணியை அடிக்கிறாரே என்று. ஆனால், அவர் எவ்வளவு மணியை அடித்து, இந்த அவையைக் குறுகிய காலத்தில் கொண்டுபோனாலும், சில நேரங்களிலே 2 மணி ஆகிவிடுகிறது, 2-30 மணி ஆகிவிடுகிறது. நம்முடைய பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் இது தெரியும். மதிய வேளையிலே, பசிக்கின்ற

வேளையிலே சில நேரங்களில் 3 மணியை இந்தப் பேரவை தொட்டு விடுகிறது. ஆக, சரியாக, கண்ணியத்துடன் நடக்கின்ற நம்முடைய பேரவைத் தலைவர்மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எதிர்க்கிறது. அதுமட்டுமல்லாமல், அவரைப் பற்றி பேச வேண்டுமென்றால், அவருடைய நண்பர்கள் எல்லாம் சேர்ந்து நெல்லை மாவட்டத்திலே ஒரு மிகப் பெரிய பாராட்டு விழாவை வைத்தார்கள். அந்தப் பாராட்டு விழாவிலே கவிப் பேரரசு வைரமுத்து அவர்களும், நானும் கலந்துகொண்டோம். அவருடைய அருமை பெருமைகளைப் பற்றியெல்லாம் அங்கு நாங்கள் கண்டறிந்தோம். இப்படிப்பட்ட ஒரு நல்ல பேரவைத் தலைவரை நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அவைக்கு வழங்கி இருக்கிறார்.

அதுமட்டுமல்லாமல், கண்ணியம் மிக்க இந்தப் பேரவைத் தலைவர், மனுநீதிச் சோழனாக வாழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியிலே வந்த பேரவைத் தலைவர் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர்மீதான இப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எதிர்க்கிறது. நம்முடைய முதல்வர் சொன்னதுபோல, இந்தக் கூட்டத்தொடர் மட்டுமல்ல, ஐந்து ஆண்டுகளுக்கு அவர்தான் பேரவைத் தலைவராக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லி நான் விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர். (குறுக்கீடுகள்) திரு. வி.பி. கலைராஜன், பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார். திரு. வி.பி. கலைராஜன்.

***திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்தின்மீது பேசிய மாண்புமிகு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவராக இருக்கிற கோவிந்தசாமி அவர்கள் வரலாற்றிலே ஒரு தவறைக் குறிப்பிடுவதைப்போல இங்கே குறிப்பிட்டார்கள். We are willing to bark, afraid to bite என்று அவருடைய கட்சித் தலைவர் சீத்தாராம் யெச்சூரி சொல்லியிருக்கிறார். குரைக்கத் தெரிந்தவர்கள் என்பதற்காக எதை வேண்டுமானாலும் இங்கே சொல்லக் கூடாது. 1967-லிருந்து. . . (குறுக்கீடு) 1967-லிருந்து (குறுக்கீடு) நாங்கள் சொல்லவில்லை, உங்களுடைய சீத்தாராம் யெச்சூரி சொல்லியிருக்கிறார். இப்போது இருக்கிற மத்திய அரசாங்கத்தைப் பார்த்து . . . (குறுக்கீடு) சொல்கிறேன். எனவே, ((குறுக்கீடுகள்) dog என்கிறார் அல்லவா, ஒத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன சொல்ல வருகிறீர்கள், சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** சொல்ல வருவதைச் சொல்லி விடுகிறேன். 967-லிருந்து இந்த ஆட்சி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** விவாதத்தோடு தொடர்பு இல்லாதது அது. இந்த விவாதத்திற்குத் தொடர்பில்லாதது அது. குறுக்கீடுகள்) விவாதத்திற்குத் தொடர்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தோடு ஒட்டி ரதாவது, பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் அதுதான் பாயின்ட் ஆப் ஆர்டர். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) Please sit down. குறுக்கீடு) சீக்கிரம் சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** 1967-க்கு முன்னால்தான் சட்டமன்றத்தினுடைய மரபு காப்பாற்றப்பட்டது என்று சொல்லியிருக்கிறார். அது இங்கே பதிவாகியிருக்கிறது. 1967-லே முதல்வராக இருந்தவர் மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த அண்ணாவினுடைய படத்தைப் பார்த்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் கண்ணீர் வடித்தார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் பேசிய அந்தக் கருத்து, அவர் குறிப்பிட்ட காலக் குறிப்பு சரியல்ல, அதற்குப் பின்னர், பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அந்த நிலை ஏற்பட்டது என்று நான் அப்போதே மறுப்புத் தெரிவித்துவிட்டேன். ஆகவே, சட்டமன்றத்திலே முறை கடந்து, மரபு கடந்து நடந்துகொள்ளக்கூடியவர்கள் யார் என்பது நாட்டிற்கே தெரியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) please. நேரத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம், விவாதம் முடிந்துவிட்டது. உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** முடியவில்லை. அதேபோல நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள்

பேசுகிறபோது, தேவையில்லாமல் 60 பேர், 6 பேரை மிரட்டமுடியாது என்று சொன்னார்கள். அரசியல் ஓட்டுண்ணிகளை உடைவாள் எடுத்து விரட்ட வேண்டிய நிலை எங்களுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையில் எதிர்க் கட்சியினுடைய, பிரதான எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. பன்னீர்செல்வம் அவர்களாலும், அவருடைய கட்சியைச் சேர்ந்த பிற நண்பர்களாலும் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னாலேயே ஒத்திகை பார்க்கப்பட்டு, அந்த ஒத்திகையிலேயே அது தோல்வியடைந்து, மறுபடியும் இப்போது அந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு தீர்மானம் இந்த அடிப்படையில் ஏற்கெனவே கொண்டு வரப்பட்டு தோற்றபின் இவ்வளவு விரைவில் மறுபடியும் கொண்டு வர வேண்டுமா என்பதை அவர்கள்தான் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால், என்ன காரணத்தாலோ தாங்கள் கொண்டு வந்த தீர்மானம் ஏற்கெனவே தோற்றிருக்கிறபோது, மறுபடியும் அந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள், இன்னும் ஒரு வகையிலே நான் சொல்வதாக இருந்தால், இந்தத் தீர்மானம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் அவர்கள் கொண்டு வரவில்லை, வெற்றி பெறும் என்ற நம்பிக்கையிலே அவர்கள் கொண்டு வருவதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்றால், அவர்கள் இந்த ஆட்சியே மைனாரிட்டி ஆட்சி, மைனாரிட்டி ஆட்சி என்று சொல்லி, அதுவே உண்மை அல்ல என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டுள்ள காரணத்தால், இந்த ஆட்சியை நடத்துகிற கட்சியினுடைய ஆதரவையும், தோழமைக் கட்சிகளினுடைய ஆதரவையும் பெற்றிருக்கிற ஒரு சபாநாயகர்மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகின்றபோது அது வெற்றி பெறாது என்பது தெரிந்துதான், அவர்கள் கொண்டு வந்திருக்கின்றார்கள், ஒருவேளை இங்கே ம.தி.மு.க.வைச் சேர்ந்த இளவரசன் அவர்கள் பேசியபோது சொன்னதைப்போல, தங்கள் குறைகளைச் சொல்வதற்கு இது ஒரு வாய்ப்பு என்பதற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதாக வேண்டுமானால் இருக்கலாம். ஒருவேளை அவர்களுடைய குறைகளைச் சொல்ல ஒரு வாய்ப்பாகக் கருதி இதைக் கொண்டு வந்திருக்கலாம்.



பிற்பகல் 12-50

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே இருக்கின்ற வாசகம், "மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரை, அவருடைய பதவியிலிருந்து நீக்குவது என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்பது. தலைப்பே அந்தப் பதவியிலிருந்து நீக்குவது என்று தீர்மானிக்கிறது என்று ஓர் எதிர்க்கட்சி, பெரும்பான்மை ஆதரவைப் பெற முடியாத கட்சி, அப்படி ஒரு தீர்மான வாசகத்தைச் சொல்கிறபோதே, அதைக் கொண்டு வருகின்றவர்களுக்கு, இது பொருத்தமான வாசகமாக இல்லையே என்ற எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். எங்களுக்கு நம்பிக்கையில்லை என்று நீங்கள் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகின்றபோது இந்த அவை ஒத்துக்கொள்கிறதா என்று கேட்கும்போது, இந்த அவை ஒத்துக்கொள்ளாது என்று தெரிந்தே நீங்கள் சொல்கிறீர்கள். உண்மையாக உங்களுடைய மனச்சான்றுக்கே இது தெரியும், இந்த அவையில் இது எடுபடாது என்று. எனவே, எடுபடாத ஒன்றை எடுத்து வைத்து, நீங்கள் ஒரு தீர்மானமாகத் தந்திருக்கின்றீர்கள். இந்தத் தீர்மானம்கூட ஏற்கெனவே இந்த அவையில் நீங்கள் இப்படிப்பட்ட தீர்மானம் கொண்டுவந்தபோது, அந்தத் தீர்மானத்தை பேரவைத் தலைவர் அவர்கள் உடனடியாக எடுத்துக்கொண்டு அதை விவாதிக்கின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். உடனடியாக எடுத்துக்கொண்டதற்குக் காரணம், இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கின்றவர்களெல்லாம் எழுந்திருங்கள் என்று கேட்டவுடன், எதிர்க்கட்சியின் சார்பில் எழுந்து நின்றீர்கள். எழுந்து நிற்காமல் இந்தத் தீர்மானம் இங்கே வரவே முடியாது. எழுந்து நின்ற காரணத்தினால்தான் தீர்மானம் வந்தது. அப்பொழுதே நீங்கள் மறுத்திருக்கலாம். என்ன சொல்லியிருக்கலாம்? "இப்பொழுது எங்களை எழுந்து நிற்கச் சொல்வதில் நியாயம் இல்லை. 14 நாட்கள் ஆகவேண்டும்" என்று ஒருவேளை கேட்டிருக்கலாம். ஆனால் நீங்கள் எழுந்து நின்ற காரணத்தால், இதிலுள்ள விதிமுறைகளின்படி எழுந்து நின்று ஏற்கப்பட்டுவிட்டால் இதை உடனடியாக விவாதிக்கலாம் என்பது இங்கே விதிகளில் இருக்கிறது.

மற்றும் ஒன்று. 14 நாட்கள் நோட்டீஸ் தருவது என்பதைப்பற்றி பலபேர் என்ன காரணத்தாலோ அதில் குழம்புகின்றார்கள். நோட்டீஸ் என்பது எதிரிக்குத் தருவது. யார் தீர்மானம் கொடுக்கின்றார்களோ அவர்கள், யாரைக் கண்டிக்கின்றார்களோ அவர்களுக்குத் தருகின்ற காலம். இந்த 14 நாட்கள் நாங்கள் உங்களுக்கு நோட்டீஸ் தருகிறோம். இந்த 14 நாட்கள் வரையில் இதை நீங்கள் எடுத்துக்கொள்ளாமல்

இருந்தால், நாங்களே இந்த அவையில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவோம் என்று பொருள். We give fourteen days time to you to take up this resolution. இது எடுத்துக்கொள்ளப்படாவிட்டால் நாங்களே எடுத்துக்கொள்கின்ற உரிமையை, 14-வது நாள் நாங்கள் பெறுகிறோம் என்ற பொருளே தவிர, வேறல்ல. சரி, எப்படியிருந்தாலும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு முன்னவர் என்பதற்காக நான் பதில் சொல்கிறேனே தவிர, நான் பதில் சொல்லவேண்டிய அவசியமே இல்லை. திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய பதில் முன்னாலேயே தரப்பட்டிருக்கின்றது. திரு. மணி அவர்களுடைய பதில் தரப்பட்டிருக்கின்றது. திரு. கோவிந்தசாமி அவர்களுடைய பதில் தரப்பட்டிருக்கின்றது. திரு. சிவபுண்ணியம் அவர்களுடைய பதில் தரப்பட்டிருக்கின்றது. திரு. செல்வப்பெருந்தகை அவர்களுடைய பதில் தரப்பட்டிருக்கின்றது. இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாக எண்ணிக்கொண்டு சில கருத்துகளைப் பேசிய ம.தி.மு.க. உறுப்பினர் ஒருவர்தான் இந்தத் தீர்மானத்தை ஆதரிப்பதாகப் பேசினார். நான் அதில் குற்றம் காணவில்லை. இதை ஆதரிக்க அவர் கடமைப்பட்டவர் என்ற முறையில் ஒருவேளை அவர் ஆதரித்துப் பேசியிருக்கலாம்.

இந்த அவை இந்தக் காலகட்டத்தில், இந்த ஓராண்டு காலமாக எந்த அளவுக்கு ஜனநாயக மரபுகளைக் காப்பாற்றி நடக்கிறது என்பது எல்லாப் பத்திரிகைகளிலும் வருகின்ற செய்திகளைப் பார்த்தாலே தெரியும். ஆட்சியை ஆதரிக்கின்ற பத்திரிகை, எதிர்க்கின்ற பத்திரிகை, இன்னும் சொல்லப்போனால் அ.தி.மு.க.வை ஆதரிக்கின்ற பத்திரிகையிலேகூட தினந்தோறும் வருகின்ற செய்திகளையெல்லாம் பார்ப்போமானால், எதிர்க்கட்சியினர் பேசிய பேச்சுக்கு ஆளும் கட்சியில் தரப்பட்ட பதில், இடையிலே இருக்கின்ற மற்ற கட்சிகளின் உரைகள், அத்தனையும் இடம்பெறுகிறபோது, இந்தச் சட்டமன்றத்தில் ஜனநாயக மரபு நல்ல முறையில் காப்பாற்றப்படுவதை அது எடுத்துக்காட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு நேரம் பேசுவதற்கு எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப்படுகின்றார்கள் என்று பார்த்தால்கூட, இங்கே குறிப்புகளை வைத்து என்னால் சொல்ல முடியும் - - எதிர்க்கட்சிகளுக்கும், எல்லாக் கட்சிகளுக்கும் போதுமான நேரம் வழங்கப்பட்டு அவர்கள் உரையாற்றியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 12-55

இங்கே ஒரு குறிப்பு. 2006-2007 இந்த ஓராண்டு காலத்தில் பொது விவாதத்திலேயும் மற்றும் மானியக் கோரிக்கைகளின் மீதும் விவாதம்



நடைபெற்றபோது அ.தி.மு.க. உறுப்பினர்களுக்கு 95 முறை பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, அவர்கள் பேசிய மொத்த நேரம் 37 மணி 47 நிமிடங்கள். ஒருவேளை இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலே பேசியது வேண்டுமானால் அதிலே விட்டுப் போயிருக்கலாம். அதேநேரத்தில் தி.மு.கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு 102 முறை அனுமதிக்கப்பட்டாலும், அவர்கள் பேசிய மொத்த நேரம் 25 மணி 20 நிமிடங்கள். எதிர்க்கட்சியிலே, பிரதான எதிர்க்கட்சியிலே 37 மணி நேரம் பேசக்கூடிய அளவிற்கு உள்ள சந்தர்ப்பங்கள் தந்த அதே நேரத்தில், ஆளும்கட்சியின் சார்பிலே பேசியவர்களுக்கு 25 மணி நேரம்தான் தரப்பட்டுள்ளது. திமுகவை விட அதிமுக உறுப்பினர்களுக்கு உறுப்பினர் என்ற முறையில், மந்திரி என்ற முறையிலே அல்ல உறுப்பினர் என்ற முறையில் 12 மணி நேரம் 27 நிமிடங்கள் அதிகம் வழங்கப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்திலே நானும் ஓர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தேன். நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது அப்போது முதலமைச்சராக இருந்தவர்கள் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வளவு நேரம் பேசுவதற்கு அனுமதித்தார்கள் ? குறுக்கீடுகளை எப்பொழுதாவது அனுமதித்தார்களா? அப்போது இருந்த பேரவைத் தலைவர் நாங்கள் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்கின்ற எல்லா நேரங்களிலும், எழுந்து நிற்கவாவது அனுமதித்தாரா என்றால்—ஒரு முறை அவர் வெளிப்படையாகவேச் சொன்னார். நீங்கள் சொல்வது சரியில்லை என்று நான் அவர் கருத்தை மறுத்தேன். அவர் சொன்னார், முதலமைச்சர் சொல்லிவிட்டார், அதுதான் என்னுடைய முடிவு என்று. அப்படி ஒரு ஜனநாயகம்.

எனக்குத் தெரியாத ஒரு ஜனநாயகம் இந்தியாவிலே இருப்பதாக நான் கருதவில்லை. நான் பாராளுமன்றத்திலேயும் இ[illegible]ன் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர்களை மதித்துப் [illegible]து என்ற மரபுகூட அப்போது இல்லை.

என்னைப்பற்றி அந்த அம்மையார் சொன்ன ஒரு வார்த்தை, அவர் ஏனோதானோ என்று வந்து வந்து போய்க்கொண்டிருக்கிறார் என்றார் நான் எப்படி, ஏன் என்று கேட்டுக்கொண்டா வரமுடியும் ? (மேசையைத் தட்டும் ஒலி) ஏனோதானோ என்று, ஏதோ பொறுப்பில்லாமல் வந்து போகிறேன் என்றார். காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திரு. பாலசுப்ரமணியம் அவர்களைப்பற்றி அன்றைய முதலமைச்சர் சொன்னார், காலி டப்பா என்று. வெளியிலே போய் திரு. பாலசுப்ரமணியம் என்ன பதில் சொன்னார் என்று தெரியவில்லை

ஆனால், இங்கே ஒன்றும் சொல்லமுடியவில்லை. அதேபோல, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைப் பற்றிச் சொல்கிறபோது கொடி பிடிக்கின்ற கட்சிகள் என்று சொன்னார். உண்டியல் ஏந்தி, கொடி பிடிக்கின்ற கட்சிகள் என்று. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. மணி இருந்தார் என்று கருதுகிறேன். அவர்களை எல்லாம் சேர்த்து மரம் வெட்டுகின்ற கட்சி என்றார்.

நம்முடைய இன்றைய முதலமைச்சர் அப்படி உங்களைப் பார்த்து எப்போதாவது சொல்வார் என்று நம்புகிறீர்களா ? யாரையாவது பார்த்து (குறுக்கீடுகள்). . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைதி. அமைதி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** என்றைக்காவது சொல்வாரா, சொல்ல நினைப்பாரா? ஆகவே, நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், ஜனநாயகம் என்பது ஒருவழிப் பாதையல்ல. ஜனநாயகம் என்பது எதிர்க்கட்சிகளை மதிக்கின்றபோதுதான் ஜனநாயகமே அரும்புகிறது. மதிக்காதபோது ஜனநாயகம் மெல்ல செத்துப்போகும். பன்னீர்செல்வம் அவர்களை நான் மதித்துத்தான் பேசுகின்றேன். மதிக்கவேண்டுமென்ற கட்டாயம் ஒன்றுமில்லை. நானும் வேறுமாதிரியாகப் பொதுக்கூட்டங்களில், பேசிப் பழக்கப்பட்டவன்தான். மிகச் சாதாரண பொதுக் கூட்டமல்ல; நாடு பூராவும் எதிர்ப்பு இருக்கின்ற காலத்திலேயே பேசியவன்தான் நான். சென்னையிலேயே என்னுடைய கூட்டம் நடந்தபோது, நான் இருந்த கட்சி, திராவிடர் கழகம், பெரியாருடைய தலைமை. அந்தக் கூட்டம் நடைபெற விடாமல் கல்வீசுகின்றனர் மாற்றுக் கட்சியினர். அந்தக் கூட்டத்திலே இருந்து பேசியவன் நான். ஆனாலும் எதற்காக மதிக்கிறோம்? இந்தச் சட்டமன்றத்தை நாங்கள் மதிப்பது உண்மையாக இருந்தால், எதிர்க்கட்சியிலே உள்ள தலைவரையும் அந்தக் கட்சியிலே உள்ளவர்களையும் மதிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்த உணர்வு கடந்த காலத்திலே நடந்த அந்த ஆட்சியிலே இல்லை. அப்போது இருந்த பேரவைத் தலைவருக்கு அந்த உணர்வு இல்லை. தனிப்பட்ட முறையிலே துரைமுருகன் இடத்திலே ஒப்பாரி வைப்பதைப்போல சொல்வார். நான் என்ன செய்வது, நான் இருக்கின்ற இடம் அப்படி. அது அவருடைய நிலை. இப்போது இருக்கின்ற பேரவைத் தலைவருக்கு அந்த நிலை இல்லை. பேரவைத் தலைவர் எங்களை ஏதாவது கேட்பாரேயானால், ஆற்காடு வீராசாமியைக்

D
V2",31'P07
P07.36.3



கேட்டாலும் சரி, முதல்வர் அவர்களைக் கேட்டாலும் சரி, கேட்டால் எதிர்க்கட்சிகளுக்குத் தரவேண்டிய நேரத்தைக் கொடுங்கள் என்றுச் சொல்லித்தான் பழக்கம். இங்கேகூட யாராவது எழுந்திருக்கின்றபோது, பேரவைத் தலைவர், நேரம் ஆகிறது என்பதற்காக உட்காருங்கள், உட்காருங்கள் என்று சொல்லி அவர்களைப் பேச அனுமதிக்காவிட்டால், அந்த நேரத்திலே முதலமைச்சர் குறுக்கிட்டு அவரையும் பேச அனுமதியுங்கள் என்பார். செங்கோட்டையன் எழுந்திருக்கின்றபோது, பல நேரம் அவர் எழுந்திருக்கின்ற காரணத்தால், அவரை நீங்கள் உட்காருங்கள் என்று சொல்கிற பழக்கம் வந்திருக்கிற காரணத்தால் தலைவர் சொன்னாலும் அவரையும் பேசச் சொல்லுங்கள் என்று முதல்வர் சொல்வதுதான் மரபு.

கலைஞரோ, நானோ இந்தக் கட்சியிலே உள்ளவர்களோ மற்றவர்கள் பேசுவதைப் பார்த்து அஞ்சியவர்கள் அல்ல. மற்றவர்களைப் பேசவைத்துப் பார்த்து பதில் சொல்லிப் பழக்கப்பட்டு வளர்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த உணர்வில் இந்த அவையில் பேரவையிலே தலைவராக இருக்கின்ற திரு. ஆவுடையப்பன் அவர்களும் ஜனநாயக மரபைக் காப்பாற்ற எண்ணுகிறவர்தான்.

பிற்பகல் 1-00

இங்கே குறிப்பிட்டார்கள். நீ, நீ என்று சொல்கிறார், எப்படி அவர் சொல்லலாம் என்று கேட்டார்கள். நீ என்று சொல்லக்கூடாதுதான். நீங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். தனியாக ஒருவர் பேசுகின்றபோது, அவர் உரையாடுகின்றபோது அல்லது எதிர்த்து வாதாடுகிறபோது, நீங்கள் உட்காருங்கள் என்று சொல்லலாம். ஆனால் 30 பேர், 40 பேர் எழுந்து நிற்கிறபோது, ஒவ்வொருவரையும் பார்த்து உட்கார், உட்கார் என்று சொல்லிவரும்போது, நீ உட்கார், நீ உட்கார் என்று சொல்கிற நிலை ஏற்படுகிறது. நீங்கள் உட்காருங்கள் என்று சொல்ல முடியாத நிலையில், நீ உட்கார் என்று சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். நீ என்பது பிரித்துக் காட்டுவதற்காகத்தான், அவமானப்படுத்துவதற்கு அல்ல. நீ என்பதும், நீங்கள் என்பதும் இரண்டும் ஒரே பொருளுடைய சொற்கள்தான். இன்னும் சொல்லப் போனால், நீ என்பதை You என்று ஆங்கிலத்திலே சொல்கிறபோது மதிப்பு குறைவதில்லை. மதிப்புக் குறைவாகச் சொல்ல வேண்டுமானால், அதற்குப் பின்னாலே வேறு சில சொற்கள் வரும். அப்படி வருகிற சொற்களை எல்லாம் இந்த அவையிலே எதிர்க்கட்சியினர் சொல்வதைக் கேட்டுக் கொண்டவர்தான் பேரவைத் [illegible] எவ்வளவோ [illegible] முறை பேரவைத் தலைவரிடத்திலே உரையாடு[illegible]போது அவர் சொல்கிற [illegible]

227671
சென்னை-600 00[illegible]

இப்படியெல்லாம் கேட்டார்கள். ஆகவேதான் நான் சொன்னேன் என்பார்கள். ஆகவே, பேரவைத் தலைவர் எவரைப்பற்றியும் தனியாக மனதிலே வைத்துக் கொண்டு வந்து அவரைப் பார்த்து நீ என்று சொல்லிவிட்டதாக தயவுசெய்து கருதத் தேவையில்லை.

அவரைப் பார்த்து என்ன, என்ன சொல்லப்படுகிறதோ, அவற்றிற்கு அவர் பதில் சொல்ல வேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகிறபோது அப்படிப்பட்ட சொற்கள் வரத்தான் செய்யும். காளிமுத்து அவர்கள் துரைமுருகனைப் பார்த்துச் சொல்லவில்லையா? யாராக இருந்தாலும் மனித இயற்கை என்பது ஒன்று இருக்கிறது. ஜனநாயகம் என்பது சட்டமன்றத்தால் காப்பாற்றப்படுவது. அதுவும் இந்த மனிதர்களுக்காகத் தான் காப்பாற்றப்படுகிறது. நாம் எல்லோரும் மனிதர்கள் என்ற முறையில் சில நேரங்களில் உணர்ச்சிவசப்படுவதற்கான எல்லா சூழ்நிலையும் இருக்கிறது. ஆகவே அந்தச் சூழ்நிலைகளை நான் இங்கே குறிப்பிடுவதற்கு மிக முக்கியமான காரணம், சொல்கிற வார்த்தைகள் அல்ல. சொல்லப்படுகிற நோக்கம்தான் மிக முக்கியமானது. அந்த நோக்கத்திலே எதிர்க்கட்சியினுடைய பேச்சுரிமையை ஒடுக்குவதற்குப் பேரவைத் தலைவர் முயற்சித்திருக்கிறாரா? வாய்ப்புகளை அடியோடு மறுத்திருக்கிறாரா என்றால் இல்லை என்றே எவரும் கூறுவர்.

சட்டமன்றத்திற்குள், சட்டமன்றத்தைத் தொடர்ந்து நடைபெற விடக்கூடாது என்பதற்காகவே பல நேரங்களில் எழுந்து ஒலி எழுப்புகிற அந்த முறை, இந்தச் சட்டமன்றத்திலே எதிர்க்கட்சியினாலே தொடர்ந்து வளர்க்கப்பட்டிருப்பதை நான் உணர்கிறேன். நாங்களும்கூட எதிர்த்து குரல் எழுப்பிவிட்டு நானும், ஆற்காடு வீராசாமியும், துரைமுருகன் முதலாக நாங்கள் எல்லாம் முன்வரிசையிலே இருந்து குரல் எழுப்பிவிட்டு, வெளியே சென்றிருக்கிறோம். ஏதேனும் ஒரு நேரத்திலேதான் ஒரு 5 நிமிடம், 10 நிமிடம் தொடர்ந்து குரல் எழுப்ப வேண்டிய ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுவிடும். ஆனால், இங்கே தினந்தோறும், எந்த மானிய விவாதமாக இருந்தாலும், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அந்த மானிய விவாதத்திலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசி முடித்துவிட்டு, ஆளும்கட்சியைச் சார்ந்த அமைச்சர் பதில் சொல்கிறபோது இந்த அவையில் இருக்கத் தேவையில்லை என்ற ஒரு முடிவு எடுத்துக் கொண்டு—நான் உங்களைக் குற்றம் சொல்வதாக எண்ணிக்கொள்ளாதீர்கள், நீங்கள் எடுத்த முடிவு அல்ல அது. அப்படி ஒரு முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால்—அந்த நேரத்திலே உடனடியாக எழுந்து வெளியேறுவது என்பது, கூச்சல் எழுப்பி வெளியேறுவது என்பது பத்திரிகைகளிலேயே பல நாட்கள் வெளி வந்திருக்கிறது. வெளியிலே போய் என்ன என்ன பேசப்படுகிறது என்பதையும் இங்கே குறிப்பிட்டார்கள். அது பல நேரங்களிலே ஒரு கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டிய இடம் இல்லை என்கிற காரணத்தால் எதை நீங்கள் பேசினாலும் நாங்கள் அதைப் பொருட்படுத்தத் தயாராக இல்லை. ஆகவே, பேரவைத் தலைவர் அவையைக் கட்டுப்படுத்தி நடத்துவதற்காகப் பேசிய வார்த்தைகளை வைத்துக் கொண்டு, அவர்மீது நம்பிக்கை இல்லை என்றால், நம்பிக்கை என்பது இந்த அவையினுடைய மொத்த உறுப்பினர்களுடைய நம்பிக்கை. மொத்த உறுப்பினர்களுடைய நம்பிக்கை என்று சொன்னால் அந்தவகையில் மிகப்பெரும்பாலானவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவராகத்தான் பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கிறார்கள்.



இன்னும்கூட நான் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதிலே பேரவைத் தலைவருக்கு ஒரு மிக முக்கியமான பங்கிருக்கிறது. அந்தப் பங்கை அவர்கள் செம்மையாக நிறைவேற்றி இருக்கிறார்கள். இன்னும் ஒரு வகையிலே எதிர்க்கட்சி நியாயமான முறையிலே ஒத்துழைக்குமானால் பேரவைத் தலைவர் இந்த அவையை இன்னும் சிறப்பாக நடத்தக்கூடிய நல்ல வாய்ப்பு உருவாகும். ஆகவே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தாலே நீங்கள் எதைக் கருதுகின்றீர்களோ அதைச் சொல்லிவிட்டீர்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால், இப்படிச் சொன்னதற்கு எல்லாம் பதில் சொல்லவேண்டிய அவசியம் கிடையாது. இந்த அவையிலேகூட எந்தத் தீர்மானமாக இருந்தாலும் வாக்கெடுப்பிலேதான் முடிவெடுக்கப்படும். அந்த வாக்கெடுப்பின் மூலமாக நாங்கள் அனைவரும் முழு அளவில் பேரவைத் தலைவர்மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நம்பிக்கையை இந்தப் பேரவை நிறைவேற்றித் தரும் என்று கூறுவதுடன், நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றி இன்னும் ஒரு கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார், தான் ஏதோ ஆற்காடு வீராசாமி அவர்களுடைய கண்களையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவருடைய கண்களிலே, கரு விழி எப்படியெல்லாம் அசைகிறது என்பது எனக்குத் தெரிகிறது என்று சொன்னார். அவர் கையையும் காட்டுவதில்லை, உயர்த்தியும் பேசுவதில்லை, அவருடைய கண் அசைவுக்கே பேரவைத் தலைவர் அவர்கள் கட்டுப்பட்டு, அந்தக் கண் விழியினுடைய அசைவைப் பார்த்து பேரவைத் தலைவர் அவர்கள் செயல்படுகிறார் என்ற கருத்தை பன்னீர்செல்வம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். முதலமைச்சர்கூட என்னிடம், "கண் அசைவு எப்படி

அவருக்குத் தெரியும்" என்று கேட்டார். நான் முதலமைச்சரிடத்திலே சொன்னேன், "அந்தக் கண் அசைவைப் பார்த்தே பழகி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கண் அசைவிலேயே ஒரு அரசியல் நடத்திக்கொண்டிருக்கிற பன்னீர்செல்வம் அவர்களுக்கு இது மிகச் சாதாரணம்" என்று நான் தெரிவித்தேன். எனவே, அதைத் தெரிவித்து, இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது எனக்கு நம்பிக்கையில்லை என்று கூறி, என் உரையை நான் முடிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, கடந்த முறை மாண்புமிகு உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்தபோது, "இந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள்தான் முதல் முதலில் முன்மொழிந்தீர்கள்" என்று இங்கு தவறாகப் பதிவு செய்தார்கள். ஆனால், அப்படியல்ல. மாண்புமிகு அவை முன்னவர்தான் அந்தத் தீர்மானத்தை முதலில் இங்கு வந்து நாம் உட்கார்ந்தவுடன், சட்டப் பேரவைத் தலைவர் அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டவுடன், அவை முன்னவர் எழுந்து, "சட்டமன்றப் பேரவை விதி 68-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்குவதற்கான தீர்மானத்திற்கு 14 நாட்கள் முன்னறிவிப்பு அளிக்க வேண்டுமென்ற விதியினை தளர்த்தி" என்று சொல்லித்தான் முனைவர் தம்பிதுரை அவருடைய தீர்மானத்தை முன்மொழிந்தார்களேயொழிய, நாங்கள் முன்மொழியவில்லை. முன்மொழிந்து அதையும் பேரவைத் தலைவர் ஓட்டெடுப்புக்கு எடுத்து "ஏற்போர் ஆம் என்க, மறுப்போர் இல்லை என்க" என்று சொல்லி அந்தத் தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னால், அவர் இருக்கையைவிட்டு கீழே இறங்கி, நீங்கள் வந்து உட்கார்ந்தவுடன், நீங்கள் அதை உடனே எடுத்துக்கொண்டு, "யாரெல்லாம் ஆதாவு தெரிவிக்கின்றீர்கள், 35 உறுப்பினர்கள் இருக்கின்றீர்களா" என்று சொன்னதற்குப் பின்னால்தான் நாங்கள் எழுந்து நின்றோம். என்னுடைய உரையின்போதே அதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். "14 நாட்கள் முன்னறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டுமே ஏன் நீங்கள் அளிக்கவில்லை" என்றுகூட அதில் பதிவாகியிருக்கின்றது.



ஆகவே, நாங்கள் அந்தத் தீர்மானத்தை முதலில் முன்மொழியவில்லை. விதியைத் தளர்த்தித்தான் அவை முன்னவர் முன்மொழிந்தார். அந்த விதியைத் தளர்த்துவதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்திலேயோ, சட்டப் பேரவை விதிகளிலோ இடமில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய மாறுபாடு காரணமாக நான் இப்போது பேசவில்லை. விளக்கம் சொல்வதற்காகப் பேசுகிறேன். விதியைத் தளர்த்துவது என்பது எதற்காக என்றால், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் 14 நாட்களுக்கு முன்னர் எடுக்கக் கூடாது என்ற ஒரு தவறான கருத்தில் இருந்தார்கள். 14 நாட்களுக்கு முன்னர் எடுக்கக் கூடாது என்ற கருத்துக்கு இந்த விதியையே காரணம் காட்டினார்கள், 14 days notice என்பதை. அவர்கள் அப்படியொரு ஐயுறவான நிலைமையை ஏற்படுத்திய காரணத்தினால், விதியையும் தளர்த்திவிட்டால், அப்படியே 14 நாட்கள் notice கொடுத்து அதற்குப் பின்னர்தான் எடுக்க வேண்டுமென்று அவர்கள் கட்டாயப்படுத்துவதாக இருந்தால், ஒருவேளை அப்படி அவர்கள் கட்டாயப்படுத்தி, அதன் காரணமாக பிரச்சினை வருமானால், விதியை நான் தளர்த்துகிறேன் என்று முன்னவர் என்ற முறையில், இந்த அவையில் முன்மொழிந்து, அவையில் நிறைவேற்றி விதியைத் தளர்த்தினேன். நான் தளர்த்தியதற்குப் பின்னரும், நீங்கள் விதியைத் தளத்தினாலும் நாங்கள் எப்போது வேண்டுமானாலும் கொண்டு வரலாம். விதியைத் தளர்த்தியதும் உடனே கொண்டு வர வேண்டுமென்ற கட்டாயமில்லை என்று நான் கூறியிருக்கலாம். விதியைத் தளர்த்தினேன் 14 நாட்கள் என்பது கட்டாயமில்லை என்று. அதை இந்த அவை ஏற்றுக்கொண்டது. நீங்கள் விதியைத் தளர்த்தினீர்கள் எங்களுக்கு அதில் உடன்பாடில்லை, நாங்கள் பின்னர்தான் தீர்மானத்தைக் கொண்டு வருவோம் என்றால், எழுந்திருக்க மறுத்திருக்க வேண்டும். எழுந்து வாக்களித்து தீர்மானத்தை இங்கே முன்மொழிந்து அதனுடைய விளைவை ஏற்றுக்கொண்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் சொன்னோம். ஆனால், யாரும் கேட்டுக்கொள்ளவில்லை. சர்வாதிகாரப் போக்கோடு அன்றைக்கு சபாநாயகர் நடந்துகொண்டார் என்பதைத் திரும்பத் திரும்ப பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சர்வாதிகாரப் போக்கல்ல.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, இல்லை, வாக்கெடுப்பு என்பது சர்வாதிகாரத்திற்கு அடையாளம் அல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களால் முன்மொழியப்பட்ட (குறுக்கீடுகள்) எல்லாம் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ஒரு நிமிடம் உட்காருங்கள்.

"மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன் அவர்களைப் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது" என்ற அ.தி.மு.க. துணைத் தலைவர் ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம்.

எனவே, தீர்மானம் தோல்வியுற்றது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அதாவது, தீர்மானம் பேரவையில் மறுக்கப்படுகிறது என்பதை அறிவிக்கிறேன். பேரவைத் தலைவர் தனது பணியைத் தொடர்ந்து ஆற்றலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

After defeating the resolution, there won't be any Point of Order. My ruling is permanent. Thiru D. Jayakumar, I will not allow you to raise any Point of Order.

(மாண்புமிகு பேரவைத் தலைவர், பேரவைத் தலைவரது இருக்கையில் வந்து அமர்ந்தார்.) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(அ.இ.அ.தி.மு.க. மற்றும் ம.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)



பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே, அ.இ.அ.தி.மு.க.-வினர் அரசியல் உள்நோக்கத்தோடு, வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியைக் கருத்திற்கொண்டு, ஒரே வருடத்தில் இரண்டு முறை என்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளார்கள். அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனெனில், அவர்கள் ஒவ்வொரு தடவையும் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரும்போதும், என் ஊனினும், உயிரினும் மேலாக நான் மதிக்கும் என் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) என் தாயினும் மேலாக என்னிடம் அன்பு பாராட்டி, என்னிடம் கொண்டுள்ள பேரன்பினாலும், நம்பிக்கையினாலும், என்னை உளமார வாழ்த்தவும், ஒவ்வொரு தடவையும் என்மீது நம்பிக்கை வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அவை முன்னவர் ஆகியோர் எனக்குப் பாராட்டினையும், வாழ்த்தினையும் வழங்குவதற்கு நீங்கள் காரணமாக இருந்து இருக்கிறீர்கள். என்மீது பாசமும், நேசமும், நம்பிக்கையும் கொண்ட என் ஒப்பற்ற தலைவர், என்னை 19-5-2006 அன்று இந்த நாற்காலியில் அமர வைத்தபோது, தமிழ்நாடு ஒரு ஜனநாயகத் தோட்டம் என்பதை இந்த நாட்டிற்கு, இந்த உலகத்திற்கு அறிவிக்க அனைவருக்கும் உதவிட வேண்டும் என வாழ்த்தினார்கள். அந்தவகையிலே, சபையினுடைய ஜனநாயகத்தைக் காக்க, கட்சி பேதமின்றி, எந்த பாரபட்சமுமின்றி இந்த அவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சியினர் சபையை முறையாக நடத்துவதற்கு ஒத்துழைக்காமல், அவை நடவடிக்கைக்குக் குந்தகம் ஏற்படும்வகையில் நடந்துகொள்ளும் சூழ்நிலையிலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாற்றுக் கட்சியினர் தங்களது குற்றச்சாட்டுகளையும், கண்டனங்களையும் பதிய வைக்க வாய்ப்பு அளித்து, ஜனநாயகபூர்வமாக இந்த அவையை நடத்த அறிவுறுத்துவார்கள். இப்போது தமிழக சட்டமன்றம், பிற மாநிலங்களுக்கு, ஏன், இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் இந்தியத் துணைக் கண்ட வரலாற்றில், ஜனநாயக நெறிகளைக் கட்டிக் காத்து, இன்று தமிழக வரலாற்றிலேயே அழியாத புகழுக்கும், சிறப்புக்கும் உரியவராகி, இன்றையதினம் சட்டமன்றத்தில் பொன்விழா கண்டு, ஏழை எளியோர்களின், ஒடுக்கப்பட்ட, ஆதிதிராவிட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, அய்யன் திருவள்ளுவரின் கோட்பாட்டிற்கிணங்க தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துவரும் நம் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருவர்தான் என்பதே காரணம். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்மை நம்பி வாக்களித்த மக்களுக்கு, அவர்களது நம்பிக்கை வீணாகாமல் அவர்களது நலன்களை அனுதினமும் எண்ணி எண்ணி உருகி, அவர்களுடைய தேவைகளை அறிந்து, அவர்கள் நலனுக்காக சட்டமன்றத்தில் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் இன்றையதினம் நமது ஒப்பற்றத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-15*

இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் இதனைக் கொண்டு வந்ததற்காக பல்வேறு காரணங்களைக் கூறியுள்ளார்கள். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் முதலமைச்சராகப் பணியாற்றியவர், அவர் சென்ற ஆட்சியில் அவையில் உட்கார்ந்திருந்த விதமும் சரி, அவர் ஆட்சி செய்த போதும் சரி, அவரது தலைவியின் கண் அசைவுப்படி ஒரு ரோபோ போல எவ்வாறு செயல்பட்டார் என்பது உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். ஆனால், நான் இந்தச் சபையிலே பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்ற பின்பு எந்தக் கண் அசைவுக்கும், யாருடைய சைகைக்கும் செவி சாய்க்காது, நடுநிலையோடு சுதந்திரமாகச் செயல்பட்டு வருகிறேன். எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த அவையிலே பேசுவதற்கு, கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொண்டு வருவதற்கு மாற்றுக் கட்சியினருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு உள்ளது. பல வேளைகளில் நேரத்தின் அருமை கருதி, பேசும் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து உள்ளேனே தவிர, எதிர்க்கட்சி நண்பர்கள் பேச அதிகமான வாய்ப்பு அளிக்கப்பட்டு உள்ளது. எதிர்க்கட்சியினர் கொடுத்துள்ள எல்லா அறிவிப்புகளையும் எடுத்துக்கொள்ள இயலாது. விதிகளுக்கு உட்பட்டுத்தான் செயல்பட இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் அமர்ந்து இருக்கின்ற இந்த அவையில் எதிர்க்கட்சிகளும் அல்லது மற்றக் கட்சியைச் சார்ந்த நண்பர்களும் தங்களுடைய ஜனநாயகக் கடமையை முழுமையாக ஆற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு விவாதத்தில் கலந்து கொள்வதற்கு உரிய வாய்ப்பினை அளித்து வந்திருக்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் அவர்களது எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டால், மற்ற கட்சிகளுக்கு அளித்துள்ள வாய்ப்புகளைவிட, அவர்களுக்கு மிக அதிகம் என்பது மிகத் தெளிவாகத் தெரியும். ஆனால், சில எதிர்க்கட்சிகள் பேசுவதை எல்லாம் பேசிவிட்டு, வெளிநடப்புச் செய்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்கள். இங்கே



இருக்கக்கூடிய எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் என்னை உளமாரப் பாராட்டி என்மீது நம்பிக்கை வைத்து உரையாற்றினார்கள். அவர்களுக்கு எல்லாம் எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் என்னை உளமாரப் பாராட்டி என்னுடைய பண்புகளை எல்லாம் எடுத்துச்சொல்லி, அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு தகுதி படைத்தவனாக இந்த அவையிலே நடுநிலை தவறாது இந்த அவையை நடத்துவேன் என்று என்பால் நம்பிக்கை கொண்டு உரையாற்றியுள்ளார்கள். அதன் அடிப்படையில் இந்த அவையை நடுநிலை தவறாது நடத்துவேன் என்று உறுதி கூறுகிறேன். இந்த நிகழ்ச்சியிலே என்னை வாழ்த்திப் பாராட்டி என்மீது நம்பிக்கை வைத்து அ.இ.அ.தி.மு.க. கட்சியின் சார்பாக கொண்டு வரப்பட்ட அந்தத் தீர்மானத்தை தோல்வி அடையச் செய்த தோழமைக் கட்சித் தலைவர்கள், தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் நடுநிலை தவறாது இதை நடத்துவேன் என்று உறுதிகூறி முடிக்கின்றேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. உரிமைப் பிரச்சினை

### தமிழ் முரசு பத்திரிகைமீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10-5-2007 நாளிட்ட தமிழ் முரசு பத்திரிகை தவறான செய்தியை வெளியிட்டதாகக் கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், முனைவர் கு. ஜெயக்குமார், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. கோவை தங்கம் ஆகியோர் அவை உரிமை மீறல் அறிவிப்பு ஒன்றை 12-5-2007 அன்று கொடுத்துள்ளார்கள். இப்பிரச்சினை குறித்து சுருக்கமாக அவையில் பேச அனுமதிக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள், மற்ற உறுப்பினர்களும் அவர்களுடைய அந்த கோரிக்கையோடு இணைந்து கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-20*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக சட்டமன்றம் என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க

ஒரு சட்டமன்றம். இந்த அவைக்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன. இந்த அவையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று சில உரிமைகள் இருக்கின்றன. அவையின் உரிமைகளையும், அதேபோல அவை உறுப்பினர்களுடைய உரிமைகளையும் பாதுகாக்கவேண்டிய ஒரு கடமை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு உண்டு. அந்த வகையில் எங்களுடைய உரிமைகளை, இந்த அவையினுடைய உரிமைகளை எல்லாம் பாதுகாக்க வேண்டும் என்கிற நிலைப்பாட்டோடு ஒரு கருத்தை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, பத்திரிகைகளை அதிகமாக மதிப்பவர்கள் நாங்கள். ஜனநாயகத்தினுடைய நான்காவது தூண் என்று சொல்லப்படுகிற அந்தப் பத்திரிகைத் துறைக்கு நாங்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ, எவ்வளவு மதிப்புக் கொடுக்க வேண்டுமோ, அவ்வளவு மதிப்பையும் கொடுத்து நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில், இந்த அவையில் சொல்லப்படக் கூடிய கருத்துகளை எந்தப் பத்திரிகையும் திரித்து வெளியிடக்கூடாது என்பதுதான் மரபு. சில நிகழ்ச்சிகள் இங்கே அவைக் குறிப்பிலே ஏறுகிறபோது அது parliamentary முறைக்கு கொஞ்சம் மாறாக இருக்குமேயானால், அல்லது un-parliamentary word-ஐ யாராவது உபயோகப்படுத்திவிட்டால், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும், அவை பத்திரிகையிலே வெளிவரக் கூடாது என்று பல தீர்ப்புகளிலே நாம் இந்த அவையிலே சொல்லியிருக்கிறோம். இப்படி, பத்திரிகைகள் இங்கே நடைபெறக்கூடிய நிகழ்வுகளை அட்சரம் பிறழாமல் அப்படியே வெளியிடுவதுதான் மரபு, அதுதான் விதி, அப்படித்தான் நடைபெற வேண்டும். ஆனால், இங்கே *9-5-2007* ஆம் தேதி மதுரையிலே தினகரன் நாளிதழ் அலுவலகத்தை சிலபேர் தாக்கியபோது, சிறிது கூட்டம் அங்கே சென்று, சிறிதுநேரம் ஆர்ப்பாட்டம் செய்து, தினகரன் இதழைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுக் கலைந்து சென்றார்கள். அந்தத் தீ மற்றும் புகையிலே சிக்கி தினகரன் அலுவலக ஊழியர்கள் கோபிநாத், வினோத் மற்றும் முத்துராமலிங்கம் ஆகியோர் மூச்சுத் திணறி இறந்தார்கள். இதுசம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் ஆலடியான் கொடுத்த புகாரின்பேரில் ஒத்தக்கடை காவல் நிலையக் குற்ற எண் *226/2007* பிரிவு *147, 148, 120 (பி), 449, 302, 307, 436, 332,* இ.த.ச.-படியும், Section (4) and (5) of Explosives Substances Act and Section (4) of the Tamil Nadu Property (Prevention of Damage and Loss) Act, 1992-படியும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.





பின்னர், இது சம்பந்தமாக தினகரன் நாளிதழ் செய்தி ஆசிரியர் முத்துப்பாண்டியன் கொடுத்த புகாரும் இத்தோடு சேர்த்து விசாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வழக்கில் டைகர் பாண்டி, பாட்சா, சரவணன், மாரி மற்றும் பிரபு ஆகிய ஐவர் இதுவரை தனிப் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எதிரிகள் பயன்படுத்திய TATA Sumo TN 58 Y 6066 பதிவு எண் கொண்ட வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது. இவ்வழக்கின் மற்ற எதிரிகளைக் கைது செய்ய 6 தனிப் படைகள் அமைக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று கூறிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், கடைசியாக இந்த அவையிலே பதில் சொல்கிறபோது— இந்தச் சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சி, அதேபோல பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் என்ற அத்துணை கட்சிகளும் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக அன்று எடுக்கப்பட்டு, அந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பிற்குப் பதிலளித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைச் சொல்லும்போது—"இந்த நிகழ்வுகளிலே என்னுடைய குடும்பத்தையும் சம்பந்தப்படுத்தியிருக்கிற நிலையில், இந்த வழக்கை தமிழக போலீசார் விசாரிப்பதற்குப் பதிலாக, மத்திய அரசின் புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ.-யைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டுமென்று முடிவெடுத்து, மதுரையில் தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டது குறித்தும், மூன்று பேர் இறந்தது குறித்தும் சி.பி.ஐ.-யைக் கொண்டு விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கிறேன். தமிழக அரசின் சார்பில் சி.பி.ஐ. விசாரணை கோரி, உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், மத்திய அரசுக்கும் தலைமைச் செயலாளர் மூலமாகக் கடிதம் எழுதப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று இங்கே அவர்கள் பதிலாக இந்த அவையிலே சொன்னார்கள். இதுமட்டும்தான் பத்திரிகைகளிலே வந்திருக்க வேண்டும்.

*பிற்பகல் 1-25*

*10-5-2007* ஆம் தேதி அன்று வந்த தமிழ் முரசு பத்திரிகையிலே தலைப்புச் செய்தியாகவே "அழகிரி நடத்திய படுகொலைகள்—C.B.I. விசாரிக்கும், சட்டசபையில் முதல்வர் அறிவிப்பு" என்று வந்திருக்கிறது. இதைப் பார்க்கிறபோது அழகிரி நடத்திய படுகொலைகள்—C.B.I. விசாரிக்கும் என்று முதல்வர் அவர்களே அதை அப்படியே ஒரு செய்தியாக இந்த அவையிலே பதிந்ததுபோல் இருக்கிறது. அதேபோல், உள்ளே, அது தொடங்குகிறபோதே "மதுரை தினகரன் அலுவலகத்தில்

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மே 14

அழகிரி ஏவி விட்ட ரவுடிக் கும்பல் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் மூன்று ஊழியர்கள் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக C.B.I. விசாரணைக்கு உத்தரவிடப்படுவதாக சட்டசபையில் முதல்வர் கருணாநிதி இன்று தெரிவித்தார்" என்று வருகிறது. ஆகவே, இங்கே சபையில் எழுப்பப்பட்ட பிரச்சினைக்கு முதல்வர் என்ன பதில் அளித்தாரோ அது மட்டுமேதான் பத்திரிகைகளிலே வந்திருக்கவேண்டுமேயொழிய, அதற்கு மாறாக, தலைப்புச் செய்தியாகவே "அழகிரி நடத்திய படுகொலைகள் – C.B.I. விசாரிக்கும், முதல்வர் அறிவிப்பு" என்று வந்திருக்கக்கூடிய செய்தி, திரித்து சொல்லப்பட்டிருக்கிற ஒரு செய்தி. இது அவை உரிமையை மீறிய ஒரு செய்தி. இந்த அவை உரிமை மீறல் நிகழ்ச்சிக்கு நீதி வேண்டும் என்று நாங்கள் கோருகிறோம்.

காரணம், நானேகூட சென்ற கூட்டத்தொடரின்போது, மாலை மலர் என்ற பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டபோது, திரித்து வெளியிட்டதை நான் இந்த அவையிலே சொன்னபோது, அதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவரே ஒரு பத்திரிகையாளர் என்கிற காரணத்தினாலே பெருந்தன்மையோடு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டாம், எச்சரித்து விட்டுவிடுவோம் என்று அவர்கள் ஒரு பதிலைச் சொன்னார்கள். ஆனால், அன்றிலிருந்து நானும், நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் கோவிந்தசாமி அவர்களும், அதேபோல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் துரை சந்திரசேகரன் ஆகிய நாங்கள் மூன்று பேரும் கொடுத்தோம் என்பதற்காக எங்களுடைய பெயர்களையே அந்த மாலை மலர் பத்திரிகையும், அதேபோல தினத்தந்தி பத்திரிகையும் அன்றிலிருந்து இன்று வரை வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்துகொண்டிருக்கிறது. எங்களுடைய படங்கள் ஏதாவது வந்தாலும், படங்களையெல்லாம் அப்படியே cut செய்துவிட்டு மற்றவர்கள் படத்தைப் போடுகிறார்கள். நேற்றுகூட, ஒன்பது V.A.O.-க்கள் எங்களுடைய வேலூரை சார்ந்தவர்கள் விபத்திலே இறந்துபோனார்கள். அதுகுறித்து அவர்களுக்கு நிதி வழங்குகிற ஒரு நிகழ்ச்சியை நாங்கள் வேலூரிலே ஏற்பாடு செய்து இறந்துவிட்ட அந்த V.A.O.-க்கள் படத்தையெல்லாம் திறந்துவைத்தேன். அதாவது 'விபத்தில் இறந்துபோன V.A.O.-க்கள் படத்திறப்பு நடைபெற்றது' என்று மட்டும்தான் செய்தி வருகிறது.

அதேபோல, பொதுக் கணக்குக் குழுத் தலைவராக சில மாவட்டங்களுக்குச் சென்று நான் ஆங்காங்கே ஆய்வுகளை



2007 மே 14] [திரு. சி. ஞானசேகரன்]

நடத்துகிறபோது, 'பொதுக் கணக்குக் குழுத் தலைவர் ஞானசேகரன்' என்றெல்லாம் வரவே வராது. 'ஒரு குழு வந்தது. சட்டசபைக் குழு இவை எல்லாவற்றையும் விசாரித்தது' என்று வரும். இப்படித்தான் மொட்டைத்தாத்தன் குட்டையிலே விழுந்தான்' என்பதுபோல, சில செய்திகளை வெளியிட்டு இப்படி இருட்டடிப்பு - ஏனென்றால் செய்தி என்பது உண்மையாக North, East, West, South என்று இருக்கக்கூடிய நான்கு பக்கங்களிலும் நிகழக்கூடிய செய்திகளை அப்படியே பிரதிபலிப்பதுதான் ஒரு செய்தியாக இருக்கவேண்டுமேயொழிய, சில செய்திகளை, கோவிந்தசாமி என்ன பாவம் செய்தார், அதேபோல துரை சந்திரசேகரன் என்ன பாவம் செய்தார், இந்த அவையினுடைய மரபுகளை எடுத்துச்சொல்லி இப்படித்தான் செய்திகளில் வெளியிடவேண்டும், இந்த அவையினுடைய உரிமை காப்பாற்றப்பட வேண்டும் என்று நாங்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கிறபோது, எங்களைப் பழிவாங்குகிற ஒரு செயலும் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுடைய உரிமையைக் காப்பாற்ற வேண்டிய கடமை உங்களுக்கு இருக்கிறது, அதேநேரத்தில் அவையினுடைய உரிமையையும் காப்பாற்ற வேண்டிய கடமை இருக்கிறது. ஆகவே, பத்திரிகைகளை நாங்கள் முழுமையாக மதிக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட விதிகளை எடுத்துச் சொல்கிறபோது, மரபுகளை எடுத்துச்சொல்கிறபோது, எங்களுக்கும் தமிழ் முரசு நாளிதழுக்கும் என்ன பகை? அவர்கள் என்ன மாமனா, மச்சானா அல்லது என்னுடைய பங்காளியா, கிடையாது. அல்லது மாலை மலர் பத்திரிகையோ, தினத்தந்தி பத்திரிகையோ நேரடியாக அவர்களிடம் எங்களுக்கு எந்தவித விரோதமும் கிடையாது. இந்த அவையினுடைய மரபுகளையும், விதிகளையும் நாங்கள் சொல்லி, இப்படித்தான் இது நடைபெறவேண்டும், இதுதான் ஜனநாயகம் என்று நாங்கள் சொல்கிறபோது, எங்களைப் பழிவாங்குவதற்காகவே இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தி பத்திரிகைகள் இப்படி நடந்துகொள்வது ஒரு நல்ல மரபல்ல; பத்திரிகைகள் இனி இப்படியெல்லாம் செயல்படக்கூடாது என்கிற ஒரு தீர்ப்பை தாங்கள் வழங்கி எங்களுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும்; இந்த அவையினுடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும். ஆகவே, இப்படித் தவறு செய்கின்றவர்கள்மீது தாங்கள் நடவடிக்கை எடுத்தாவது இந்த அவையினுடைய உரிமையையும், அதேபோல சட்டமன்ற உறுப்பினருடைய உரிமையையும் பாதுகாக்க வேண்டும் என்று இந்த அவையின் சார்பாக நான் கொண்டுவந்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பிரச்சினையில் மேலெழுந்த வாரியாக உரிமை மீறல் இருப்பதாகத் தெரிவதால், பேரவை விதி 226-ன் கீழ் இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடுகள்)

அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு. . . (குறுக்கீடுகள்)

## 4. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே ஆந்திர அரசு. . .

**திரு. ஜி.கே. மணி:** காவிரிப் பிரச்சினை இருக்கிறது, சிமெண்ட் விலை உயர்வுப் பிரச்சினை, பாலாறு பிரச்சினை; முக்கியமான பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. ரொம்ப முக்கியமான பிரச்சினைகள். ஏனென்றால், பேரவை இன்றைக்கு முடிகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது குறித்து நாங்கள் பேசாமல் இருந்துவிட்டால், நாங்கள் அப்படியே இருந்துவிட்டோம் என்ற ஒரு தவறான செய்தி நாளைக்கு வரும். நாங்கள் பதில் சொல்லவேண்டிய நிலைமைக்கு ஆளாவோம். ஆகவே. . .

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ரொம்ப முக்கியமான பிரச்சினைகள். இன்றோடு பேரவை முடிவடைகிறது. ஆகவே, முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** கொஞ்ச நேரம் ஆனாலும் தயவுசெய்து எடுத்துக்கொள்ளுங்கள் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சுருக்கமாகக்கூட முடித்துவிடுகிறோம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு

### ஒகேனக்கல் அருவியின் மேல் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒகேனக்கல் அருவியின் மேல் பகுதியில், கர்நாடக மாநில எல்லைக்குள், காவிரி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணியில், கர்நாடக அரசு ஈடுபட்டுள்ளதால், ஏற்பட்டுள்ள நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க.-வின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. ராம. சுப்புராம், திரு. அருள் அன்பரசு, திரு. விடியல் எஸ். சேகர், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. வீர. இளவரசன் ஆகியோர் விதி 56 மற்றும் 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதை சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடு)

ஒரு நிமிடம். அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு ஓ. பன்னீர்செல்வம், திரு கே.ஏ. செங்கோட்டையன், திரு டி. ஜெயக்குமார், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அவையில் இல்லை. ஆகவே, அடுத்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன் அவர்கள் உரையாற்றலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு வந்து, தமிழகத்திற்கு ஒரு விடிவு காலம் பிறந்து விடும்; தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீரின் அளவு கிடைத்து, தமிழகம் சுபிட்சமாக மாறிவிடும் என்றெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், இப்போது ஒகேனக்கல்லிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் கொள்ளேகால் பகுதியில் கர்நாடக அரசு காவிரி ஆற்றின் குறுக்கே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம், உட்காருங்கள்.

## 6. அறிவிப்புகள்

### (அ) சட்டமன்றத்தில் கலைஞரின் பொன்விழா நிகழ்ச்சியினையொட்டி உறுப்பினர்களுக்கு நினைவுப் பரிசு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பொன்விழா நாயகன் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் "சட்டமன்றத்தில் கலைஞரின் பொன்விழா" நிகழ்ச்சியினையொட்டி, பொன்விழா நினைவுப் பரிசாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு brief case, பொன்விழா மலர் மற்றும் கைக் கடிகாரம் வழங்கப்படவிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) உறுப்பினர்கள் இந்த நினைவுப் பரிசுகளை சட்டமன்றப் பேரவைச் செயலாளரின் அறையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்விழா நினைவாக ஒரு brief case-ஐ, அதேபோல மலரையும் ஒரு கடிகாரத்தையும் கொடுத்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விழாக் குழு கொடுத்திருக்கிறது. விழாக் குழுவே இதைக் கொடுக்கிறபோது, பொன்விழாவைச் சந்தித்து இன்று பெருமையோடு இந்த அவையிலே வீற்றுக் கொண்டிருக்கிற பொன்விழா நாயகர், நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில கோரிக்கைகள் இருப்பதை அவர் அறிவார்கள். சில நேரத்தில் குனிந்து கொண்டு அவர் எழுதிக் கொண்டு இருந்தாலும்கூட, இந்தப் பக்கம் நீங்கள் பார்க்காவிட்டாலும்கூட, (சிரிப்பு) எங்களுக்கென்று சில கோரிக்கைகளை நாங்கள் ஏற்கெனவே பதிவு செய்திருக்கிறோம். பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திராவிலே வாகனப்படி ரூ.15,000/- கொடுக்கிறார்கள். மகாராஷ்டிராவிலே, வாகனப் படி 15,000 ரூபாய் கொடுக்கிறார்கள். நாங்கள் அவ்வளவு கேட்கவில்லை. நீங்கள் 10,000 ரூபாய் குறைத்துக் கொண்டு, 5,000 ரூபாய் வாகனப் படியும், அதேபோல ஐதாராபாத், பெங்களூரிலே இருப்பதுபோல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாங்கள் சோழிங்கநல்லூரில் வீட்டு மனை கேட்டிருந்தோம். அன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடையிலே சென்று விட்டார்கள். ஆனால், இன்று பொன்விழாவைக் கண்டு, இன்று நாங்கள் எல்லாம் மகிழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இந்த வேளையில், பொன்விழா நினைவாக ஒரு சட்டமன்ற வளாகத்தையே நீங்கள் கூடிய விரைவிலே அடிக்கல் நாட்டு விழாவை நடத்தி, சிறப்பாக நடத்துகிற வேளையில், எங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று கடைசி நாள் இந்த 13-வது சட்டமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடருக்கு. ஆகவே, இந்த நாளில் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை தாங்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-35*

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### ஒகேனக்கல் அருவியின் மேல் பகுதியில் காவிரி ஆற்றின் குறுக்கே கர்நாடக அரசு தடுப்பணை கட்டுவது—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** இப்போது ஒகேனக்கலுக்கு நான் போகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதேபோன்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் காவிரி ஆற்று பிரச்சினை பற்றியும், காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு பற்றியெல்லாம் இங்கே பல நாள் பேசினார்கள். ஏற்கெனவே பல அணைகள் கர்நாடகாவிலே கட்டப்பட்டு, இப்பொழுது நீர்வரத்து என்பது நம்முடைய மேட்டூர் அணைக்குக் குறைந்திருக்கிறது. இப்பொழுது நீர்வரத்து மிகவும் குறைந்து விட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இப்பொழுது கடந்த இரண்டு மாதங்களாக கொள்ளேகால் என்கிற இடத்திலே ஒகேனக்கல்லில் இருந்து 15 கிலோ மீட்டர் தள்ளி கர்நாடக அரசு ஒரு தடுப்பு அணையைக் கட்டிக்கொண்டிருக்கிறது என்கிற செய்தி இன்று நமக்கெல்லாம் வருத்தத்தையும், உண்மையிலேயே நமக்கு ஒரு பேரிடியையும் தந்திருக்கிறது. தமிழக அரசு அதைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை இதுவரை எடுத்திருக்கிறது? நம்முடைய முதல்வர் அவர்கள் கர்நாடக அரசோடு பேசியிருக்கிறார்களா அல்லது பொதுப் பணித் துறை அமைச்சர் பேசியிருக்கிறார்களா? ஏனென்றால் இது நதி நீர்ப் பிரச்சினை. பல மாநில நதி நீர்ப் பிரச்சினை என்று வருகிறபோது அவர்கள் அந்த உடன்படிக்கையை மீறி அப்படிக் கட்டவே முடியாது கட்டக்கூடாது. ஆனால், யாருக்கும் தெரியாமல் திருட்டுத்தனமாக இப்பொழுது அவர்கள் ஒகேனக்கல்லில் இருந்து 15 கிலோ மீட்டர் தள்ளி, காட்டுப் பகுதியிலே ஓர் அணையை அவர்கள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு மாதங்களாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒன்று. அதுவும் வனத் துறைப் பகுதியிலே கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வனத் துறை அதற்கு அனுமதி அளித்திருக்கிறதா? அல்லது நம்முடைய

தமிழக அரசு அதைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏதாவது முயற்சி செய்திருக்கிறதா இப்படி நீர்வரத்து முழுக்க முழுக்கக் குறைந்து போய், இன்று மேட்டூர் அணையே வற்றிப் போய் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி ஒரு நிலை வருமேயானால் எதிர்காலத்தில் தமிழகமே வறண்டு போகக்கூடிய ஒரு நிலை வந்துவிடும். ஆகவே, இதை உடனடியாகப் போர்க்கால அடிப்படையிலே தடுத்து நிறுத்துவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களோ, பொதுப் பணித் துறை அமைச்சரோ என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்?

அதேபோல பாலாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கும் இப்போது முயற்சிகள் அதிகமாக எடுத்துக் கொண்டு நாள் குறித்து விட்டார்கள். அங்கே உச்ச நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய வழக்கில் என்ன தீர்ப்பு வந்திருக்கிறது; தடையாணையை இங்கே அரசு பெற்றிருக்கிறதா என்பதையும் கேட்டு, நான் இத்தோடு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை என்பது தமிழ்நாட்டினுடைய உயிர் நாடிப் பிரச்சினை. நம்முடைய உரிமைப் பிரச்சினை. இந்த காவிரிப் பிரச்சினையில் காவிரி நடுவர் மன்றம் இடைக்காலத் தீர்ப்பினை வழங்கி, இடைக்காலத் தீர்ப்பின்படி நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம். அந்த நீரை வழங்கமாட்டோம் என்று கர்நாடக மாநில அரசு அடம் பிடித்து வந்தது. அதற்குப்பிறகு, நீண்ட இடைவெளி கழித்து நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு வந்தது. இறுதித் தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ளாமல், உச்ச நீதிமன்றத்தையும் மதிக்கமாட்டேன், நடுவர் மன்றத்தையும் மதிக்கமாட்டேன் என்று சொல்லி, மேலும் முறையீடு செய்து கொண்டு நமக்குத் தண்ணீர் விட மறுத்துக் கொண்டிருக்கிற இந்த இக்கட்டான, நெருக்கடியான சூழ்நிலையில், கர்நாடகம் மீண்டும் அணையைக் கட்டத் தொடங்கி இருக்கிறது. அங்கே கர்நாடகாவில், கொள்ளேகால் பகுதியில் இருந்து பெங்களூருக்குச் செல்கிற வழியில் சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி இருக்கிறது. இந்த சிவசமுத்திரம நீர்வீழ்ச்சியில் சற்றேறக்குறைய 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கத்தை உருவாக்கி, அங்கே நீர் மின் திட்டம் தயாரிக்கப்பட்டு, அது நிறைவேற்றப்படக்கூடிய சூழ்நிலை இப்பொழுது உருவாகி இருக்கிறது. அதற்குக் கீழே சற்று தொலைவில், வனப் பகுதியில் இப்பொழுது அணை கட்டப்படுவதாகச் செய்தி வந்திருக்கிறது.



அது கூட்டாறு என்று சொல்கிறார்கள். நேற்றுக்கூட நான் தொலைபேசியிலே தொடர்புகொண்டு பேசினேன். அந்தக் கூட்டாறு என்ற பகுதியிலே, வனப் பகுதியில் அணை கட்டப்படுகிறது. அந்த வேலை தொடங்கிவிட்டது என்று ஆதாரபூர்வமான செய்தியை நம்பிக்கையோடு சொன்ன நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் மேலும் அந்த அணை கட்டப்பட்டு விட்டால் தமிழ்நாட்டில் தண்ணீர் வருவது குறைந்துவிடும். இறுதித் தீர்ப்புக்கூட நமக்குக் கிடைக்காமல் போய்விடும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கிறேன்.

அதேவேளையில் காவிரிப் பிரச்சினை, முல்லை பெரியாறு பிரச்சினை, பாலாறு பிரச்சினை என்று சொல்லி, தங்களுக்காக நடைபெற்ற அந்த மிகப் பெரிய விழாவான பொன்விழா நிகழ்ச்சியிலேகூட, எனக்குப் பொன்விழா முக்கியம் அல்ல. பொன்விழாவைவிட நாடு முக்கியம். நாட்டு மக்கள் முக்கியம் என்று சொல்லி, மாண்புமிகு பிரதமரிடத்திலே நீங்கள் கோரிக்கை வைத்துப் பேசினீர்கள். அந்தப் பேச்சு என்பது தாங்கள் வைத்திருக்கிற உணர்வு, நாட்டு மக்களை வாழ வைக்கக்கூடிய உணர்வுதான் என்பதை நாங்கள் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுடைய கோரிக்கையைப் பிரதமர் அவர்களும் ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்படி நல்ல சூழ்நிலை உருவாகி இருக்கிற இந்த வேளையில், பிரதமரிடத்திலே எடுத்துச் சொல்லி, மத்திய அரசை வலியுறுத்தி, கர்நாடக அரசு கட்டக்கூடிய அந்தத் தடுப்பணையைத் தடுத்து நிறுத்த வேண்டும். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன் வைக்கிறேன்.

அதைப்போல, கர்நாடகா பிரச்சினை மேற்குப் பகுதியிலே, வடக்குப் பகுதியிலே பாலாறு பிரச்சினை. ஆந்திரா அரசு இதுவரையிலே அங்கே இல்லை, இல்லை என்று சொன்ன நிலைமை எல்லாம் மாறி, இப்பொழுது பணி தொடங்க இருக்கிறது. அந்தப் பணிக்கு அடிக்கல் நாட்டு விழா என்பது வெளிப்படையாக இல்லாமல், அமுக்கமாக நடைபெற இருக்கிறது. ஆகவே, நாளை, நாளை மறுநாள் அல்லது இன்றோகூட நடைபெறலாம் என்ற நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே நீதிமன்றத்திலே, உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடங்கப்பட்டிருந்தாலும்கூட, இதையும் மீறி அவர்கள் அணை கட்டத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே பாலாற்றிலே ஆந்திரா அணை கட்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைத்து அமர்கிறேன்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினையிலே நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு வழங்கியதற்குப் பின்னாலும் தொடர்ந்து கர்நாடக அரசு இப்படிப்பட்ட அடாவடித்தனமான நடவடிக்கைகளிலே ஈடுபட்டுக்கொண்டே இருக்கிறது. ஒகேனக்கல் பகுதி வரையிலும் அவர்கள் அணை கட்டுவதற்கு முயற்சி எடுத்தார்கள் என்று சொன்னால் நமக்கு கிடைக்க வேண்டிய அந்த உரிமையை எல்லா வகையிலும் தட்டிப் பறிப்பதற்குரிய முயற்சியைத் தொடர்ந்து எடுப்பதாகத்தான் அது அர்த்தமாகிறது. ஆகவே, இதைத் தடுத்து நிறுத்துவதற்குரிய முயற்சியை விரைவாக நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நடுவர் மன்றத் தீர்ப்புக்குப் பின்னாலே நம்முடைய மாநில அரசு மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்திருக்கிறது. கர்நாடக மாநில அரசும் செய்திருக்கிறது. ஆனால் திரும்ப நடுவர் மன்றத் தீர்ப்பை மீறி இப்படிச் செய்கிறபோது, இதைத் தடுப்பது யார் என்பதுதான் மிக முக்கியமான கேள்வி. இதிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனக்கு வழங்கப்பட்ட அந்தப் பொன்விழா, பாராட்டு விழா நிகழ்ச்சி, பிரம்மாண்டமான நிகழ்ச்சி. அதிலே அதற்கு நன்றி தெரிவித்து விஷயங்களைப் பேசுகிறபோதுகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகச் சரியாகக் கோரிக்கை வைத்தார்கள் என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. தன்னைப் பாராட்ட வந்த பாரதப் பிரதமர் அவர்களிடத்திலேயும், வழிகாட்டிக்கொண்டிருக்கிற மரியாதைக்குரிய சோனியா காந்தி அவர்களிடத்திலேயும் நமது தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிற பாதிப்புகள் என்ற முறையிலே, அண்டை மாநிலங்களாக இருக்கிற கர்நாடகம், ஆந்திரம், கேரளம், இந்த மாநிலங்கள் தமிழகத்திற்கு வர வேண்டிய அந்த நீரைத் தர மறுக்கிற அந்தக் கொடுமையான நிகழ்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், அதில் மத்திய அரசு உரிய முறையிலே அவசரமாகத் தலையிட்டு தீர்வுகாண வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தார்கள். அதோடு சேர்த்து நதிகளையெல்லாம் தேச உடைமையாக்கி, நதிகளை இணைக்கிற திட்டத்தை விரைவாக நிறைவேற்றச் செய்வதற்கு, அதற்கான தேதியை நிர்ணயித்து, அறிவிப்புகளை வெளியிடச் செய்வதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு தன்னுடைய பொன்விழா நிகழ்ச்சியானாலும், மாநிலத்தினுடைய நலன்



கருதி ஒரு மிக முக்கியமான கோரிக்கையை அந்த நிகழ்ச்சியிலே வைத்த பெருமை நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் சாரும்.

அப்படி சிறப்புக்குரிய வகையிலே கண்ணும்கருத்துமாக இருந்து தமிழ்நாட்டு நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று அந்த நிகழ்ச்சியிலே சொன்னார்கள். ஆகவே நான் இதைத்தான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அவசர முடிவாக, சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் தமிழக அரசிற்கு இருக்கிறது. ஆனால் எல்லா வகையிலும் தலையிட்டு தீர்வுகாண வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. மத்திய அரசாங்கத்தை இதில் விரைவாகத் தலையிடச் செய்ய வைத்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கையும், நியாயத்தையும், தண்ணீரையும் பெற்றுத் தருவதற்குரிய முயற்சி எடுக்கவில்லையென்று சொன்னால், இன்னும் 5 ஆண்டு காலம், 10 ஆண்டு காலத்திற்குள்ளாக, மிகப் பெரிய தண்ணீர்ப் பிரச்சினை பிரச்சினையாக மாறும். அதற்குரிய தீர்வு காண வேண்டிய மிகப் பெரிய போராட்டத்தைத் தமிழகம் சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும். அதை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதையும் தடுப்பதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து ம.தி.மு.க.வைச் சேர்ந்த உறுப்பினர்கள் திரு. இராமகிருஷ்ணன் மற்றும் திரு. வீர. இளவரசன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். ஆனால், அவர்கள் அவையில் இல்லை. அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு)

***திரு. ஞா. ஜான் ஜோசப்:** பாலாறு, (குறுக்கீடு) பாலாறு, காவிரி ஆறு பிரச்சினைகள் போல நெய்யாறு பிரச்சினை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அது வேறு subject. This issue– இதற்கு அமைச்சர் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒகேனக்கல் பகுதியில் கர்நாடக அரசு ஓர் அணை கட்டுகிறது; அந்த அணை கட்டிவிட்டால் தமிழகத்திற்கு வருகிற

தண்ணீரும் குறைந்துபோய்விடும் என்ற அச்சத்தை தமிழகத்தின்பால் இருக்கிற பற்றால், பாசத்தால் தெரிவித்திருக்கிறார்கள். சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினை அப்போதைக்குப்போது எழுப்பப்பட்ட நேரத்திலும், பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்ததும், இதுகுறித்து தமிழக அரசு பொதுப் பணித் துறையின் சார்பில் என்ன நடக்கிறது என்பதை நேரடியாகச் சென்று பார்த்து அரசுக்கு ஓர் அறிக்கை அளிக்கும்படி பொதுப் பணித் துறையில் இருக்கிற தலைமைப் பொறியாளரை நாங்கள் கேட்டுக்கொண்டோம். அதன் அடிப்படையில், நம்முடைய பொறியாளர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று, பார்வையிட்டு, அங்கே என்ன நடக்கிறது என்பதை ஓர் அறிக்கையாகவே தந்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-45

நான் அந்த அறிக்கையைப் படிப்பதற்கு முன்னால் உங்களுக்குத் தெரிவிக்கிறேன்: கொள்ளேகால் to பெங்களூர் போகிற சாலையிலே ஒரு கல் பாலம் இருக்கிறது. அந்தக் கல் பாலத்திற்கு மேற்கே ஒரு கி.மீ. தூரத்தில் ஒரு Power House கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த Power House-லிருந்து தண்ணீரை வெளியே கொண்டுவருவதற்கு ஒரு கொறம்பு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் அணை என்று (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். அணை என்று நமக்கு இந்தப் பகுதியிலே பத்திரிகையிலே வந்திருக்கிறது. அணை கட்ட முடியாது. அணை கட்டுவது என்பது வேறு; கொறம்பு எடுப்பது என்பது வேறு. ஆனால், கொறம்பு என்பது நம் ஊரிலே, வட ஆற்காடு பகுதியிலே சொல்வதென்றால் கசம்பு எடுத்தல். தண்ணீரை ஒரு பகுதிக்குக் கொண்டுவருவது. பாலம், கொள்ளேகால் to பெங்களூர் பாலம். இப்படிப் போனால் அதற்கு மேற்குப் பகுதியில் புதியதாக ஒரு Power House கட்டுகிறார்கள்.

அந்த Power House-லே இருக்கிற தண்ணீரை கீழே கொறம்பு எடுத்துக் கொண்டுவருகிறார்கள். ஏன் கொறம்பு எடுத்துக் கொண்டுவருகிறார்கள் என்றால், இந்தப் பாலத்திற்குக் கீழே ஏற்கெனவே ஒரு சின்ன அணை இருக்கிறது. அந்த அணையிலே தண்ணீரைத் தேக்கி, கீழே சிவசமுத்திரத்திலே, Power House-க்குக் கொண்டு போக வேண்டும். ஆகையினால், புதியதாகக் கட்டுகிற இந்த Power House-லிருந்து தண்ணீரை ஆற்றிலே பரவலாக விடாமல், கொறம்புமூலம் கொண்டுவந்து, பாலத்திற்குக் கீழே இருக்கிற, அந்தச் சிறிய அணையிலே தேக்கி, அதிலேயிருந்து ஒரு கால்வாய்மூலமாக சிவசமுத்திரம் Power House-க்கு தண்ணீரைத் தடங்கல் இல்லாமல் கொண்டுவருவதற்காக அந்தக்



கொறம்பு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்தில், இன்னொரு Power House-ஐயும் அவர்கள் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். Power House-லே தண்ணீர் எடுத்தால் அது மீண்டும் ஆற்றுக்கு வந்துவிடும். ஆகையினால், மாண்புமிகு உறுப்பினர்கள் பயப்படுவதைப்போல, எங்களுடைய பொதுப் பணித் துறை அதிகாரிகள் போய்ப் பார்த்துவிட்டு வந்தபிறகு, தந்திருக்கிற செய்தியைத்தான் நான் இங்கே தெரிவிக்கிறேன். நான் போய்ப் பார்க்கவில்லை. அணை அல்ல, கொறம்பு. அந்த report-ஐ நான் அப்படியே படிக்கிறேன்.

அதாவது, நம்முடைய Secretary-க்கு Chief Engineer அனுப்பியிருக்கிறார். "It is ascertained that one Hydro Electric Power House is under construction at the right bank of Cauvery at one Kilo metre upstream of Kollegal to Bangalore Road crossing at fourteenth Kilo Metre from Kollegal. For letting out the trail race water, a channel is now being formed by bunding inside the course of the Cauvery river in the down stream of the Power House. Again at 2 Kilo Metres downstream of the abovesaid bridge, the river has been divided into two and again it confluences below the Sivasamudhram falls at the fourth Kilo Metre. In the left arm of the river, a small anicut has already been constructed from where a channel is off-taking at the left side for the already existing Sivasamudhram Hydro Electric Power House. Now a new channel is being excavated at the right side off-taking at the above anicut for a new Hydro Electric Power House which is now under construction" என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. அங்கே என்ன நடக்கிறது என்பதை photo எடுத்துக்கொண்டு வந்து காட்டியிருக்கிறார்கள். அந்த photo-வில் அணை அல்ல. கொறம்பு எடுப்பது என்பதை நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையினாலே அணை கட்டப்படமாட்டாது. கட்டினாலும் நாம் அதை எதிர்ப்போம்.

பிற்பகல் 1-50

மூன்றாவதாக, அதைக்கூட நாம் இப்போது Tribunal-லிலே ஒரு Clause சேர்த்திருக்கிறோம். இறுதியாக, வந்த தீர்ப்பில், இனிமேல் எந்த அணையும் கட்டக்கூடாது என்று அந்தத் தீர்ப்பிலே வரவில்லை. ஆகையினால், 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம் இன்னும் உயிரோடு இருக்கிறது என்று இந்தத் தீர்ப்பிலே நீங்கள் சொல்லியிருக்கிற காரணத்தால், இனிமேல் அணை கட்டினால் தமிழகத்தைக் கேட்காமல் கட்டக்கூடாது என்பதை வலியுறுத்த வேண்டுமென்று நாம் இப்போது Tribunal-க்குக் கொடுத்திருக்கிற அந்த Inter-State Water Disputes Act 5 (c)

பிரகாரம் அதையும் நாம் ஒரு Prayer-ஆகப் போட்டிருக்கிறோம். எனவே, இப்பொழுது அல்ல. ஆனால், இவர்கள், நண்பர்கள் சொன்னதைப்போல், முன்பு இருப்பது, National Hydro Power Project பிரகாரம்-N.H.P.C.-யின் Power House-பிரகாரம் அணை கட்டி, தண்ணீரைத் தேக்கி வைத்துக்கொண்டு, நமக்கு விடவேண்டும். ஒகேனக்கல்லில் கட்டுகிறார்கள். ஒகேனக்கல், அதற்கு மேலே ராசிமடல், அதற்கு மேலே மேகதாது, அதற்கு மேலேதான் சிவசமுத்திரம். இப்பொழுது இருக்கிற பிரச்சினை சிவசமுத்திரத்திற்கு மேற்கே. நண்பர்கள் நீங்கள் சொன்னதைப்போல், current எடுப்பதற்காக, மேகதாதுவிலும், ராசிமடலிலும் Power Houses அமைக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை மத்திய அரசு கொடுத்தது. ஆனால், மத்திய அரசு அந்தத் தீர்மானத்தைக் கொடுக்கிறபோது, தமிழகத்தினுடைய மின்சாரத் துறை சார்பில் அணை கட்டினால், மின்சாரம் தரவேண்டும் எங்களுக்கு என்றுகூடக் கேட்டோம். ஆனால், அவர்கள் "மின்சாரத்தை நாங்கள் எடுத்துக் கொள்வோம்; தண்ணீரை மட்டும்தான் நாங்கள் கீழே விடுவோம்" என்று கர்நாடக அரசு பிடிவாதமாக இருக்கிற காரணத்தால், ராசிமடலிலும், மேகதாதுவிலும், அந்த Electric Power House அமைக்கின்ற அந்த வேலைகள் தடைபட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியையொட்டி, ஏற்கெனவே இருக்கிற நீர் மின் உற்பத்தித் திட்டத்திலே இருப்பதைப் போலவே, மீண்டும் ஒரு நீர் மின் உற்பத்தித் திட்டத்தை ரூ.800 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றிவிட்டது. அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மையே. அதற்குப் பிறகு சமீபத்தில், சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சிக்குப் பிறகு, அந்த நீர் மின் உற்பத்தித் திட்டப் பகுதிக்குக் கீழே, சமீபத்திலே மேலும் ஓர் அணையைக் கட்டத் தொடங்கியிருக்கிறது. அந்த அணை கட்டத் தொடங்கப்பட்டு, வேலையையும் தொடங்கி விட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. அந்த ஆறு கூட்டாறு. இன்னொரு ஆறு; அது காவிரியிலே கலக்கிற பகுதி, கூட்டாறு என்று சொல்கிறார்கள். நேற்று தொலைபேசியிலே பேசினேன். அந்தக் கூட்டாறு பகுதியிலே மேலும் ஓர் அணையைக் கட்டத் தொடங்கியிருக்கிறார்கள். ஆகவே, அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும். அதுதான் முக்கியமான பிரச்சினை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** எப்பொழுதுமே ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கர்நாடகத்தினுடைய ஒரு பொறியாளர், மேட்டூரிலேயிருந்து, நாகப்பட்டினம் வரையில் சுற்றிக்கொண்டே இருப்பார். இங்கே இருக்கிறார்கள் அவர்கள். Headquarters மேட்டூரிலேயிருந்து நாகப்பட்டினம் வரையில் இருப்பார்கள். இங்கே என்ன நடக்கிறதோ, அதை அவர்களுடைய அரசாங்கத்திற்குத் தெரிவிப்பார்கள். அதேபோல, கண்ணம்பாடி dam-லேயிருந்து, மேட்டூர் வரையில் நம்முடைய பொறியாளர் ஒருவரை நாம் posting போட்டிருக்கிறோம். அது அவர்களுக்குத் தெரியாமல் இல்லை. அந்த அரசாங்கத்திற்குத் தெரிந்துதான் போடுவோம். நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரிந்துதான் அவர்களுடைய பொறியாளரை இங்கே போட்டிருப்பார்கள். அவர்களுக்கு அங்கே என்ன வேலை என்று கேட்டால், அங்கே நடக்கிற செய்திகளை, என்னவென்று நம்முடைய அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும். அதேபோல், இங்கேயிருப்பதை அவர்களுக்குத் தெரிவிப்பார்கள். அப்படித் தெரிவிக்கிறபோதுதான், அங்கேயிருக்கிற பொறியாளரோடு இங்கேயிருந்தும் ஒரு பொறியாளர் சென்று, இரண்டு பேரும், கிழக்கு, மேற்குப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுத்தான், ரிப்போர்ட்டைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அப்படியிருக்கும்போது, இதையும் மீறி அணை கட்டுகிறார்கள் என்ற செய்தி, எங்களுக்கு வருமானால், அரசு அதுகுறித்து நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

இரண்டாவதாக, பாலாறு விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். பாலாற்றிலே அணை கட்டுவதற்கென்று இப்பொழுது டெண்டர் விடப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து சுப்ரீம் கோர்ட்டிலே நாங்கள் ஒரு I.A. போட்டிருக்கிறோம். அதை Vacation-க்குப் பிறகு, அது விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்கள். நீங்கள் அங்கே அணை கட்டுவது, எங்களுக்கு வரும். அதேநேரத்தில், Project Report சரியில்லை என்று தமிழக அரசின் அதிருப்தி; அந்த ஆந்திர அரசுக்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றத்தில் அதற்குத் தடையாணை பெறுவதற்கு எல்லாவிதமான சார்பில், நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவதாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இங்கேகூட நெய்யாற்றிலே தண்ணீர் விடவேண்டும் என்று

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்: "நெய்யாற்றிலே, கேரள அரசு தண்ணீரை விடுகிறதாம்; ஏன் நீங்கள் வாங்கக்கூடாது" என்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சரிடத்திலேகூட, அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தார்கள். நம்முடைய வரதராஜன் போன்றவர்கள். நான் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். எங்களுக்கு நெய்யாற்றிலே இடதுபுறக் கால்வாயிலே தண்ணீரை விடவேண்டும் என்று கேட்டு கடிதம் எழுதினோம். நியாயமாக விடவேண்டும். ஏனென்று கேட்டால், இரண்டு மாநிலங்களும் ஒன்றாக இருந்த காலத்தில், நெய்யாற்றிலே ஒரு அணை கட்டினார்கள். இப்பொழுது பிரிந்து போய்விட்டது. விளவங்கோடு தாலுகா இப்பொழுது தமிழ்நாட்டிற்குள் வந்துவிட்டது. ஆனால், 'தண்ணீர் விடுங்கள்' என்று கேட்டதற்கு, என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'பணம் கொடுத்தால்தான் தண்ணீர் விடப்படும்' என்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால், அப்படியொரு திட்டத்தை எடுத்துவிட்டார்களாம். அவர் சொல்கிறார்;

பிற்பகல் 1-55

"The Kerala Legislative Assembly adopted a resolution wherein it has been resolved to give water to Tamil Nadu from Neyyar Irrigation Project, after realising the value of the water so given." பணம் கொடுத்தால் தண்ணீர் நான் கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். Pursuant to the resolution of the Kerala Legislature, we are in the process of working out the draft agreement regarding the supply of water from Neyyar Irrigation Project to Tamil Nadu by realising the cost. 'பணத்திற்குத்தான் நாங்கள் தண்ணீர் கொடுப்போம்' என்று கேரள அரசு தெரிவிக்கிறது. நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். இந்தியாவில் எந்த மாநிலத்திலும், ஒரு மாநிலத்தின் பாசனத்திற்கு தண்ணீரை, இன்னொரு மாநிலம் தருகிறபொழுது, தண்ணீருக்குப் பணம் கேட்கிற ஒரே ஒரு ஆட்சி இன்று கேரளத்தில் இருக்கிற ஆட்சிதான் என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ அவர்கள் விடுவதைப்போலவும், நாம் கேட்காததைப்போலவும் அவர் திருப்பித் திருப்பிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் செல்வாக்கு இருந்தால், அங்கே பயன்படுத்தி தண்ணீரை விடட்டும்; நான் வாங்கிக்கொள்கிறேன்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** Speaker Sir,. . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசட்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக (குறுக்கீடு). . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு சப்ஜெக்டா? வேறு சப்ஜெக்டா எடுக்கிறீர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ், (மணியடிக்கப்பெற்றது) வேறு சப்ஜெக்டா?

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** Speaker Sir, Speaker Sir. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒகேனக்கல்தானே? அதை அடுத்து எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** Speaker Sir, நெய்யாற்றிலே தண்ணீர் விடுவது பற்றிப் பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி பாலபாரதி, சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**செல்வி கே. பாலபாரதி:** அவர் பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Time இல்லை, சரி, சொல்லுங்கள்.

***திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கேரளா, நெய்யாறு dam-லிருந்து தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தந்து வந்தது. 2003 ஆம் ஆண்டில், அங்கேயிருந்த காங்கிரஸ் அரசாங்கம், காங்கிரஸ் தலைமையில் செயல்பட்ட U.D.F. அரசாங்கம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, தண்ணீர் தருவதை நிறுத்தியது. அந்தத் தீர்மானத்தில், பிற மாநிலங்களுக்கோ, Union பிரதேசங்களுக்கோ மேற்கொண்டு தண்ணீர் வழங்க வேண்டுமெனில் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் அது வழங்க வேண்டுமென்று அந்தத் தீர்மானம் கூறுகிறது. அப்போது தமிழ்நாட்டிலிருந்த அண்ணா தி.மு.க. அரசாங்கம் இதைக்

கண்டுகொள்ளவில்லை. அதுபற்றிப் பலமுறை இங்கே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அரசாங்கம் தண்ணீர் தரவில்லை. 2006-ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, இடதுசாரி அரசாங்கம் அங்கே பொறுப்பில் இருக்கிறது. அந்த அரசாங்கம் தண்ணீர் தருவது குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அந்தப் பின்னணியில் ஒரு கடிதமும் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கடிதத்தில் ஒருவேளை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கூறியிருப்பதுபோன்ற கருத்துகள் இடம்பெற்றிருந்தால்கூட, பெருந்தன்மையோடு அந்த அரசாங்கம் தண்ணீர் தருவதற்கு முன்வந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதை நாம் ஆக்கபூர்வமாக எடுத்துக்கொண்டு, அந்தக் கடிதத்தின்மீது தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினால் நிச்சயமாகத் தண்ணீர் கிடைக்கும் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது. கடந்த ஆட்சி இதை அலட்சியப்படுத்தியிருக்கிறது. இதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, நான் சட்டசபையில் என்னுடைய கன்னிப் பேச்சின்மூலமாக இந்த விஷயத்தைக் கொண்டுவந்தபொழுது, இந்தப் பிரச்சினை எப்படிப்பட்டது? அதனுடைய தீவிரத்தன்மை என்ன என்பது தமக்குத் தெரியும் என்றும், கேரள அரசாங்கத்தோடு தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று இந்த அவையில் அப்போது உறுதிமொழி அளித்தார். உறுதிமொழியோடு நிற்காமல், மாண்புமிகு கேரள முதலமைச்சர் சென்னையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜான் ஜோசப், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** தன்னைச் சந்தித்த நேரத்தில் இதுபற்றி பேசி வலியுறுத்தவும் செய்திருக்கிறார். ஆகவே, நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நினைத்தால், தொடர்ந்து பேசினால், தண்ணீர் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்தப் பின்னணியில் தொடர்ந்து பேச வேண்டும், பேச வேண்டும், பேசிக் கொண்டேயிருக்க வேண்டும்; தண்ணீர் கிடைப்பதுவரையிலும் பேச வேண்டும் என்று பணிவோடு வலியுறுத்தி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே. . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், திரு. கோபிநாத் அவர்களும் சொல்ல வேண்டுமென்கிறார். அதையும் கேட்டுவிட்டுச் சொல்லிவிடுங்கள். இதே சப்ஜெக்டில்.

**திரு. கே. கோபிநாத்:** ஆமாம். இல்லை. இல்லை. நான் கர்நாடகாவைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு சப்ஜெக்டா? (குறுக்கீடு)

**திரு. கே. கோபிநாத்:** இது வேறு, இது வேறு. இது கேரளா இல்லை. இந்த side உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள்கூட என்ன ஆதாரம் என்று கேட்டார். இந்தக் கடிதத்தை எழுதியவர் கேரளத்தினுடைய நீர்வளத் துறை அமைச்சர் அருமை நண்பர் கே.என். பிரேம் சந்திரன் அவர்கள்தான். (குறுக்கீடு) இல்லை, இல்லை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி. 20-4-2007 அன்றைக்குதான் எழுதியிருக்கிறார். அவர் சொன்னார், எனக்கு இந்த நெய்யாற்றங்கரை ஒப்பந்தம் குறித்து கொஞ்சம் அடிப்படையில் இருந்து தெரியும். 1971 ஆம் ஆண்டிலேகூட நாம் ஒரு ஒப்பந்தம் போட்டோம் அதில் தண்ணீர் எடுப்பதற்கு. அதற்குச் சொல்கிறார்கள் இப்பொழுது நான் எல்லாவற்றையும் முழுவதும் சொல்லக்கூடாது என்பதற்காக, I would like to inform you that the circumstance has changed a lot. The Agreement drafted in 1971 cannot be executed now. 1971-ல் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று போடப்பட்ட அந்த அக்ரிமெண்டை நாங்கள் execute பண்ணமாட்டோம். அப்படிச் சொல்லிவிட்டு— அது அந்த அரசாங்கம் போட்டதல்ல. காங்கிரஸ் அரசாங்கம் போட்டதல்ல.—இப்பொழுது 18-10-2006 அன்றைக்கு, The Kerala Legislative Assembly adopted a resolution wherein it has been resolved to give water to Tamil Nadu from Neyyar Irrigation Project after realising the value of the water so given. Pursuant to the resolution of the Kerala Legislature, we are in the process of working out a draft agreement regarding the supply of water from Neyyar Irrigation Project to Tamil Nadu by

realising the cost. As soon as the draft agreement is finalised, we shall furnish the same for the consideration of the Government of Tamil Nadu.

நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி விளவங்கோடு இல்லையா? (குறுக்கீடு) விளவங்கோடு. இது கேரளத்திலே இருந்தது. நெய்யாற்றிலே இதனுடைய dam கட்டுகிறபோது விளவங்கோடு தாலுகாவுக்கும் தண்ணீர் தர வேண்டுமென்பதற்காக கால்வாய் வெட்டப்பட்டது. ஆனால், மாநிலத்தினுடைய எல்லைக்கோடுகளை மாற்றியமைத்தபோது, விளவங்கோடு தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டது. தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டால் அதற்கு அந்த உரிமை போய்விடுமா? ஆனால், இப்பொழுது என்ன கேட்கிறார்கள் என்றால், நீ பணம் கொடுத்தால்தான், நாங்கள் தண்ணீர் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். ஆனால், நான் சொல்லவருவது என்னவென்றால், எங்களுக்கு dam கட்டுவதற்குச் செலவாயிற்று. அதற்காகப் பணம் தாருங்கள் என்று நீங்கள் அப்பொழுது கேட்டிருந்தால்கூடப் பரவாயில்லை, ஆனால், இப்பொழுது பணம் கொடுத்தால்தான் தண்ணீர் தருவோம் என்பது இது ஒரு புதிய சித்தாந்தம். ஏனென்றால், எட்டாண்டு காலம் தலைவர் அவர்கள் என்னிடத்திலே இந்தப் பொதுப் பணித் துறை பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். நான் பார்த்தவரையில், இதுவரையில் எந்த மாநிலத்திலும் பயிருக்கு, பாசனத்திற்குத் தண்ணீர் தருவதற்கு இப்படிப் பணம் கேட்ட வரலாறு இல்லை. நான் ஆச்சரியப்படுகிறேன். ஆனாலும், அவர் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டுமென்கிறார். நான் மீண்டும்கூட இவற்றையெல்லாம் விளக்கிக் கடிதம் எழுதத் தயார். நாங்கள் கேட்பதற்குத் தயார். அவர்கள் விடுவதற்குத் தயாரா என்பதை மாண்புமிகு உறுப்பினர்தான் அறிந்து சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிமெண்ட்மீதான உற்பத்தி வரியை குறைத்துள்ளபோதிலும் (குறுக்கீடு) என்ன அப்பாவு சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கடந்த 50 ஆண்டுகாலம் சட்டமன்றத்திலே பணியாற்றி நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் பொன்விழா கண்ட இந்த ஆண்டில் கட்டுகின்ற அரசுக் கட்டடங்களுக்கு நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பொன்விழா நினைவுக் கட்டடம் என்றே பெயர் வைக்கப்படுமா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) சிமெண்ட் கிடைப்பதில் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிமெண்ட் உற்பத்தி (குறுக்கீடு) நான் சொல்லிவிடுறேன். சிமெண்ட் மீதான உற்பத்தி வரியைக் குறைத்துள்ளபோதிலும் மாநிலம் முழுவதும் சிமெண்ட் கிடைப்பதில் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து (குறுக்கீடு) திரு. கே. கோபிநாத், இந்த சப்ஜெக்ட்டா வேறா சார்? (குறுக்கீடு) இதை முடித்துவிட்டு அதற்குப்பிறகு எடுப்போம். (குறுக்கீடு) இருக்கட்டும். உட்காருங்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி சுதர்சனம், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன், திரு. தி.க. ராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. தி. இராமசாமி, திருமதி பி. பத்மாவதி, திரு. ந. குணசேகரன், திரு. எஸ். இராசசேகரன் ஆகிய 11 பேர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர் பேசி, அவர்களோடு மற்றவர்களுடைய கருத்துகளை நேரத்தின் அருமை கருதி, இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

பிற்பகல் 2-05

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டிலே சிமெண்டிற்கு மிகப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. சிமெண்ட்மீதான உற்பத்தி வரியை அதன் சில்லறை விலையில் 12 சதவிகிதமாகக் குறைத்து, மத்திய அரசு அறிவித்துள்ளபோதிலும், சென்னை உட்பட மாநிலம் முழுவதும் சிமெண்ட் கிடைப்பதில் மிகப் பெரிய தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசின் அறிவிப்பிற்கு மாறாக, சிமெண்ட் விலையை உயர்த்தும் நோக்கத்திலேயே, உற்பத்தியாளர்கள் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தியுள்ளதாகக் கட்டுமானத் துறையிலே இருப்பவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

நாடு முழுவதும் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக,

50 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை சிமெண்ட்டை ரூ.190/-க்கு விற்றால், அதன்மீதான உற்பத்தி வரியை டன்னுக்கு ரூபாய் 350/-ஆகக் குறைத்து, மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. ப. சிதம்பரம் அவர்கள் பட்ஜெட்டில் அறிவித்தார்கள். 50 கிலோ எடையுள்ள சிமெண்ட் மூட்டையை ரூ.190/-க்கு அதிகமான விலைக்கு விற்றால், அதற்கு உற்பத்தி வரி டன்னுக்கு ரூ.600/-ஆக அறிவித்தார். இந்த அறிவிப்பிற்குப் பின்னர்கூட, சிமெண்ட் விலையைக் குறைப்பதற்குப் பதிலாக, இந்த உற்பத்தி வரி உயர்வு நடைமுறைக்கு வரும்முன்னரே சிமெண்ட் விலையை ரூ.225/-க்கு உயர்த்தினர். இந்த நிலையில் சிமெண்ட்மீதான உற்பத்தி வரி விகிதத்தில் மேலும் சில மாற்றங்களைச் செய்து ரூ.190/-க்கு அதிகமாக விற்பனை செய்யப்படும் சிமெண்ட்மீதான உற்பத்தி வரி, அதன் சில்லறை விலையில் 12 சதவிகிதமாக இருக்கும் என நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அரசின் இந்த முயற்சிக்கும் கட்டுப்படாமல், சிமெண்ட் விலையை மேலும் உயர்த்த உற்பத்தியாளர்கள் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

சிமென்ட்மீதான மத்திய அரசின் உற்பத்தி வரிவிகிதம் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், சந்தையில் சிமெண்ட் விலையை மேலும் உயர்த்தும் நிலையில் உற்பத்தியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக பட்ஜெட் அறிவிப்பின்போது, ஒரு மூட்டை ரூ.225/- என்று இருந்த சிமெண்ட் விலை, இன்று ரூ.230/-ல் இருந்து ரூ.250/- வரைக்கும் விற்கப்படுகிறது. இந்த நிலையில், ஆலைகளிலிருந்து மொத்த விற்பனையாளர்களுக்கு சிமெண்ட் அனுப்புவதை சனிக்கிழமை இரவு முதல் உற்பத்தியாளர்கள் திடீரென்று நிறுத்தியிருக்கிறார்கள். இதனால், மொத்த விற்பனை நிலையில் தற்போது சிமெண்ட் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. தற்போதுள்ள ரூ.230/- என்ற விலையை மேலும் அதிகரிக்கும் மறைமுகத் திட்டத்தின்படியே இந்த செயற்கையான தட்டுப்பாட்டை உற்பத்தியாளர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். எனவே, நாங்கள் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம். டான்செம் நிறுவனத்தின்மூலம் இப்பொழுது மத்திய அரசு சிமெண்ட்மீதான இறக்குமதி வரியைக் குறைத்திருக்கிறது. எனவே, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களுடைய விலையைக் குறைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நியாய விலைக கடைகளின்மூலம் அத்தகைய அத்தியாவசியப் பொருட்களை விற்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதுபோல, நம்முடைய தமிழக அரசே, சிமெண்ட் விலை தொடர்ந்து கூடி வருகின்ற வேளையிலே, நம்முடைய டான்செம் நிறுவனத்தின்மூலம் சிமெண்ட்டை



வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து உபயோகிப்பாளர்களுக்கு நியாயமான விலைக்குக் கிடைப்பதற்கு முன்வருவார்களா என்று உங்கள்மூலம் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சிமெண்ட் விலை மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் புதிய வீடு கட்டுவது அல்லது பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிப்பது என்று சொன்னால், மிகக் கடுமையான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாகக் கட்டுமானப் பணி முடங்கியிருக்கிறது. அதில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கெல்லாம் வேலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சிமெண்ட் விலை மிக உயர்ந்த நிலையில், அதைக் குறைக்க வேண்டுமென்பது வேண்டுகோள். ஆனால், 2006 ஆம் ஆண்டு தொடக்கத்தில், சுமார் 130 ரூபாய், 135 ரூபாயாக இருந்த விலை இப்பொழுது, 230 ரூபாய், 235 ரூபாய்க்கு மேலே போயிருக்கிறது. இது மிகப் பெரிய பாதிப்பு. ஆகவேதான், இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசுகூட, வரியைக் குறைக்கிறோம், சலுகை கொடுக்கிறோம் என்று சொல்லி, சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட, சிமெண்ட் விலை குறைந்தபாடில்லை. ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில், வெளிநாடுகளிலேயிருந்து சிமெண்ட்டை இறக்குமதி செய்யலாம் என்பதை நாங்கள் வேண்டுகோளாக வைக்கிறோம்.

காரணம், இதற்கு முன்னாலேகூட 1971 ஆம் ஆண்டு, தாங்களே முதலமைச்சராக இருந்த நேரத்தில், சிமெண்ட் விலை உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று, தென்கொரியாவிலிருந்து சிமெண்ட்டை இறக்குமதி செய்தீர்கள். அப்பொழுது கொரியா சிமெண்ட் என்றே பெயர் சொல்லி விற்பனை செய்தார்கள். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலமாக அந்த சிமெண்ட் விற்பனை செய்யப்பட்டது. அதைப்போல, இப்பொழுது பாமாயில், எண்ணெய், பருப்பு, கோதுமை போன்ற மற்ற பொருட்களையெல்லாம்கூட நாம் இறக்குமதி செய்கிறோம். எனவே, முன்னுதாரணம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சிமெண்ட் விலையை எப்படியாவது குறைப்பதற்கு, இறக்குமதி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை

வைக்கிறோம். இது அவசியப் பிரச்சினை. அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

*பிற்பகல் 2-10*

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிமெண்ட் விலை என்பது அடிக்கடி ஏற்ற இறக்கமாக இருந்துகொண்டிருக்கின்றது. இந்த ஆண்டு தொடக்கத்தில் ரூ.140/-க்கு விற்ற சிமெண்ட், இப்போது ரூ.235/-க்கு விற்றுக்கொண்டிருக்கிறது. இதனால், கட்டடத் தொழிலாளர்களிலிருந்து, சாதாரண மக்கள்வரை, அனைவரும் இப்போது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்னையில் ஒரு சதுர அடி கட்டடம் கட்டுவதற்கு ரூ.300 அதிகரித்திருப்பதாக நேற்றைக்குக்கூட பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. இத்தகைய நிலையில், உடனடியாக சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு, மத்திய அரசு கொடுத்திருக்கின்ற அந்த வரி விலக்கு என்பது ஆலை முதலாளிகளுக்குத்தான் சாதகமாக இருக்குமே தவிர, சாதாரண ஏழையெளிய மக்களுக்கு உதவியாக இருக்காது.

சிமெண்ட் விலையைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்துவதற்கு, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம். ஆனால், நிரந்தரமாக சிமெண்ட் விலையை ஒரு கட்டுக்குள் வைத்திருப்பதற்கு, அரியலூர் சிமெண்ட் ஆலை இலாபத்தில் இயங்குகிறது. ஆலங்குளம் சிமெண்ட் ஆலையை சிறப்பான உற்பத்தியைச் செய்கின்ற அளவிற்கு நவீனப்படுத்தி, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, தமிழகத்தினுடைய, அரசினுடைய சிமெண்ட் உற்பத்தியை அதிகப்படுத்தினால் சிமெண்ட் விலையைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, மக்களைப் பாதிக்கின்ற இந்தப் பிரச்சினையின்மீது அரசு உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சிமெண்ட் விலை



உயர்வால் ஏற்பட்டிருக்கின்ற பாதிப்பு குறித்தும், அதன் காரணமாக கட்டடப் பணிகள் எந்த அளவுக்கு சுணக்கமடைகின்றன, தொழிலாளர்கள் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்து, அந்த விலையைக் கட்டுப்படுத்துவதற்கு, விலையைக் குறைப்பதற்கு வழி காணவேண்டுமென்ற கருத்தை இங்கே வலியுறுத்தி, எடுத்துச்சொன்னார்கள்.

அதுகுறித்து, இரண்டுவிதமான கருத்துக்கு அவசியமில்லை, இடமில்லை. ஆனால், நிலைமை என்ன என்பதை நான் குறிப்பாக விளக்க விரும்புகிறேன். சிமெண்டைப் பொறுத்தவரை மத்திய அரசு அறிவிக்கின்ற வரி விதிப்புகளையொட்டி, அதனுடைய விலைகளில் மாற்றம் ஏற்படும். மாநில அரசுக்கு நேரடியாக வரி விதிக்கவோ, அதைக் கட்டுப்படுத்தவோ நடைமுறையிலே அந்த வாய்ப்பு இல்லை. முன்னர் இருந்ததைப்போல தற்பொழுது சிமெண்ட்டுக்கு மத்திய அரசு கட்டுப்பாட்டு ஆணை எதுவும் நடைமுறையிலும் இல்லை. Cement Control Order– அதுவும் இப்பொழுது இல்லை.

சில நாட்களாக சிமெண்ட் விலை தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்தியா முழுவதும்கூட உயர்ந்துகொண்டே வருகிறது. பொதுவாக, இந்தியா முழுவதும் சமீப காலங்களில் கட்டுமானப் பணிகள் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம், தொழில் துறை போன்ற துறைகளில் உள்நாட்டு முதலீடுகளும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் மிகப் பெரிய அளவில் அதிகரித்து வருவதாகும். கட்டுமானப் பணிகள் அதிகரித்துவரும் நிலையில் அதற்கு ஈடுகொடுக்கும்வகையில், சிமெண்ட் உற்பத்தி அதனுடைய மொத்த total quantity அதிகரிக்கவில்லை.

மத்திய அரசு முதலில் சிமெண்ட் விலையைக் குறைத்துவிடலாம் என்று கருதி, அதன்மீது இரட்டை வரி விதித்தது. எனினும், இந்த அறிவிப்பின் காரணமாக விலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. மேலும், சிமெண்ட் உற்பத்தியாளர்களிடையே இந்த இரட்டை வரி உரிய வரவேற்பைப் பெறவில்லை. அதை அவர்கள் தங்களுடைய தொழிலுக்குச் சாதகமானது என்று கருதி ஏற்கவில்லை என்று கூறப்படுகிறது. அதனால், அந்த இரட்டை வரி விதிப்பு முறையை நீடிப்பதில் பொருள் இல்லை என்று கருதி, மத்திய நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் அந்த வரி முறையை இப்பொழுது மாற்றியமைத்தார்கள். அதன்படி, ரூ.190/-க்குக் கீழ் விற்கப்படுகிற சிமெண்ட்டுக்கு, 50 கிலோ கொண்ட மூட்டை சிமெண்ட்டுக்கு, உற்பத்தி வரியில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், ரூ.190/-க்கு மேல் விற்கப்படும்

சிமெண்ட்டுக்கு பிரத்தியேக வரி என்பதற்குப் பதிலாக, மதிப்பிற்கேற்ற வரி, அதுவும் மதிப்புக் கூட்டு வரி வந்திருக்கின்ற சூழ்நிலையில், மதிப்பிற்கேற்ற வரி விதிக்கப்படுகிறது. இதனால், மூட்டை ஒன்றுக்கு 7 ரூபாய்வீதம் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், குறைந்ததாகச் சொல்வதற்கு இடமில்லை. நமது தமிழகத்தைப் பொறுத்தவரையில் சிமெண்ட் விலையைக் குறைப்பதற்காக, உற்பத்தியாளர்களையெல்லாம் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்படுகிறது.

*பிற்பகல் 2-15*

அரசு நிறுவனமான டான்செம்மூலமாக வெளிநாடுகளிலிருந்து சிமெண்ட்டை இறக்குமதி செய்வதுபற்றியும், ஓர் ஆலோசனை நடைபெற்று வருகிறது. மத்திய அரசும்கூட, இந்த சிமெண்ட் விலையை ஒரு கட்டுப்பாட்டில் வைப்பதற்கு, ஒரு முயற்சியிலே ஈடுபட்டிருப்பதாக கேள்விப்படுகிறோம். அந்த முயற்சி, நம்முடைய மாநில அரசின் முயற்சி எல்லாம் சேர்ந்து, விரைவில் தகுந்த பலன் அளிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

## (இ) நதிகள் இணைப்பு மற்றும் உறுப்பினர்களுக்கு வாகனப் படி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் அவர்களுடைய பெயர் மாத்திரமல்ல, அவருடைய பெயரால் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வைத்துள்ள கோரிக்கையை ஏற்பதுபற்றி, ஒருசில கருத்துகளைக் கூற விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

இன்று, நம்முடைய சட்டமன்றக் கூட்டத்தொடரின், இறுதி நாளாக இந்த நாள் அமைந்து இருக்கின்றது. இந்த நாளில், நம்முடைய தமிழ்நாட்டினுடைய தேவைகள் குறித்தும், மக்கள் பிரச்சினைகள் குறித்தும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், மிக ஆர்வத்தோடும், அக்கறையோடும் எடுத்துவைத்த வாதங்களை, தொடுத்த வினாக்களை எப்படி எதிர்கொள்வது, எவ்வகையிலே இதற்கு வழிவகை காண்பது என்பதைப்பற்றியெல்லாம் நான் விரிவாக உங்களிடத்திலே எடுத்துரைக்க முடியாத நிலையிலே இருக்கின்றேன். ஏனென்றால், இந்தப் பிரச்சினை--ஏதோ சொல்வார்களே கிராமங்களில்,





ூக்கு உள்ள வரையிலே சளி இருந்துதான் தீரும் என்று" அதைப்போல— ம்முடைய மாநிலத்தைச் சுற்றியிருக்கின்ற மாநிலங்கள், அவர்கள் பரத்திலேயிருக்கின்ற காரணத்தினால், தாழ்வான பகுதியிலேயிருக்கின்ற ம்மை, எந்தவகையிலும் கொடுமைப்படுத்தலாம் என்ற முறையில் காடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு இனிமேல் பேச்சு ார்த்தை, பேச்சு வார்த்தை என்று, இங்கே மாண்புமிகு உறுப்பினர் நவர் பேசினார். எத்தனை முறை பேச்சுவார்த்தை என்பது நமக்கே லுத்துவிட்டது.

காவிரிப் பிரச்சினையில் நான் 1968 ஆம் ஆண்டு முதல் பேசத் தாடங்கி, இதுவரையிலே பேசி, இப்பொழுதும் வந்த இறுதித் ர்ப்புகூட, இறுதியான தீர்ப்பா என்ற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத சூழ்நிலையில் உள்ளோம். எப்படியென்றால், இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டில், மூன்று மாநிலங்களிலேயிருக்கின்ற மக்களுக்கும் நம்பிக்கை இருக்க வேண்டும். ஒரு காலத்திலே, நாட்டுப் பிரிவினைக் கேட்ட நாங்களே அதைத் தூக்கித் தூரயெறிந்துவிட்டு, ஒருமைப்பாட்டிலே உள்ள நம்பிக்கையை இன்றைக்கு நிலைநாட்ட நாங்கள் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். திராவிட நாடு பிரிவினையை அறிஞர் அண்ணா அவர்கள் கைவிட்டபோது, சொன்ன காரணங்கள் அப்படியே இருக்கின்றன. நாம் பிரிவினையைக் கைவிட்டுவிட்டோம், இந்தியாவினுடைய ஒற்றுமைக்காக என்று குறிப்பிட்டார்கள்.

அதைப்போல, இன்றைக்கும் நாம் இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டின்மீது வைத்துள்ள நம்பிக்கை வெற்றி பெற, மற்ற மாநிலங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். அதற்காகத்தான், நான் இந்த ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசும்பொழுது, இந்த நிலையைத் தெளிவாகச் சொன்னேன், திட்டவட்டமாகச் சொன்னேன். நதிகளை எல்லாம் இணைப்பதன்மூலம்தான், மக்களுடைய பிரச்சினைகளை, ஒவ்வொரு மாநிலத்தினுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். ஆகவே, அதற்கு ஒரு தேதியைக் குறிப்பிடுங்கள் என்று சொன்னேன். அன்றைக்குப் பொன்விழாவிலேகூட நதிகள் இணைப்பைப்பற்றி நான் பொதுக்கூட்டத்திலே பேசிவிட்டு, தனியாக அம்மையார் அவர்களையும், பிரதமர் அவர்களையும் சந்தித்து அவர்கள் விடைபெறுவதற்கு முன்பு பேசியபோதுகூட, நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்படும் என்பதற்கான ஒரு தேதியைக் குறிப்பிடுங்கள் என்றுகூடச் சொன்னேன்.

நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் சொன்னார்கள், நீங்கள் டெல்லிக்கு வரும்போது அதைப்பற்றிப் பேசலாம், விரிவாகப் பேசலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்காக நான் ஒரு முறை நிச்சயமாக இந்தத் திங்களிலே டெல்லிக்குச் செல்ல இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுதும் இதைப்பற்றி அவரிடத்திலே வலியுறுத்திப் பேசுவேன். ஏனென்றால், நதிகளை இணைப்பது என்றால் கங்கையிலேயிருந்து காவிரி வரையில் இணைப்பதல்ல. ஆங்காங்கு இருக்கின்ற நதிகளை, கோதாவரியிலிருந்து காவிரி வரையில்—இப்படி இங்கே—இந்த தீபகற்பத்துக்குள்ளே இருக்கிற நதிகளை இணைத்தாலே நம்முடைய தாகம் தீரும், நம்முடைய தண்ணீர்த் தேவை தீரும் என்பது மிக, மிக உண்மையான செய்தியாகும். அதற்குத்தான் நாம் பாடுபட வேண்டும்.

பிற்பகல் 2-20

இந்தக் காவிரிப் பிரச்சினை கடந்த 3, 4 ஆண்டுகளுக்கு முன்பு திரு தேவகவுடா அவர்கள் பிரதமராக இருந்தாரே, அப்பொழுதே தீர்ந்திருக்க வேண்டிய பிரச்சினை. நாங்கள் டெல்லியிலே இருந்தபோது, நான், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் நண்பர் வீராசாமி இவர்கள் எல்லாம் டெல்லியிலே தமிழ்நாடு இல்லத்திலே தங்கி இருந்தபோது, தேவகவுடா அவர்கள் டெல்லியிலே இருந்தார்கள். அப்பொழுது கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் பட்டேல் அவர்கள் வந்தார்கள், பேச்சுவார்த்தை நடைபெற்றது. நாங்கள் கர்நாடக பவனுக்கே சென்றோம். தமிழ்நாடு ஹவுசிற்கு எதிர்த்தாற்போல் இருக்கின்ற கர்நாடக பவனுக்கே சென்றோம். ஏனென்றால், பேச்சுவார்த்தை முறிந்துவிட்டால், நாம் வெளியிலே வந்துவிடலாம்; அவர்களே போ என்று சொல்லாமல் என்ற அந்த மரியாதைக்காக நாங்கள் அங்கேயே சென்றோம். பேச்சுவார்த்தை அன்று நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக வெற்றிகரமாகத் தொடர்ந்தது. தொடர்ந்து கையெழுத்துப் போடுகின்ற கட்டம் வந்துவிட்டது. அந்தக் கட்டம் வந்தபோது, பிரதமர் அழைக்கிறார் என்று செய்தி வந்தது. அப்பொழுதே எங்களுக்கு திடுக்கென்று இருந்தது. 'இந்த நேரத்திலே பிரதமர் அழைக்கிறார். அதுவும் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த பிரதமர். என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ என்று நினைத்தோம். நினைத்தபடியே நடந்தது. அவர் அழைத்ததற்குப் பின்னால், அப்பொழுதுதான் சொன்னார்—ஒரு புது யோசனை—தமிழ்நாடும், கர்நாடகமும், மற்ற மாநிலங்களும் சுகம் பெற, தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள, இந்த இடைஞ்சல் அடிக்கடி வராமல் இருக்க, ஒரு நல்ல யோசனை, பெரிய பிரம்மாண்டமான திட்டம்



வைத்திருக்கிறேன் என்று சொன்னார். என்ன என்று கேட்டோம். அதுதான் 'மேகதாது' என்று சொன்னார்.

இந்த மேகதாது, ஒகேனக்கல்லுக்குப் பக்கத்திலே அமைந்துவிடுமேயானால், பெய்கிற மழைத் தண்ணீர் எல்லாம் அதிலே தேங்கி, அப்படித் தேக்கப்பட்டிருக்கிற தண்ணீரைக்கொண்டு ஆண்டுதோறும் நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளலாம். அடிக்கடி இப்படி கர்நாடகத்தை நீங்கள் நம்பி இருக்கத் தேவையில்லை, மழையை நம்பி இருக்கத் தேவையில்லை என்றெல்லாம் சொல்லி, அன்றைய கையெழுத்திடவிருந்த அந்த நிலையை ஒத்திவைத்தோம். அதற்குப் பிறகு பேசுவது, ஒத்திவைப்பது, இதுவே நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது பார்த்தால், அளிக்கப்பட்ட தீர்ப்பு என்ன ஆயிற்று என்பதும் கேள்விக்குறியாக நின்று கொண்டிருக்கிறது. இது கர்நாடகத்தைப் பொறுத்தமட்டில்.

பாலாறு என்ன ஆயிற்று என்பது ஆந்திராவைப் பொறுத்தவரையிலே, அதுவும் இன்றைய தினம் ஒரு தொய்விலே இருப்பதைக் காண்கின்றோம். அதைப்போல, முல்லைப் பெரியாறு என்ன ஆயிற்று ? அதுவும் கேரள மாநில அரசினுடைய போக்கைப் பொறுத்து இருக்கிறது. இங்கே அமைச்சர் துரைமுருகன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, தண்ணீருக்கு எவ்வளவு தருவீர்கள் என்று கேட்கின்ற நிலைமை இங்கே வந்திருக்கின்றது. இதனையெல்லாம் பார்க்கும்போது, இனி இந்தப் பேச்சுவார்த்தைகளால் பயன் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆக, மத்திய சர்க்காரும் நம்முடைய கஷ்டங்களை உணர்ந்து உடனடியாகத் திரும்பிப் பார்க்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எங்கேயாவது ஒரு தகராறு நடந்தால்தான் என்ன நடக்கிறது என்று திரும்பிப் பார்க்கக்கூடிய சூழ்நிலை வரும் என்ற நிலை உருவாகிவிட்டால்—நாம் இங்கே அமைதியாக உட்கார்ந்து இருக்கும்பொழுது, ஒரு மூலையில் ஒரு சத்தம் கேட்டால் என்ன என்று திரும்பிப் பார்க்கிறோமே, அதைப்போல ஒன்று நடந்தால்தான் திரும்பிப் பார்ப்பார்கள் என்றால், அப்படி இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டைக் கெடுக்கக்கூடாது என்று கருதுகின்ற நாம், அதைச் செய்யத் துணியவில்லை. ஆனால், அதைத் தவிர வேறு வழி இல்லை என்றும், இந்தியாவிலே உள்ள மாநிலங்களுக்கிடையே போர் என்ற ஒரு சூழ்நிலை வரக்கூடாது என்றும் நான் கருதுகின்றேன். நல்லெண்ணத்தின் அடிப்படையிலே சொல்கின்றேன்.

அந்த நல்லெண்ணத்தை எல்லோரும் உணர்ந்துகொண்டு, ஆந்திராவானாலும், கேரளாவானாலும், கர்நாடக மாநிலமானாலும் அவர்கள் இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டுக்காக, ஒற்றுமைக்காகத் தியாகம் செய்ய முன்வர வேண்டும். கொஞ்சம் தண்ணீரைக் கொடுப்பதால்—தமிழகம் தண்ணீர் இல்லாத பூமி—நீர் வளம், நில வளம் நிறைந்த தமிழகத்திலே என்று நாவல்களிலே எழுதி இருக்கலாம். புராணங்களிலே எழுதியிருக்கலாம். ஆனால், நில வளம் இருந்தாலும் இங்கே உள்ள ஒரே வளம் மன வளம்தான்.

*பிற்பகல் 2-25*

நீர் வளம், நில வளம் இரண்டும் இல்லாத மாநிலம் தமிழ் மாநிலம். அந்த வளத்தை இங்கே உருவாக்குவதற்கு மற்ற மாநிலங்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். "அப்படி ஒத்துழைப்புத் தர முடியாது, நாங்கள் மேலே இருப்பவர்கள், நீங்கள் கீழே இருப்பவர்கள்" என்று வர்ணாஸ்ரம தர்மத்தை இதிலும் அவர்கள் கடைப்பிடிப்பார்களே யானால், எதிர்காலம்தான் அதற்குப் பதில் சொல்லும். நம்முடைய கையை விட்டு எதிர்காலம் போய் விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் மற்ற மாநிலங்களிலே உள்ள அன்புக்குரிய நண்பர்களை, சர்க்கார்களையெல்லாம் நான் கேட்டுக்கொள்கின்றேன். மத்தியிலே உள்ளவர்கள் இதைப்பற்றிச் சிந்தித்து ஒரு நல்ல முடிவைக் காண வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

இது நிற்க. தற்போது ஞானசேகரனுக்கு பாலாறு, முல்லைப் பெரியாறு, காவிரி, இதைப்பற்றியெல்லாம் கவலை இல்லை. (சிரிப்பு) (குறுக்கீடு) அவர், நான் என்ன சொல்லப் போகிறேன் இந்த விஷயத்தைப்பற்றி என்பதிலேதான் கவலை. அன்று, நம்முடைய பேராசிரியர் அவை முன்னவர் அவர்கள் உங்களோடு விவாதித்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கான சில உதவிகள், சில சலுகைகள், உரிமைகள் இவைகளெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அவைகளை நான் பார்த்தேன், கொஞ்சம் அதிகமாகவே கொடுத்து விட்டார் என்று நான் ஆரம்பத்திலே வருத்தப்பட்டேன். இருந்தாலும், 2, 3 நாட்களாக நீங்கள் காட்டுகின்ற ஆர்வம், நீங்கள் கொடுக்கின்ற அன்புத் தொல்லை (சிரிப்பு) இவைகளை முன்னிட்டு இந்தப் பொன்விழாவின் தொடர்ச்சியாக வேறு ஏதேதோ பொருட்களெல்லாம் உங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன விழாக் குழுவின் சார்பாக. அவைகளன்னியில், சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும், பொன்விழாவிலே வாழ்த்தியவர்கள், வாழ்த்தாதவர்கள் அத்தனைபேருக்கும் வாகனப் படி என்று ஒவ்வொரு



மாதமும் 5,000 ரூபாய் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல். 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நன்றி சொல்கிறீர்களா? சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாம்பின் கால் பாம்பறியும் என்று சொல்வார்கள். 50 ஆண்டு காலம் இந்தச் சட்டமன்றத்தில் (குறுக்கீடு) அப்படிச் சொல்லவில்லை. ஒரு பழமொழிக்காகச் சொன்னேன். எங்களுடைய பிரச்சினைகளை முழுமையாக அறிந்த தலைவர் என்கிற காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகளை மதித்து —ஏனென்று சொன்னால், எங்களுக்கெல்லாம் இதிலே அக்கறை இல்லையா என்றுகூட முதல்வர் கேட்டார்கள். இதிலே அக்கறையோடு நாங்கள்தான் இந்தக் காவிரி ஆறு பிரச்சினையில் ஓகேனக்கல்லில் அணை கட்டுவது பற்றியும், பாலாறு பிரச்சினை பற்றியெல்லாம் இங்கே பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே சட்டமன்றத்தில் மாண்புமிகு முதல்வருடைய பொன்விழாவையொட்டி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனப் படியாக—ஆந்திராவிலே 15,000 ரூபாய் கொடுக்கிறார்கள், மகாராஷ்டிராவிலே 15,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், இங்கே தமிழகத்தில் 5,000 ரூபாய்—ஏனென்றால், இதைக் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்துவிடக் கூடாது, மக்கள் பிரச்சினைகளில்தான் அதிகமாக நாட்டம் செலுத்த வேண்டும் என்ற வகையில்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5,000 ரூபாய் எங்களுக்கு அள்ளித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2007), மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

[2007 மே 14

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2007)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவையில் இல்லாததால், அவர் கொண்டு வந்த திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரு விளக்கம். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றம். . . (குறுக்கீடு)

பிற்பகல் 2-30

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை Select Committee-க்கு அனுப்பவேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன். WTO, GATT-ஒப்பந்தத்தின்படி மத்திய அரசு நம்மை அவசரமாக வற்புறுத்துவதாக இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதேநேரத்தில், ஏற்றுமதி சம்பந்தமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அவசரமாக இதை நிறைவேற்றுவதற்குப் பதிலாக, பொறுக்குக் குழு என்று அழைக்கப்படுகின்ற, Select Committee-க்கு இதை அனுப்பி, விவாதித்து அதற்குப் பின்னால் நிறைவேற்றலாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

[@] 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2007 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மது சம்பந்தமான பிரச்சினை. ஏற்கெனவே அரசாங்கத்திற்கு மதுவின்மூலம் ஆண்டுக்கு 7,442 கோடி ரூபாய் வருவாய் வருகின்றது. இதனால் மக்கள் சீரழிந்துகொண்டிருக்கின்றார்கள். மீண்டும் மக்களை குடிப்பழக்கத்திற்கு ஆளாக்கக் கூடாது என்பது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கருத்து. இதை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதைவிட, நம்முடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் நலிந்து கிடப்பதால், இதை இங்கேயே தயாரிப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது. இதைச் சொல்வதால் ஆதரிக்கின்றேன் என்று பொருளல்ல. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக் கூடாது. மது உற்பத்தியைத் தடை செய்யவேண்டுமென்ற நோக்கத்தோடு, இதை பொறுக்குக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, WTO, GATT ஒப்பந்தத்தில் இவற்றைப்பற்றி குறிப்பிட்டுவிட்டு, ஏற்றுமதி குறித்த விளக்கங்களையும் இதில் இணைத்திருக்கின்றார்கள். உலக வர்த்தக நிறுவனம் WTO ஒப்பந்தத்தைப்பற்றியெல்லாம் நாங்கள் இந்த அவையிலே பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றோம். அப்பொழுதுகூட அது ஏற்றுக்கொள்ள மறுத்து, அதன்மீது விவாதங்கள்கூட நடைபெற்றன. அதன்மூலம் நம்முடைய இந்திய நாட்டினுடைய சுயசார்புத் தன்மைக்கு வேட்டு வைக்கக்கூடிய கொள்கைகளைத்தான் அவர்கள் இந்த நாட்டில் இறக்குமதி செய்கின்றனர். ஆகவே, இதன்மூலமாக இப்படி ஒரு பாதிப்பு வருகின்றபோது, திரும்பவும் புனரமைப்புக்கு முயற்சியாக இந்தச் சட்டம் வந்துவிடுமோ என்று நாங்கள் ஐயப்படுகின்ற காரணத்தினால், இதைப்பற்றி ஆய்ந்து முடிவு செய்யவேண்டிய அவசியம் இருப்பதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. ஆகவே, இதை Select Committee-க்கு அனுப்பவேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற சர்க்கரை ஆலைகளை நம்பி கரும்பு விவசாயிகளெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதனால் நாமே உற்பத்தி செய்து, இந்த மதுவை விநியோகிக்கின்ற பொறுப்பைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்காக இதை Select Committee-க்கு அனுப்பி வைக்கவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. விடியல் எஸ். சேகர்:** ஒரே point, ஒரே ஒரு point. Select Committee-க்கு அனுப்பவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திவிட்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சிக்கு ஒருவர்தான் பேசமுடியும்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றபோது அதைத் தடுப்பதற்கு வரிகளை அதிகப்படுத்த வேண்டும். இறக்குமதி செய்யும்போது, தமிழக அரசின் சார்பில் வரிகளை அதிகப்படுத்தி அதன்மூலம் வெளிநாட்டு மதுபானங்களைக் குறைப்பதற்கு முயற்சி செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இருக்கின்ற பிரச்சினை, நம்முடைய மாநிலத்தில் மது வகைகளைத் தயாரிக்க முடியுமா, முடியாதா என்பதல்ல. இதிலே இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால், உலக வர்த்தக நிறுவனம் - WTO-விலே நாம் ஓர் உறுப்பினர். அதுமட்டுமல்லாமல், GATT ஒப்பந்தத்திலும் நாம் கையெழுத்துப் போட்டிருக்கின்றோம். அந்த ஒப்பந்தத்தின்படி என்ன பலன் என்று கேட்டால், ஒரு நாட்டில் உற்பத்தி ஆகின்ற ஒரு பொருளை இன்னொரு நாடு வாங்கிக்கொள்ளவேண்டும். நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆகின்ற பொருட்களை அவர்கள் வாங்கவேண்டும். ஆனால், மற்ற பொருட்களை நாம் இறக்குமதி செய்யமாட்டோம், எங்கள் ஊரில் இருக்கின்ற பனியனை நாங்கள் ஏற்றுமதி செய்வோம், எங்கள் ஊர், வாணியம்பாடி, ஆம்பூர் இங்கேயிருந்து தோல் பொருட்களை ஏற்றுமதி செய்வோம் என்று இங்கிருந்து ஏற்றுமதி மட்டும் செய்வோம், ஆனால் இறக்குமதி செய்யமாட்டோம் என்று சொன்னால், அந்த ஒப்பந்தத்திலே நாம் சேர்ந்திருக்கக்கூடாது. அந்த ஒப்பந்தத்தில் நாம் கையெழுத்துப்



போட்டிருக்கக்கூடாது. ஆனால், இரண்டிலும் கையெழுத்திடா விட்டால், WTO-விலே உறுப்பினராக இல்லாவிட்டால் அல்லது GATT ஒப்பந்தத்திலே கையெழுத்துப் போடாவிட்டால், இப்போது வளர்ந்து வருகின்ற பொருளாதாரத்தில் இந்தியா ஒதுக்கப்பட்டுவிடும். ஆகவே எவ்வளவு வாங்குகிறோம் என்பதல்ல பிரச்சினை. வாங்குகிறோமா என்பதுதான் முக்கியமான பிரச்சினை. இதைத்தான் மத்திய அரசு, இந்த ஒப்பந்தத்தை மதிக்கவேண்டும் என்பதற்காக, 2001 ஆம் ஆண்டிலேயிருந்து அயல்நாட்டு மது வகைகளை இறக்குமதி செய்வதற்கு தமிழ்நாடு அனுமதிக்கவேண்டுமென்று சொல்கிறது. ஆந்திர மாநிலம் அனுமதித்திருக்கிறது; கேரள மாநிலம் அனுமதித்திருக்கிறது; கர்நாடக மாநிலம் அனுமதிக்கிறது, உத்தரப்பிரதேசம் அனுமதிக்கிறது; ஆனால், தமிழ்நாடு மட்டும் அதிகமாக ஏற்றுமதித் தொழில் செய்கிறீர்கள், நீங்கள் ஏன் இறக்குமதியை அனுமதிக்கக்கூடாது என்று மத்திய அரசு 2001-லேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறது. 2005-லேயும் கேட்டது, இப்பொழுது 2006 நவம்பர் மாதத்திலும் நம்மைக் கேட்டிருக்கின்றார்கள்.

*பிற்பகல் 2-35*

இப்போதும் நாம் செய்யாமல் விட்டால், என்ன நடக்கும் என்று சொன்னால், இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு ஒரு டிரிப்யூனல் மாதிரி வைத்திருக்கிறார்கள். அங்கே போனால் இந்தப் பிரச்சினையில் இந்தியாவிற்குத் தடை விதிக்கப்படும். மற்ற பொருள்கள் எல்லாம் இங்கே அனுப்பக்கூடாது, இந்தியாவுக்கு எந்த நாடும், எந்தப் பொருளும் அனுப்பக்கூடாது, வாங்கக்கூடாது என்று சொன்னால், இந்தியாவினுடைய பொருளாதார நிலை என்ன ஆகும்? ஆகையினாலேதான் வெளிநாட்டிலே தயாரிக்கப்படுகின்ற மது வகைகளை—நாம் எல்லாவற்றையும் வாங்கப் போவதில்லை—Wine மாதிரி, இதுபோன்ற சரக்குகளை வாங்க வேண்டுமென்பது, அதுவும் யாருக்கு வாங்குகிறோம்? இங்கே, பெரிய பெரிய Five Star ஓட்டலுக்குப் போகிறவர்கள் எல்லோரும். . . 'Is there British wine?' என்று கேட்பார்கள். நம்முடைய ஊரில், அவனிடம் இல்லை, லோக்கல் சரக்குதான் இருக்கிறது என்று சொன்னால், 'No, it is not there man. You go'. என்பார்கள். 'Sorry, I am going' என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். ஆகையினாலேதான் அவர்களிடம் வாங்கி, அதுவும், டாஸ்மாக்கிலே வாங்கித்தான் அரசாங்கத்திலே இறக்குமதி பண்ணி, கேட்பவர்களுக்கு நான்கு பாட்டில் கொடுக்கிறோம்.

அதிலே என்ன விஷயம் என்று கேட்டால், சில பேர் கிண்டலுக்குச் சொல்வார்கள், நான் சாப்பிட்டேன் என்று சொல்வான். சாப்பிடுகிறானோ

[திரு. துரைமுருகன்] [2007 மே 14

இல்லையோ, ஒப்புக்கு உட்கார்ந்துவிட்டான் என்றால் சாப்பிட்டான் என்று ஒரு திருப்தி. அதுமாதிரி இறக்குமதி எவ்வளவு quantity பண்ணுகிறீர்கள் என்பது பிரச்சினை இல்லை. இறக்குமதி பண்ணுகிறீர்களா? பண்ணுகிறோம். ஆகையினாலே நம்முடைய பனியன் கம்பெனிகள் திருப்பூரிலே பாதிக்கப்படாமல் இருக்கவேண்டுமென்று சொன்னால் கோவிந்தசாமி அவர்கள் கூர்ந்து கவனிக்க, இராணிப்பேட்டையில் இருக்கின்ற தோல் போகாது. இதை நாம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, இதிலே உள்நாடுதான், வெளிநாடுதான் என்பதல்ல பிரச்சினை. இது இந்தியப் பொருளாதாரத்தினுடைய கொள்கையின் அடிப்படையிலே வகுக்கப்பட்ட ஒன்று. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதற்கு ஆதரவு தந்து நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



2007 மே 14]

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2007), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 8-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2007 மே 14

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2007 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2007), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2007) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 8-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2007 மே 14

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2007 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-40

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2007), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2007) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

---

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2007 மே 14

பிரிவுகள் 2 முதல் 7 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2007 மே 14]

## (உ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2007), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 22/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2007), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2007) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2007), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2-45

## (ஏ) தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2007), மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை



சட்டமுன்வடிவு எண் 25/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2007). மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2007) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகத் திருத்தச் சட்டமுன்வடிவில் கடலூர் மாவட்டம் திருச்சிராப்பள்ளியில் சேரும் என்கிற அறிவிப்பு இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் இருக்கிற விழுப்புரம் மாவட்டம் சென்னையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால், கடலூர் மாவட்டத்தில் உள்ளடங்கிய பொறியியல் கல்லூரிகளாக இருந்தாலும், அந்தப் பல்கலைக்கழகத்திலே எதுவாக இருந்தாலும் அது சென்னையில் இருக்கிற அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக என்னுடைய கருத்தையும், அப்பகுதி மாவட்ட மக்களுடைய கருத்தையும், அந்தப் பகுதியினுடைய அமைச்சருடைய கருத்துமாகச் சேர்த்து இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல், அதிலே துணை வேந்தர்கள், கல்லூரியினுடைய பேராசிரியர்கள், துணைத் தலைவர்கள் போடுகின்றபோது, உதாரணத்திற்கு, இப்போது அண்ணா பல்கலைக்கழகத்தில் 400 பேராசிரியர்கள், 99 சதவீதம் முன்னேறிய வகுப்பைச் சார்ந்தவர்கள்தான் இருக்கின்றார்கள். அதனால், இனிவரும் காலங்களில் அதனுடைய துணை வேந்தரிலிருந்து, துறையினுடைய தலைவரிலிருந்து, பேராசிரியர்கள் அனைவரையும் இடஒதுக்கீட்டு முறையில் கட்டாயம் அமர்த்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி, கடலூர், அண்ணா பல்கலைக்கழகம் சென்னை வளாகத்திற்குட்பட்ட எல்லைக்குள் வரையறை செய்ய வேண்டுமென்று, இந்தத் திட்டத்தை மறுதிருத்தம் செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று என்னுடைய கருத்தைப் பதிவு செய்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகம் கவர்னர் நியமனத்தில் ஆட்சிக் குழு, கல்விக் குழு, இந்த நியமனங்களில் சென்னைப் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தைப் போல, ஆதி திராவிடர், சிறுபான்மையினர், பெண்கள் இடம் பெறுவதை சட்ட உறுதியாக்கிச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை அண்ணா பல்கலைக்கழகத்தோடு தேனி மாவட்டத்தை இணைக்க வேண்டும். தேனி மாவட்டம், தற்போது திருச்சி அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. எனவே, தேனி மாவட்டத்தை நெல்லை அண்ணா பல்கலைக்கழகத்தோடு இணைத்தால் உதவியாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருவாகியிருக்கிற புதிய பல்கலைக்கழகங்களிலே அருகிலே உள்ள மாவட்டங்களை எல்லாம் ஒரு equity என்ற அடிப்படையிலேதான், distribution அடிப்படையிலே அவற்றைப் பிரித்து வைத்திருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையிலே எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் சமமான மாவட்டங்கள் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே பிரிக்கப்பட்டிருப்பதால், இதிலே உடனடியாக மாற்றங்கள் செய்வதற்கு வாய்ப்பில்லை. வரும் காலங்களிலே பல்கலைக்கழகங்களுடைய எண்ணிக்கை பிரிகிறபோது, எண்ணிக்கை அதிகரிக்கிறபோது இவற்றைப் பற்றி பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 26/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2007 மே 14

பிற்பகல் 2-50

## (ஏ) கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2007), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2007 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கோயம்புத்தூர், அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2007 மே 14

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2007) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (ஏ) திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2007 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2007), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2007)© ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

© 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





பிரிவுகள் 2 முதல் 67 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 67 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஔ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு 2007**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2007), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2007)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 10-5-2007 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்** பெற்றுள்ளது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய மற்றும் பண்டிகை விடுமுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2007 மே 14

## (அஅ) தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2007), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2007) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், தமிழ்நாடு மாநிலத்திற்கு பொருந்துவதைப் பொறுத்த அளவில், அதனை மேலும் திருத்துவதற்கான ஒரு சட்டமுன்வடிவில் ரூ.50,000 ஆயுள் காப்பீடு செய்வதெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது ரூ.2 இலட்சம் வரை விபத்திலே உயிர் நீத்தவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, அதை ரூ.2 இலட்சமாகத் திருத்துவதற்கு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர். (குறுக்கீடு) திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே தீர்மானத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ரூ.2 இலட்சமாக ஆக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே இரண்டு இலட்சம் ரூபாய் எனத் திருத்தம் செய்து சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கோருகிறேன்.

@ 10-5-2007 ஆம் நாளிட்ட தமிழ்நாடு [illegible] வெளியிடப் பெற்றுள்ளது.



2007 மே 14]

பிற்பகல் 2-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டி, பட்டாசு போன்ற தொழிற்சாலைகளில் அடிக்கடி விபத்துகள் நடைபெற்று வருகின்றன. அதைக் கணக்கில் கொண்டு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துவதற்காக அரசு கொண்டு வருகின்ற இந்தச் சட்டம் வரவேற்கக்கூடிய சட்டம். ஆனால் ரூபாய் 50,000 என்ற அந்தத் தொகையை அதிகப்படுத்தி அறிவிக்க வேண்டும். நடைமுறையில் ஏற்கெனவே தோழி பாலபாரதி சொன்னதுபோன்று ரூபாய் 2 இலட்சம் வழங்கப்படுகிறது. அந்த ரூபாய் 2 இலட்சத்தை சட்டத் திருத்தத்தில் கொண்டு வந்தால் உதவியாக இருக்கும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உச்ச நீதிமன்றத்தினுடைய அறிவுரை. பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூபாய் 50,000 காப்பீடு செய்யப்பட வேண்டுமென உச்ச நீதிமன்றம் அறிவுரை கூறியிருக்கிறது. இந்தக் காப்பீட்டுத் திட்டத்தை சட்ட ரீதியாக அளிக்க தொழிற்சாலைகள் சட்டத்தின் பிரிவு 7ஏ-க்குப்பின் 7ஏஏ என்ற சட்ட ஷரத்தினைச் சேர்ப்பதற்கு இந்த சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இந்தச் சட்டத் திருத்தத்தின்படி தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் அவர்களின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூபாய் 50 ஆயிரத்திற்கு காப்பீடு செய்ய வேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2007) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் ஆகிய பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழுவிற்கு (Syndicate) கீழ்க்காணும் சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

1. அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி - மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

2. அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன்.

தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 3 ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு

அவருடைய ஆட்சிக் குழுவின் உறுப்பினர் பதவியும் முடிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஈ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007-2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. வ. முல்லைவேந்தன்
2. திரு. எஸ்.பி. ஜெயராமன்
3. திரு. சை. சையது கௌஸ் பாஷா
4. திரு. எம். பன்னீர்செல்வம்
5. டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி
6. திரு. சி. சண்முகவேலு
7. திரு. பி. தங்கமணி
8. திரு. இ. மகேந்திரன்
9. திரு. கோ. அரி
10. திரு. கோவை தங்கம்
11. திரு. கு. ஹசன் அலி
12. திரு. ராம. சுப்புராம்
13. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்
14. திரு. சி. கோவிந்தசாமி
15. திரு. வை. சிவபுண்ணியம்
16. திரு. வீர. இளவரசன்



ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2007-2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

பேரவை விதி 196-ன்கீழ் திரு. வ. முல்லைவேந்தன் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committe on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

பிற்பகல் 3-00

1. திரு. அ. சின்னசாமி
2. திரு. வே. கண்ணன்
3. திருமதி பெ. பிரபாவதி
4. திரு. தா. உதயசூரியன்
5. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
6. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
7. திரு. வி.பி. கலைராஜன்
8. திரு. சி.வி. சண்முகம்
9. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

10. திரு. எம்.ஆர். சுந்தரம்
11. திரு. து. அமரமூர்த்தி
12. திரு. கரி. இராமசாமி
13. திரு. கி. ஆறுமுகம்
14. திரு. நா. இராமகிருஷ்ணன்
15. செல்வி கே. பாலபாரதி
16. திரு. து. ரவிக்குமார்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்களது அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 204-ன்கீழ் திரு. கரி. இராமசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. மு. அப்பாவு
2. திரு. எல்.பி. தர்மலிங்கம்
3. திரு. என்.கே.ஆர். சூரியகுமார்
4. திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்



5. திரு. மு. ஜெகன்மூர்த்தி
6. திரு. பி. மூர்த்தி
7. திரு. ஆ. அருண்மொழிதேவன்
8. திரு. ஆர்.டி. கணேசன்
9. திரு. சு.ப. வேலுமணி
10. திரு. ந. கணபதி
11. திரு. எஸ். ஜெயபால்
12. திரு. பெ.சு. விஜயகுமார்
13. டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி
14. திரு. ஜி.கே. மணி
15. திரு. தி.க. ராஜா
16. திரு. டி. இராமச்சந்திரன்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2007-2008 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 213-ன்கீழ் திரு. ஜி.கே. மணி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஈ) அவை உரிமைக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007-2008 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. கே. திருநாவுக்கரசு

3. திரு. டி. செங்குட்டுவன்
4. திரு. த. தியோடர் ரெஜினால்டு
5. திரு. க. சுந்தர்
6. திரு. அ. ராஜன்
7. திரு. பி.கே. சேகர்பாபு
8. திரு. வே. செந்தில் பாலாஜி
9. திரு. இரா. விசுவநாதன்
10. திரு. சி. ஞானசேகரன்
11. முனைவர் கு. ஜெயக்குமார்
12. திரு. கோ. எதிரொலி மணியன்
13. திரு. என். நன்மாறன்
14. திரு. எஸ். இராசசேகரன்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2007-2008 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பேரவை விதி 227 (3)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தில் பொன்விழா கண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, எதிர்க்கட்சித் தலைவர்களே, எல்லோருக்கும் வணக்கம்.



பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத்தொடர் 2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 20 ஆம் நாள் தொடங்கி ஜனவரி 27 ஆம் நாள் வரை 6 நாட்கள் நடைபெற்றது. ஐந்தாவது கூட்டத்தொடர் மார்ச் திங்கள் 22 ஆம் நாள் முதல் தொடங்கி இன்று (14-5-2007) வரை நடைபெற்றுள்ளது.

**இந்தக் கூட்டத் தொடர்களில்,**

| | |
|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட) | — 41 |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் | — 167 மணி 06 நிமிடங்கள் (3-17 மணி வரை) |
| 20-1-2007 அன்று மேதகு ஆளுநர் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள் | — 5 |
| பங்கேற்ற உறுப்பினர்கள் | — 37 |
| உரையாற்றிய நேரம் | — 12 மணி 18 நிமிடங்கள் |
| உரையாற்றிய ஆளுங்கட்சியினர் | — 10 பேர் |
| பேசிய நேரம் | — 2 மணி 09 நிமிடங்கள் |
| இதர கட்சியினர் | — 27 பேர் |
| பேசிய நேரம் | — 10 மணி 09 நிமிடங்கள் |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் | — 1 மணி 23 நிமிடங்கள் |

பிற்பகல் 3-05

**நிதி அலுவல்கள்:**

2007-2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 23-3-2007 அன்று பேரவைக்கு அளிக்கப்பட்டது.

[பேரவைத் தலைவர்] [2007 மே 14

| | | |
|---|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | — | 5 |
| பங்கேற்ற உறுப்பினர்கள் | — | 44 |
| உரையாற்றிய நேரம் | — | 17 மணி 55 நிமிடங்கள் |
| உரையாற்றிய ஆளுங்கட்சியினர் | — | 8 பேர் |
| பேசிய நேரம் | — | 2 மணி 20 நிமிடங்கள் |
| இதர கட்சியினர் | — | 36 பேர் |
| பேசிய நேரம் | — | 15 மணி 35 நிமிடங்கள் |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம் | — | 57 நிமிடங்கள் |
| மாண்புமிகு முதலமைச்சர் குறுக்கிட்டு விளக்கம் அளித்த நேர்வுகள் | — | 9 முறை, 13 நிமிடங்கள் |

**மானியக் கோரிக்கைகள் :**

51 மானியக் கோரிக்கைகளும் விவாதித்து நிறைவேற்றப்பெற்றன.

| | | |
|---|---|---|
| விவாதம் நடைபெற்ற நாட்கள் | — | 26 |
| உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் | — | 223 |
| உரையாற்றிய நேரம் | — | 50 மணி 13 நிமிடங்கள் |
| உரையாற்றிய ஆளுங்கட்சியினர் | — | 35 பேர் |
| பேசிய நேரம் | — | 6 மணி 44 நிமிடங்கள் |
| இதர கட்சியினர் | — | 188 பேர் |
| பேசிய நேரம் | — | 43 மணி 29 நிமிடங்கள் |
| மாண்புமிகு முதலமைச்சர் காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்த நேரம் | — | 1 மணி 13 நிமிடங்கள் |
| தொழில் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்த நேரம் | — | 1 மணி 9 நிமிடங்கள் |



2007 மே 14] [பேரவைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| மற்ற துறைகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவ்வப்போது விளக்கங்கள் அளித்த நேர்வுகள் மற்றும் நேரம் | — | 5 முறை, 8 நிமிடங்கள் |
| மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம் | — | 18 மணி 3 நிமிடங்கள் |

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கைகள் இரண்டு நாட்கள் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் மிக அதிக நேரம் பதிலளித்த பெருமை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம் 1 மணி 50 நிமிடங்கள். அதிக நேரம் உரையாற்றி புதிய சாதனையையும், பல்வேறு புதிய அறிவிப்புகளையும் வெளியிட்ட மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**வெட்டுத் தீர்மானங்கள் (துணை மானியக் கோரிக்கை உட்பட):**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | — | 11,889 |
| அனுமதிக்கப்பெற்றவை | — | 11,365 |
| அவையில் முன்மொழியப்பெற்றவை | — | 2,735 |

இந்த ஆண்டு ஆளுநர் உரை, வரவு-செலவுத் திட்டம் மற்றும் மானியக் கோரிக்கை விவாதங்களில் உறுப்பினர்கள் ஆற்றிய கட்சிவாரியான உரை விவரம் பின்வருமாறு:

| வ. எண் | கட்சி | ஆற்றிய உரைகள் | நேரம் ம. நிமி. |
|---|---|---|---|
| 1. | திராவிட முன்னேற்றக் கழகம் | 53 | 11-13 |
| 2. | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | 52 | 18-18 |
| 3. | இந்திய தேசிய காங்கிரஸ் | 61 | 18-55 |

| வ. எண் | கட்சி | ஆற்றிய உரைகள் | நேரம் ம. நிமி. |
|---|---|---|---|
| 4. | பாட்டாளி மக்கள் கட்சி | 45 | 11-52 |
| 5. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) | 33 | 7-25 |
| 6. | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | 32 | 6-50 |
| 7. | மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் | 16 | 2-59 |
| 8. | விடுதலைச் சிறுத்தைகள் கட்சி | 10 | 2-22 |
| 9. | சுயேட்சை | 1 | 0-07 |
| 10. | நியமனம் | 1 | 0-25 |
| | **மொத்தம்** | **304** | **80-26** |

**வினாக்கள்–விடைகள்:**

பேரவையில் கடந்த ஆண்டு அறிவிப்பு செய்த நாள் 2-9-2006 முதல் 10-5-2007 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த வினாக்கள் — 23,315

அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை — 142

பிற்பகல் 3-10

இவற்றில் அதிக வினாக்கள் கொடுத்து முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

1. திரு. கோவை தங்கம் (இ.தே.கா.) — 4,210 வினாக்கள் (மேசையைத் தட்டும் ஒலி)
2. திரு. ம. குணசேகரன் (அ.இ.அ.தி.மு.க.) — 3,772 வினாக்கள்
3. திரு. டி. ஜெயக்குமார் (அ.இ.அ.தி.மு.க.) — 1,992 வினாக்கள்
4. திரு. அ. தமிழரசு (பா.ம.க.) — 1,451 வினாக்கள்
5. திரு. கி. ஆறுமுகம் (பா.ம.க.) — 1,364 வினாக்கள்



அனுமதிக்கப்பெற்றவற்றில்

உடுக்குறியிட்டவை — 3,060

உடுக்குறியிடாதவை — 6,440

குறுகிய கால வினா — 14

**உடுக்குறியிட்ட வினாக்கள்:**

அவையில் விடையளிக்கப்பட்டவை — 242

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5 மூலக் கேள்விகளுக்கு விடையளித்துள்ளார்கள். இது தவிர, மற்ற அமைச்சர்கள் தொடர்பான வினாக்களுக்கும் 4 நேர்வுகளில் கூடுதல் விளக்கம் அளித்துள்ளார்கள்.

பேரவையில் அதிக வினாக்களுக்கு பதிலளித்து முதல் ஐந்து நிலைகளில் இருக்கும் அமைச்சர்கள் குறித்த விவரம்:

1. மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 19 வினாக்கள்
2. மாண்புமிகு திரு. துரைமுருகன் — 18 வினாக்கள்
3. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் — 15 வினாக்கள்
4. மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் — 15 வினாக்கள்
5. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு — 15 வினாக்கள்
6. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் — 15 வினாக்கள்
7. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 13 வினாக்கள்
8. மாண்புமிகு திரு. கே.என். நேரு — 12 வினாக்கள்
9. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன் — 12 வினாக்கள்

மொத்த துணை வினாக்கள் — 808

அதிக துணை வினாக்கள் கேட்டு முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

1. திரு. தி. வேல்முருகன் (பா.ம.க.) — 29 வினாக்கள்
2. திரு. சி. கோவிந்தசாமி (இ.க.க.மா.) — 28 வினாக்கள்

3. திரு. ஜி.கே. மணி (பா.ம.க.) 20 வினாக்கள்

4. திரு. கி. ஆறுமுகம் (பா.ம.க.) 19 வினாக்கள்

5. திரு. வை. சிவபுண்ணியம் (இ.க.க.) 19 வினாக்கள்

6. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் (இ.தே.கா.) 18 வினாக்கள்

7. திரு. மு. அப்பாவு (தி.மு.க.) 18 வினாக்கள்

8. திரு. கு. பிச்சாண்டி (தி.மு.க.) 18 வினாக்கள்

வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள் — 25

வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் — 12

நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம் — 1 மணி நேரம்

**உடுக்குறியிடாத வினாக்கள் :**

அவைமுன் வைக்கப்பெற்றவை — 1,400

**சிறப்புக் கவன ஈர்ப்புகள் :**

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருள்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை — 19

மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை — 8

எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நேரம் — 7 மணி 17 நிமிடங்கள்

உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் — 75

இது தவிர "தகவல் கோரல்" என்ற முறையில் 43 நேர்வுகளில் முக்கியப் பிரச்சினைகள் எழுப்ப அனுமதிக்கப்பட்டு, 7 மணி 37 நிமிட நேரத்திற்கு விவாதம் நடைபெற்றுள்ளது. அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 16 நேர்வுகளில் 1 மணி 49 நிமிடங்கள் விளக்கம் அளித்துள்ளார்கள்.



**கவன ஈர்ப்புகள் :**

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை — 905

கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை — 179

அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை — 20

வினாவாக மாற்றப்பெற்றவை — 283

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :**

எழுப்பப்பெற்றது — 1

உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றது — 1

**அரசினர் சட்டமுன்வடிவுகள்:**

வரப்பெற்றவை — 30

நிறைவேற்றப்பெற்றவை — 29

**விதி 110-ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள் :**

மொத்தம் அளிக்கப்பெற்றவை — 8

மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை — 2

**அரசினர் தனித் தீர்மானம் :**

வரப்பெற்றவை — 1

நிறைவேற்றப்பெற்றவை — 1

**பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானம்:**

பேரவைத் தலைவரை நீக்கக் கோரும் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள பேரவை 10-5-2007 அன்று இசைவளித்து அத்தீர்மானம் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தீர்மானம் தோல்வியுற்றது.

**பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள் :**

பொது நிறுவனங்கள் குழு — 56

பொதுக் கணக்குக் குழு — 53

மனுக்கள் குழு — 10

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டுக் குழு | — | 15 |
| சட்ட விதிகள் ஆய்வுக் குழு | — | 2 |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | — | 1 |
| அரசு உறுதிமொழிக் குழு | — | 6 |

**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்:**

| | | | |
|---|---|---|---|
| (அ) | சட்டமுறை விதிகளும் ஆணைகளும் | — | 129 |
| (ஆ) | அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள் | — | 327 |

**உறுப்பினர்கள் வருகை:**

உறுப்பினர்கள் அவைக்கு வந்து வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பமிட்டதன் அடிப்படையில், அனைத்து நாட்களும் பேரவைக்கு வந்த உறுப்பினர்கள் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பம் இடாத உறுப்பினர்களின் பெயர்கள் இதில் இடம்பெறாது.

20-1-2007 முதல் இன்று வரை இந்த இரண்டு கூட்டத்தொடர்களின்போதும் அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல் வருமாறு:

1. செல்வி. ஆ. அங்கையற்கண்ணி
2. திரு. து. அமரமூர்த்தி
3. திரு. கோ. அரி
4. திரு. ஆ. அருண்மொழிதேவன்
5. திரு. அருள் அன்பரசு
6. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
7. திரு. எம். அன்பழகன்
8. திரு. கே.பி. அன்பழகன்
9. திரு. கி. ஆறுமுகம்
10. திரு. க. இராஜேந்திரன்
11. திரு. ல. ராதாகிருஷ்ணன்



12. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
13. திரு. தி.க. ராஜா
14. திரு. ஆ. இராஜேந்திரன்
15. திரு. சபா. இராஜேந்திரன்
16. திரு. தா. உதயசூரியன்
17. திரு. கோ. எதிரொலி மணியன்
18. திரு. கோ. ஐயப்பன்
19. திரு. ந. கணபதி
20. திரு. வே. கண்ணன்
21. திருமதி பெ. கமலாம்பாள்
22. திரு. சொ. கருப்பசாமி
23. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
24. திரு. பெ. காமராஜ்
25. திரு. வை. காவேரி
26. திரு. ம. குணசேகரன்
27. திரு. சி. கோவிந்தசாமி
28. திரு. கோவை தங்கம்
29. திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்
30. திரு. மா. சந்திரகாசி
31. திரு. வை. சிவபுண்ணியம்
32. திரு. ஆர். சிவானந்தம்
33. திரு. கு. சின்னதுரை
34. திரு. போ. சின்னப்பன்
35. திரு. ஓ.கே. சின்னராஜ்
36. திரு. கு. சீனிவாசன்
37. திரு. டி. சுதர்சனம்
38. திரு. க. சுந்தர்
39. திரு. எம்.ஆர். சுந்தரம்

40. திரு. ந. சுப்ரமணியன்
41. திரு. கே.ஏ. செங்கோட்டையன்
42. திரு. ஞா. செந்தமிழன்
43. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்
44. திருமதி செல்வி ராமஜெயம்
45. திரு. பி.கே. சேகர்பாபு
46. திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)
47. திரு. சி. ஞானசேகரன்
48. திரு. ப. டில்லி பாபு
49. திரு. பி. தங்கமணி
50. திரு. சி. தமிழ்செல்வன்
51. திரு. செ. தாமோதரன்
52. திரு. கே. திருநாவுக்கரசு
53. திரு. இரா. துரைக்கண்ணு
54. டாக்டர் க. நெடுஞ்செழியன்
55. திருமதி பி. பத்மாவதி
56. திரு. மு. பரஞ்ஜோதி
57. திரு. பி. பலராமன்
58. திரு. ஆர்.எம். பழனிசாமி
59. திரு. ஓ. பன்னீர்செல்வம்
60. திரு. வி.எஸ். பாபு
61. திரு. ஆர்.கே. பாரதி மோகன்
62. திருமதி ஆர். பிரேமா
63. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்
64. திரு. செ. புஷ்பராஜ்
65. திரு. மு.க. பெரியசாமி
66. திரு. கே. பொன்னுசாமி
67. திரு. செ. பொன்னுதுரை



68. திரு. ஜி.கே. மணி
69. திரு. கே. முருகவேல்
70. திரு. பி. மூர்த்தி
71. திரு. பெ. மோகன்
72. திரு. ப. ரங்கநாதன்
73. திருமதி இரா. இராணி
74. திரு. கே.பி. இராமசுவாமி
75. திரு. எஸ்.ஆர். இராஜா
76. திரு. விடியல் எஸ். சேகர்
77. திரு. கே.எஸ். விஜயகுமார்
78. திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்
79. திரு. சு.ப. வேலுமணி
80. திரு. தி. வேல்முருகன்
81. திரு. ஆர். வைத்திலிங்கம்
82. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்
83. திரு. ஞா. ஜாண் ஜோசப்
84. திரு. டி. ஜெயக்குமார்
85. திரு. எஸ்.பி. ஜெயராமன்
86. திரு. கு. ஹசன் அலி
87. திரு. சை. சையது கௌஸ் பாஷா

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அன்றாடம் பேரவைக்கு வருகை புரிந்திருந்தாலும், அவர்கள் வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பம் இடும் வழக்கமில்லை. எனவே, அவர்களது பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.

**பார்வையாளர்கள் :**

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| மொத்தம் | — | 17,389 |
| ஆண்கள் | — | 16,060 |
| பெண்கள் | — | 1,329 |

| | | |
|---|---|---|
| பேரவைத் தலைவர் மாடம் மற்றும் பேரவைத் தலைவர் அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள வரிசையில் அனுமதிக்கப்பட்டோர் | — | 7,371 |

சென்னையிலுள்ள அமெரிக்க தூதர் திரு. டேவிட் டி. ஹாப்பர் மற்றும் அமெரிக்க தூதரக உயர் அதிகாரிகள் 4-4-2007 அன்று பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர்.

**நூலகம் :**

| | | |
|---|---|---|
| சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர் | — | 590 |
| வழங்கப்பெற்ற நூல்கள் | — | 608 |
| இவ்வாண்டு புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள் | — | 215 |

**நடவடிக்கைக் குறிப்புகள் :**

| | | |
|---|---|---|
| இக்கூட்டத்தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர) | — | 893 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள் | — | 7,594 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | — | 2,127 |
| தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பப் பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | — | 448 |

இப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளுக்கு உரிய மதிப்பளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல அறிவிப்புகளைச் செய்திருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். உதாரணமாக திரு. பி. சீனிவாசராவ் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க வேண்டுமென்று 10-4-2007 அன்று திரு. வை. சிவபுண்ணியம் அவர்களின் கோரிக்கையை ஏற்று திருத்துறைப்பூண்டியில் நினைவு மண்டபம் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

சமூக நீதிக் கொள்கையை நிலைநாட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித





இடஒதுக்கீட்டை நிறுத்தி வைத்து உச்ச நீதிமன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பு குறித்து நாடாளுமன்ற இரு அவைகளைக் கூட்டி முடிவெடுக்க மத்திய அரசை வலியுறுத்தும் அரசினர் தனித் தீர்மானம் 30-3-2007 அன்று அவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

அதேபோல, 10-4-2007 அன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் செண்டூர் வெடி விபத்து குறித்து மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி செய்யும் விசாரணையில் வெடிகுண்டின் தன்மை குறித்த ஆய்வையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டபோது முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பித்தார்கள்.

பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள் 5-4-2007 அன்று பேரவையில் விரும்பத்தகாத நிகழ்வுகளில் ஈடுபட்டு பேரவையின் நடவடிக்கைகளை இடைமறித்து, பேரவை விதிகளுக்கு மாறாக நடந்துகொண்டதால், பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தையடுத்து கூட்டத்தொடர் முழுவதும் அவர்கள் நீக்கி வைக்கப்பட்டனர். அவ்வுறுப்பினர்களை அவையில் அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் 27-4-2007 அன்று எழுந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையுடன் தெரிவித்த கருத்துகளை நான் இப்போது நினைவுகூர விரும்புகிறேன்.

"தண்டனையை அனுபவித்து விட்டார்கள். ஆகவே, அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. தண்டனை என்பது ஒரு குற்றத்திற்காக வழங்கப்படுவது; நான் அதைத் தண்டனை என்று குறிப்பிட விரும்பவில்லை. ஏனென்றால், ஒரு ஜனநாயக அரங்கில், பல பெரியவர்கள் இங்கே, எந்த மன்றத்தில் ஜனநாயகத்தைக் காத்திருக்கின்றார்களோ, அந்த மன்றத்தில், ஒருவருக்குத் தண்டனை கொடுத்தோம் என்று நானும் பெருமைப்பட்டுக்கொள்ளத் தயாராக இல்லை; நம்முடைய சபாநாயகரும் அதற்குத் தயாராக இருக்கமாட்டார் என்றே நான் கருதுகின்றேன்.

தண்டனை என்று சொல்லாமல், ஒரு பரிகாரம்; அவர்கள் இங்கே நடந்து கொண்ட விதத்திற்கு, இது இந்த அவைக்கு சரியல்ல, சரியல்லாத ஒன்று செய்யும்பொழுது 'அதற்குப் பரிகாரம் தேட வேண்டுமென்ற முறையிலேதான் அவர்கள் இத்தனை நாள் இங்கே அனுமதிக்கப்படாமல் இருந்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்தச் சட்டமன்றத்திலேதான், பத்திரிகை சுதந்திரத்தைக் காலில் போட்டு மிதித்து ஒரு பத்திரிகை ஆசிரியரை கூண்டிலே நிறுத்திய

சம்பவங்கள் எல்லாம், அந்தக் கொடிய தண்டனை எல்லாம் இங்கே விதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஒப்பிடும்போது இது சாதாரண ஒரு பரிகாரம்தான். அந்தப் பரிகாரத்தை நாம் அனைவரும் சேர்ந்து நான்கு பேருக்கு வழங்கினோம். பெருந்தன்மையோடு இதை நாம் அணுக வேண்டுமென்று தோழமைக் கட்சிகளினுடைய அன்பிற்குரிய தலைவர்கள் எல்லாம் கூறியிருப்பதால், நானும் அவர்களுடைய கருத்திற்கிணங்கி, 'நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அந்தக் கருத்திற்கு ஏற்ப, இந்த அவை நடப்பதற்கு நாம் அனைவரும் துணை புரிவோம் என்று சொல்லி, அந்த நான்கு நண்பர்களையும், இந்தக் கூட்டத்தொடரில் அனுமதிக்க வேண்டுமென்று அவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

முதலமைச்சரின் இந்த வேண்டுகோளை ஏற்று உறுப்பினர்களை மீண்டும் அவைக்குள் அனுமதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் 50 ஆண்டுகள் உறுப்பினராகப் பணியாற்றிவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையைப் போற்றும்வகையில் "சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" இரண்டு நாட்கள் இம்மன்றத்திலே வெகு சிறப்பாக நடைபெற்றது. 11-5-2007 அன்று மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், சட்டமன்றக் கட்சித் தலைவர்களும் பாராட்டுரை வழங்கினார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். 12-5-2007 அன்று மக்களவைத் தலைவர் அவர்கள் பாராட்டுரை நிகழ்த்தி, பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளின் தொகுப்பைப் புத்தகமாக வெளியிட்டார்கள்.

"சட்டமன்றத்தில் கலைஞர் பொன்விழா" நடைபெற்ற காலத்தில் பேரவைத் தலைவராக அமருகின்ற வாய்ப்பினைப் பெற்ற நான் இதனை எண்ணி எண்ணி புளகாங்கிதம் அடைவதோடு, என் வாழ்நாளில் கிடைத்தற்கரிய பெரும் பேறாகக் கருதுகிறேன். இத்தகைய வாய்ப்பினை நல்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'பொன்விழா' நிகழ்ச்சியில் புதிய அறிவிப்பாக புதிய சட்டமன்றக் கட்டடம் கட்டுவது குறித்து கீழ்க்காணும் அறிவிப்பினைச் செய்தார்கள்:



"நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் விடுத்த வேண்டுகோளை இன்றைக்குத் தொகுத்து, பொன்விழா நாள் அறிவிப்பாக, ஒரு புதிய சட்டமன்றக் கட்டடம் விரைவில், பழமையைப் பாதுகாப்போம், புதுமையை நாடுவோம் என்ற அந்த மொழிக்கேற்ப, வெகு விரைவிலே அதற்கான அடிக்கல் நாட்டப்படும், அந்த இடம் விரைவில் அமையும், அதனுடைய திறப்பு விழாவும் நடைபெற்று, நாமெல்லாம் அங்கே அமர்ந்து இன்னொரு விழா நடத்த இந்த ஆட்சி நடைபெறும்போதே அந்த இனிய வாய்ப்பு உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்கும் கிடைக்கும்."

புதிய சட்டமன்றம் அமைக்கப்படும் என்ற பொன்னான அறிவிப்பிற்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும், என் சார்பிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாங்குற அமையவிருக்கும் புதிய சட்டமன்றக் கட்டடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் நாம் இன்னொரு விழாவைக் கொண்டாடும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம் என்பதையும் உங்கள் அனைவரின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3-15*

சட்டமன்ற நிகழ்ச்சிகளில் தான் கொண்ட தணியாத ஈடுபாட்டை வெளிப்படுத்தும் வகையில், பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களிலும் காலையில் 9-00 மணிக்கே, பேரவைத் தலைவரின் அறைக்கு வந்து, கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் எழுப்ப விரும்பும் அலுவல்களைப் பற்றி அவர்களுடன் விவாதித்து, தகுந்த ஆலோசனைகள் வழங்கியதோடு மட்டுமின்றி, தனது உணர்ச்சிபூர்வமான கருத்துகளை முன்வைத்து, பேரவை நடவடிக்கைகளைச் சுமுகமாக நடத்திட வழிவகுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நடவடிக்கைகளை நடத்துவதில் எனக்கு மிகவும் துணையாக இருந்து தக்க வழிகாட்டுதல்களையும் மரபுகளையும் எடுத்துரைத்த மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அவை நடவடிக்கைகளை நடத்திட உறுதுணையாக இருந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், மாற்றுத்

தலைவர்களுக்கும், அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா, இதர கட்சித் தலைவர்கள், இதர கட்சிக் கொறடாக்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நிகழ்ச்சிகளை தினமும் ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், பேரவை நடவடிக்கைகளை உடனுக்குடன் நாட்டு மக்களுக்கு எடுத்துச் செல்ல உதவிய அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், இதர தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையினுடைய அலுவல்களைச் செம்மையாக நிறைவேற்ற உதவிய பேரவைச் செயலாளர் திரு. மா. செல்வராஜ் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 9. அரசினர் தீர்மானம்

### பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-17 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

105. யாதொரு வணிகரால் மேற்கொள்ளப்படும் பழைய அல்லது பயன்படுத்தப்பட்ட கண்ணாடிப் புட்டிகள், கழிவுத்தாள் மற்றும் கழிவு காகித அட்டை ஆகியவற்றின் கடைசிக் கொள்முதலின் மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 28-12-2006 ஆம் நாளிட்ட 176 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

106. யாதொரு வணிகர் அறிவிக்கையில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உறுதிமொழியினைச் சான்றளிப்பதின் பேரில் சென்னை திருவாளர்கள் புளூ கிராஸ் ஆஃப் இந்தியா நிறுவனத்திற்கு விற்பனை செய்த கால்நடைகளுக்கான அவசர சிகிச்சை ஊர்திகளைப் பராமரிப்பதற்குரிய உதிரிப் பாகங்கள், கால்நடைத் தீவனம், அறுவை சிகிச்சையில் தையலிடுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் கால்நடைகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காக கால்நடை மருத்துவமனையில் வைத்திருக்கத் தேவைப்படும் அனைத்துப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைக்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறையின் 30-12-2006 ஆம் நாளிட்ட 194 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2007 மே 14

107. ஓட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், இனிப்பகங்கள், கேளிக்கை மன்றங்கள், உணவு தருவிப்பவர்கள் மற்றும் ஏனைய யாதொரு உணவு இல்லங்கள் மூலம், உணவகங்களுக்கு உள்ளே அல்லது வெளியே பரிமாறப்படும் இனிப்புகள் உள்பட வணிகக் குறியீடு இல்லாத தயார் நிலை உணவுகள், இனிப்புகள், கார வகைகள் உள்பட வணிகக் குறியீடு இல்லாத தயார் நிலை உணவுகள் மற்றும் வணிகக் குறியீடு இல்லாத மதுபானம் அல்லாத குளிர்பானங்கள் விற்பனைக்கான வரியை வரிவிதிக்கத்தக்க மொத்த வியாபாரத் தொகையில் இரண்டு சதவீதமாக குறைத்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 1-1-2007 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

108. வருவாய்த் துறையில் 23-7-1965 ஆம் நாளன்று உருவாகி, 4-8-1965 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்-III-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 22-2-2007 ஆம் நாளிட்ட 55 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

109. சென்னை திருவாளர்கள் மெஷினரி ஆஃப் சாரிட்டி நிறுவனத்துக்கு, சென்னை, சைதாப்பேட்டை, திருவாளர்கள் டிரான்ஸ் டெம்போ பிரைவேட் நிறுவனம் விற்பனை செய்த 3350 எம்.எம்.டபிள்யூ.பி. டிராவலர் ஆம்புலன்ஸ் ஒன்றிற்குச் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 15-3-2007 ஆம் நாளிட்ட 71 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

110. 1959 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் நாளிட்ட புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பகுதி-I ல் வெளியிடப்பட்ட உள் துறையின் எஸ்.ஆர்.ஓ எண் A-538/1959 அறிவிக்கைக்குத் திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (2) துறையின் 7-2-2007 ஆம் நாளிட்ட 12 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2007 மே 14]

111. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (2) துறையின் 7-2-2007 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

112. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

113. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

114. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இருபத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

115. 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்) [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

116. 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை 'சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

117. 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை 'வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

118. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

119. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்**

265. 2005-2006 ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்ட பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

266. 2004-2005 ஆம் ஆண்டுகளுக்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

267. 2005-2006 ஆம் ஆண்டுகளுக்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு குறித்த ஆய்வறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

268. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பன்னிரெண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

269. "ஒளிர்ந்து நிறைந்த ஓராண்டு" என்கிற புத்தகம். (தமிழ்)

———

227671

அரசு மைய அச்சகம், சென்னை—600 079.

7

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.